ஸ்ரீராமஜயம்

வால்மீகி ராமாயண வசனம்

# கிஷ்கிந்தா காண்டம்

149

இது

பண்டித நடேச சாஸ்திரியாராலும்

திருக்கோணமலை

த. கனகசுந்தரம் பிள்ளையாலும்

தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சென்னை:

க. மஹாதேவன்

1907

[ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.]

# கிஷ்கிந்தா காண்டம்.

ஸ்ரீரஸ்து.

# கிஷ்கிந்தா காண்டம். 149

## விஷயசூசிகை.

| சருக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | இராமர் பம்பையைக் கண்டு சீதையை நினைந்து புலம்பல் ... ... | 1 |
| 2. | இராமலக்ஷ்மணர்களின் வரலாற்றையறிந்துவரச் சுக்கிரீவன் அநுமானையனுப்புதல் ... ... ... ... | 13 |
| 3. | அநுமான் இராம லக்ஷ்மணர்களைச் சுக்கிரீவனோடு நட்புச்செய்யும்படி வேண்டல். | 16 |
| 4. | இராமர் சுக்கிரீவனுடைய நட்பை விரும்புவதாய் லக்ஷ்மணர் அநுமானுக்குத் தெரிவித்தல் ... ... ... | 20 |
| 5. | இராமர் சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டு வாலியை வதைப்பதாக வாக்களித்தல்.. | 23 |
| 6. | சுக்கிரீவன் இராமருக்குச் சீதையின் ஆபரணங்களைக் காண்பித்தல் ... ... | 26 |
| 7. | சுக்கிரீவன் இராமரைத் தேற்றுதல் ... | 29 |
| 8. | சுக்கிரீவன் தனது வரலாற்றை இராமருக்கறிவித்தல் ... ... ... | 32 |

| சருக்கம். | விஷயம். | பக்கம். |
| --- | --- | --- |
| 9. | வாலிக்கும் தனக்கும் பகையுண்டான காரணத்தைச் சுக்கிரீவன் இராமருக்குச் சொல்லுதல் ... ... ... | 36 |
| 10. | சுக்கிரீவன் இராமரைத் தனக் கபயமளிக்கும்படி வேண்டுதல் ... ... | 38 |
| 11. | மதங்கமகாரிஷி வாலிக்கிட்ட சாபத்தைச் சுக்கிரீவன் இராமருக்குச்சொல்லி இராமருடைய பராக்கிரமத்தைப் பரீக்ஷித்தல். | 42 |
| 12. | இராமரிடத்தில் நம்பிக்கையடைந்து சுக்கிரீவன் வாலியுடன் போர்புரிதல் ... | 49 |
| 13. | சுக்கிரீவன் மறுபடி கிஷ்கிந்தைக்குச் செல்லுதல் ... ... ... | 53 |
| 14. | சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்தல். | 55 |
| 15. | சுக்கிரீவனுடன் போர்புரிய வாலிபுறப்படுகையில் தாரை தடுத்தல் ... ... | 57 |
| 16. | வாலி இராமபாணம் பாய்ந்து பூமியில் விழுதல் ... ... ... ... | 60 |
| 17. | வாலி தன்னை எய்ததற்காக இராமரைக் குற்றங்கூறல் ... ... ... | 63 |
| 18. | தான்செய்தகாரியம் தருமமன்றி வேறன்றென்று இராமர் வாலிக்குச் சொல்லுதல் ... ... ... ... | 68 |
| 19. | வாலி விழுந்ததைக்கேட்டுத் தாரை அங்கதனுடன் ஓடிவருதல் ... ... | 74 |
| 20. | தாரை புலம்பல் ... ... ... | 77 |
| 21. | அநுமான் தாரையைத் தேற்றல் ... | 79 |
| 22. | சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் வாலி புத்தி கூறல் ... ... ... | 81 |

| சருக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 23. | தாரை புலம்பல் ... ... ... | 84 |
| 24. | இராமர் சுக்கிரீவனையும் தாரையையும் தேற்றுதல் ... ... ... ... | 87 |
| 25. | வாலியைத் தகனம்செய்தல் ... ... | 92 |
| 26. | சுக்கிரீவன் பட்டாபிஷேகம் ... ... | 96 |
| 27. | இராமர் சீதையை நினைந்துவருந்தல் ... | 99 |
| 28. | கார்கால வருணனை ... ... ... | 103 |
| 29. | சுக்கிரீவன் வானரசேனையைச் சேர்த்தல்... | 110 |
| 30. | சுக்கிரீவன் வரவில்லையென்று இராமர் கோபித்தல் ... ... ... | 113 |
| 31. | லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக்குச் செல்லல் ... | 122 |
| 32. | சுக்கிரீவன் லக்ஷ்மணர் வரவைக்கேட்டுச் சிந்தை கொள்ளல் ... ... ... | 127 |
| 33. | லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக்குள் போதல் ... | 129 |
| 34. | லக்ஷ்மணர் சுக்கிரீவனைக் கடிந்துபேசுதல்... | 135 |
| 35. | தாரை லக்ஷ்மணரைச் சாந்தப்படுத்தல் ... | 137 |
| 36. | லக்ஷ்மணர்கோபமாறித் தாம் கூறிய கடுஞ்சொற்களை மன்னிக்கவேண்டுமென்று சுக்கிரீவனை வேண்டல் ... ... | 139 |
| 37. | வானரசேனை புறப்பட்டு வருதல் ... | 141 |
| 38. | சுக்கிரீவன் இராமரிடம் செல்லல் ... | 144 |
| 39. | வானரசேனை வருதல் ... ... | 147 |
| 40. | சீதையைத்தேடவானரர்களைக் கீழ்த்திசைக் கனுப்பல் ... ... ... | 151 |
| 41. | சீதையைத்தேட வானரர்களைத் தென்றிசைக்கனுப்பல் ... ... ... | 157 |

| சருக்கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 42. | வானரர்களை மேற்றிசைக்கனுப்பல் ... | 161 |
| 43. | வானரர்களை வடதிசைக்கனுப்பல் ... | 166 |
| 44. | இராமர் அநுமானிடம் தமது மோதிரத்தைக் கொடுத்தல் ... ... | 171 |
| 45. | வானரர்கள் சீதையைத்தேடப் புறப்படல் | 173 |
| 46. | சுக்கிரீவன் தான் பூமண்டலம் முழுதும் அறிந்தவாறு கூறுதல் ... ... | 175 |
| 47. | சீதையைத் தேடிச்சென்ற வானரர்கள் திரும்பிவருதல் ... ... ... | 177 |
| 48. | வானரர்கள் தென்றிசையில் தேடுதல் ... | 178 |
| 49. | வானரர்கள் விந்தமலையை மறுபடியும் தேடுதல் ... ... ... ... | 180 |
| 50. | வானரர்கள் ரிக்ஷபிலத்துள் புகுதல் ... | 182 |
| 51. | பிலம் யாருடையதென்று சுயம்பிரபை கூறல்... ... ... ... | 186 |
| 52. | அநுமான் தாங்கள் வந்தகாரியம் இன்னதென்று சுயம்பிரபைக்குக் கூறல் ... | 188 |
| 53. | வானரர்கள்பிலத்துணின்று வெளிப்படுதல் | 189 |
| 54. | அநுமான் அங்கதனைச் சுக்கிரீவன் தண்டிக்கமாட்டானென்று தேற்றுதல் ... | 193 |
| 55. | அங்கதன் பட்டினிகிடந்து உயிர்விட நிச்சயித்தல் ... ... ... | 195 |
| 56. | சம்பாதியைக் காணல் ... ... | 197 |
| 57. | சம்பாதி சடாயுமாண்டதெவ்வாறென்று வினவல் ... ... ... | 199 |
| 58. | சம்பாதி சீதை இலங்கையிலிருக்கிறாளென்று கூறல் ... ... ... | 202 |

| கம். | விஷயம். | பக்கம். |
|---|---|---|

. சம்பாதி சீதையின் அபகரணத்தைத் தானறிந்த வழியைச் சொல்லுதல் ... 205
60. சம்பாதி தன்வரலாறு கூறுதல் ... 207
61. சம்பாதி சூரியனைத் தொடர்ந்த வரலாறு... 209
62. நிசாகரமுனிவர் சம்பாதியைத் தேற்றுதல் 211
63. சம்பாதிக்கு மறுபடி சிறகுமுளைத்தல் ... 212
64. அங்கதன் கடருவுவதுயார் என்று வினவுதல் ... ... ... ... 214
65. வானரர்கள் தங்கள் தங்கள் கடருவு மாற்றலைக் கூறல் ... ... ... 216
66. சாம்பவன் கடருவும்படி அநுமானைத் தூண்டல் ... ... ... ... 219
67. அநுமான் தனது மேம்பாட்டை எடுத்துரைத்தல் ... ... ... 222

ஸ்ரீரஸ்து.

# வால்மீகி ராமாயண

நான்காவது

## கிஷ்கிந்தா காண்ட

### முதற்சருக்கம்.

இராமர் பம்பையைக் கண்டு சீதையை நினைந்து பு

ஸ்ரீராமர் லக்ஷ்மணருடன் தாமரைகளும் பலங்களும் மீன்களும் நிரம் பையை அடைந்தார். அவ் கண்டமாத்திரத்தில் அவர் உள்ளங்குளிர்ந்து இ கள் சலிக்க, ஸீதையினிடத்திலிருந்த ஆசை மனக்கலக்கமுற்றுப் புலம்புவாராயினர்:— "லக்ஷ

இராமர் புலம்பல்.

தெளிவான நீரினால் வைடூரியம் லும் பம்பை நன்றாய் மலர்ந்த தா ரைகளாலும் ஆம்பல்களாலும் விருக்ஷ களாலும் எவ்வளவு அழகாய் விளங்குகின்றதுபார். அதைச் சூழ்ந்திருக்கிற அழகிய காட்டில் உள்ள ஒவ்வொரு மரமும் கோடுகள் சிகரங்கள்போலத் தோன்ற ஒவ்வொரு மலைபோலக் காணப்படுகின்றது. மலர்களடர்ந்து, குளிர்ந்த நீர் நிறைந்து, பார்ப்பதற்கு மிகவும் மனோகரமாய், தாமரையால் மூடப்பட்டு, சர்ப்பங்களும் மதயானைகளும் விலங்குகளும் பறவைகளும் சஞ்சரிக்

ள காட்டால் சூழப்பட்டு, இன்பம்
இப்பம்பை பரதனுடைய துன்ப
ம் காரணமாக வரும் துக்கத்தில்
க்கும் என்னை மேன்மேலும் வருத்
பசும்புற்றரை நீலமும் மஞ்சளு
ஷபங்கள் பரந்து இரத்தினக் கம்
டதுபோல் வெகு அழகாய்க் காணப்
ஙகு பக்கங்களிலும் பூங்கொத்துக்கள்
ன் நுனிகளோடு புஷ்பித்திருக்கும் பூங்
ணந்துகொண்டிருக்கின்றன. லக்ஷ்மணா,
பிய காற்றுச் சுகமாக வீசுவதும், மன்மத
ாயாட்டிற்கு மிகவுமேற்றதும், மரங்களெல்
ளையும் புஷ்பங்களையும் தருவதுமாகிய வசந்த
துவிட்டது. மேகங்கள் மழைத்துளிகளை வரு
போல் விருக்ஷங்களெல்லாம் பூக்களைச் சொரி
வ்வனத்தின் அழகைப் பார். மலைகளின்மேல்
மரங்கள் காற்றினு லலைப்புண்டு புஷ்பங்களை உதிர்
அம்மரங்கள் பூமியை அருச்சிப்பதை யொத்துத்
றுகின்றது. கீழே விழுந்தனவும், விழுகின்றனவும்
லே தொங்குவனவுமாகிய புஷ்பங்களோடு காற்று
பாடுவதுபோலும். பூங்கொத்துக்களைக் காற்று
த அவ்வைகளில் மொய்த்திருந்தவண்டுகள் எழுந்து
காரம்செய்துகொண்டு அக்காற்றைப் பின்தொடர்ந்து
சல்லுகின்றன. மலைகளின் இடைவெளிகளி லிருந்து
வரும் காற்றுப்பாட, களிப்படைந்த கோகிலங்கள் முக
வாத்தியம் வாசிக்க, மரங்கள் தாண்டவமாடுகின்றனபோ
லும். காற்றினால் அசைக்கப்பட்டு ஒரு மரத்தின் கிளை
சென்று மற்றொரு மரத்தின் கிளையோடு சேர்நது மரங்க
ளெல்லாம் மாலையாய்த் தொடுக்கப்பட்டனபோல் காணு
கின்றன. சந்தனம்போலும் குளிர்ந்த காற்று நறுமணம்
கமழ்ந்து எங்கணும் வீசிக் களையாற்றுகின்றது. மகரந்தப்

பொடியின் பரிமளம் வீசு மிக்காட்டில் உள்ள மரங்கள் வண்டுகளின் ரீங்காரங்களால் ஒலிப்பனபோல் காணப் படுகின்றன. மலைகளின் தாழ்வரைகளிலுள்ள சிறு குன்றுகள் நன்றாய்ப் பூத்த மரங்களால் மூடப்பட்டு வெகு ரமணீயமாய்ப் பிரகாசிக்கின்றன. புஷ்பங்களடர்ந்த சிகரங்களையுடைய விருக்ஷங்கள் வண்டுகள் ரீங்காரம் செய்யக் காற்றி லசைவது ஒருவன் தலையில் பூ முடித்துத் தலையை அசைத்துப் பாடிக்கொண்டு நடனம் செய்வது போல் காணப்படுகின்றது. பொன்னுபரணங்க ளணிந்து மஞ்சட்பட்டுடுத்து நிற்கும் மானிடர்களைப்போலக் கர்ணிகாரங்கள் நாற்புறமும் புஷ்பித்து விளங்குகின்றன பார். பறவைகள் இனிமையாகச் சத்திக்கின்ற வசந்தகாலம் சீதையைப் பிரிந்திருக்கும் எனக்குச் சோகத்தை விளைக்கின்றது. லக்ஷ்மணா, முன்னரே துயரத்தி லாழ்ந்திருக்கும் என்னை மன்மதன் பின்னும் தபிக்கச் செய்கின்றான். குயிலினங்கள் களிப்பினால் உற்சாகம் கொண்டு என்னை அவமதிப்பனபோல் கூவுகின்றன. இவ்வனத்திலிருக்கும் அருவிகளின் பக்கத்தில் சந்தோஷத்துடன் கூவும் காட்டுக் கோழிகளும் என் சோகத்தை விருத்தி செய்கின்றன. இதற்கு முன், லக்ஷ்மணா, நாம் நமது ஆச்சிரமத்தி லிருந்த காலத்தில் இப்பக்ஷிகளின் சத்தத்தைச் சீதை கேட்கும்போதெல்லாம் சந்தோஷ மடைந்து என்னைக் கூப்பிட்டுக் காண்பித்துப் பின்னும் விசேஷமான சந்தோஷ மடைவளே. பலவகைப் பறவைகள் பலவிதமாகப் பாடிக்கொண்டு ஆங்காங்கு மரங்களிலும் கொடிகளிலும் புதர்களிலும் வந்து உட்காருகின்றனபார். இவ்வேரியின் கரையில் ஆணும் பெண்ணுமாய் அநேக பறவைகளும் வண்டுகளும் உல்லாசமாக உட்கார்ந்து, மதுரமாகப் பாடிக்கொண்டு, தாங்கள் பிரியாது சேர்ந்திருப்பதற்காகச் சந்தோஷத்தில் மூழ்கியிருக்கின்றன. ஆண் கோகிலம் முதலிய பறவைகள் இம்மரங்களில் அழகாய்க் கூவுவது என் துய

ரத்தை வளர்க்கின்றது. அசோகப் பூங்கொத்துக்களாகிய தணல்களையும் இளந்தளிர்களாகிய கொழுந்துகளையும் வண்டுகளின் சத்தமாகிய ஒலியையுமுடைய வசந்தகாலம் என்னும் நெருப்பு என்னைத் தகிக்கின்றது. லக்ஷ்மணா, அழகான கண்ணிமைகளையும் கருங்குழலையும் இன்சொல்லையுமுடைய சீதையைக் காணாது நான் உயிர் தரித்திருப்பதில் என்னபிரயோஜனம்? தூய்மையுள்ளவனே, காடுகள் எல்லாம் அழகுவாய்ந்து குயில்கள் இனிமையாய்க் கூவுகின்ற இக்காலந்தான் அவளுக்கு மிகப் பிரியமானது. சீதையைப் பிரிந்ததனாலாய சோகாக்கினி இந்த வசந்தகாலத்தினால் விருத்திசெய்யப்பட்டு என்னை அதி சீக்கிரத்தில் எரித்து விடும்போலிருக்கிறது. சீதையைக் காணாமல் இவ்வழகிய மரங்களை நான் காணுவதனால் என் விரகதாபம் அதிக விருத்தியடையப்போகின்றது. சீதையைப் பிரிந்த துன்பமும் வியர்வையைப் போக்குகின்ற வசந்தகாலமும் ஒன்றுசேர்ந்து என்காதலை எழுப்புகின்றன. அதோ பார்! மயில்கள் எவ்வளவு நேர்த்தியாய் ஆடுகின்றன! அவைகளின் சிறகுகள் காற்றால் அலைக்கப்படும்பொழுது படிகக்கற்களாலமைத்த பலகணிவாயில்கள்போல் விளங்குகின்றன. அவைகளைச் சுற்றி அவைகளின் பேடுகள் வந்துநிற்குமழகைப் பார்க்கப்பார்க்க என் துக்கம் மிகுகின்றது. அதோபார்! மலைத்தடத்தில் ஆடுகின்ற ஆண் மயிலோடு அதன் பேடு காமவேட்கை யுற்று நடனம் செய்கின்றது. அவைக ளிவ்வாறு என் முன் தோகை விரித்தாடுவது என்னைக்கண்டு சிரிப்பதுபோ லிருக்கிறது. அரக்கன் என் பிராணநாயகியை இக்கானகத்தின் வழியாய் எடுத்துச் செல்லவில்லை. ஆதலாற்றான் இம்மயில்கள் இக்காட்டில் தங்கள் நாயகிகளுடன் சுகமாய் விளையாடுகின்றன. பூக்கள் மலர்ந்து விளங்கு மிக்காலத்தில் சீதையைப்பிரிந்து நான் எவ்வாறு ஜீவிப்பேன்? லக்ஷ்மணா, இந்த

இழிவான பிராணிகளிடத்தும் காதல் காணப்படுகின்றது. பெண்மயில் காமத்தா லுய்க்கப்பட்டு ஆண்மயிலினிடம் செல்கின்றது. நீண்ட கண்களையுடைய ஜானகி அபக ரிக்கப்படாது இங்கிருப்பாளாகில் என்னிடத்தில் மோகங் கொண்டு இவ்வாறு வருவாளன்றோ? அழகான இந்தப் புஷ்பங்களால் எனக்கு என்ன உபயோகம்? மரங்களி னின்றும் அவைகள் தேனீக்களுடன் வியர்த்தமாய்க் கீழே விழுகின்றன. பறவைகள் ஒருங்கே சேர்ந்து ஒன் றையொன்றழைப்பதுபோல் இனிய கீதம்பாடி என் ஆசையை வளர்க்கின்றன. என்னுயகி யிருக்குமிடத்தி லும் இவ்வாறே வசந்தகாலமாயின் அவளும் என்னைப் போலவே துயருறுவாள் என்பதில் சந்தேகமில்லை. இவ் வசந்தகாலம் அவளிருக்குமிடத்தில் இல்லையெனினும் அவள் என்னைப் பிரிந்தெங்ஙனம் பிழைப்பாள்? அவ ளிருக்கு மிடத்திலும் வசந்தகாலந்தான் என்று கொள் ளினும் சத்துருவினால் பீடிக்கப்பட்டிருக்கும் அவளுக்கு அதனால் என்ன பயன்? இளமையும் மென்மையுமுடை யவளும், தாமரை மலர்போன்ற கண்களையுடையவளும், இன்சொற் பகர்பவளுமான என் பிராணநாயகி வசந்த காலம் வந்ததைக் கண்டதும் உயிர்துறந்து விடுவாள் என் பது நிச்சயம். மகாபதிவிரதையான சீதை என்னைப் பிரிந்து உயிர்தரிக்கச் சகியாள் என்று நிச்சயமாய் எண் ணுகிறேன். வைதேகியின் அன்பு முழுதும் என்னிடத் திலேயே. அப்படியே என்னுடைய அன்பும் அவளிடத் திலே. நறுமணமளாவி வருகின்ற சுகமான பரிசத்தை யுடைய இந்தக் குளிர்ந்தகாற்றுச் சீதையை நினைந்து வாடும் எனக்கு அக்கினிக்கொழுந்துபோல் இருக்கின்றது. சீதை என்னுட னிருந்தபோது எனக்குச் சுகத்தை விளை வித்த காற்று அவள் என்னைவிட்டுப் பிரிந்திருக்கும் இக்காலத்தில் எனக்குச் சோகத்தை உண்டு பண்ணு கின்றது. முன்னம் சீதா வியோகத்தைத் தெரிவித்துக்

கரைந்த காக்கை இப்பொழுது மரத்தின்மேலுட்கார்ந்து எனக்குச் சீதையின் சேர்க்கை நேரப்போகிறதென்று சுபஸூசகமாய்க் கத்துகின்றது. வைதேகிக்கு வாயில் காப்பவன்போன்ற இப்பறவை அத்தடங்கண்ணாளுடைய சமீபத்தில் என்னைச் சேர்ப்பிக்க விருக்கின்றது போலும். லக்ஷ்மணா, பூக்கள் நிறைந்த மரங்களின் நுனியிலிருந்து வேட்கையை உண்டுபண்ணத்தக்கதாக இப்பறவைகள் பாடும் இனிய கீதத்தைக் கேள். காற்றாலசையும் திலகமரங்களைக் களித்துக் கூத்தாடும் பெண்பாலார் போல் வண்டினங்கள் அணுகுகின்றன. காமிகளுடைய எண்ணங்களை வளரச் செய்யும் இவ்வசோகமரம் காற்றாலசைகின்ற தனது பூங்கொத்துக்களால் என்னை வெருட்டுவதுபோல் தோன்றுகின்றது. லக்ஷ்மணா, நிறையப் பூத்து நிற்கும் அந்த மா மரங்கள் சந்தனம் பூசிக் காமத்தால் வருந்துவோரை ஒத்திருக்கின்றன. இந்தப் பம்பா தீரத்திலுள்ள அழகான வனங்களில் கின்னரங்கள் அங்குமிங்கும் உலாவித் திரிகின்றன பார். நல்ல மணம் கமழும் செந்தாமரைகள் உதயபானுவைப்போல இங்கே பிரகாசிக்கின்றன. நிர்மலமான நீர் நிரம்பிய இந்தத் தடாகம் பரிமளமான நீலோற்பலங்களும் அன்னமும் நீர்க்காக்கைகளும் நெருங்கி, வண்டினங்கள் மொய்க்க மகரந்த முதிர்ந்த சூரியகிரணம் போலுஞ் செந்தாமரை அடர்ந்து எவ்வளவு அழகா யிருக்கின்றது! இதைச் சுற்றியுள்ள அழகு பொருந்திய காடுகள் சக்கரவாகப் பக்ஷிகளும் குளத்தில் நீர்குடிக்க வரும் யானைத்திரள்களும் மான் கூட்டங்களும் நிறைந்து விளங்குகின்றன. லக்ஷ்மணா, காற்றினலடியுண்டு அங்குமிங்கு மோடுகின்ற அலைகளால் அசைந்தாடுகின்ற தாமரைமலர்களின் தோற்றத்தைப் பார். தாமரை யிதழ்போன்ற விசாலமான கண்களையுடையவளும் அம்மலரிடத்தில் அதிகபிரியமுள்ளவளுமான வைதேகியைப் பாராமல் உயிர்தரித்திருக்க

எனக்கு விருப்பமில்லை. ஓகோ! காமனுடைய செய்கை எத்தன்மைத்தா யிருக்கின்றது! கிடைத்தற் கரியவளும் மதுரபாஷிணியுமான அந்த மங்கள சுவரூபிணியை இடைவிடாது என் மனத்தில் நிறுத்தி என்னை வருந்தச் செய்கின்றனனே? மரங்களை நன்ருய்ப் புஷ்பிக்கச்செய்து தோன்றிய இவ் வசந்தகாலம் என்னை வாட்டாதிருக்குமாகில் யான் என்னுடைய வேட்கைநோயை ஒருவாறு சகித்துக் கொள்வேன். அவள் என்னுட னிருந்தகாலத்தில் எனக்கு அழகாகத் தோற்றிய பொருள்களெல்லாம் அவ ளில்லாமையால் அழகில்லாதவைகளாகக் காணுகின்றன. லக்ஷ்மணு, இத்தாமரைத் தளங்கள் அவளுடைய கண்களை யொத்திருப்பதால் அவைகளைப் பார்க்க என்மனம் அவாவுகின்றது. மரங்களின் இடைவெளியிற் புகுந்து தாமரைத் தாதுக்களின்மேற் படிந்துவரும் இக்காற்றுச் சீதையின் மூச்சுப்போல மனோகரமாய் இருக்கின்றது. அதோ! பம்பையின் தென்கரையிலுள்ள மலைத்தாள் வரைகளில் கோங்குகள் பூத்து வெகு அழகாய்த் தோன்றுகின்றன பார். பல்வகைத்தாதுக்களால் அலங்கிருதமான அந்தச் சிறந்தமலை காற்றடிக்குந்தோறும் பல வர்ணமான புழுதிகளை வாரி யிறைத்துக்கொண்டு பிரகாசிக்கின்றது. இலைகள் உதிர்ந்து முழுதும் பூத்து அழகாய் விளங்கும் பலாச விருக்ஷங்களால் இம்மலைச் சார்புகளெல்லாம் தீப்பற்றி யெரிவதுபோல் காணப்படுகின்றன. மல்லிகை, முல்லை, அலரி முதலிய மலர்கள் கொத்துக் கொத்தாக மலர்ந்து தாழையும் வெண்ணொச்சியும் பூத்து இவ்வசந்தகாலம் விளக்கமடைகின்றது. அன்றியும் வாசனை நிரம்பிய குருக்கத்தி, எங்கும் அடர்ந்து வளர்ந்திருக்கும் குருந்து, சிரிவில்வம், இலுப்பை, அசோகம், மகிழம், திலகம், நாகம், கடம்பு, மாவிலிங்கை, பத்மகம், நீலாசோகம், லோத்திரம் முதலிய மரங்களெல்லாம் இம்மலைச்சாரல்களில் சிங்கத்தின் பிடர்மயிரை யொத்

துப் பூத்து அழகாய் விளங்குகின்றன. மேலும் அழிஞ்சில், மருதாணி, பூர்ணகம், பாரிபத்திரகம், மா, பாதிரி, கோவிதாரம், முசுளிந்தம், மருதம், தாழை, உத்தாலகம், காட்டு வாகை, சிஞ்சுபம், தவம், சான்மலி, கிஞ்சுகம், செம்மருதாணி, தினிசம், நக்தமாலம், சந்தனம், ஸ்பந்தனம் முதலிய மரங்களும் இம்மலைத் தாழ்வரைகளில் பூத்துத் தோன்றுகின்றன. இவைகள் இப்பம்பைக் கரையில் எவ்வளவு அழகாய்ப் பூத்து மலர் நிறைந்த பூங்கொடிகளால் துவக்குண்டிருக்கின்றன! களித்த பெண்களைப் போல இப்படர் கொடிகள் பக்கத்திலுள்ள பாதபங்கள் காற்று லசைபவைகளைத் தழுவுகின்றன. ஆங்காங்குள்ள நாநுவிதமான வாசனைகளைக் கிரகித்துக் களிப்படைந்த காற்று ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்கும், ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்கும், ஒரு வனத்திலிருந்து மற்றொரு வனத்துக்கும் தாவிச்செல்லுகின்றது. சில சுகந்த விருக்ஷங்கள் பூக்களால் மூடப்பட்டும் சில மரங்கள் அரும்புகளால் மூடப்பட்டும் கண்ணுக்கினிய பசுமையுடையவைகளாய் விளங்குகின்றன. 'இது வெகு ருசிகரமானது. இது தேன் நிறைந்துள்ளது. இது நன்றாய் அலர்ந்திருக்கின்றது' என்று சொல்லிக்கொண்டுபோவது போல் புஷ்பங்களிடத்தில் வண்டுகள் சென்று மொய்க்கின்றன. அவைகள் மறுபடி மேலே கிளம்பி மது உண்ண ஆசைகொண்டு பம்பாதீரத்திலுள்ள வேறு மரங்களை நோக்கிச் செல்லுகின்றன. மரங்களினின்றும் தாமாக உதிர்ந்த மலர்களால் இவ்வனபூமி பாயல் பரப்பியது போல் இனிதாக விளங்குகின்றது. பலவித புஷ்பங்கள் சொரிந்திருக்கின்ற இம்மலைச்சாரல்கள் ஆங்காங்கு நாநுவிதமான படுக்கைகள் விரித்திருப்பனபோல் காணுகின்றன. லக்ஷ்மண, இவ்வசந்தகாலத்தில் விருக்ஷங்களில் புஷ்பங்கள் உண்டாவதைப் பார். இந்தப் புஷ்பமாசத்தில் இம்மரங்களெல்லாம் ஒன்றோடொன்று மாறுகொ

ண்டு பூத்தனபோலக் காணப்படுகின்றன. வண்டுகள் சூழ்ந்து ரீங்காரம் பாடப் பூங்கொத்துக்கள் நிறைந்துள்ள மரங்கள் ஒன்றையொன்று நல்வரவு கூறுவனபோலும். இந்த நீர்க்காகம் தன் துணையோடு தெளிவான இந்நீரில் விளையாடி எனது ஆசைக் கனலை எழுப்புகின்றது. மந்தாகினி நதியையொத்துத் தோன்றும் இப்பம்பை உண்மையாக உலகப் பிரசித்தமா யுள்ள குணங்க ளனைத்தும் அமைந்திருக்கத்தக்க தொன்றே. லக்ஷ்மணா, பதிவிரதா சிரோமணியான சீதையை இங்கே கண்டு அவளுடன் கூடி வசிக்கப் பெறுவேனேயாகில் நான் அயோத்திமா நகரமும் வேண்டேன்; இந்திரன் பதவியும் வேண்டேன். அதி மனோக்கியமாயுள்ள இந்தப் பசும்புற்றரையில் அவளுடன்கூடி உல்லாசமாய் உலாவித் திரியப்பெறுவேனேல் யான் ஒருவித கிலேசமு மின்றியிருப்பேன். நானாவிதமான புஷ்பங்களால் வேயப்பட்ட இம்மரங்கள் பிராணநாயகியை விட்டுப் பிரிந்து காட்டில் சஞ்சரிக்கும் என் மனத்தைப் பிரமிக்கச் செய்கின்றன. சுமித்திரை குமார, இப்பம்பை குளிர்ந்த நீர் நிரம்பி, தாமரை மலர்கள் மல்கி, சக்கரவாகம், நீர்க்காக்கை, பிலவம், கிரௌஞ்சம் முதலிய பறவைகள் குழுமி, காட்டுப்பன்றி, மான் முதலிய விலங்குகள் துவன்றிக் காணப்படுகின்றது. பக்ஷிகள் மனோகரமாய்ச் சத்திப்பதால் பம்பையினுடைய அழகு சிறந்து விளங்குகின்றது. அநேகவிதமான பறவைகள் இனியகுர லெழுப்பிக் கூவிச் சந்திரன்போன்ற முக மண்டலத்தையும் தாமரை யிதழ்கள்போன்ற கண்களையும் உடைய என் பிரிய நாயகியை நினைப்பூட்டி எனக்கு வேட்கை பெருகச் செய்கின்றன. அதோ பார், விசித்திரமான அம்மலைத் தாள்வரைகளில் மான்கள் ஆணும் பெண்ணுமாய் விளையாடுகின்றன. அவைகள் அங்ஙனமாக நான் இவ்விடத்தில் மான்போன்ற கண்களை உடைய வைதேகியைப் பிரிந்து வாடுகின்றேன். கொழுத்த பட்

சிகள் உல்லாசமாய்க் கூவி அங்கு மிங்குமாய்த் திரிவதைப் பார்க்க என்மனம் மிகவும் சங்கடப்படுகின்றது. லக்ஷ்மணா, நான் என் காதலியைக் காண்பேனேல் கவலையற்றிருப்பேன். தாமரை, சௌகந்திகம் முதலிய புஷ்பங்களின் நறுமண மளாவி, எவ்வித மனக்கிலேசத்தையும் மாற்றவல்லதாய், பம்பையிலிருந்து வந்து வீசும் மந்த மாருதத்தை நுண்ணிடையாளான வைதேகி என்னுடனிருந்து அநுபவித்தாலன்றோ நான் உயிர் வாழ்வேன். இப்பம்பையின் காற்றை யநுபவிப்பவரன்றோ பாக்கியவான்கள்? தாமரை மலர்போன்ற கண்களை யுடைய ஜனக நந்தினியான என்னுடைய பிராணநாயகி என்னை விட்டுப் பரதந்திரையாய் எவ்வாறு உயிர்தரித்திருக்கின்றாள்? அறநெறி யுணர்ந்தோனும் உண்மை யுரைப்போனு மான ஜனகமகாராஜன் என்னைச் சபை நடுவே சீதையின் க்ஷேம சமாசாரத்தைப்பற்றிக் கேட்டால் நான் என்ன சொல்வேன்? என் தந்தை மந்தபாக்கியனா என்னை வனத்திற்கநுப்பியபோது அறநெறி மறவாது என்னைத் தொடர்ந்துவந்த என் பிராணநாயகி இப்போது எங்குற்றாள்? நாடிழந்து மதிகலங்கி வனம் புக்க என்னைப் பின்றொடர்ந்து வந்த சீதையை விட்டு நான் எங்ஙனம் உயிர் சுமந்து வாழ்வேன்? தாமரை யிதழ்கள் போன்ற கண்களை உடைத்தாய் நன்மணங் கமழும் அவளுடைய திருமுகமண்டலத்தைக் காணாது என் மனம் வாடுகின்றது. லக்ஷ்மணா, ஒப்பில்லாததும், இனியதும், நன்மை பயப்பதும், இடையிடை புன்முறுவலோடு விரவியதும், எளிதிற் பொருள் விளங்கும் சொற்கள் பொதிந்ததும், நல்ல நடையினை யுடையதுமான அவ் வைதேகியின் வசனத்தை நான் எப்பொழுது கேட்கப் பெறுவேன்? கற்புக் கரசியான அப்பெண்கொடி காட்டில் யாதொரு துயருற்றபோழ்தும் அதனைப் பொருட்படுத்தாது என்னைக் கண்டமாத்திரத்தில் அதனைநீக்கி வேட்கை கொண்டு

சந்தோஷ மடைந்தவள்போல என்னேடு அன்புடன் உரையாடுவாளன்ரே? கோமகனே, நான் அயோத்தி சென்ருல், 'என்னுடைய மருமகள் எங்கே? அவள் சுக மாக விருக்கின்றனளா?' என்று கௌசலாதேவி என் னைக்கேட்டால் நான் என்ன மாறுத்தரம் கொடுப்பேன்? லக்ஷ்மணு, நீ சகோதர வாஞ்சையுள்ள பரதனிடம் சென் றுவாழ்வாய். அந்த ஜனகநந்தினியின்றி நான் உயிருட னிருக்கச் சகியேன்."

இவ்வாருக மகாத்துமாவாகிய இராமர் திக்கற்ற வரைப்போல் புலம்புவதை லக்ஷ்மணர் பார்த்து, அவ ரை நோக்கிக் குற்றமில்லாத காலோசிதமான வார்த்தை களைச் சொல்வா ராயினர்:—"ரகுகுல திலக, உமக்குண் டாயிருக்கும் இந்தத் துக்கத்தை விட்டு விடுவீராக. உமக்கு மங்கள முண்டாகுக. புருஷோத்தம, நீர் விசனப்படவேண் டாம். சுத்தாத்துமாக்களுடைய புத்தி இவ்விதமாய்க் கலக்கமடைவது கூடாது. இப்பொழுது சீதையின் பிரிவா லுண்டாயிருக்கும் துக்கத்தை நினைந்து பிரிய ஜனங்களிடத்தில் அதிக நேசம் பாராட்டக்கூடா தென்று அதை யொழித்துவிடவேண்டும். எண்ணெயில் அதிகமாய் நனைந்த வர்த்தி எண்ணெயின் ஈரமுள்ள தேனும் எரிந்துவிடும். ஓ இராகவ, பாதாளம் சென்ரு லும் சரி, அதன் கீழேபோ யொளித்தாலும் சரி, இராவ ணன் ஒருநாளும் பிழைக்கப்போகிறதில்லை. முதலில் நாங் கள் அக்கொடிய அரக்கனுடைய சங்கதிகளை யறிந்து கொள்வோம்; உடனே அவன் சீதையைக் கொண்டுவந்து விட்டாலாயிற்று; இல்லையாயின் அவன் மரணமடைவது திண்ணம். சீதையைக்கொண்டுவந்து விடாவிட்டால் அ வன் திதியின் கர்ப்பத்தில் புகுந்துகொள்வானுயினும் அவ னை நான் கொன்றுவிடுவேன். தேவரீர் மனக்கலக்கத்தை மாற்றித் தைரியங்கொண்டு துயரம் நீங்கியிருங்கள். காரி

இராமரை லக்ஷ்மணர் தேற்றுதல்.

யத்தைச் சாதிக்கவல்லவர்க்கும் கைகூடின காரியம் எத்தனமின்றி மீட்டும் கூடாது. ஐய, இவ்வுலகத்தில் உற்சாகமே வலிமைக்குக் காரணம். அதனின் மிக்க வலியுள்ள தொன்றுமில்லை. அதைப்பெற்றவனுக்கு இவ்வுலகத்தில் கிட்டாத தொன்றுமில்லை. உற்சாகமுள்ள புருஷர்கள் தாங்கள் செய்யுந் தொழிலில் ஒருபொழுதும் மனச்சோர் வடையமாட்டார்கள். ஆதலால் உற்சாகத்தை மேற்கொண்டால்தான் நாம் சீதையை மீளவும் பெறுவோம். சகல சாஸ்திரங்களையும் கற்று அவற்றின் உட்பொருளையுணர்ந்த மகாத்துமாவாகிய தேவரீர் இங்ஙனம் வேட்கைமிக்கு வருந்தலாமா? உமது வேட்கையை இப்போதே நீக்கி விடும்.'' இவ்வாறு லக்ஷ்மணரால் தேற்றப்பட்டு விசனத்தில் மூழ்கியிருந்த இராமர் தம்மைப்பற்றிய சோக மோகங்களை முற்றும் துறந்து தைரியங்கொண்டார். நினைத்தற்கரிய பராக்கிரமமுடைய இராமர் பிறகு அழகான மரங்கள் செறிந்த கரைசூழ்ந்து ரமணீயமாய் விளங்கும் பம்பையைக் கடந்துசென்றார்.

லக்ஷ்மணர் கூறிய மொழிகளை மனத்திற் சிந்தித்துக்கொண்டு மகாத்துமாவாகிய இராமர் கானுறுகளும், குகைகளும் நிறைந்த அவ்வனத்தின் விநோதத்தைப் பார்த்துத் தமது மனவருத்தத்தை யடக்கிக்கொண்டு தம்பியுடன் வழிநடந்தார். மகாத்துமாவான லக்ஷ்மணர் மத்த யானையைப்போல் நடந்து இராமரோடு தருமத்தையும் பராக்கிரமத்தையும் பற்றிப் பேசி அவரை உற்சாகப்படுத்திக்கொண்டு சென்றார். இவ்வண்ணம் வெகு அற்புதமான தோற்றத்துடன் ரிசியமூகபருவதத்தைச் சமீபித்து வந்து கொண்டிருந்த இராமலக்ஷ்மணர்களை அங்கிருந்த வானராதிபதியான சுக்கிரீவன் கண்டு நடுங்கிச் செயலற்றுத் திகைத்து நின்றான். அவன் பின்பு யானையைப் போல் மெதுவாய் அடிபெயர்த்து நடந்து

இராம லக்ஷ்மணர்களைக் கண்டு சுக்கிரீவன் பயமுறுதல்.

அச்சமுந் துக்கமு மடைந்து சிந்தாக்கிராந்தனுயினுன். மகா பராக்கிரமமுடைய இராம லக்ஷ்மணர்களைக் கண்ட வானரர்கள் பயந்து தாங்கள் சுகமாக வாசம்செய்து வந்த புகலிடமாய புண்ணியாச்சிரமத்துட் புகுந்துகொண்டார்கள்.

---

## இரண்டாஞ் சருக்கம்.

*இராமலக்ஷ்மணர்களின் வரலாற்றை யறிந்துவரச் சுக்கிரீவன் அனுமானை யனுப்புதல்.*

---

*இராம லக்ஷ்மணர் களைக்கண்டு வானரர்கள் வெருவி யோடுதல்.*

பெருவிறலினையுடைய மகாத்துமாக்களாகிய இராம லக்ஷ்மணர்கள் பெரிய ஆயுதங்களைக் கையில் தாங்கி அங்கு வருவதைக் கண்ட வானரோத்தமனுகிய சுக்கிரீவன் பயமடைந்தவனுய், நாற்புறமும் சுற்றிப்பார்த்து, ஓரிடத்திலும் நிலைகொண்டு நிற்க இயலாது உள்ளம் தடுமாறினுன். அவன் அவ்வீரர்களுக்கும் தனக்குமுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சீர்தூக்கிப்பார்த்து, மிக்க கவலையுற்று, தனது மந்திரிமார்களை நோக்கி "இவ்விரண்டு வீரர்களும் வாலியினுல் ஏவப்பட்டுப்பொய்வேடம் பூண்டுமரவுரி தரித்துப் புகுதற்கரிய இவ்வனத்தைக் கடந்துவந்திருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை" என்முன். உடனே மந்திரிமார்கள் அவ்வில்வீரர்களைக் கண்டு தாங்களிருந்த மலைத்தடத்தை விட்டு மற்ருேர் உன்னதமான கொடுமுடியை யடைந்தார்கள். அங்கே தங்களரசனும் தலைவனுமான சுக்கிரீவனுடைய சுகதுக்கங்களுக்குப் பாத்தியப்பட்டு நிற்கும் வானரத்தலைவர்கள் எல்லாரும் அம்மலையின் கொடுமுடிகள் அசையவும், அதன்மேல் புஷ்

பித்துவிளங்கும் விருக்ஷங்கள் முறிந்து வீழவும், அம்மலையின் நாற்புறத்திலுமுள்ள மான், பூனை, புலி முதலிய விலங்குகள் வெருவியோடவும் அதிவேகமாக ஒரு சிகரத்தினின்று மற்றொன்றிற் பாய்ந்து விரைந்து சென்று தந் தலைவனைச் சுற்றிநின்றார்கள். அமாத்தியர்கள் சுக்கிரீவன் எதிரில் வந்து கைகூப்பி நின்றார்கள். பிறகு வசனிப்பதில் சமர்த்தனான அனுமான் வாலியின் கெட்டசெய்கைகளை நினைந்து பயமடைந்த சுக்கிரீவனைநோக்கி "நீவிர் அனைவரும்வாலியின் பயத்தை விட்டுவிடுங்கள். இந்தச் சிறந்த மலயபர்வதத்தில் வாலியால் ஒன்றும் செய்யமுடியாது. ஓ வானரோத்தம, எவனுடைய கொடுமையைச் சகியாது நீர் பயந்தோடிவந்தீரோ அந்தப் பயங்கரமான தோற்றத்தையுடைய வாலியை இங்கே காணேன். கெட்ட செயல்களைச் செய்யும் நுமது முன்னோனாகிய தீய வாலி இவ்விடத்தில் இல்லை. இவ்விடத்தில் அவனால் பயம் உண்டாதற்குக் காரணமும் நான் காணவில்லை. ஐய, உம்முடைய வானரத்தன்மையை நன்றாய் வெளியாக்கினீர். கௌரவபுத்தி இல்லாமையால் மனத்தை ஒருவழி நிறுத்த இயலாதிருக்கின்றீர். புத்தியும் ஞானமு முடைய நீர் இங்கிதங்களால் அனைத்தையு மறிந்து செய்யவேண்டும். புத்தியில்லாத மன்னவன் குடிகளைப் பாதுகாப்பது முடியாது" என்றான்.

சுக்கிரீவன் அனுமானை ராமலக்ஷ்மணர்களிடம் அனுப்புதல்.

இந்தப் பொருள்பொதிந்த சொற்களைச் செவியுற்ற சுக்கிரீவன் அனுமானை நோக்கி முன்னிலும் மேன்மையான வார்த்தைகளால் "நீண்ட கைகளையும் விசாலமான கண்களையும் உடையராய் வில்லும் அம்பும் வாளும் தரித்துத் தேவகுமாரர்களைப்போல் விளங்கும் அவ்விரு வீரர்களையும் கண்டால் யார்தாம் அச்சமடையார்? இந்தப் புருஷோத்தமர்களை வாலியால் அனுப்

பப்பட்டவர்களென்று நான் எண்ணுகிறேன். அரசர்களுக்குத் துணைவர்கள் அனேகர். ஆராய்ந்தறியும் வரையில் எவரையும் நம்பவொண்ணாது. பகைவர்கள் கபடமார்க்க முள்ளவர்களாதலால் வேஷமாறித் திரிந்து அவ்வேஷத்தை மெய்யென்று கொள்வோரைச் சமயம் பார்த்துக் கொன்றுவிடுவார்கள். இது யாவரும் அறிந்து கொள்ளவேண்டிய விஷயம். வாலியோ தன் காரியத்தை முடிப்பதில் அதிக சமர்த்தன். அரசர்கள் பலவிதமான தந்திரங்களால் சத்துருக்களைக் கொலை செய்வார்கள். இவர்க ளெண்ணத்தை மாறுவேடம் பூண்ட ஒற்றர்களா லறியவேண்டும். ஆதலால், அனுமானே, நீர் வேற்றுருவங்கொண்டு சென்று, அவர்களை இன்னாரென்றுதெரிந்து, அவர்களுடைய முகக்குறி, தோற்றம், பேச்சுக்களை நன்றாய்க் கவனித்து, அவர்களுடைய காரியம் யாதென்று அறிவீராக. அவர்கள் நம்மிடத்தில் நல்ல எண்ணம் உடையவர்கள் எனத் தெளிவீராகில் அவர்கள்முன் என்னை அடிக்கடி புகழ்ந்து பேசி அக்காலத்தில் அவர்களுடைய முகக்குறிகள் எவ்வாறுயிருக்கின்றனவென் றறிந்துகொள்ளும். அந்த வில்வீரர்கள் சுத்தாத்துமாக்களாக விருக்கும்பக்ஷத்தில் அவர்கள் இந்தக் காட்டிற்கு என்ன காரியமாக வந்தார்கள் என்று கேட்டறியும். அவர்களுடைய சொற்களாலும் இங்கிதங்களாலும் அவர்களுடைய எண்ணம் நல்லதோ கெட்டதோ வென்று தெரிந்துகொள்ளும்'' என்றான். வெல்லற்கரிய பராக்கிரமமுடைய வானரேந்திரன் இவ்வாறு ஆஞ்ஞாபிக்க மகானுபாவனாகிய அனுமான் "அப்படியேயாகட்டும்'' என்று சொல்லி இராமலக்ஷ்மணர்க ளிருக்குமிடம் போகப் புறப்பட்டான்.

## மூன்றாஞ் சருக்கம்.

அனுமான் இராமலக்ஷ்மணர்களைச் சுக்கிரீவனோடு நட்புச்செய்யும்படி வேண்டல்.

---

அனுமான் இராம லக்ஷ்மணர்களிடம் சென்று விசாரித்தல்.

அனுமான் மகாத்துமாவாகிய சுக்கிரீவனுடைய வசனங்களின் கருத்தை யறிந்து, ரிசியமூக பர்வதத்தினின்று புறப்பட்டு, சத்தியமும் பராக்கிரமமுமுடைய ரகுநந்தனர்களிருக்குமிடத்தை நாடிச் சென்று, தான் இன்னானென்று தெரியாதிருக்க வேண்டித் தனது வானர உருவத்தை நீக்கிப் பிரமசரிய வேடங்கொண்டுபோய், அவர்களை அதிக விநயத்துடன் பணிந்து, விதிப்படி பூசித்து, அவர்களைப் பார்த்து வெகு அழகும் மனோக்கியமுமான வார்த்தைகளால் தான் சொல்ல எண்ணியதைச் சொல்லலுற்றான்:—“ ராஜரிஷிகளையும் தேவர்களையும் போலத் தேசுள்ளவர்களாய்த் தோன்றும் நீவிர் அரியதவவிரதம் பூண்டவர்களாய்க் காணப்படுகிறீர்கள். அங்ஙனமாகவும் இவ்வனத்திலுள்ள மான் கூட்டங்களையும் மற்றுமுள்ள விலங்குகளையும் வெருவச் செய்துகொண்டு நீங்க ளிங்கு வந்தகாரண மென்ன ? நீங்கள் இவ்வேரி தீரத்திலடர்ந்து வளர்ந்துள்ள மரங்களைப் பார்த்துக்கொண்டு திரிவதனால் நல்ல நீர்நிரம்பிய இப்பம்பை பொலிந்து விளங்குகின்றது. இளமையுடையவர்களாயும், மகா தைரியவான்களாயும், பொன்னொத்த மேனியராயும், மிக்க தோள் வலி படைத்தவர்களாயும், இக்காட்டிலுள்ள மிருகங்களை நடுங்கச் செய்பவர்களாயும், சிங்கத்தின் தோற்றமும் அதனின் மிக்க பலமு முடையவர்களாயும், இந்திரனுடைய விற்போன்ற விற்களைக் கையிலேந்தினவர்களாயும், சத்துருக்களை நாசம்செய்யவல்ல பராக்கிரம முடையவர்களாயும், பாக்கியசூசகமான குறிகளுள்ளவர்களாயும், ரூப

லாவண்ணியங்க ளமைந்தவர்களாயும், பெரிய ரிஷபத்தின் வலியுடையவர்களாயும், யானையின் துதிக்கையை நிகர்த்த கைகளுடையவர்களாயும், தேககாந்தி யுடையவர்களாயும், நரசிரேஷ்டர்களாயு மிருந்தும், சடைமுடித்தும் மரவுரி தரித்தும் பெருமூச்சு விட்டுக்கொண்டு மிருக்கும் நீவிர் யாவர்? உங்களுடைய தேகத்தினொளியினால் இந்தப் பர்வதமும் திகழுகின்றது. இராச்சியபாரத்தை வகிக்க யோக்கியர்களாயும் தேவதுல்லியர்களாயு மிருக்கும் நீவிர் இங்குவரக் காரணம் யாது? ஒருவரை யொருவர் ஒத்துத் தோன்றும் தாமரைபோன்ற கண்களையுடைய மகாவீரர்களாய உங்களைப் பார்க்குமிடத்துத் தேவலோகத்திலிருந்து வந்தவர்கள்போலத் தோற்றுகின்றது. நீங்கள் இப்பூவுலகில் சுயேச்சையால் வந்துலாவுகின்ற சந்திர சூரியர்கள்போல் காணுகின்றீர்கள். விசாலமான மார்பும் வீரத்தன்மையும் சிங்கத்தின் பிடர்போன்ற கழுத்தும் மகோத்ஸாகமும் உடையவராய்க் கொழுத்த ரிஷபங்களைப்போலும் உங்களை மானுட உருவம்கொண்ட தேவர்கள் எனவே நான் எண்ணுகின்றேன். பரிகாயுதங்கள்போல நீண்டுருண்ட உங்களுடைய தோள்கள் ஆபரணங்களால் அலங்கரிக்கத் தக்கனவாயிருந்தும் அவ்வாறு அலங்கரிக்கப்படாமைக்குக் காரணம் யாது? சமுத்திரங்கள் சூழ்ந்து, வனங்கள் அடர்ந்து, விந்தம் மேரு என்னும் மலைத்தொடர்களால் அலங்கிருதமாயிருக்கும் இப்புவி முழுதையும் நீங்கள் பாதுகாக்க வல்லவர்களாகக் காணப்படுகின்றீர்கள். அழகுடையனவாய்த்திரண்டு சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ள உங்களுடைய விற்கள் இந்திரனுடைய வச்சிராயுதம் போல் விளங்குகின்றன. அழகு பொருந்திய உங்களுடைய அம்பறுத்தூணிகள் உயிரைவாங்கப் பெருமூச்செறிந்துகொண்டிருக்கும் பயங்கரமான சர்ப்பங்கள் போன்ற கூரிய பாணங்களால் நிறைந்திருக்கின்றன.

தங்கப்பிடிகளையுடையனவாய் இவ்விரண்டு பெரிய கத்திகளும் கட்டவிழ்த்த சர்ப்பங்கள் போல் காணுகின்றன. நான் இவ்வளவு பேசியும் நீங்கள் ஏன் என்னுடன் வார்த்தை யாடாதிருக்கின்றீர்கள்? மகா வல்லமைசாலியும் தருமாத்துமாவுமாய் விளங்குகின்ற சுக்கிரீவன் என்னும் பெயருடைய வானராதிபன் ஒருவன் தமையனால் துரத்தப்பட்டு அதிக துக்கமுடையவனாய் இவ்வுலகத்தில் அலைந்து திரிகின்றான். நான் அந்த மகாத்துமாவினால் அனுப்பப்பட்டு இங்குவந்தேன். என் பெயர் அனுமான். அந்த வானரோத்தமனாகிய சுக்கிரீவன் உங்களுடைய நட்பை விரும்புகின்றான். நான் அவனுடைய மந்திரி; ஜாதியில் வானரன்; வாயுகுமாரன். நினைத்த உருவம் எடுக்கவல்லோனாதல்பற்றிப் பிரமசரியவேடம் தரித்துச் சுக்கிரீவனுக்கு இதத்தைச் செய்யும்பொருட்டு ரிசியமூக பர்வதத்தை விட்டு இங்குவந்தேன்." நன்றாகப் பேசுவதில் வல்ல அனுமான் சொற்பொருளறியக்கூடிய வீரர்களான இராமலக்ஷ்மணர்களை நோக்கி இவ்வாறு சொல்லிவிட்டு மௌனமாயிருந்தனன்.

இந்த வார்த்தையைச் செவியுற்ற சீமானாகிய இராமர் சந்தோஷமடைந்து, பக்கத்திலிருக்கும் லக்ஷ்மணரை நோக்கி "தம்பி, இவர் வானரேந்திரனும் மகாத்துமாவுமான சுக்கிரீவனுடைய மந்திரி. அந்தச் சுக்கிரீவனுடைய நன்மையைக் கருதி எம்மிடத்து வந்தனர். சுக்கிரீவனுடையமந்திரி யாகையால் இவருக்கு அமைச்சருக்குரிய மரியாதைசெய்து நட்பை யுண்டாக்கவல்ல சொன்னயமுடைய மறுமொழிசொல்லு. இருக்கு, யஜுஸ், ஸாமம் ஆகிய மூன்று வேதங்களையும் கற்றவர்க்கல்லாது இவ்விதமாய் வசனிக்கமுடியாது. இவர் வியாகரண சாஸ்திரம் முழுதும் வெகு நன்றாய் அப்பியசித்

இராமர் லக்ஷ்மணரை நோக்கி அனுமானுக்குத்தக்க விடையளிக்கச்சொல்லுதல்.

தவர் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவுகாலம் பேசியும் இவர் வாக்கில் ஒரு அபசப்தமாவது வரவில்லை. பேசும் பொழுது இவருடைய முகத்திலாவது கண்களிலாவது நெற்றியிலாவது புருவங்களிலாவது மற்றுமுள்ள எந்த அவயவங்களிலாவது யாதொரு தோஷமும் காணப்படவில்லை. இவர் சொன்ன சொற்கள் சுருக்கமாயும் சந்தேகத்துக்கிடமின்றியும் தாமத மின்றியும் படபடப்பின்றியும் இவருடைய மார்பினின்று கண்டத்தின்வழியாக நடுத்தரமான குரலோடு வெளிவந்தன. இவருடைய சொற்கள் அற்புதமாயும் மங்களகரமாயும் கேட்போர் மனத்தைக் கொள்ளைகொள்ளுபவைகளாயு மிருக்கின்றன. இவரிடத்திலிருந்து வரும் இனிய வசனத்தைக் கேட்டால் கத்தியை ஓங்கிக்கொண்டு வரும் சத்துருக்களும் இரங்குவாரன்றோ? இவ்விதமான தூதனில்லா அரசனுக்கு என்னகாரியம் நிறைவேறும்? இவ்வகைக்குணங்களோடு விளங்கும் தூதரிருப்பின் அவர்களுடைய சொற்களால் அரசர்களுடைய சர்வகாரியங்களும் சித்தியடையு மன்றோ?" என்று சொன்னார். அதுகேட்டு நன்றாய்ப் பேசுவதில் வல்ல லக்ஷ்மணர் சுக்கிரீவனுடைய மந்திரியாகிய அனுமானைப் பார்த்து "ஓ புலவ, மகாத்துமாவாகிய சுக்கிரீவனுடைய குணங்களை நாங்கள் செவ்வனே தெரிந்துள்ளோம். அவ்வானரேந்திரனைப்போய்க் காண்போம். சுக்கிரீவனுடைய உத்தரவை யனுசரித்து நீர் சொல்லுமாறு செய்கின்றோம்" என்றார். வெகு சாதுர்யமான இவ்வாக்கியங்களை அனுமான் கேட்டுச் சந்தோஷித்துச் சுக்கிரீவனுடைய வெற்றியைக் கருதி அவனுக்கும் இராமலக்ஷ்மணர்களுக்கும் நட்புச் செய்து வைக்க எண்ணினன்.

## நான்காஞ்சருக்கம்.

*இராமர் சுக்கிரீவனுடைய நட்பை விரும்புவதாய் லக்ஷ்மணர் அனுமானுக்குத் தெரிவித்தல்.*

---

லக்ஷ்மணர் தன்னிடம் சொன்ன சொற்களையும் இராமலக்ஷ்மணர் இருவருக்குள்ளும் நடந்த மதுரமான சம்பாஷணையையும் காரியநிர்வாகம் செய்யவல்ல அனுமான் கேட்டு "இவர்களும் ஏதோ காரியத்தை உத்தேசித்துத்தான் இங்கு வந்திருக்கின்றனர். இனி மகாத்துமாவாகிய சுக்கிரீவனுக்கு இராச்சியம் கிடைப்பதில் யாதொரு சந்தேகமு மில்லை" என்றெண்ணிக் களிப்படைந்து சுக்கிரீவனை மனத்தில் நினைந்தான். பிறகு வானரசிரேஷ்டனுகிய அனுமான் அதிக உவப்புற்று வாக்கில் வல்லவராகிய இராமரைப்பார்த்து "ஐய, யாதுகாரணத்தால் நீர் உம்முடைய தம்பியுடன் பயங்கரமானதும், நானாவிதமான மிருகங்கள் சஞ்சரிப்பதும், பிரவேசிப்பதற்குக் கூடாததும், பம்பைக் கரையிலுள்ள மரச்சூழல்களால் அலங்கிருதமானதுமான இவ்வனத்துக்கு வந்தீர்?" என்று வினவினன். அதைக் கேட்டவுடன் லக்ஷ்மணர் இராமருடைய கட்டளையால் அவரைப்பற்றி அனுமானுக்குச் சொல்லத் தொடங்கினார்:—"மகா காந்திமானும் தருமத்தில் அபிமானமுள்ள வருமான தசரதர் என்று ஒரு சக்கிரவர்த்தியிருந்தார். அவர் தமது நெறியிற் பிறழாது நான்கு வருணத்தவரையும் சதாபாதுகாத்துவந்தார். அவருக்குச் சத்துருக்களே யில்லை. அவரும் ஒருவரிடத்திலும் பகை பாராட்டினதில்லை. அவர் எல்லாப்பிராணிகளுக்கும் வேறொரு பிதாமகன்போன் றிருந்தார். வேண்டியவளவு தக்ஷிணை காடுத்து அவர் அக்கினிஷ்டோமாதி மகாயாகங்களைச்

*லக்ஷ்மணர் அனுமானுக்கு இராமருடைய விருத்தாந்தத்தைக் கூறல்.*

செய்து முடித்தார். இவர் அவருடைய மூத்தகுமாரரான இராமர்; உத்தமகுணங்களுடையவர்; அரசர்க்குரிய லக்ஷணங்கள் யாவும் பொருந்தியவர்; ராஜலக்ஷ்மி விளங்கப் பெற்றவர். இவர் நாட்டைத்துறந்து காட்டில் வசிக்க என்னுடன் இங்கு வந்திருக்கின்றார்; மாலைப்பொழுதில் கதிரோனுடன் செல்லும் அவனது ஒளிபோல இவருடைய பாரியையான சீதை இவரைத் தொடர்ந்துவந்தாள். நான் இவருக்கிளையவன்; எல்லாமறிந்தவரும் நன்றி மறவாதவருமான இந்த மகானுபாவனுடைய குணாதிசயங்களால் கவரப்பட்டு இவருக்குக் குற்றேவல் செய்வதே விரதமாகக் கொண்டுள்ளேன். என்பெயர் லக்ஷ்மணன். சுகத்திலிருக்கத் தக்கவரும், எல்லாராலும் சேவிக்கத் தக்கவரும், சர்வபூதங்களுக்கும் நன்மையை நாடுபவருமான இம்மகானுபாவன் பாக்கியத்தை இழந்து வனத்தில் வசித்துவருகையில் அரக்கன் ஒருவன் உருமாறிவந்து இவருடைய மனைவியை அபகரித்துச் சென்றான். அவ்வாறு இவருடைய மனைவியை அபகரித்துச்சென்ற அரக்கன் இன்னான் என்பது தெரியாது. இதனால் நாங்கள் கலங்கும்பொழுது, திதியின் குமாரனாகிய தனு என்பவன் சாபத்தால் அரக்கனுருக்கொண் டிருந்தானைக் கண்டோம். அவன் எங்களைப் பார்த்து 'சுக்கிரீவன் என்று ஒரு வானரத்தலைவனிருக்கிறான். அவன் நுமது மனைவியைக் கவர்ந்து சென்றவனைக் கண்டறியத் தக்கவன்' என்று சொல்லிவிட்டுத் தேஜோரூபந்தரித்துத் தேவருலகம் சென்றான். இப்பொழுது இராமரும் நானும் சுக்கிரீவனைச் சரணடைந்தவர்களாயிருக்கிறோம். இவ்வுலகத்துக்கெல்லாம் வேந்தராயிருந்து அநேக தானங்கள் வழங்கிப் புகழ்பெற்றிருந்த இராமர் இப்பொழுது சுக்கிரீவனைத் தனக்குத் தலைவனாக்க விரும்புகின்றனர். அறநெறி வழுவாதவரும் யாவர்க்கும் புகலிடமானவரும் யார்க்கும்புகலிடமான தசரதருடைய

குமாரருமாகிய இராமர் இப்பொழுது சுக்கிரீவனுடைய பாதுகாவலைத் தேடிவந்திருக்கின்றனர். சர்வலோகமும் சரணடையத்தக்கவராயும் உண்மையாய்ச் சர்வலோக சரண்ணியராயும் என் குருவாயும் விளங்கு மிராமர் சுக்கிரீவனைச் சரணடைகின்றனர். குடிகளுடைய சந்தோஷத்திற்குக் காரணமாகிய அருளையுடைய இராமர் இப்பொழுது சுக்கிரீவனுடைய பிரசாதத்தை அபேக்ஷிக்கின்றனர். குணங்களால் நிறைந்த மன்னவ ரனைவோர்க்கும் தக்க மரியாதைசெய்து அரசாண்டுவந்த தசரதமகாராஜனுடைய மூத்த குமாரரும் மூவுலகிலும் கீர்த்திபெற்றவருமான இராமர் இப்பொழுது வானரேந்திரனாகிய சுக்கிரீவனைச் சரணடைகின்றனர். துக்கத்தால் வருந்தித் தன்னைவந்து சரணடைகின்ற இராமருக்கு சுக்கிரீவன் உதவிபுரியவேண்டும்". இவ்வாறு லக்ஷ்மணர் கண்ணீர் பெருகச் சொல்லிநிற்க, பேசுதலில் வல்ல அனுமான் அவரைப் பார்த்து "இத்தகைய புத்தி விசேஷத்தைப் பெற்றுக் கோபத்தை யடக்கிச் சாந்தசித்தர்களாய் ஐம்புலன்களை யவித்துள்ள மகாபுருஷர்களை அவ்வானரேந்திரனே வந்து பார்க்கவேண்டும். அப்படி யிருக்க நீங்களே அவனைப்பார்க்கச் செல்வது அவனுடைய பாக்கியமன்றோ? அவனும் நாடிழந்து தமையனாகிய வாலியுடன் பகைகொண்டிருக்கிறான். அவனுடைய மனைவியை வாலி யபகரித்துக்கொண்டு அவனை அல்லல்செய்து வருவதால் அவன் பயந்து வனத்தில் வசிக்கிறான். சூரிய புத்திரனாகிய அந்தச் சுக்கிரீவனும் எங்களுடன் சீதையைத் தேடுவதில் வேண்டிய சகாயத்தைச் செய்வான்" என்று இனிய வார்த்தை சொல்லி இராமரைப் பார்த்துத் தான் சுக்கிரீவனிடத்துக்குப் போய் வருவதாகச் சொன்னான். இவ்வாறு பகர்ந்த அனுமானை

சீதையைத் தேடுவதில் சுக்கிரீவன்முயலுவானென அனுமான் விடை பகர்தல்.

லக்ஷ்மணர் தக்கபடி உபசரித்து, இராமரை நோக்கி "வாயு குமாரராகிய இவர் சந்தோஷ சித்தராய்ப்பேசுவதைப் பார்த்தால் இவரும் நம்முடைய உதவியை நாடிநிற்பதாகக் காணப்படுகின்றது. இங்கு வந்து உம்முடைய காரியமும் நிறைவேறிற்று. இவர் களிப்படைந்த முகத்துடன் தெளிவாக வசனிக்கின்றனர். இவர் ஒருபொழுதும் பொய்யுரையார் எனத் தோற்றுகின்றது" என்றார். பின்பு வாயுபுத்திரனாகிய அனுமான் தான் கொண்டிருந்த பிரமசரிய உருவத்தை நீக்கி, வானர வடிவுகொண்டு, அவ்விரு வீரர்களையும் தன்னிரு தோளினு மேற்றிக் கொண்டு, வந்தகாரியம் பலித்ததென்று உள்ளம் பூரித்து, வானரமன்னவனிருந்த மலையைச் சென்று சேர்ந்தான்.

---

## ஐந்தாஞ்சருக்கம்.

*இராமர் சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டு வாலியை வதைப்பதாக வாக்களித்தல்.*

---

*ராமலக்ஷ்மணர்களுடையவரலாற்றை அனுமான் சுக்கிரீவனுக்குத் தரிவித்தல்,*

அனுமான் ரிசியமூகபர்வதத்தை விட்டு மலயபர்வதத்துக்கு வந்து வீரர்களான இராமலக்ஷ்மணர்களுடைய வரவை வானரத்தலைவனுக்கு அறிவித்து "பெருமானே, இதோ தம்பி லக்ஷ்மணருடன் வந்திருக்கிறாரே இவர் இராமர்; மகா புத்திமான்; உண்மையான பராக்கிரமமுடையவர்; இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவர்; தசரத சக்கிரவர்த்தியின் குமாரர். எப்பொழுதும் தருமமார்க்கத்தினின்றும் தவறாதவராதலின் இவர் தந்தையின் கட்டளையைச் சிரமேற்கொண்டு வனவாசம் செய்யவந்தார். வந்த இடத்தில் இவரது மனைவியாரை இராவணன் அபகரித்துச் சென்றான்.

ஆதலின் இவர் உம்மைச் சரணமாக அடைந்திருக்கின்றனர். விசேஷமான தக்ஷிணைகள் கொடுத்து நூறு ஆயிரங்களாகக் கோதானங்கள் வழங்கி இராஜசூயம் அசுவமேதம் முதலிய யாகங்களைச் செய்து தன் தவத்தின் பெருமையாலும் சத்தியத்தின் மகிமையினாலும் இவ்வுலகை யாண்ட தசரதச் சக்கரவர்த்தியினுடைய குமாரராகிய இராமர் ஒரு பெண் நிமித்தமாக உம்மைத் தஞ்சமடைந்திருக்கிறார். இராமலக்ஷ்மணர்களாகிய இவ்விரு சகோதரர்களும் உம்முடன் சினேகம் செய்துகொள்ள விரும்புகின்றார்கள். பூசிக்கத் தக்கவர்களாகிய இவ்விருவரையும் நீர் தக்கபடி மரியாதைசெய்து அழைத்துக் கொள்ளும்" என்றனன். அனுமானிவ்வாறு சொல்லக்கேட்ட வானராதிபனாகிய சுக்கிரீவன் மனத்திற் சந்தோஷங் கொண்டு, இராமரிடத்தில் தான் கொண்டிருந்த பயத்தைத்தவிர்த்து, மனோவியாகூலத்தைப் போக்கி, அழகிய மானிட உருவம் தரித்து, வெகு பிரீதியுடன் இராகவரை நோக்கி "ஐய, நீர் தருமவழி நின்று எல்லாரிடத்திலும் அன்பு பராட்டும் தன்மையர் என்று உம்முடைய குணங்களனைத்தையும் யதார்த்தமாக மாருதி சொல்லக் கேட்டேன். பிரபுவே, வானரனான என்னோடு நீர் நட்புக் கொள்ள விரும்புவது எனக்கு மிக்க மேன்மையும் பெரிய லாபமும் ஆகின்றது. என்னுடைய சினேகம் உமக்குவேண்டுமாகில் இதோ யான் நீட்டிய கையை உம்முடையகையால் பற்றிச் செய்யவேண்டிய உறுதியைச் செய்துகொள்ளும்" என்றான். இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்ன இனிமையான வார்த்தையை இராமர் கேட்டுக் களிப்புற்றுத் தமது கையால் வெகு சந்தோஷத்துடன் சுக்கிரீவன் கையைப் பற்றினர். சுக்கிரீவன் மனப்பூர்வகமாய்த் தன்னுடைய நட்பை நாடிநின்றதால் அவனை இராமர் அதிக சந்தோஷத்துடன் இறுகத் தழுவிக்கொண்டார். அப்

இராமர் சுக்கிரீவனுடன் நட்புக் கொள்ளுதல்.

போது சத்துரு சூதனனாகிய அனுமான் தான் கொண்டிருந்த பிரமசரிய உருவத்தை விட்டுத் தன்னுடைய சுய ரூபங்கொண்டு, அரணியில் நெருப்புக் கடைந்தெடுத்து, கொழுந்துவிட்டெரியும் அத்தீயை ஆசாரத்துடன் புஷ்பங்களால் அருச்சித்து வெகு பக்தியோடு அவ்விருவர்களுக்கும் நடுவில் வைத்தனன். இராமரும் சுக்கிரீவனும் அத்தீயை வலம்வந்து, சிநேக வுறுதி செய்துகொண்டு, உள்ளங்குளிர்ந்து நின்று, விரைவில் திருப்தியடையாது ஒருவரை யொருவர் பார்த்தவண்ணமா யிருந்தார்கள். அப்பொழுது சுக்கிரீவன் இராமரைப் பார்த்து "ஐய, நீர் என் மனத்துக்கியைந்த நண்பர். சுகமும் துக்கமும் இனி நமக்குப் பொதுவாயின" என்று கூறி இலைகளடர்ந்து நன்றாகப் பூத்திருந்த ஓர் ஆச்சாமரத்தின் கிளையொன்றை யொடித்துக் கீழேபோட்டு இராமருடன் உட்கார்ந்தான். அனுமானும் சந்தோஷமடைந்து லக்ஷ்மணர் உட்காருவதற்கு நன்றாகப் பூத்திருந்த ஒரு சந்தனமரத்தின் கிளையை முறித்துக் கீழேபோட்டான். பின்பு சுக்கிரீவன் சந்தோஷத்தால் தன்னிருகண்களும் மலர்ந்து தோன்ற இராமரைப்பார்த்து மதுரமான வார்த்தைகளால் "ஓ ரகுநந்தன, நானிந்தக்காட்டில் என் தேசத்தையும் மனைவியையு மிழந்து, மிக்க பயமடைந்து, எனது சத்துருக்களுக்கு அணுகமுடியாத இம்மலையை யடைந்து பிழைத்திருக்கிறேன். என் தமையன் வாலியினால் பகைக்கப்பட்டு அவனுடைய பயத்தால் மதிகலங்கி இங்கு வசித்துக்கொண்டிருக்கிறேன். இவ்வாறு வாலியை நினைந்து பயங்கொண்டு திரியும் என்னை நீர் அபயப்பிரதானம் செய்து காத்தருளவேண்டும். நான் இனி அஞ்சாதவண்ணம் செய்வது உமது கடமை" என்றனன். அறமுணர்ந்தவரும் அதன் வழியினின்று பிறழாதவருமான இராமர் இவ்வண்ணம் சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டுப் புன்முறுவல்கொண்டு, அவனை

நோக்கி "கவிசிரேஷ்டனே, நட்பினது பயன் உபகார மியற்றுதல் என நான் அறிவேனாகையால் உம்முடைய மனைவியை யபகரித்த வாலியை வதைக்கிறேன். ஒரு நாளும் வீண்போகாதனவும் கூர்மையான முனைகள்பொருந்தினவும்கங்கபத்திரங்கள் கட்டப்பட்டு நேராய்ச் செல்வனவும் சூரியனுக்கொப்பாயினவுமான என்னுடைய பாணங்கள் இந்திரனுடைய வச்சிராயுதம்போலக் கொடியோனாகிய வாலியின்மேல் அதிவேகமாய்ப்பாயப் போகின்றன. விஷத்தைக் கக்கும் சர்ப்பங்கள்போன்ற குரூரமான என்னுடைய பாணங்களால் பிளவுண்டு, சிதறிவிழுந்த மலையைப்போல வாலி இன்று பூமியில் மடிந்து விழுவதைப் பாரும்" என்று மறுமொழி பகர்ந்தனர். தன் மனத்துக்கினியைந்த மொழிகளை இராமர் சொல்லச்சுக்கிரீவன் கேட்டு மிக்க சந்தோஷமடைந்து "மானிடசிங்கமாகிய இராகவ, உமது பேரருளால் நான் என்பிராண நாயகியையும் இராச்சியத்தையும் அடைவேன். சந்தேகமில்லை. உத்தமனே, எனக்குச் சத்துருவாகிய என் தமையனை எப்படி வதைக்கவேண்டுமோ அவ்வாறு செய்யவேண்டும்" என்று சொன்னான். இவ்விதமாய் இராமசுக்கிரீவர்க ளிருவர்க்கும் நட்பு உண்டானபொழுது தாமரைமலரையும், பொன்னையும், அக்கினியையும் போன்ற கண்களை முறையே யுடைய சீதைக்கும், வாலிக்கும், அரக்கர்களுக்கும் இடதுகண் துடித்தது.

வாலியை வதைப்பதாக இராமர் வாக்களித்தல்.

---

## ஆறுஞ்சருக்கம்.

சுக்கிரீவன் இராமருக்குச் சீதையின் ஆபரணங்களைக் காண்பித்தல்.

---

மறுபடியும் சுக்கிரீவன் மிகவும் சந்தோஷமடைந்து இரகுகுலத்துக்கு ஆநந்தகரனாய் விளங்கும் இராமரை

நோக்கி "இராம, என் மந்திரிமாருக்குள் முதல்வனுன அனுமான் என்ன காரணத்தால் நீங்கள் மனித சஞ்சாரமற்ற இக்காட்டை யடைந்திருக்கிறீர்கள் என்பதைச் சொன்னுன். நீவிர் உமது தம்பிலக்ஷ்மணருடன் வனத்தில் வாசம்பண்ணிவருவதையும் அறிந்துகொண்டேன். மிதிலாதிபதியாகிய ஜனகமகாராஜன் புதல்வியும் உமது பாரியையுமான சீதையை அரக்கன் அபகரித்துச் சென்றதாயும் கேள்விப்பட்டேன். உம்மையும் லக்ஷ்மணரையும் பிரிந்து தமியளாய்ப் புலம்பிநின்ற சீதையைச் சமயம்பார்த்து அரக்கன் தூக்கிக்கொண்டு எதிர்த்துவந்த ஜடாயுவைக்கொன்றுவிட்டுப் போனதையும் அறிந்துகொண்டேன். உமக்குப் பாரியையின் வியோகத்தாலுண்டாயிருக்கும் துக்கம் அதிசீக்கிரத்தில் நீங்கிவிடும். முழுகிப்போன வேதங்களை மீட்டுக் கொண்டுவந்ததுபோல் அப்பெண் மணியை நான் மீட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன். ஓ சத்துருசூதன, பாதலத்திலிருப்பினும் ஆகாயத்தி லிருப்பினும் எப்படியாவது நான் அவளைக் கொணர்ந்து உமக்குச் சமர்ப்பிக்கின்றேன். நான் சொல்வதை உண்மையென்று நம்பும். விஷம் கலந்த உண்டியை எவ்வாறு ஜீரணம் செய்து கொள்ள முடியாதோ அவ்வாறுகத் தேவர்களுடன் இந்திரனே வந்தாலும் உம்முடைய பத்தினிக்கு யாதொரு தீங்கும் செய்யமுடியாது. ஆதலால் துயரத்தை விட்டுவிடும். உம்முடைய நாயகியை நான் கொண்டுவருகிறேன். முன் ஒரு நாள் அரக்கனெருவன் ஒரு பெண்பிள்ளையைத் தூக்கிக்கொண்டுபோகக் கண்டேன். அவள் மைதிலியாகத்தா னிருக்கவேண்டுமென்று இப்போது அனுமானிக்கின்றேன். அக்கொடிய அரக்கன் அவளைக் கொண்டுபோகையில் அவள் "இராமா லக்ஷ்மணு" என்று கதறிக் கொண்டு போயினள். அப்பொழுது அவள் இராவண

சீதையை மீட்டுவருவதாகச் சக்கிரீவன் இராமருக்கு உறுதி பகர்தல்.

னுடைய மடியின்மேல் பாம்புபோல் துடித்துக்கொண் டிருந்தாள். நான் எனது மந்திரிமார்கள் நால்வருடன் இம்மலையி னுச்சியி லிருந்ததைப் பார்த்து, அவ்வம்மணி தனது மேலாடையையும் மங்களகரமான சில ஆபரணங் களையும் நாங்களிருந்த இடத்தைநோக்கி எறிந்தனள். அவைகளை நான் எடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கி றேன். இதோ கொண்டுவருகிறேன். அவைகளைப் பார்வையிட்டு அவைகள் உம்முடைய மனைவியார் அணிந் திருந்தவைதானோ என்பதைத் தெரிந் துகொள்ளும்" என்றான். சுக்கிரீவன் வெகு அன்புடன் இவ்வண்ணம் சொல்ல இராமர் "நண்பனே, அவைகளைச் சீக் கிரமாய்க் கொண்டுவாரும்; ஏன் தாமதிக் கின்றீர்" என்றார். உடனே சுக்கிரீவன் அவர் விரும்பிய வண்ணம் செய்யவேண்டி விரைந்து ஒரு பெரிய குகைக் குள் நுழைந்து உத்தரீயத்தையும் அழகான அவ்வா பரணங்களையும் எடுத்துவந்து "இதோ பாரும்" என்று இராமருக்குக் காண்பித்தான். அவ்வாடையை யும் ஆபரணங்களையும் இராமர் கையால் எடுத்ததும் அவ ருடைய முகம் சந்திரபிம்பம் பனியால் மறைக்கப்பட்டது போல் கண்ணீரால் மூடப்பட்டது. அவர் சீதையினிடத்தி லுள்ள அன்பின் மிகுதியால் கண்ணீர் விட்டு தைரிய மிழந்து "என் அன்பே!" என்று கதறிக்கொண்டு பூமி யில்விழுந்தார். அவர் அழகுபொருந்திய சிரேஷ்டமான அவ்வாபரணங்களைத் தனது மார்பின்மேல் அடிக்கடி வைத்து வளைக்குள்ளிருந்துகொண்டு பெருமூச்செறியும் சர்ப்பம்போல் கோபத்தால் பெருமூச் செறிந்தார். அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த லக்ஷ்மணரைப் பார்த்து, ஓயாமல் கண்ணீர்பெருகவிட்டு, வெகு பரி தாபமாய்ப் புலம்பத் தலைப்பட்டு "லக்ஷ்மணா, அரக்கன்

சீதை எறிந்த ஆபரணங்களைச் சுக்கிரீவன் இராம ருக்குக் காட்டு தல்.

சீதையின் ஆபா ணங்களைக் கண்டு இராமர் இரங் கல்.

தன்னை யபகரித்துச் செல்லும்போது சீதை தன் சரீரத்திலிருந்து கழற்றி எறிந்த உத்தரீயத்தையும் ஆபரணங்களையும் பார். இவற்றை அவள் இப்புற்கள் நிறைந்த பூமியில் எறிந்ததனுற்றான் இவை முன்னிருந்தபடியே இருக்கின்றன" என்று சொல்ல, லக்ஷ்மணர் அவரைப்பார்த்து "ஐயனே, நான் தினமும் அவருடைய பாதங்களைச் சேவித்தவனுகையால் அவர் பாதங்களில் அணிந்திருந்த நூபுரங்களை யறிவேனேயன்றி அவர் கையிலும் காதிலும் அணிந்திருந்த கேயூரங்களையும் குண்டலங்களையும் அறியேன்" என்றார். பின்பு இராமர் சுக்கிரீவனை நோக்கி வெகு தீனமாய் "ஓ சுக்கிரீவ, அக்கொடிய அரக்கன் என்னுயிர்க்குயிரா யிருக்கும் என் பிராணநாயகியைக் கவர்ந்துபோகையில் நீர் அவனை எவ்விடத்தில் எவ்வண்ணமாய்க் கண்டீர்? எனக்குப் பெரிதான துக்கத்தை யுண்டாக்கின அவ்வரக்கன் எங்கு வசிக்கின்றான்? அவன் பொருட்டு அரக்கரனைவரையும் நான் நாசம் செய்துவிடுகிறேன். மைதிலியைக் கவர்ந்து எனக்குக் கோபமூட்டின அவ்வரக்கன் தான் சாகவென்றே இயமபுரியின் கதவைத் திறந்துவைத்திருக்கிறான். ஓ வானரேந்திர, என்னை மோசஞ்செய்து என் பிராணநாயகியை இக்காட்டிலிருந்து எடுத்துச் சென்ற அந்த நிசாசரன் சங்கதிகள் யாவற்றையும் எனக்குச் சொல்லுவீராக. நான் அவனை இக்கணமே வைவஸ்வத பட்டணத்துக்கு அனுப்புகிறேன்" என்றார்.

---

## ஏழாஞ்சருக்கம்.

*சுக்கிரீவன் இராமரைத் தேற்றுதல்.*

---

இவ்வாறு விசனம் விஞ்சியவராய் இராமர் சுக்கிரீவனைநோக்கிச் சொல்ல அவன் தன் னிருகைகளையும்

கூப்பிக்கொண்டு கண்களில் நீர் ததும்பி நாத் தழு தழுத்து அவரைப்பார்த்து, "மகா பாபியான அந்தராக்ஷசனுடைய இருப்பிடம், சாமர்த்தியம், பராக்கிரமம், குலம் முதலியவற்றுள் ஒன்றையும் நான் அறியேன். ஆயினும் மைதிலியை நீங்கள் அடையும் படியான பிரயத்தினம் செய்கிறேன். இது சத்தியம். ஓ சத்துருசூதன, சோகத்தை விட்டு விடுங்கள். நீங்கள் உங்களுடைய பெரிய பராக்கிரமத்தைக் காண்பித்து இராவணனை அவன் கூட்டத்தாருடன் சங்கரித்துச் சந்தோஷிக்குமாறு நான் தாமதமின்றிச் செய்யக் காத்திருக்கின்றேன். இதுகாறும் மனம் கலங்கியது போதும். இனித் தைரியத்தை மேற்கொள்ளல் வேண்டும். உம்மைப்போன்றவர்கள் இவ்வாறு சோகமடையமாட்டார்கள். நானும் என்து மனைவியை ஒருவன் கவர்ந்துகொண்டதா லுண்டான பெரிய துக்கத்தையடைந்திருக்கின்றேன். ஆயினும் இவ்விதமாய் நான் ஒருபொழுதும் துக்கப்படவுமில்லை; தைரியத்தை இழக்கவுமில்லை. நான் ஓர் அற்ப வானரனேயாயினும் என் மனைவியை நினைந்து இவ்வாறு துக்கித்ததில்லை. அப்படியிருக்க மகாத்துமாவாயும், பரமசாந்தமூர்த்தியாயும், தீரபுருஷனாயும் விளங்கும் நீங்கள் இவ்வாறு மனச்சோர்வடையலாகுமா? தைரியத்தைக் கைக்கொண்டு கண்ணீர் பெருக்குவதை நிறுத்தவேண்டும். துயருற்றாலும், பொருளை யிழந்தாலும், பயமடைந்தாலும், உயிர்க்கிறுதி நேரும் காலம் வந்தாலும் தீரபுருஷர்கள் தங்களுடைய சுயபுத்தியினால் நன்றாய்ப் பரியாலோசனைசெய்து தெளிவுறுவார்களே யன்றித் தைரியத்தைக் கைவிடமாட்டார்கள். கோழைமனமுள்ள சிறியர்கள் சங்கடம் நேரிடுங்காலத்தில் மனவலி தளர்ந்து, பாரம் மிகுந்த ஓடம் கடலில் தத்தளிப்பதுபோல் விசனாக்கிராந்தர்களாய் வருந்துவார்கள்.

மனங் கலங்காது தைரியங் கொள்ள வேண்டுமென ச் சுக்கிரீவன் இராமருக்குச் சொல்லுதல்.

உங்களிடத்தில் எனக்குள்ள அன்பின் மிகுதியால் இரு கைகளையும் கூப்பி வேண்டுகின்றேன். துக்கத்துக்குக் கொஞ்சமேனும் இடம்கொடாமல் ஆண்மைத்தனத்தை மேற்கொள்ளும். துக்கத்துக் கிடங்கொடுப்பவனுக்குச் சுகம் என்பதே யிராது. அவன் எத்துணைப் பலவானாயி னும் மெலிந்து வாடுவான். துக்கத்தில் முழுகி யிருப்பவ னுடைய பிராணனுக்கே அபாயம் வந்துவிடும். ஆகையால், ராஜேந்திர, நீர் உமது துக்கத்தை நீக்கித் தைரியத்தைக் கைக்கொள்ளும். நானுமது நண்பனென்ற உரிமையினால் உமக்கு இதத்தைச் சொல்லுகின்றேனேயன்றி உபதேசிக்க வரவில்லை. நான் உம்மிடத்தில் கொண்டிருக்கும் நட்பை மதித்துச் சோகத்தை விட்டுவிடும்'' என்றான். இப்படி இனிதாய்ச் சுக்கிரீவனால் தேற்றப்பட்ட இராமர் தமது வஸ்திரகோடியினால் கண்ணீரால் நனைந்திருந்த தமது முகத்தைத்துடைத்துக்கொண்டார். பின்பு இராமர் தமது இயற்கை நிலைமையை அடைந்து சுக்கிரீவனைத் தழுவிக்கொண்டு "சுக்கிரீவ, இனியதும் அனுகூலமானதும் தக்கதும் செய்யவேண்டுவதுமாகியகாரியம் உம்மால் செய்யப்பட்டது. உம்மால் தேற்றப்பட்டு நான் எனது இயற்கையான மன நிலையை அடைந்தேன். இவ்விதமான நண்பன் இத்துக்க காலத்தில் கிடைப்பது மிகவும் அரிது. இனி நீர் மைதிலியைக் கண்டுபிடிக்கவும் துராத்துமாவாகிய அக்கொடிய இராவணனை வதைக்கவும் முயற்சி செய்யவேண்டும். அன்றியும் நான் உமக்காகச் செய்யவேண்டிய காரியம் இன்னதெனத் தெளிவாகச் சொல்லவேண்டும். மாரிக் காலத்தில் நல்லவளப்பமுள்ள நிலத்தில் விதைத்த விதை போல உம்முடைய எண்ணமெல்லாம் முடிவுபெறும். வானரோத்தம, நான் அன்பினாற் சொன்ன வார்த்தைகளெல்லாம் உண்மை என்று நீர் நிசமாய் நம்பும். நான்

இராமர் சுக்கிரீவனைத் தாம் செய்ய வேண்டிய உதவி யாதென வினவுதல்.

முன் ஒருபோதும் பொய்யுரைத்ததுமில்லை இனி உரைப்பதுமில்லை. நான் உமது விருப்பத்தை முடித்துவைக்கின்றேன் என்று சத்தியமாய் வாக்குத்தத்தம் செய்கின்றேன்" என்றார். இவ்வாறு இராமர் சொன்னவற்றையும் அவர் வாக்குத்தத்தம் செய்ததையும் கேட்டுச் சுக்கிரீவன் தனது மந்திரிமார்களுடன் மிகவும் சந்தோஷமடைந்தான். நரேந்திரனும் வானரேந்திரனும் இவ்வண்ணமாக நட்புக்கொண்டு ஏகாந்தத்தில் தங்களிருவருக்குமுள்ள சுகதுக்கங்களைப்பற்றி வெகு அந்நியோந்நியமாகப் பேசிக்கொண்டார்கள். இராமருடைய வார்த்தையைக் கேட்டுச் சுக்கிரீவன் தனது காரியம் முடிவு பெற்றதாக எண்ணிக்கொண்டான்.

## எட்டாஞ்சருக்கம்.

சுக்கிரீவன் தனது வரலாற்றை இராமருக் கறிவித்தல்.

சுக்கிரீவன் இராமருடைய வார்த்தைகளால் சந்தோஷமடைந்து அவரைப்பார்த்து "இவ்வித நற்குணங்களமையப்பெற்ற நீர் எனக்கு நண்பரானபொழுதே தேவர்களுடைய அனுக்கிரகம் எனக்குண்டு என்பதில் சந்தேகமில்லை. உம்முடைய உதவியைக்கொண்டு தேவர்களுடைய இராச்சியத்தையே அடையலாமென்றால் என்னுடைய சொந்தநாட்டை நான் அடைவேன் என்பது சொல்லவும் வேண்டுமோ? இரகு குலத்தி லுதித்தவராகிய உம்முடைய நட்பை அக்கினிசாக்ஷியாக அடைந்து நான் எனது உறவினராலும் சினேகிதர்களாலும் மதிக்கப்பட்டவனாய்விட்டேன். உமக்கு நான் தக்க மித்திரனென்பது காலக்கிரமத்தில் தெரியவரும்; என்னுடைய குணங்களை நானேயெடுத்துச் சொல்வது நன்றன்று. ஆத்துமவித்துக்களான தங்களைப்போன்ற மகாத்துமாக்களின் நண்பு ஒருபோதும்

என்னை நாட்டைவிட்டு ஓட்டினான்; பின்பு தனது பலத்தின் செருக்கால் என்னைப் பலவிதமாக நிந்தித்தான்; என் உயிரினும் இனிய எனது மனைவியை அபகரித்துக்கொண்டான்; என் துணைவர்களைக் கட்டிச் சிறையிலிட்டான். அவன் இப்போது என்னைக்கொல்ல எத்தனம் செய்கின்றான். என்னைக் கொல்லும்படி அவன் அனுப்பிய அநேக வானரர்களை நான் கொன்றுவிட்டேன். இந்தப் பயத்தினால்தான் நான் உம்மைக் கண்டவுடன் வெளிவராது பயந்து ஒளித்திருந்தேன். இதுதான் என்னை வருத்துவது. எனக்கு இப்போது சகாயமா யிருப்பவர்கள் அனுமான் முதலிய இவர்கள் தாம். இவர்களுடைய உதவியாற்றான் நான் இவ்வளவு சங்கடமடைந்தும் உயிர்தரித்திருக்கின்றேன். என்னிடத்தில் அதிக அன்புள்ளவர்களாகிய இவ்வானரத்தலைவர்கள் என்னைச் சுற்றியிருந்து காத்துவருகின்றார்கள். அவர்கள் நான் செல்லச் சென்று இருக்க இருப்பார்கள். நான் அதிகம் சொல்லவேண்டியதென்ன? வலிமையால் புகழ் பெற்ற என் தமையன் வாலி எனக்குச் சத்துரு. அவன் செத்தால்தான் என்னுடைய துக்கம் நீங்கும். என்னுடைய உயிரும் சுகமும் அவனிறந்தால் தான் நிலைக்கும். நான் என் துக்கநிவாரணத்திற்கு வழிசொல்லி விட்டேன். சுகத்திலும் துக்கத்திலும் ஒருவனுக்கு நண்பன்தான் கதி” என்று கூறினான். அதை இராமர்கேட்டுச் சுக்கிரீவனை நோக்கி “ஐய, யாதுகாரணத்தால் வாலிக்கும் உமக்கும் பகைநேர்ந்தது? உண்மையாக இதைக்கேட்க விரும்புகின்றேன். பகையின் காரணத்தையறிந்து, பின்பு நமது பலத்தையும் அவனுடைய பலத்தையும் சீர்தூக்கிப்பார்த்து, உமக்குச் சுகத்தை யுண்டாக்கும் வழியைத் தேடுகின்றேன். உமக்குற்ற அவமானத்தைக் கேட்டுக் கார்காலத்து மழையைப்போல் எனக்

சுக்கிரீவன் தனது விருத்தாந்தத்தை இராமருக்குச் சொல்லுதல்.

குக் கோபம் மேலிட்டு மனம் கொதிக்கின்றது. நான் வில்லில் நாணேற்றுவதற்குள் நீர் சந்தோஷமாய் ஒன்றையும் ஒளியாமல் சொல்லும். என் பாணம் விடுபட்டபோது உம்முடைய சத்துரு மாண்டான் என்றறிந்துகொள்ளும்'' என்றுகூறச் சுக்கிரீவனும் அவனுடனிருந்த வானாத்தலைவர்கள் நால்வரும் சந்தோஷ மடைந்தார்கள். பின்பு சுக்கிரீவன் இராமரைநோக்கித் தனக்கும் வாலிக்கும்பகைநேர்ந்த காரணத்தைச் சொல்லத்தொடங்கினான்.

## ஒன்பதாஞ்சருக்கம்.

வாலிக்கும் தனக்கும் பகையுண்டான காரணத்தைச் சுக்கிரீவன் இராமருக்குச் சொல்லுதல்.

"சத்துரு சங்காரகனாகிய வாலி என்பவன் என் தமையன். பூர்வத்தில் அவனிடத்தில் எங்கள் தந்தை மிகவும் அன்புபாராட்டிவந்தார். நானும் அவனிடத்தில் அவ்வாறே அன்பு பாராட்டிவந்தேன். எங்களுடைய பிதா இறந்தபிறகு மந்திரிமா ரனைவரும் "இவன் மூத்தவன்" என்று சொல்லி, எல்லாரும் சம்மதிக்க, வாலிக்கு முடிசூட்டி அவனை வானரர்களுக் கதிபதியாக்கினார்கள். தன்னுடைய முன்னோர்களிட மிருந்து தனக்குக்கிடைத்த இராச்சியத்தை வாலிபரிபாலனம்பண்ணி வருநாளில் நான் அவனுக்கடங்கி அடிமைபோ லிருந்தேன். அக்காலத்தில் மகாபராக்கிரமசாலியாகிய துந்துபியின் மூத்தகுமாரனை மாயாவி என்னுமோர் அசுரனிருந்தான். ஒரு பெண் விஷயமாய் அவனுக்கும் வாலிக்கும் பெரும்பகை உண்டாயிற்று. அவன் ஒருநா ளிரவில் அனைவரும் அயர்ந்து நித்திரை செய்கையில் கிஷ்கிந்தைக்கு வந்து, கோட்டைவாயிலில் நின்று, உரக்கக் கர்ச்சனைசெய்து, வாலியைச் சண்டைக் கழைத்தான். தூங்கிக் கொண்டிருந்த என் தமையன் பயங்கரமான அந்தக் கர்ச்

மாயாவிஎன்னும் அசுரனுக்கும் வாலிக்கும் நடந்த சண்டையின் வரலாறு.

சனையைக் கேட்டுக் கொஞ்சமும் சகியாமல் எழுந்து வெகு வேகமாய் அவனை எதிர்க்க ஓடினான். மகா கோபாவேசனாய் அவ்வசுரனைச் சங்கரிக்கச் சென்ற அவ்வாலியை அந்தப்புரத்து மாதர் அனைவரும் போகவேண்டாமென்று தடுத்தார்கள். நானும் அவனை அடிபணிந்து தடுத்தேன். மகாபலவானான வாலி எங்களனைவரையும் உதறிவிட்டு வெளியே சென்றான். அவனிடத்தில் எனக்கிருந்த அன்பினால் நான் அவனைத் தொடர்ந்து சென்றேன். அவ்வசுரன் என் தமையனையும் என்னையும் தூரத்தில் கண்டவுடன் திகிலடைந்து ஓடத்தலைப்பட்டான். அங்ஙனம் பயந்து ஓடுபவனை நாங்கள் துரத்திச் செல்லும் பொழுது சந்திரன் உதயமாகி வழி நன்றாகத் தெரிந்தது. அவன் ஓடிப் புற்களால் மூடப்பட்டு உட்புக வரிதாய் வெகு ஆழமாய்ப் பெரிதாயிருந்த ஒரு குகைக்குள் நுழைந்தான். நாங்கள் அக்குகையின் துவாரத்தில் சென்று நின்றோம். பகைவன் குகையில் புகுந்ததைக் கண்ட வாலி, மிக்க கோபங்கொண்டு, மெய் பதற, என்னைப் பார்த்து 'சுக்கிரீவா, நீ இவ்விடத்திற்றானே வெகு ஜாக்கிரதையாய் இத்துவாரத்தைக் காத்துக்கொண்டிரு. நான் உள்ளே புகுந்து சத்துருவைச் சங்கரிக்கின்றேன்' என்றான். அதைக்கேட்டுச் சத்துரு தமனனாகிய வாலியை அவனைப் பின்தொடர்ந்து செல்ல எனக்கு அனுமதி யளிக்கவேண்டுமென்று நானிரந்து பின்னின்றேன். அவன் மறுத்து என்னைத் தன்னுடைய பாதங்களைத் தொட்டுச் சத்தியம் செய்யச்சொல்லித் தான் மாத்திரம் குகைக்குள் புகுந்தான். புகுந்தபின் நான் அவ்விடத்திலே ஒருவருஷகாலம் காத்திருந்தேன். காத்திருந்தும் அவன் திரும்பிவாராமையால் நான் எனது சகோதர வாஞ்சையால் அவன் மரித்துவிட்டான் என்று பயந்து மிகவும் துயரமடைந்தேன். வெகுகாலத்தின்பின் அக்குகைக்குள் ளிருந்து இரத்தவெள்ளம் நுரைத்துக்கொண்டு மேலே கிளம்பி

வந்தது. அதைக் கண்டதும் நான் அதிக துக்கமடைந்தேன். அசுரர்கள் கர்ச்சித்த சத்தம் என் காதில் விழுந்தது. சண்டைசெய்யச் சென்ற என் தமையனுடைய குரல் கேட்டிலது. இந்த அடையாளங்களால் நான் என் தமையன் மாண்டான் என்று எண்ணி மலைபோன்ற பெருங் கற்பாறை யொன்றினால் அக்குகையின் துவாரத்தை மூடிவிட்டுத் துக்காக்கிராந்தனாய்க் கிஷ்கிந்தை சென்றுசேர்ந்தேன். இந்தச் செய்தியை நான் ஒருவருக்கும் வெளியிடாது மறைத்து வைத்திருக்கவும் மந்திரிமார்கள் எல்லாவற்றையும் அறிந்து ஒருங்கு கூடி எனக்கு முடிசூட்டி வைத்தார்கள். நான் இராச்சியத்தைவகித்து நீதியாய் ஆண்டுவருகையில் வாலி அந்த அசுரனைக் கொன்றுவிட்டுக் கிஷ்கிந்தை வந்துசேர்ந்தான். நான் முடிசூட்டி அரசாண்டு வருவதை அவன் கண்டு கோபத்தால் கண்கள் சிவக்க மந்திரிமார்களையெல்லாம் பிடித்துக் கட்டிவிட்டு என்னைப் பலவாறாக நிந்தித்தான். அவனை ஒறுக்கத்தக்க வல்லமை எனக்கிருந்தும் தமையன் என்ற மரியாதையால் அந்தப்பாபச்செய்கைக்கு என் மனம் துணியவில்லை. நான் அவனுக்குத் தக்க மரியாதைகள்செய்து அவனை அடிபணிந்து நின்றேனாகவும் அவன் கோபத்தால் என்னை வாழ்த்தவுமில்லை, அருள் புரியவுமில்லை."

வாலி மடிந்தானென்றுஎண்ணிச் சுக்கிரீவன் துயருற்று நகரம் வந்து முடி சூட்டப்பெறுதல்.

## பத்தாஞ் சருக்கம்.

சுக்கிரீவன் இராமரைத் தனக் கபயமளிக்கும்படி வேண்டுதல்.

"அதன் பின்பு, நான் என்க்ஷேமத்தைக்கருதி, என் மேல் கோபங்கொண்டிருந்த என் சகோதரன் பிரீதியைச் சம்பாதிக்க வெகுவாய் முயன்றேன். 'ஐயா, நீர் உம்மு

வாலி சுக்கிரீவனை வனத்துக்கு ஓட்டிவிடுதல்.

டைய சத்துருவைக் கொன்று க்ஷேமமாய்த் திரும்பிவந்ததற்குச் சந்தோஷ மடைந்தேன். அநாதரக்ஷகரு யிருக்கும் உம்மையன்றி எனக்கு வேறு நாதனில்லை. அநேக சலாகைகளையுடைய உதயசந்திரன்போன்ற இக் குடையை உமக்கு நானே பிடிக்கிறேன்; வெண்சாமரை யிரட்டுகிறேன். நான் செய்யும் பணிவிடைகளை நீர் ஏற்றுக்கொள்ளும். மஹாராஜ, நான் வெகு துக்கத்தோடு ஒருவருஷகாலம் அக்குகையின் துவாரத்தில் காத்திருந்தேன். பின்பு அக்குகையிலிருந்து கிளம்பின உதிரப் பெருக்கைக் கண்டு நடுங்கிச் சோகத்தால் பரிதபித்து மனம் கலங்கி ஒரு மலையின் கொடுமுடியைப் பெயர்த்தெடுத்துக் குகையின் வாயை மூடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கிஷ்கிந்தை வந்துசேர்ந்தேன். முகம் வாடித் திரும்பிய என்னை யழைத்து நகரத்தாரும் மந்திரிகளும் எனக்கு மகுடம் சூட்டினார்கள். இராச்சியத்தைக் கைப்பற்றும் எண்ணத்துடன் நான் முடிசூட்டிக்கொள்ளவில்லை யாகையால் என்னை நீர் மன்னிக்கவேண்டும். நீரே தான் இந்நாட்டுக் கதிபதி. எல்லாக் கௌரவங்களுக்கும் நீரே உரியவர். நான் அன்றுபோல இன்றும் உமது அடிமை. நீர் இல்லாத காரணத்தால் நகரத்தார் என்னை அரசனாக்கினார்களேயன்றி மற்றில்லை. மந்திரி பிரதானிகளும் குடிகளும் மல்கிய இந்நகரத்தை நான்யாதொரு கெடுதலுமின்றிப்பரிபாலித்து வந்தேன். என்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த இந்த இராச்சியத்தை நான் இப்போது உம்மிடத்தில் ஒப்புவித்துவிட்டேன். சத்துருக்களை நாசம் செய்ய வல்லானே, என்மீது கோபம் கொள்ளவேண்டாம். நான் தலைவணங்கி என் இருகைகளையும் கூப்பி வேண்டுகின்றேன். அரசனில் லாவிடில் இராச்சியத்தைப் பகைவர் அபகரிக்க எண்ணங்கொள்வார்கள் என்றெண்ணி அமாத்தியர்களும் நகரத்தார்களும் பலாத்காரமாக எனக்கு முடி

சூட்டினார்கள்' என்றிவ்வாறு நான் அன்புடன் சொல்லவும் வாலி என்னைக்கடிந்துபேசி 'சீ! நீகெட்டாய்!' என்று, பலவாறு நிந்தித்து, தன் பிரஜைகளையும் மந்திரிகளையுமழைத்துச் சபைகூட்டிச் சினேகிதர்கள் நடுவில் என்னைக் குறித்து வெகு கடுமையாய்ப் பேசினான்:—'சபையாரே, மகாபலம்பொருந்திய மாயாவி யென்ற அசுரன் ஒருநாளிரவில் கெட்ட எண்ணங்கொண்டு என்னுடன் போர் புரியவிரும்பி என்னை யழைத்தான் என்பது உங்களுக்குத் தெரியுமே. நான் அதைக்கேட்டு என் அரண்மனையைவிட்டு வெளியிற்செல்லக் கொடியவனாகிய என்தம்பி என்னைப் பின்தொடர்ந்து வந்தான். மகாபலவானான அவ்வசுரன் அன்றிரவில் தன்னைத்துரத்திச்செல்லும் எனக்குத்துணையாக என்பின் மற்றொருவன் வருவதைக் கண்டு பயந்து ஓட்டமெடுத்தான். அவன் ஓடி ஒரு பெரிய குகைக்குள் நுழைந்தான். மகாபயங்கரமும் ஆழமுமான அக்குகையில் அவன் புகுந்ததை நானறிந்து என் தம்பியாகிய இக்கொடியவனை நோக்கி 'இவ்வசுரனைக் கொல்லாது நான் நகரத்துக்குத்திரும்பேன். நான் இவனைக்கொன்று திரும்பும்வரையில் நீ இந்தப் பிலத்துவாரத்தில் காத்திருக்கக்கடவாய்' என்று சொல்லி இவன் அங்கிருக்கின்றான் என்று நம்பிக்கொண்டு உட்புகுவதற்கு அரிதாயிருந்த அக்குகைக்குள் பிரவேசித்தேன். அங்கே அசுரனைத் தேடிக் கண்டு பிடிப்பதற்கு ஒருவருஷம் சென்றது. கடைசியாய் அவனைக் கண்டுபிடித்துச் சிறிதும் சிரமமின்றி அக்கொடியவனை அவன் பந்துவர்க்கங்களுடன்கொன்றேன். அக்குகைக்குள் அவன் கதறி ஓலமிட்டு மாண்டபொழுது அவன் வாயிலிருந்து பெருகிய உதிரவெள்ளம் எங்கும் பரவினமையால் எனக்கு உடனே தானே வெளியில்வர முடியாமல் போய்விட்டது. நான் திரும்பிவருகையில் குகையின் வாய்மூடப்பட்டிருந்தமையால்வெளியில் வருவதற்கு வழி தோன்றவில்லை. 'சுக்கிரீவா, சுக்கிரீவா' என்று பலமுறை

கூவியும் மாறுத்தரமில்லாமையால் நான் மிகவும் துக்கமடைந்தேன். பின்பு என்கால்களால் பலமுறை உதைத்து அப்பாறையைக்கீழேதள்ளிவிட்டு வெளிப்பட்டு இந்நகரம் வந்துசேர்ந்தேன். இராச்சியத்தை யடையவேண்டுமென்ற ஆசையால் சுக்கிரீவன் சகோதரவாஞ்சையை முற்றும் மறந்து என்னைக்குகைக்குள் அடைத்துவிட்டுவந்தான் என்பதில்சந்தேகமில்லை' என்றிவ்வாறு சொல்லி ஒரேவஸ்திரத்துடன் என்னை யோட்டிவிட்டான். இராகவ, என்னை இவ்வாறு அவமானம் செய்து என் மனைவியையும் பிடித்துக்கொண்டான். அவனுக்குப் பயந்து சமுத்திரஞ்சூழ்ந்து காடடர்ந்த இப்பூமி முழுதும்நான் அலைந்துதிரிந்து ஒருகாரணத்தால் வாலியால் அணுகொணுத இந்த ரிசியமூகபர்வதத்தில் மனையாளைப் பறிகொடுத்த துக்கத்துடன் பிரவேசித்தேன். வாலிக்கும் எனக்கும் பகைநேர்ந்தவிதம் முற்றும் சொல்லிவிட்டேன். இராகவ, நிர்த்தோஷியாகிய எனக்கு இப்பெரிய விசனம் வந்திருக்கிறது. எல்லா உலகங்களுக்கும் அபயமளிக்கவல்ல வீரனே, வாலியினிடத்தில் பயந்து நடுங்கும் எனக்கு அபயந் தந்தருளவேண்டும்.'' இவ்வாறு சுக்கிரீவன் சொல்லத் தருமமறிந்த பெருவிறல் இராமர் புன்னகைகொண்டு சுக்கிரீவனைப் பார்த்து "இலக்குத் தவருதனவும் நன்ருகத் தீட்டப்பட்டுச் சூரியனைப்போல் விளங்குவனவுமாகிய எனது பாணங்கள் உம்முடைய மனைவியை அபகரித்துக்கொண்ட அந்தக் கொடிய பாவியான வாலியின்மேல் பாயப் போகின்றன. என் கண்முன் எதிர்ப்படும் வரையுந்தான் அவன் உயிரோடிருப்பான். நீர் துயர்க்கடலில் ஆழ்ந்திருக்கின்றீரென்பதை என்னுடைய சொந்த அனுபவத்தால் அறிந்துகொண்டேன். அதினின்றும் உம்மை நான் கரையேற்றிவிடுகி

சுக்கிரீவன் ரிசியமூகபர்வதம் சேர்தல்.

இராமர் சுக்கிரீவனுக்கு வாலியை வதைப்பதாக வாக்களித்தல்.

றேன். உம்முடைய மனைவியையும் இராச்சியத்தையும் நீர் நிச்சயமாய் அடைவீர்" என்ற பொருள்பொதிந்த சொற்களைக்கூறினர். உற்சாகத்தை யுண்டுபண்ணத்தக்கதான இவ்வசனத்தைக்கேட்டுச் சுக்கிரீவன் சந்தோஷமடைந்து பின்வரும் பேரியல்புள்ள சொற்களைச் சொல்லலானன்.

## பதினொன்றுஞ்சருக்கம்.

மதங்கமகாரிஷி வாலிக்கிட்ட சாபத்தைச் சுக்கிரீவன் இராமருக்குச் சொல்லி இராமருடைய பராக்கிரமத்தைப் பரீக்ஷித்தல்.

"ஐயனே, நீர் கோபங்கொள்வீராகில் அதிதீக்ஷணமுள்ளனவும் மர்மஸ்தானங்களைச் சிதைக்க வல்லனவும் அக்கினி பறப்பனவுமான உம்முடைய பாணங்களால் ஊழிக்காலத்துச் சூரியன்போல் உலகனைத்தையும் எரித்துவிடுவீர். ஆயினும் இனி வாலியின் பராக்கிரமத்தையும் பலத்தையும் தைரியத்தையும் நான் சொல்லக்கேட்டுப் பின்செய்யத்தக்கதைச் செய்யும். அவன் சூரியன் உதிக்குமுன்எழுந்திருந்து மேல் கடலிலிருந்து கீழ் கடலுக்கும் தென்கடலிலிருந்து வடகடலுக்கும் சிரமமின்றித் தாண்டிச் செல்வான்; மலைகளினுச்சியிலேறி, அவற்றின் பெரியகொடுமுடிகளைத் தன் பலத்தினல் பறித்துப் பந்துபோலெறிந்து பிடிப்பான்; வனத்திலுள்ள வைரமேறிய நானுவிதமான மரங்களையெல்லாம் தனது வலிதெரியுமாறுமுறித்துத்தள்ளுவான். கைலாசமலைபோன்றவனும் ஆயிரம் யானைகளின் பலமுள்ளவனும் எருமை உருவமுடையவனுமான துந்துபி என்றோர் அசுரன் இருந்தான். அந்தக் கொடியவன் தன் பலத்தின் மிகுதியாலும் தான் பெற்ற வரத்தின் பெருமையாலும் செருக்குற்றுத் தனது பேருருவத்துடன் ஒருநாள்நதிகளுக்கெல்லாம் அர

வாலியின் வல்லமையைச் சுக்கிரீவன் இராமருக்குச் சொல்லுதல்.

சானசமுத்திரத்தை யடைந்து'எனக்குப்போர் தருதி'என்
ரூன். அதைக்கேட்ட தருமாத்துமாவாகிய சமுத்திரரா
ஜன் ஊழின் வசத்தனுய்வந்த அசுரனைநோக்கி 'போரில்
வல்லாய், உன்னுடன் அமரியற்ற நான் வல்லவன் அல்
லேன். உன்னுடன் யுத்தஞ்செய்யவல்லவன் இன்னனெ
ன்று சொல்லுகிறேன், கேள். தபோதனர்கட்குச் சிறந்த
இருப்பிட மானவனுய், மஹேஸ்வரனுக்கு மாமனுய்,
அனேக அருவிகளையும் அருவி வீழ்களையும் குகைகளையு
முடையவனுய் இமவான் எனப்பெரியபருவதராஜன் ஒரு
வன் உளன். அவன் உன்னுடன் யுத்தஞ்செய்து உனக்குப்
பிரீதி யுண்டுபண்ணச் சமர்த்தன்' என்ருன். அதுகேட்டுக்
கடலரசன் தன்னைக்கண்டு பயங்கொண்டானென்று அவ்
வசுரன் எண்ணிக்கொண்டு வில்லினின்றும் விடப்பட்ட
பாணம்போல் சரேலென்று இமவானையடைந்து யானை
களைப்போன்ற பெரிய வெண்ணிறமுள்ள கற்பாறைகளைப்
பெயர்த்துத் தள்ளிக் கர்ச்சித்து நின்ருன். அப்பொ
ழுது அழகிய உருவத்தையுடைய வெண்மேகம்போன்ற
இமவான் ஒரு சிகரத்தில் தோன்றி அசுரனைப்பார்த்து
'தருமநெறியில் தவருத துந்துபியே, நான் தபோதனர்க
ளுக்கு உறைவிடமா யுள்ளவன்; போராடத்தெரியாதவன்.
ஆதலால் நீ என்னை வருத்தல் தகாது' என்றனன். அத
னைக்கேட்ட துந்துபி கோபத்தால் கண்கள் சிவந்து 'ஐய,
நீர் பயந்து என்னுடன் போர்புரியாவிடில், யுத்தத்தில்
இச்சைகொண்டிருக்கும் என்னேடு சமர்செய்ய வல்லவன்
ஒருவனைச் சொல்லும்' என்ருன். பேசுதலில் வல்ல தரு
மாத்துமாவாகிய இமவான் அதைக்கேட்டு மனங்கொ
தித்து "பெரியாய், ஒப்பற்ற அழகினையுடைய கிஷ்கிந்
தைமலையிலே மிக்கவனப்பும் வலியுமுடைய இந்திரன்
குமாரனுன வாலி என்னும் வானர வேந்தன் ஒருவன்
உளன். இந்திரனை எதிர்த்த நமுசிபோல் அவன் உன்
னுடன் போர்புரியவல்லன். நீ போர்செய்ய விரும்பின

யாகில் அதி சீக்கிரமாக அவனிடம் செல். அவன் யுத்தம் செய்வதில் சமர்த்தன்; வெல்லற்கரியன்' என்ருன். அதைக்கேட்டுத் துந்துபி கோபத்தோடு வாலியின் தலைநகராகிய கிஷ்கிந்தையை நோக்கிச் சென்ருன். அவன் கூரிய கொம்புகளையுடைய மகாபயங்கரமான எருமையின் உருவத்தோடு மழைக்காலத்தில் ஆகாயத்தி லியங்கும் நீருண்ட மேகத்தைப்போலக் கிஷ்கிந்தையின்கோட்டை வாயிலை யடைந்து பூமி யதிரும்படியாகத் துந்துபிவாத்தியம்போல முழங்கினன். பின்பு அவன் மதங்கொண்ட யானைபோல் கர்வங்கொண்டு பக்கத்திலிருந்த மரங்களை முறித்துத் தள்ளி, தரையைக் குளம்புகளால் கிளைத்து, கொம்புகளால் கோட்டைவாயிலை இடித்தான். அப்போது அந்தப்புரத்தி லிருந்த வாலி அந்தச் சத்தத்தைக்கேட்டுச் சகியாது தாராகணங்களுடன் சந்திரன் தோன்றினது போலத் தன் தேவியருடன் வெளிப்பட்டான். அவன் அவ்வசுரனைநோக்கி 'துந்துபி, என்னுடைய நகரத்தின் வாயிலை யடைத்துக்கொண்டு நீ ஏன் இவ்வாறு கத்துகின்றனை? நீ என் வலியை அறியாயோ? உன்னுடைய பிராணனைக் காப்பாற்றிக்கொள்' என்ருன். துந்துபி கண்கள் சிவந்து வாலியைப் பார்த்து 'வீர, ஸ்திரீகள் முன்னிலையில் வீரவாதம் கூறுவது தக்கதன்று. முன் என்னுடன் யுத்தஞ் செய்; பின் உன் பலம் தெரியும். அன்றேல் நான் இன்றிரவு முழுதும் என்கோபத்தை யடக்கிக்கொள்ளுகிறேன்; நீ பொழுது விடியும்வரையில் உனக்கிஷ்டமான சுகங்களை யனுபவி. நீ உன்னுடைய அன்பர்களுக்கும் வானரர்களுக்கும் வேண்டுவனவற்றைக் கொடுத்து, கிஷ்கிந்தை முழுதையும் நன்ருகச் சுற்றிப்பார்த்து, பட்டணத்துக்குத் தக்க அரசனை ஏற்படுத்தி, உன்னுடைய மனைவிமார்களுடன் சுகமனுபவித்துவிட்டுவா. நான் உன்னுடைய கர்வத்தை யழிக்க வந்திருக்கிறேன். கள்ளுண்டவனையும், ஜாக்கிரதை யில்லாதவனையும், மெலிந்தவனை

யும், ஆயுத மில்லாதவனையும், உன்னைப்போல் காமத்தி லாழ்ந்தவனையும் கொல்லுபவன் கருச் சிதைத்த பாபத்திற் குள்ளாவான்' என்றான். அதைக்கேட்டு வாலி நகைத்து, தாரை முதலிய மனைவிமார்களை யனுப்பிவிட்டு, கொடிய அசுரனைநோக்கி 'நீ சண்டைக்குப் பயப்படாதவனாயின், என்னைக் குடியன் என்று இகழவேண்டாம். நான்செய்யும் காமபானத்தை இச்சண்டைக்கேற்ற வீரபானமென் றெண்ணிக்கொள்' என்று சொல்லிவிட்டுக் கோபங்கொண்டு தன்னுடைய பிதாவான இந்திரன்கொடுத்த காஞ்சனமாலையை யெடுத்தணிந்துகொண்டு யுத்தத்துக்கு ஆயத்தமாகிக் கர்ச்சனை செய்துகொண்டு மலைபோன்ற துந்துபியை இரு கொம்புகளையும் பற்றித் தூக்கிப் பூமியில் அறைந்தான். அறையவே துந்துபியின் காதுகளின்வழியாய் இரத்தம் பெருகிற்று. இருவரும் ஒருவரை யொருவர் வெல்லவேண்டு மென்னும் கருத்தினராய்ப் பெரும்போர் செய்தார்கள். இந்திரன் போன்ற வலியுடைய வாலி முட்டிகளாலும் முழந்தாட்களாலும் கால்களாலும் கற்களாலும் மரங்களாலும் போர் புரிந்தான். இவ்வாறு யுத்தம் நடக்கையில் அசுரன் வலி மிகவும் குன்ற, இந்திர குமாரன்வலி விருத்தியடைந்தது. சௌரியமும் தைரியமு மிழந்துநின்ற துந்துபியை வாலி தூக்கிச் சுழற்றி உயிர்போம்படி தரையிலடித்தான். அப்போது அவன் காதுகளிலிருந்து உதிரம் பெருகிவழியக் கீழே விழுந்து உயிர் துறந்தான். பின்பு பலவானாகிய வாலி தன் கைகளால் அவ்வசுரனுடைய உயிரற்ற உடலை யெடுத்து வெகு வேகமாய் ஒரு யோசனை தூரம் சுழற்றி எறிந்தான். எறிந்தபோது அதன் வாயிலிருந்து இரத்தத் துளிகள் சிந்திக் காற்றினா லடிக்கப்பட்டு மதங்கமாமுனிவரின் ஆச்சிரமத்தில் தெறித்தன. இரத்தத் துளிகளைக் கண்டு முனிபுங்கவர் கோபங்கொண்டு

வாலி துந்துபியுடன் யுத்தஞ் செய்தல்.

'இங்கு இரத்தம் சிந்தினவன் யார்? திடீரென்று என் மேல் இரத்தத்தைச் சிந்திய தீத்தொழில் கன்றித்திரிதரு மறிவிலியார்?' என்று யோசித்துக்கொண்டு வெளியே வந்து பார்த்து மலைபோன்ற பெரிய உயிரற்ற எருமையொன்று அங்கு விழுந்திருக்கக் கண்டார். உடனே தனது தபோ மகிமையால் அது செய்தவன் ஒரு வானரன் என்றறிந்து "என்னுடைய ஆச்சிரமத்தின் தூய்மையை இரத்தஞ் சிந்திக்கெடுத்தவன் இவ்வனத்துள் நுழையப் பெருனுக; நுழைவானேயாகில் நாசமுறக் கடவன். இந்த உடலை யெறிந்து இந்த மரங்களை முறித்துவிட்டவன் இந்த ஆச்சிரமத்தைச் சுற்றி ஒரு யோசனை தூரத்துக்குள் வருவானாயின் உயிரிழக்கக்கடவன். அன்றியும் அவனுடைய மந்திரிமார் முதலியோர் இவ்வனத்துள் வருவாராயின் அவர்களுமுயிரிழக்கக்கடவர். அவர்கள் இதை யறிந்து தங்களுக்கிஷ்டமான இடம் செல்வார்களாக. இனிமேல் அவர்களிங்கிருந்தால் அவர்களைச் சபித்து விடுவேன். இவ்வனத்தை நான் பிரதிதினமும் என்னுடைய குழந்தைபோல் பரிபாலித்து வருகிறேன். ஆயினும் வானரர்கள் இம்மரங்களின் இலை தளிர் பழம் வேர் முதலியவற்றை நாசம் செய்து விடுகின்றனர். அவர்கள் குற்றத்தை இன்று பொறுக்கின்றேன். நாளைக்கு யாவராயினும் இங்கிருப்பார்களாகில் அவர்களை அனேகமாயிரம் வருஷம் கல்லாகப் போகுமாறு சபித்துவிடுவேன்" என்று கூறினர். இவ்வாறு அவரிட்ட சாபத்தை அங்கிருந்த வானரர்கள் கேட்டுப் பயந்து புறப்பட்டுப் போயினர்கள். அவர்களைக்கண்ட வாலி 'மதங்கவனத்தில் வசிக்கும் நீவிர் என்னிடம் வரக் காரணம் யாது? நீங்கள் அனைவீரும் க்ஷேமமா?' என்று கேட்டான். அவர்கள் வாலிக்கு மதங்கமகரிஷி யிட்ட சாபத்தைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட வாலி அம்மகரிஷியை நாடிச் சென்று கைகூப்பி வணங்கித் தன்

மதங்கமகாரிஷி சாபம்.

பிழையைப் பொறுத்தருளவேண்டுமென்று இரந்துநின்ருன். மகரிஷி அவனைச் சிறிதும் கவனியாது தன தாச்சிரமத்துட் புகுந்தார்; வாலி நடுக்கமடைந்தான். அன்று முதல் அவன் இந்த ரிசியமூக பருவதத்தைப் பயந்து கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை. ஆகையால் அவன் இங்கு ஒருகாலும் பிரவேசியானென்று நான் நன்ருயறிந்து என் மந்திரிமாருடன் கவலையற்று இவ்விடத்தில் வசிக்கின்றேன். இதோ காணப்படுகின்றதே, இதுதான் துந்துபியின் எலும்பு. பருவதம்போன்ற அவனது சரீரத்தை வாலி தன்னுடைய வலியின்செருக்கால் சுழற்றி எறிந்தான். இதோ நிற்கும் இவ்வேழு ஆச்சாமரங்களையும் வாலி தனது பலத்தால் ஒரேகாலத்திலே ஒரு இலையேனுமில்லாது போகுமாறு செய்யவல்லன். வாலியின் பராக்கிரமம் இவ்வகைத்து. ஐய, நீர் எவ்வாறு அப்படிப்பட்ட வாலியைப் போரில் கொல்வீர்" என்று சுக்கிரீவன் கூறினன். அதுகேட்டு லக்ஷ்மணர் புன்னகை செய்து "ஐயா, எந்தக்காரியம் செய்தால் இராமர் வாலியை வதைசெய்ய வல்லவர் என்று கொள்வீர்" என்று கேட்க, சுக்கிரீவன் "ஐய, இவ்வேழு ஆச்சாமரங்களையும் முன் வாலி ஏககாலத்தில் துளைத்திருக்கின்ருன்; தனித்தனியாகவும் துளைத்திருக்கின்ருன். இராமர் இம்மரங்களில் ஒன்றை ஒருபாணத்தால் பிளந்தெறிவாராயினும் வாலியால் கொல்லப்பட்ட அசுரனுடைய இவ்வெலும்பை அவர் தமது ஒற்றைக்காலால் எற்றி இருநூறு அம்பு தூரம் எறிவாராயினும் வாலி மாண்டதாக எண்ணுவேன்" என்ருன். இவ்வாறு சொல்லிப் பின்னும் சற்ருலோசித்து, சிவந்த கண்களையுடைய இராமரை நோக்கி "வாலி வெகு சூரன். சூரர்களனைவரையும் கொல்லவல்லவன்; பலத்தினுலும் ஆண்மையினுலும் பிரசித்தி பெற்றவன்; போரில் ஒருநாளும் தோல்வியடையாதவன்; தேவர்களாலும் செயற்கரிய காரியங்

களைச் செய்ய வல்லவன். இவை யனைத்தையும் மனத்தி லெண்ணிப் பயந்தே நான் இந்த ரிசியமூக பருவதத்தில் வந்துசேர்ந்தேன். வாலியைப் போர் புரிந்து வெல்லுவது முடியாத காரியம் என்று எண்ணியே நா னிவ்விடத்தை விட்டகலா திருக்கின்றேன். இவற்றால் மனம் கலங்கி, உற்ற துணைவர்களான அனுமான் முதலியவரோடு நான் இவ்வனத்தில் திரிகின்றேன். நண்பரிடத் தன்பு பாராட்டும் புருஷோத்தம, இமவானைப்போல உம்மைப் புகலடைந்தேன். மகாபலசாலியும் கொடியவனுமாயுள்ள என் தமையனுடைய ஆற்றலை யறிந்துள்ளேன்; யுத்த முனையில் உம்முடைய வீரத்தன்மையை நான் கண்டிலேன். நான் உம்மை அவனோடு ஒப்பிடவு மில்லை; அவமதிக்கவு மில்லை; அன்றிப் பயமுறுத்தக் கருதவு மில்லை. அவனுடைய பயங்கரமான செய்கைகளை நினைக்க என் உடல் நடுங்குகின்றது. இராகவ, உம்முடைய வார்த்தையுந் தோற்றமும் பொறுமையும் உம்முடைய வீரத்திற்குச் சான்று பகர்கின்றன; அவை உண்மையாய் நீறுபூத்த நெருப்புப் போலும் உம்முடையபோராண்மையைக் குறிப்பிக்கின்றன" என்று சொன்னான். இவ்வாறு சுக்கிரீவன் சொன்னதை இராமர் கேட்டு முறுவலித்து, வானர வேந்தனைப் பார்த்து "என்னுடைய ஆண்மையில் உமக்குச் சந்தேகமிருக்குமாகில் அதை இப்போது தீர்த்துவிடுகின்றேன்" என்று சொல்லித் துந்துபியின் தசை கழி முழுவெலும்பைத் தனது கால் பெருவிரலால் விளையாட்டுப்போலப் பத்துயோசனைக்கப்பால் எற்றிவிட்டார். இவ்வாறு அவ்வசுரனுடைய என்பு எற்றுண்டதைக் கண்டசுக்கிரீவன், லக்ஷ்மணர் முதலியோர் முன்னிலையில், இராமரை நோக்கி "நண்ப, இந்த உடலைமுன் சதைபற்றி ஈரமாக விருந்தபோது என் தமையன் எறிந்தான். இப்போது இதுதசைகழிந்துபுல்லைப்போன்று இலேசாயிருக்கின்றது. அப்போது அவன்யுத்தஞ்செய்து களைத்தும்

கள்ளுண்டு மயங்கியு மிருந்தான்; நீர் இப்போது நல்லறிவுட னிருக்கின்றீர். ஆகையால் இதைக்கொண்டு உங்களிருவரில் பலவான் இன்னுரென்று அறியக்கூடவில்லை. ஈரமுள்ளதற்கும் உலர்ந்ததற்கும் மிகவும் வித்தியாசம் உள தன்றோ? ஆகையால் என் ஐயம் நீங்கவில்லை. நீர் இவ்வாச்சாமரங்களி லொன்றைத் துளைப்பீராகில் உம்முடையபலம் இவ்வள வென்பதை நான் அறிந்துகொள்வேன். யானைத்துதிக்கைபோன்ற உமது வில்லை நாணேற்றிக் கர்ணபரியந்தம் வாங்கி இந்தப் பெரிய பாணத்தை எய்யும். அது இவ்வாச்சாமரத்தைத் தடையின்றித் துளைத்துவிடும். இனி இதைப்பற்றி யோசிக்கவேண்டாம். என்னிடத்தி லன்புகூர்ந்து எனக்கு நிச்சய முண்டாகுமாறு செய்யவேண்டுவதைச் செய்யும். ஒளியுள்ள பொருள்களுள் ஆதித்தன்போலவும், மலைகளுள் இமவான் போலவும், மிருகங்களுள் சிங்கம்போலவும் நீர் மானுடர்க்குள் வலியாற் சிறந்தவர்” என்று சொன்னுன்.

## பன்னிரண்டாஞ்சருக்கம்.

இராமரிடத்தில் நம்பிக்கை யடைந்து சுக்கிரீவன் வாலியுடன் போர்புரிதல்.

இவ்வாறு சுக்கிரீவன் கூறிய இனிய வார்த்தைகளை இராமர் கேட்டு அவனுக்கு நம்பிக்கை யுண்டுபண்ணும் பொருட்டுத் தமது கார்முகத்தைக் கையிலெடுத்து நாணேற்றி எண்டிசையும் நிரம்பக் குணத்தொனிசெய்து அதில் ஒரு பாணத்தைத் தொடுத்து ஆச்சாமரத்தைக் குறித்து விடுத்தார். இராமரால் விடப்பட்ட அந்தப் பாணம் வெகு வேகமாய்ச் சென்று அவ்வாச்சாமரங்களைத் துளைத்து மலையையும் கீழேழுலகங்

இராமர் ஏழு ஆச்சா மரங்களையும் ஒரே பாணத்தால் துளைத்தல்.

களையு மூடுருவிக் கணப்பொழுதில் திரும்பி அவருடைய தூணீரத்தை வந்தடைந்தது. இராமருடைய பாணம் அவ்வேழு ஆச்சாமரங்களையும் துளைத்ததைக் கண்டு சுக்கிரீவன் மிகப் பெரிய ஆச்சரியமடைந்தான். உடனே அவன் கழிபேருவகை பூத்துத் தலையிறைஞ்சிப் பூமியில் விழுந்து நமஸ்காரம்செய்து எழுந்து கைகுவித்து நின்று அறங்கரை கண்ட ரகுகுலத் தோன்றலாகிய இராமரை நோக்கி "ஓ புருஷோத்தம, நீ ருமது பாணங்களால் இந்திரனை முன்னிட்ட தேவர்களையும் போரில் அழிக்கவல்லீர். வாலி உமக்கு எம்மாத்திரம்? ஓரே பாணத்தால் ஏழு ஆச்சாமரங்களையும் மலையையும் பூமியையும் ஒருங்கே பிளந்தெறிந்த உமக்கெதிரில் சமரபூமியில் நிற்க வல்லவன் யாவன்? இந்திரனையும் வருணனையும்போல உம்மை நட்பாகப்பெற்று நான் சோகம் நீங்கிக் கழிபேருவகை அடைந்தேன். என் நன்மை கருதி என் தமையனை இன்றே சங்கரித் தருளவேண்டும். நான் கைகூப்பி வேண்டுகின்றேன்" என்றான். இராமர் களித்த முகத்தையுடைய சுக்கிரீவனைக் கட்டித் தழுவி லக்ஷ்மணரும் சம்மதிக்க அவனை நோக்கி "நாம் சீக்கிரம் கிஷ்கிந்தைக்குப் போவோம். நீ முன்பு போய் உன் கொடிய சகோதரனைச் சண்டைக் கழை" என்றார். பின்பு எல்லாரும் கிஷ்கிந்தைக்கு வேகமாய்ச் சென்று அடர்ந்த காட்டின்கணுள்ள மரங்களில் மறைந்துநின்றார்கள். அப்போது சுக்கிரீவன் தனது ஆடையை யிறுக்கிக் கட்டிக்கொண்டு வாலியைப் போரிற் கழைத்து அண்டமுகடு கிழிந்துபோவது போல் பயங்கரமாகக் கூச்சலிட்டான். தன் சகோதரன் இட்ட கூச்சலை மகாபலவானுன வாலிகேட்டுப் பெருங்கோபமடைந்து மேற்குத் திக்கிலிருந்து தோன்றும் சூரி

சுக்கிரீவன் சந்தோஷ மடைந்து இராமரைப் புகழ்தல்.

சுக்கிரீவன் வாலியைச் சண்டைக்கு அழைத்தல்.

யனைப்போல் தன்னகரத்தை விட்டு வெளியே வந்தான்.

வாலி சுக்கிரீவர் சண்டை.

உடனே ஆகாயத்திலே புதனும் அங்காரகனுஞ் சண்டையிடுவதுபோல வாலியும் சுக்கிரீவனும் இடியேறுபோலக் கைகளால் அறைந்து வச்சிராயுதம்போன்ற முட்டிகளால் ஒருவரை யொருவர் குத்தி வெகு பயங்கரமாகப் போர்புரிந்தார்கள். இராமர் வில்லை எடுத்துக்கொண்டு பார்க்க, அவர்கள் இருவரும் உருவத்தில் பேதமின்றி அசுவினிதேவர்களைப் போலக் காணப்பட்டனர். அதனால் அவர் இவன் வாலி, இவன் சுக்கிரீவன் என்று தெரிந்துகொள்ளாதவராய், கொல்லுந் தன்மையுடைய தனதுபாணத்தைப் பிரயோகியாதுநின்றார். அதற்கிடையில் சுக்கிரீவன் வாலிக்குத் தோற்று இராமரைக் காணாது ரிசியமூகபர்வதத்தைநோக்கி ஓடினான். அடிபட்டுக் களைத்துத்தேகம் முழுதும் இரத்தம் தோய்ந்து ஓடிப்போகும் சுக்கிரீவனை வாலி துரத்திக்கொண்டு சென்று அவன் மதங்கவனத்தில் புகுந்ததைக் கண்டு தனக்கு நேர்ந்த சாபத்தின் பயத்தால் அங்குச் செல்லமாட்டாதவனாகி "இன்று நீ தப்பினாய்" என்று சொல்லித் திரும்பினான். அப்போது இராமர் லக்ஷ்மணரோடும் அனுமானோடும் சுக்கிரீவன் இருந்த காட்டிற்குச் சென்றார். அவரைக்கண்டு சுக்கிரீவன் வெட்க மடைந்து பூமியைப் பார்த்துக்கொண்டு பரிதாபமாக "இராகவ, வாலியைச் சண்டைக் கழை என்று என்னை ஏவி, உம்முடைய பராக்கிரமத்தையும் எனக்குக் காட்டி, என்னைச் சத்துருவினால் அடியுண்ணப்பண்ணிச் செய்யாத காரியம் செய்தீர்? 'நான் வாலியைக் கொல்லமாட்டேன்' என்று நீர் அப்போதே சொல்லியிருந்தால் நான் அங்கே போயிருக்கமாட்டேன்" என்றான். இவ்வாறு சுக்கிரீவன் வெகு பரிதாபமாய்ச்

சுக்கிரீவன் தோற்றோடுதல்.

சுக்கிரீவன் இராமரைக்குறை கூறல்.

சொன்னதை இராமர்கேட்டுமறுமொழி கூறலுற்றார்:—

இராமர் தான் வாலியின் மேல் பாணம் தொடுக்காம லிருந்ததற்குக் காரணம் சொல்லுதல்.

"ஐய சுக்கிரீவ, யாது காரணத்தால் நான் பாணம் தொடுக்கவில்லை யென்பதைக் கேளும். ஆபரணாதிகளாலும் உருவத்தாலும் நடையுடைகளாலும் நீங்களிருவரும் ஒருவரை யொருவர் ஒத்திருக்கின்றீர்கள். குரலாலும், சொல்லாலும், தோற்றத்தாலும், பராக்கிரமத்தாலும் உங்களுக்குள் ஒரு பேதமும் நான் காணவில்லை. வானரோத்தம, உங்களுடைய உருவத்தின் ஒற்றுமையினுன் மயங்கி, சத்துருவைக் கொல்லுகின்ற மகா வேகமுள்ள என்னுடைய பாணத்தை யான் விடவில்லை. நீர் எல்லாவற்றாலும்வாலியை ஒத்திருந்தமையால் எங்கே எனது பாணம் உம்மேற் பாய்ந்துவிடுகின்றதோ வென்று பயந்தேன். எனது செயலால் உமக்கேதேனும் அபாயம் நேரிட்டால் எனது அறிவின்மையும் பிள்ளைமைத்தன்மையும் உலகெங்கும்பரவு மன்றோ? தஞ்சமடைந்தோரைக் கொல்லுவது மகாபாதகம். நானும் லக்ஷ்மணனும் சீதையும் உம்முடையசொல்லின் கீழுள்ளோம். இக்காட்டில் நீரன்றோ எங்களுக்குப் புகலிடம்? ஆகையால், நீர் போய் மறுபடியும்யுத்தஞ் செய்யும். பயப்படவேண்டாம். இக்கணமே வாலி எனது பாணம்பாய்ந்து பூமியில் விழுந் துருளுவதைப் பாரும். போர்புரியும்போது உம்மை நானறிந்துகொள்ளும்படி நீர் உம்முடைய உடலில் ஓரடையாளம் தரித்துக் கொள்ளும். லக்ஷ்மண, இந்த நாகபுஷ்பக்கொடியைப் பிடுங்கி மகாத்துமாவாகிய சுக்கிரீவனுடைய கழுத்தில் போடு" என்றார். உடனே லக்ஷ்மணர் அப்படிச் செய்ய, கொடியை அணிந்த சுக்கிரீவன் பௌர்ணிமையில் நடு ராத்திரியில் நக்ஷத்திரங்கள் சூழ்ந்து விளங்கும் சந்திரன் போலவும் சந்தியா

சுக்கிரீவனது கழுத்தில் புஷ்பக் கொடியை அடையாளமாகப் போடுதல்.

காலத்தில் கொக்குக்கள் சூழ்ந்து விளங்கும் மேகம் போலவும் பிரகாசித்தான். பின்பு அவன் மனந்தேறி முகமலர்ச்சியடைந்து இராமருடன் கிஷ்கிந்தைக்குப் போயினான்.

## பதின்மூன்றாஞ்சருக்கம்.

சுக்கிரீவன் மறுபடி கிஷ்கிந்தைக்குச் செல்லுதல்.

அப்போது இராமர் தனது பொன் புனைந்த பெரிய வில்லையும் சூரியன் போன்ற பாணங்களையும் கையிலெடுத்துக்கொண்டு சென்றார். சுக்கிரீவன் தலைவணங்கி, ராமலக்ஷ்மணர்களுக்குமுன்னே போயினான். அநுமான், நளன், நீலன், தாரன் என்னும் வானர வீரர்கள் பின்னே சென்றார்கள். அவர்கள் போகும்வழியில் பூவின் சுமையால் வளைந்த மரங்களும், தெளிந்த நீர்நிரம்பிச் சமுத்திரத்தை நாடியோடும் நதிகளும், மலைகளின் சிகரங்களும், மனிதர்கள் வாழும் மனைகளைப்போன்ற குகைகளும், தெய்வகதியால் பாறைகள் பிளந்துண்டாகிய கற்பாழிகளும், முழைஞ்சுகளும், வைடூரியம்போலத் தெளிந்த நீர் நிறைந்து, தாமரைமுகைகளும் மலர்களும் செறிந்து, அன்னம், நீர்க்காக்கை, காரிப்பிள்ளை, நீர்க்கோழி, சக்கரவர்கம் முதலிய பறவைகள் ஒலிக்க அழகாய் விளங்கும் நீரோடைகளும் காணப்பட்டன. அந்த வனத்திலெவ்விடத்திலும் மானினங்கள் மெல்லிய புல்லைக் கடித்துத் தின்று பயமின்றி யுலாவின; ஆற்றங்கரைகளையும், சுனைகளையும் அழித்துச் செல்கின்ற அச்சந்தரும் வெள்ளிய கொம்புகளையுடைய யானைகள் தனியன்களாய்த் திரிந்தன; மேகத்துக்கொப்பான கரிய யானைகள் மலைகள்போல் நடந்து மதங்கொண்டு குன்றுகளை முட்டித்தள்ளி அங்க

சுக்கிரீவன் மீளவும் கிஷ்கிந்தை செல்லுதல்.

மெல்லாம் புழுதிபடிந்துசென்றன. இவைகளையும் இன்னு மனேக பறவை களையும், மிருகங்களையும் பார்த்துக் கொண்டு சுக்கிரீவனும் அவனுடன் சென்றவர்களும் போயினார்கள். இவ்வாறு இவர்கள் வேகமாய்ச் செல்லும்போது அங்கே மரங்களடர்ந்த காடொன்றைக்கண்டு இராமர் சுக்கிரீவனைப்பார்த்து "ஐய, நாற்புறத்திலும் வாழைகள் வளர்ந்து தோன்று மிம்மரச்சூழல் ஆகாயத்தில் காணும் மேகக்கூட்டம்போ லிருக்கின்றது. இது என்னென்றறிய நான் மிகவும் விரும்புகின்றேன்; எனது விருப்பத்தை நீர் தீர்க்கவேண்டும்" என்றார். மகாத்துமாவாகிய இராமர் இவ்வாறு கேட்கச் சுக்கிரீவன் நடந்துகொண்டே அவ்வனத்தைப்பற்றிச் சொல்லலுற்றான்:—"இராகவ, கேளும்.

ஸப்தஜன ஆச்சிரமத்தின் வரலாறு.

அடைந்தவர்களின் சிரமத்தைப் போக்க வல்லதும் அழகிய தோட்டங்களும் நல்ல நீர் நிலைகளுமுள்ளதும் இனிய கிழங்குகளும் கனிகளும் மல்கினதுமாகியஇந்தவிஸ்தாரமான ஆச்சிரமத்திலே ஐம்புலனடக்கிய ஏழு முனிவர்கள் வசித்தார்கள். அவர்கள் நீரில் தலை கீழாக நின்று தவமியற்றிக்கொண்டு ஏழுநாளைக் கொருதரம் காற்றைப்புசித்துவந்தார்கள். இவ்வாறு அவர்கள் எழுநூறு வருஷகாலம் தவம்புரிந்து சரீரத்துடன் தேவருலகமடைந்தார்கள். அம்முனிவர்களின் மகிமையால் இவ்வாச்சிரமம் மரங்களால்சூழப்பட்டுத் தேவர்களாலும் அசுரர்களாலும் தேவேந்திரனாலும் பிரவேசிக்க முடியாததாயிருக்கின்றது. பறவைகளும் மிருகங்களும் இங்கே சஞ்சரிப்பதில்லை. இவ்வாச்சிரமத்துள் யாவராயினும் அறியாது நுழைவாராயின் அவர் திரும்புவதில்லை. இவ்விடத்தில் தெய்வ மாதர்களின் சிலம்பொலியும், இனிய சொற்களும், பாட்டும், மிருதங்கங்களின் சத்தமும் கேட்கும்; தெய்வ மணம் பரிமளிக்கும். இங்கே திரேதாக்கினி எரிந்துகொண்டிருக்கின்றது. அதினின் றெழும்பும் மாடப்புறாவின்

சிறைபோன்ற புகையும் மேகமும் மரங்களை மூடிக்கொண்டிருக்கின்றன. அங்ஙனம் புகை சூழ்ந்து மேகம்படிந்த மரங்கள் வைடூரிய மலைகளைப்போல விளங்குகின்றன. இராகவ, நீர் லக்ஷ்மணருடன் அம்முனிவர்களுக்கு ஒருப்பட்ட மனத்தோடு கைகூப்பி வந்தனம் பண்ணும். அவ்வருந்தவரைப் பணிந்தோரை எவ்வித நோயும் அணுகாது." இவ்வாறு சுக்கிரீவன் சொல்ல, இராமர் அத்தாபதர்களைக் குறித்து, தம்பி லக்ஷ்மணரோடு வந்தனம் செய்தார். அதன் பின் இராமரும் லக்ஷ்மணரும் சுக்கிரீவனும் வானரவீரரும் சந்தோஷத்துடன் வழிநடந்தார்கள். அந்த எழுமுனி யாச்சிரமத்தை விட்டு நெடுந்தூரம் சென்றபின் அவர்கள் வாலியால் பாதுகாக்கப்பட்டு அடைதற் கரிதாயுள்ள கிஷ்கிந்தையைக் கண்டார்கள். பின்பு ராமலக்ஷ்மணர்களும் வானரவீரர்களும் தத்தம் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சத்துருநாசஞ் செய்வதற்காக இந்திரகுமாரனது கிஷ்கிந்தா நகரத்துள் பிரவேசித்தார்கள்.

---

## பதினான்காஞ் சருக்கம்.

சுக்கிரீவன் வாலியைப் போருக்கழைத்தல்.

---

அவர்க ளனைவரும் வேகமாய்க் கிஷ்கிந்தையையடைந்து ஓர் அடர்ந்த காட்டில் மரங்களின் பின் மறைந்து நின்றார்கள். அப்போது பருத்த கழுத்தையுடைய சுக்கிரீவன் தன் பரிவாரங்கள் சூழ்ந்துநிற்க, நாற்புறமும் சுற்றிப்பார்த்து வெகு கோபங்கொண்டு அண்டமுகடு கிழியும்படி ஆர்த்து, வாலியைச் சண்டைக் கழைத்தான். பின்பு இளஞ் சூரியன்போலும் சுக்கிரீவன் வாயுவோடு கூடிய மேகம்போலக் கர்ச்சித்து, சிங்கமென நடந்து, நினை

த்த காரியத்தை முடிக்க வல்ல இராமரைநோக்கி "பொன்னினாற் புனைந்து அநேக கொடிகளையும் பொறிகளையு முடையதாகி வானர்கள் சூழ்ந்த கிஷ்கிந்தையை யடைந்தோம். வீர, நீர் வாலியை வதைப்பதாக முன்னரே செய்த சபதத்தை ஏற்றகாலத்தில், கொடிகளைப் பழுக்கச்செய்யும் பருவம்போல, நிறைவேற்றியருளும். சீக்கிரத்தில் என் மனோபீஷ்டத்தைப் பூர்த்திபண்ணும்" என்று வேண்டினான். அதற் குத்தரமாக இராமர் சுக்கிரீவனைப் பார்த்து "லக்ஷ்மணன் நாகபுஷ்பக்கொடியைப் பிடுங்கி உம்முடைய கழுத்தில் அடையாளமாகச் சூடினன். கழுத்தி லணிந்த இந்தக் கொடியால் நீர் நக்ஷத்திரங்கள் மாலையாகச் சூழ்ந்த சந்திரனைப்போல விளங்குகின்றீர். நான் வாலியின் பயத்தையும் பகையையும் நீங்கள் சண்டை செய்யும்போது ஒரேபாணத்தால் தொலைத்து விடுகிறேன். தமையனைப் பிறந்து உமக்குச் சத்துருவாயிருக்கும் வாலியை நீர் காட்டும். அவன் எனது பாணம் பாய்ந்து இன்றைக்கு இந்த மண்ணில் புரளுவான். என் பாணம் பட்டு அவன் உயிருடன் திரும்புவானாகில் நீர் என்னை நிந்தியும். என்னுடைய ஒருபாணத்தால் ஏழு மராமரங்கள் பிளவுபட்டதை நீர் பார்த்திருக்கின்றீர். அந்தப் பாணத்தால் வாலி இன்று மடிந்தான் என்று எண்ணும். எப்போதும் தருமவழியில் ஒழுகவேண்டுமென்னும் கருத்தினனாகலான் நான் துன்பமுற்றகாலத்தும் பொய் சொன்னவன் அல்லேன். இந்திரன் மழைபொழிவித்துப் பயிர்களைச் செழிக்கச்செய்வதுபோல் நான் என் வலியால் என்னுடைய பிரதிக்கினையை நிறைவேற்றுகின்றேன். நீர் சந்தேகிக்க வேண்டாம். பொன்மாலை புனைந்த வாலி வெளிப்பட்டுவரும்படி பெருஞ்

வாலியை வதைக்கவேண்டுமென்று சுக்கிரீவன் இராமரை வேண்டுதல்.

வாலியை வதைப்பதாக இராமர் சுக்கிரீவனுக்குத் தைரியம் சொல்லுதல்.

சத்தம் செய்து அவனைச் சண்டைக்கழையும். அவன் வெற்றியாற் கர்வமடைந்து வீரத்தால் புகழ்பெற்றவன்; அவனை இதற்குமுன் அடக்க உம்மால் கூடாமல் போயிற்று. அவன் போரில் விருப்பமுள்ளவனுகையால் உம்முடைய சத்தத்தைக் கேட்டவுடன் வெளிப்பட்டு வருவான். பகைவன் போருக்கழைப்பதைக் கேட்டு அவன் வாளாவிருக்கமாட்டான்" என்று சொன்னுர். அதைப் பொன்னுர் மேனியனுன சுக்கிரீவன் கேட்டு ஆகாயம் கிழிவதுபோலப் பெரும் பூசலிட்டான். அந்தச் சத்தத்தைக் கேட்டு ஆனினங்கள் பொலிவிழந்து அரசனது கொடுமையால் அல்லற்படும் குலமாதர்போல் அங்கு மிங்கும் ஓடின; போர்முனையில்தோற்ருேடும் குதிரைகள்போலமான்கள் அதிவேகமாய் ஓடின; புண்ணியம் குறைந்து விண்ணினின் றுதிரும் கிரகங்கள்போலப் பறவைகள் பூமியில் வீழ்ந்தன. அப்போது சூரியகுமாரன் காற்றினுல் அடியுண்டு கொதிக்கும் சமுத்திரம்போல இராமருடைய சொற்களால் உற்சாகம் மேலிட்டு நீருண்ட மேகம்போல் கர்ச்சித்து நின்ருன்.

---

## பதினைந்தாஞ்சருக்கம்.

*சுக்கிரீவனுடன் போர்புரிய வாலி புறப்படுகையில் தாரை தடுத்தல்.*

---

வாலி புறப்படுதல்.

சுக்கிரீவன் இட்ட பேரிரைச்சலை அந்தப்புரத்திலிருந்த வாலிகேட்டுக் கொஞ்சம் தைரியங் குன்றிப் பிறகு பெருங் கோபங்கொண்டான். கோபங்கொண்ட வாலி இராகுவாற் பற்றப்பட்ட சூரியன்போல ஒளி மழுங்கித் தோன்றினுன். பற்கள் பயங்கரமாகத் தோன்ற, கண்கள் அக்கினிபோலக் கனல, பூவுங் கொடியும் பிடுங்குண்ட தாமரை யோடையைப்போல வாலி காணப்பட்டான்.*

---

* "லர்ந்த செந்தாமரையுடன் விளங்கும் ஓடையைப்போல் தோன்றினுன்" என்று அருத்தங்கொள்ளும் வேறுபாடமு முண்டு.

அந்தச் சத்தத்தைக் கேட்டு வாலி சகிக்கமாட்டா தவனாகிப் பூமி பிளந்துபோமாறு காலெடுத்துவைத்து விரைந்து புறப்பட்டான். அப்போது தாரை மிகவும் பயந்து வாட்டமுற்று வாலியினிடத்தில் அதிக அன்பு காட்டி அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு அவன் நன்மை கருதி அவனைத் தடுப்பாளாயினாள் :—"வீர, ஆற்றுப் பெருக்கைப்போலப் பொங்கி யெழுகின்ற உம்முடைய கோபத்தை விட்டுவிடும். நீர் அதனை இராவிற் புனைந்திருந்த பூமாலையைக் காலையிற் றுயிலெழும்போது களைந்துவிடுவதுபோல் நீக்கிவிடும். சுக்கிரீவனுடன் நீர் நாளைக்குப் போர்செய்யலாம். தலைவ, உமது பகைவன் அற்பனா யிருத்தலின் உமக்கொரு குறையும் வாராது. நீர் இவ்வாறு அவசரப்பட்டு வெளியிற் செல்லுதல் எனக்குப் பிரியமில்லை. நான் ஏன் உம்மைத் தடுக்கின்றே னென்பதைக் கேளும். சுக்கிரீவன் முன் வெகுண்டு உம்மைச் சண்டைக்கழைத்து உம்மால் அடிபட்டுத் தோற்றோடினான். அவ்வாறு உம்மால் தோல்வியடைந்து இடுக்கணுற்ற சுக்கிரீவன் மீளவும் உம்மைப் போருக்கழைப்பதைப் பார்த்தால் எனக்குச் சந்தேக முண்டாகின்றது. அவனுடைய செருக்கும் உற்சாகமும் அவனிடும் பெரும் பூசலும் அவனுடைய காரியம் அற்பமன்றென்பதைக் காட்டுகின்றன. அவன் துணை யாருமின்றி வந்திருப்பதாக நான் எண்ணவில்லை. அவன் உண்மையாகப் பேருதவி யொன்று பெற்றிருக்கின்றான் ; அதனாற்றான் அவன் இவ்வண்ணம் பெரும்பூச லிடுகின்றனன். இயற்கையாகவே அவன் வெகு புத்திமான் ; காரியத்தில் நிபுணன். அவன் ஒருவன் வன்மையை அளந்தறியாது அவனைத் தனக்குத் துணையாகக் கொள்ளமாட்டான். தலைவ, நமது குமாரன் அங்கதன் சொல்ல நான் இன்று கேள்விப்பட்டதைக் கேளும். அவன் காட்டில் திரிந்த

தாரை வாலியைச் சண்டைக்குப் போகவேண்டாமென்று தடுத்தல்.

போது தன்னுடைய சாரர்களால் சுக்கிரீவனைப்பற்றி அறிந்த சமாசாரத்தை என்னிடம் சொல்லினன். அதாவது: அயோத்திமாநகரத்து மன்னன் புதல்வரிருவர், இராமர் லக்ஷ்மணர் என்னும் பெயருடையவர்கள், மகாசூரர்கள், போரில் வெல்லற் கரியர்கள், காட்டில் வந்திருக்கின்றார்கள். அவர்கள் சுக்கிரீவனுக்கு நன்மைசெய்யவேண்டி இவ்விடம் வந்திருக்கிறார்கள். உம்முடைய சகோதரன் சுக்கிரீவனுக்கு யுத்தத்தில் துணை இராமர். அவர் ஊழித்தீயை ஒத்தவர்; பகைவரை அழிப்பவர்; சாதுக்களுக்குச் சரணமாயுள்ளவர்; புன்கணுற்றோர்க்குப் புகலிடமானவர்; பகைவரால் நலிந்தோரைப் பரிந்து காப்பவர்; புகழிற் கிருப்பிடமானவர்; நன்ஞானமும் நற்புத்தியுமுள்ளவர்; தந்தை சொற்படி நடப்பவர்; பலவித தாதுக்களுக்கும் இருப்பிடமாகிய இமவான்போலக் குணங்களுக்கெல்லா மிருக்கையானவர். இத்துணைப்பெரிய ஆற்றலுடைய இராமரோடு நீர் முரணுவது யுக்தமன்று. சூரனே, இன்னும் ஒன்று யான் சொல்லுவதுளது. என்னிடத்தில் அசூயை கொள்ளாது அதனைக் கேளும். இக்கணமே சுக்கிரீவனை யழைத்து இளவரசாக்கும். நீர் உமது தம்பியை வெறுக்காதேயும். இராமரோடு சினேகம்செய்து சுக்கிரீவனிடத்துள்ள பகையை யொழித்து அவனுடைய அன்பை மீட்டும் பெறுவது உமக்கு நன்மையென் றெண்ணுகின்றேன். உம்முடைய தம்பியை நீரன்றோ லாலனை செய்யவேண்டும்? உமக் கருகிலிருப்பினும் தூரத்திலிருப்பினும் அவனன்றோ உமக்குற்ற பந்து? இவ்வுலகில் அவனைப்போன்ற பந்து உமக்கு வேறு இருப்பதாக நான் காணவில்லை. ஆதலால் அவனுக்கு நன்கொடை யளித்து மரியாதை பண்ணி அவனை மீளச் சேர்த்துக்கொள்ளும். அவனோடு பகை பாராட்டாது அவனை உமது பக்கத்தில் இருத்திவையும். சுக்கிரீவனே உமக்கு உற்றதுணைவன். அவனுடைய அன்பைப் பெறுவதினும் உமக்குச் செய்

யத் தக்கது வேறுளதென்று நான் எண்ணவில்லை. உம்முடைய நன்மையை நான் விரும்பினவள் என்று, என்னுடைய எண்ணத்தின்படி உமக்கு நடக்க இஷ்டமானால், நான் வேண்டிக்கொள்வதை நீர் செய்யும்; நான் கூறும் நற்புத்திகளைக் கேளும். கோபத்திற் கிடங்கொடுக்க வேண்டாம். இந்திரனுக் கொப்பான வலியையுடைய கோசலத்தார் கோமகனோடு நீர் முரணுவது உமக்கு நன்மை பயக்காது" என்றாள். தாரை இவ்வாறு கூறிய நன்மை பயக்குஞ் சொற்கள் காலன் கையகப்பட்ட வாலிக்கு ஏற்கவில்லை.

---

## பதினாறுஞ்சருக்கம்.

வாலி இராமபாணம் பாய்ந்து பூமியில் விழுதல்.

---

சந்திரன்போன்ற முகத்தையுடைய தாரை இவ்வாறு சொல்ல, வாலி யவளைக் கடிந்து "மாதே, என் தம்பியும் சத்துருவுமான சுக்கிரீவ னிவ்வாறு உறுமிக் கர்ச்சிக்க நான் அதைக்கேட்டு எப்படிப் பொறுத்திருப்பேன்? பயந்தவளே, சமர் முகத்தில் தோல்வியடையாதவர்களும் ஓடாதவர்களுமானவீரர்கள் இவ்வித அவமரியாதையைச் சகிப்பதினும் உயிரைக் கொடுத்துவிடுவார்கள். என்னோடு போர்புரிய விரும்பிச்சுக்கிரீவ னிடும் பூசலை நான் சகிக்கமாட்டேன்? இராமரால் எனக்குக் கெடுதி நேருமென்று நீ பயப்படவேண்டாம். தருமமுணர்ந்தவரும் நன்றியறிந்தவருமான இராமர் எங்ஙனம் தீமை செய்வார்? நீ ஏன் என்னைத் தொடர்ந்துவருகின்றனை? மற்றைப் பெண்களோடு திரும்பிச்செல். என்னிடத்தில் நீ அன்பும் ஆசையு முடையவள் என்பதை முன்னரே காட்டிவிட்

வாலி தாரைக்குச் சமாதானம் சொல்லுதல்.

டாய். நான் அங்கே சென்று சுக்கிரீவனோடு போர்செய்து அவனைக் கொல்லாது அவனுடைய செருக்கை அடக்கி விடுகிறேன். உனது விருப்பத்தின்படி அவனைச் சண்டையில் நெருக்காது கையாலும் தடியாலும் அடித்து ஓட்டி விடுகிறேன். அவன் எனது பலத்தையும் போராற்றலையும் சகிக்கவல்லவனல்லன். மாதே, நீ எனக்கு நல்ல புத்திகள் சொல்லி உன்னுடைய அன்பைக் காட்டிவிட்டனை. என் ஆணை நீ திரும்பிவிடு. நான் என் தம்பி சுக்கிரீவனைச் சமரில் வென்றபின் திரும்புவேன்'' என்றுசொன்னான். இவ்வாறு தடுக்கப்பட்ட இனியமொழியையுடைய தாரை வாலியைத் தழுவிக்கொண்டு, கண்களில் நீர்பெருக அவனை வலம்வந்து, அவனுக்கு வெற்றியுண்டாக வேண்டுமென்று மந்திரசகிதமாய் வாழ்த்தி, துக்கத்தால் மீதூரப்பட்டு, மற்றைப்பெண்களோடும் அந்தப்புரத்தை யடைந்தாள். அவ்வாறு தாரை திரும்பிச் சென்றபின், வாலிசீற்றங்கொண்ட சர்ப்பம்போல நெட்டுயிர்த்துநகர்ப்புறம்போந்து, நாற்புறமும் சுற்றிப்பார்த்து, பொன்னிறமுடைய சுக்கிரீவன் ஆடையை நன்றாக இறுக்கிக் கட்டிக்கொண்டு பற்றியெரியும் அக்கினி போல விளங்கிக்கொண்டிருக்கக் கண்டு, பெருங் கோபங்கொண்டு, மடியைத் தற்றுக்கொண்டு, சுக்கிரீவனுக்கு முந்துற்றுக் கையோக்கி நின்றான். சுக்கிரீவனும் சினந்து தனது கைகளை உயர்த்திக்கொண்டு கிட்டினான். அவன் அவ்வாறு கண்கள் சிவந்து அதிவேகமாய் வருவதை வாலி கண்டு "இதோபார், விரல்களை நெருக்கிக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கிறேன். இதனால் ஒரு குத்தோடு உன் பிராணன் போய் விடும்'' என்றான். சுக்கிரீவன் கோபங்கொண்டு "இதோ உன் தலையில் விழுகின்ற என் கைக்குத்தினால் உன் உயிர் போகின்றது'' என்றான். உடனே வாலி சினங்கொண்டு சுக்கிரீவனைக் கிட்டிப் புடைத்தான். சுக்கிரீவன் மலையி

வாலி சுக்கிரீவர் சண்டை.

ணின்றும் ஊற்றுப்பெருகுவதுபோல உதிரத்தைக் கக்கி, ஒரு பெரிய ஆச்சாமரத்தைப் பிடுங்கி மலையின்மேல் இடி விழுவதுபோல வாலியைச் சாடினான். ஆச்சாமரத்தாலடியுண்ட வாலி மனம் கலங்கிச் சமுத்திரத்தில் அதிக பாரத்தால் தத்தளிக்கின்ற கலம்போலமாழ்கினான். மிக்க வலியையும் கருடன்போன்ற வேகத்தையும் அஞ்சத்தக்க பருத்த சரீரத்தையுமுடைய வாலி சுக்கிரீவ ரிருவரும் ஆகாயத்தில் சூரிய சந்திரர் சமர்புரிவதுபோலச் சண்டை யிட்டார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் பகைத்து ஒருவருடைய உயிரை ஒருவர் வாங்கச் சமயம் பார்த்து நின்றார்கள். பின்னர் வாலி பெருவலியினாலும் திறலினாலும் மேற்கொள்ள, சூரியபுத்திரனாகிய சுக்கிரீவன் பலம் குன்றினான். வாலியால் செருக்கழிந்து ஆற்றல் குன்றிய சுக்கிரீவன் கோபங்கொண்டு தனது வேகத்தைக் காண்பிக்க, அவர்களிருவரும் விருத்திராசுரனையும் இந்திரனையும்போல ஒருவரையொருவர் மரங்களாலும், மலைகளாலும், வச்சிராயுதத்தைப்போன்ற கூரிய நகங்களாலும், முட்டிகளாலும், முழங்கால்களாலும், கால்களாலும், தோள்களாலும் தாக்கி, தேகமெங்கும் உதிரம்பெருக மேகங்கள்போலக் கர்ச்சித்துப் போர் புரிந்தார்கள். அப்போது சுக்கிரீவன் வரவர இளைத்து அடிக்கடி இராமரிருக்கு மிடத்தைப் பார்த்தான். இவ்வண்ணம் சுக்கிரீவன் சங்கடப்படுவதை மகா பராக்கிரமசாலியான இராமர் பார்த்து வாலியை வதைப்பதற்காகச் சர்ப்பம்போன்ற ஒரு பாணத்தை யெடுத்து வில்லில் பூட்டி யமனுடைய காலசக்கரத்தைப்போல அவ்வில்லை வளைத்தார். அவர்செய்த நாணொசையைக்கேட்டுப் பறவைகளும் விலங்குகளும் யுகாந்தகாலத்திற் போல நடுங்கி நாற்றிசைகளிலும் ஓடின. மகேசுரன் தனது வாயிலிருந்து புகை கலந்த நெருப்பைக் கக்கினாற்

வாலியின்மேல் இராமர் பாணந் தொடுத்தல்.

போல, இராமரது வில்லிலிருந்து விடப்பட்ட, அக்புற்க போன்றதும், காலனை நிகர்த்ததும், வச்சிராயுதத்தை ஒம், ததும், சத்துருக்களை யழிப்பதும்,பொன்னாற் புனையப்பட் டதுமாகிய அந்தப் பெரும்பாணம் தனது மார்பிற் பாய, மிக்க வலியையுடைய இந்திர குமாரனன் வாலி சாய்ந்து, அறிவிழந்து, தேகமுழுதும் இரத்தம் தோய, நிறையப் பூத்த அசோகமரம் காற்றினலடிபாறி விழுந்ததுபோல வும், ஐப்பசி மாதத்துப்பௌர்ணிமையில் கீழே சாய்க்கப் பட்ட இந்திரனது துவஜம்போலவும், பூமியில்விழுந்தான்.

## பதினேழாஞ்சருக்கம்.

வாலி தன்னை எய்ததற்காக இராமரைக் குற்றங்கூறல்.

போரில் தீரனன வாலி இராமருடைய அம்பு பாய்ந்து அடியற்ற மரம்போலவும், பொன்மாலை யணிந் திருந்தமையின், கட்டவிழ்ந்த இந்திரன் கொடிபோலவும், பூமியில் விழுந்து கிடந்தான். அவன் அவ்வாறு வீழவே அவனுடைய ராச்சியம்சந்திரனை யிழந்த ஆகாயம்போலப் பொலிவழிந்தது. கீழே வீழ்ந்தும், இந்திரன் கொடுத்த காஞ்சனமாலையை அணிந் திருந்ததனல் அவனுடைய பிராணன் போகவுமில்லை, தேககாந்தி குறையவுமில்லை, பராக்கிரமம் நீங்கவுமில்லை. அம்மாலையால் அவன் அந்தியில் தோன்றும் செவ்வானம்போலப் பிரகாசித்தான். கீழே விழுந்த வாலியினுளி அவனது மாலையிலும், சரீரத்திலும், மார்பில்தைத்த பாணத்திலுமாக மூன்று பகுப்பாய்த் தோன்றிற்று. இராமருடைய வில்லினின்றும் விடப்பட்ட பாணம் வாலிக்குச் சுவர்க்கத்துக்குச் செல்லும் வழியைக் காட்டிற்று. இந்தி

வாலி கீழே விழுந்தும் பொலிவு குன்று திருத்தல்.

——ப்போல் வெல்லமுடியாதவனும், அவன் மதலையும், னிஞ்கத்தைப்போன்ற மார்பும், நீண்ட கைகளும், பிரகாசமான முகமும், பசுமையான கண்களுமுடையவனுமாகிய வாலி அவ்வாறுபோர்க்களத்தில், அணைந்த அக்கினிபோலவும், புண்ணியம் குன்றித் தேவலோகத்திலிருந்து விழுந்த யயாதிமகாராஜன்போலவும், யுகாந்தகாலத்தில் பூமியில் விழுந்த சூரியன்போலவும், விழுந்திருப்பதைக் கண்டு இராமர் லக்ஷ்மணருடன் சென்று அவனைப் பார்த்தார். [இராமரையும் மகாபலம் பொருந்திய லக்ஷ்மணரையும் கண்டமாத்திரத்தில் வாலி வணக்கமாயும் தைரியமாயும் அறந்தழுவிய சில வார்த்தைகளைப் பேசுவானாயினன்:— "நீவிர் இராஜகுமாரர்; பிரதாபமுடையவர்; கண்ணுக்கினியர்; நல்லகுலத்தி லுதித்தவர்; பலாட்டியர்; காந்தியுடையவர்; விரதம்பூண்டுள்ளவர்; அப்படியிருந்தும் பராமுகனா யிருந்த என்னை எய்து நீர் யாது பயனடைந்தீர்? நான் வேறொருவனுடன் போர்புரிகையில் என்மேல் நீர் பாணம் ஏன் விடுத்தீர்? இவ்வுலகிலனைவரும் உம்மைக் கருணைக்கடலென்றும் குடிகளுடைய நன்மையில் நாட்டமுள்ளவரென்றும் ஐம்புலன்களையு மவித்தவரென்றும் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். தமம், சமம், க்ஷமை, தருமம், தைரியம், சத்தியம், பராக்கிரமம், அபராதம் செய்தவர்களைத் தண்டித்தல் ஆகிய இவை யெல்லாம் அரசர்க்குரிய குணங்கள். நீர் இந்தக் குணங்களையுடையவரென்றும் உயர் குலத்துதித்தவரென்று மெண்ணித் தாரை என்னைத்தடை செய்யவும் நான் சுக்கிரீவனோடு அமர்செய்ய வந்தேன். நான் உம்மைக் காண்பதற்கு முன் 'வேறொருவனுடன் நான் போர்புரியும்போது இராமர் என்னை எதிர்க்கமாட்டார்' என்று எண்ணினேன். நீர் தருமத்தை நிலைநிறுத்துவதாக வீண்கொடி கட்டிக்கொண்டு அதற்கு மாறாய்

வாலி இராமரை ஏன் என்னை எய்தீரென விஞவுதல்.

நடந்து பாவத்தொழிலைச் செய்கிறவரென்றும், புற்க ளால் மூடப்பட்ட பாழ்ங் கிணறுபோல்பவரென்றும், ஆன்மாவை யழித்துக்கொண்டவரென்றும், பரிசுத்த வேடம்பூண்டு தீச்செயல் புரிபவரென்றும், சாம்பல்மூடிய நெருப்புப்போலத் தருமப் போர்வை போர்த்துத் திரி யும் கொடியவர்என்றும் இதுகாறும் நான் அறிந்திலேன். உம்முடைய நாட்டிலாவது நகரத்திலாவது நான் ஒரு தீங்கு மிழைத்திலேன்; உம்மை அவமதித்துமறியேன். காட்டிலலைந்து கந்தமூலாதிகளையுண்டு திரியும் குரங்காகிய நான் வேறொருவனோடு சண்டைசெய்யும்பொழுது நீர் என்னைக்கொல்லவந்தது யாது காரணம்பற்றி? உம்மைப் பார்த்தால் இராஜகுமாரராகவும் கண்டோரால் விரும்பப் படும் தன்மை நோக்கமுடையவராகவும் விரதம் பூண்ட வராகவும் காணப்படுகின்றீர். அரசர்குலத்தி லுதித்து வேதசாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுத் தவவேஷம் பூண்டவன் யாவன் இக்கொடியகாரியம் செய்யத் தலைப் படுவான்? நீர் இரகுவமிசத்தில் பிறந்தவரென்றும் தரும வான் என்றும் பிரசித்தி யடைந்துள்ளீர். தீமையுடைய நீர் ஏன் நல்ல உருவங்கொண்டு திரிகின்றீர்? சாமம், தா னம், பொறுமை, தருமம், சத்தியம், உறுதி, பராக்கிர மம், அபராதஞ் செய்தவர்களைத் தண்டித்தலாகிய இவை கள் அரசர் குணங்கள். நாங்கள் காய்களையும் கனிகளையும் புசித்துக் காட்டில் சஞ்சரிக்கும் விலங்குகள். இது எங்களுடைய சுபாவம். அரச, நீர் மானுடன். உல கத்தில் கலகத்துக்குக் காரணம் பூமி, பொன், வெள்ளி முதலியவைகள். இவற்றில் எதன்மேல் ஆசைகொண்டு நீர் என்னை நலிந்தீர்? நாங்கள் தின்னும் கனிகளின் மேல் ஆசைகொண்டீரோ? நிக்கிரகம் அநுக்கிரகம் என் னும் ராஜதருமங்களை அரசன் விதிப்பிரகாரம் செய் வதே யல்லாது மனம்போனபடி செய்யலாமோ? நீர் கோபமுள்ளவராயும், உறுதியில்லாதவராயும், காரண

மின்றிப் பாணம் தொடுப்பவராயும், ராஜதருமத்தைச் செவ்வனே நடத்த வறியாதவராயும் இருக்கிறீர். உமக்குத் தருமத்தில் விருப்பமில்லை; நற்காரியமறியீர்; அரசனுயிருந்தும் ஐம்புலன்களா லலைக்கப்படுகிறீர். காகுத்த, யாதொரு குற்றமும் செய்யாத என்னை அம்பெய்து கொன்றீர்; இத்தகாததகாரியத்தை ஏன் செய்தீர் என்று சாதுக்கள்கேட்டால் நீர் யாது சொல்வீர்? அரசனைக் கொன்றவன், பிரமஹத்திசெய்தவன், கோவதை செய்தவன், மற்றும் பிராணிகளைக் கொன்றவன், திருடன், நாஸ்திகன், தமையன் பிரமசாரியாயிருக்கத் தான் மணம்புரிந்துகொண்டவன், கோட்சொல்லும் குணமுள்ளவன், அற்பன், நண்பனைக் கொன்றவன், குருபத்தினி கமனம் செய்தவன் ஆகிய இவர்கள் எல்லாரும் நரகம் புகுவார்கள். இதில் சிறிதும் சந்தேகமில்லை. என்னுடைய தோல் சாதுக்களால் தரிக்கத்தகாதது; எனது உரோமங்களும் எலும்புகளும் அவ்விதமாகவே நீக்கிவைக்கத் தக்கன. உம்மைப்போன்ற தருமவான்களால் என் மாமிசம் புசிக்கத்தக்கதன்று. முள்ளம்பன்றி, பன்றி, உடும்பு, முயல், ஆமை ஆகிய ஐந்து நகங்களையுடைய இவ்வைந்து பிராணிகளையுமே பிராமணரும் க்ஷத்திரியரும் புசிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. என் தோலையும் எலும்பையும் புத்திமான்கள் தொடார்கள்; தசையையும் புசியார்கள். உம்மால் கொல்லப்பட்ட நான் ஐந்து விரலுள்ள குரங்கு. தாரை கூறிய நன்மைதரும் உண்மைச்சொற்களைக் கேளாது நான் காலன்வாய்ப்பட்டேன். நல்லொழுக்கமுள்ள ஒரு பெண்ணுக்கு நலங்கெட்ட நாயகன்வாய்த்தாற்போல இப்பூமாதுக்கு நீர் நாயகனுகவாய்த்தீர். மகாத்துமாவாகியதசரதருக்குச் சிறுமையும் கொடுமையும்பொய்மையுமுள்ளவரும் உயிர்களுக்குத் துன்பஞ் செய்பவரும் பாபியுமாகிய நீர் எவ்வாறு பிள்ளையாய்ப்பிறந்தீர்? நற்குணம் என்னும் கயிற்றை அறுத்து, தருமம் என்னுமங்கு

சத்துக் கடங்காது, சாதுக்கள் செல்லும் வழியை நீங்கிச் செல்லும் இராமன் என்ற வேழத்தால் நான் கொல்லப் பட்டேன்? தீமை தருவதும், தகுதியற்றதும், சாதுக்க ளால் நிந்திக்கப்பட்டதுமான இக்காரியத்தைச் செய்து விட்டுப் பெரியார் சபையிற் சென்று நீர் யாது சொல்லு வீர்? அபகாரஞ்செய்தவரிடத்தில் நீர் ஒருபோதும் காட் டாத பராக்கிரமத்தை உமக்கோர் அபராதமும் செய்யாத என்னிடத்தில் காட்டினீர். என் முன் நின்று போர்செய் திருப்பீராகில் நீர் இந்நேரம் என்னால்கொல்லப்பட்டு யம லோகம் போயிருப்பீர். போரில் புறங்காணமுடியாத என்னைக் குடித்து மயங்கித் தூங்குபவரைப் பாம்பு கடித் தாற்போல நீர் மறைந்து நின்று கொன்றீர். சுக்கிரீவனு க்கு நன்மை செய்யவேண்டுமென்றன்றோ நீர் இவ்வாறு செய்தீர்? நீர் விரும்பிய காரியத்தை முன்னரே என்னி டம் சொல்லியிருந்தீரானால் ஒரே பகலில்மைதிலியை உம் மிடம் கொண்டுவந்து விட்டிருப்பேன்; அன்றியும் இராவ ணனை வென்று அவனை உயிருடனே கழுத்தைப்பிடித் துத்தள்ளிக் கொணர்ந்திருப்பேனே. சமுத்திரத்திலிருந் தாலும் பாதலத்தி லிருந்தாலும் வெள்ளைக்குதிரை ரூப மான வேதங்களை மகாவிஷ்ணு மீட்டுக்கொணர்ந்தது போல நான் மைதிலியைக் கொண்டுவந்திருப்பேனே. நான் சுவர்க்கம் புகுந்ததற்பின் சுக்கிரீவன் அரசாள வேண்டியது நியாயமாயினும், போரில் இவ்வண்ணம் நீர் என்னை வஞ்சகமாகக் கொன்றது நியாயமன்று. இனி நான் என்னைப்பற்றி ஒன்றும் எண்ணவேண்டியதில்லை; என் றைக்காவது ஒருநாள் மரிக்கவேண்டியது தான். நீர் செய்த காரியத்துக்குத் தகுந்த சமாதானம் சொல்ல நீர் வழி தேடும்.'' இவ்வாறு மகாத்துமாவாகிய வாலிசொல்லி விட்டுப் பாணந்தைத்த வருத்தம் மீக்கொள்ள, வா யுலர்ந்து, ஆதித்தனை நிகர்த்த இராமருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு மௌனமா யிருந்தான்.

## பதினெட்டாஞ்சருக்கம்.

*தான் செய்தகாரியம் தருமமன்றி வேறன்றென்று இராமர் வாலிக்குச் சொல்லுதல்.*

---

புண்பட்டுப் பூமியில்விழுந்து ஒளியிழந்த சூரியன் போலவும், நீரைப்பொழிந்த மேகம்போலவும், அவிந்த அக்கினிபோலவும் தோன்றிய வாலி இவ்வாறு கொஞ்சம் கடிந்து தருமத்தோடொத்த சொற்களைக் கூற, இராமர் அவனை நோக்கி 'தருமம், அருத்தம், காமம், லௌகிகம் இவைகளை யறியாமல் சிறுபிள்ளைபோல நீர் ஏன் என்னைக் குற்றங் கூறுகின்றீர்? ஆசிரியர்களால் அங்கீகரிக்கப்பட்ட புத்திமான்களாகிய பெரியாரைக் கேட்டறியாது வானரத் தன்மையால் நீர் ஏன் இவ்வாறு பேசுகின்றீர்? மலைகளும் காடுகளும்செறிந்த இப்பூமிமுழுதும் இக்ஷ்வாகு வமிசத்தவரைச் சேர்ந்தது. இதிலுள்ள மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் மானுடர்களுக்கும் தண்டனை புரிதற்கும் அனுக்கிரகம்செய்தற்கும் உரியார் அவர்களே. இப்போது உண்மையைக்கடைப்பிடித்து நேர்மையுடனொழுகும் தருமாத்துமாவும், தருமார்த்த காமங்களை யறிந்தவருமாகிய பரதர் இவ்விராச்சியத்தைப் பரிபாலித்து, நிக்கிரகானுக்கிரகம்செய்து வருகின்றனர். நியாயம், வணக்கம், உண்மை, பராக்கிரமம் என்னுமிவைகளையுடைய அரசர்களே காலமும் இடமும் தெரிந்து நடப்பவர்களெனப் பெயர் பெறுவார்கள். நானும் மற்ற அரசர்களும் பரதருடைய ஆணையை மேற்கொண்டு தருமத்தை நிலைபெறச்செய்ய உலகமெங்கும் சஞ்சரித்துவருகின்றோம். தருமசிந்தையுள்ளபரதர் இப்புவியைப் பாதுகாத்து வருகையில் யார் தாம்தருமத்தினின்றும்விலகிநடக்கவல்லவர்? எங்களுக்கு விதிக்கப்பட்ட தருமத்தில் வழுவாது நின்று பரதருடைய

*இராமர் தான் செய்த காரியத்திற்கு நியாயம் கூறுதல்.*

கட்டளையைச் சிரமேற்கொண்டு நாங்கள் அறநெறி தப்பி நடப்பவர்களை விதிப்படி சிக்ஷித்துவருகின்றோம். நீர் தருமத்தைக் கெடுத்துக் காமத்தின் வசப்பட்டு அநியாயம் செய்து அரசர்க்குரிய நீதிமார்க்கத்தினின்றும் தவறியிருக்கின்றீர். அறநெறியிற் செல்லும் தந்தை, தமையன், குரு ஆகிய இம்மூவரும் பிதாக்களாகப் பாவிக்கப்படுவர்; தம்பி, தநயன், சீடன் ஆகிய இம்மூவரும் தருமம் வழுவாது நிற்பாராயின் புத்திரராகப் பாவிக்கற் பாலர். இவற்றிற் கெல்லாம் தருமமே காரணம். பெரியார்கள் உபதேசித்திருக்கும் தருமம் வெகு நுட்பமானது; மிகவரிதில் அறியத் தக்கது. சர்வபூதங்களுடைய உள்ளத்திலு மிருக்கும் பரமாத்துமாவே தருமங்களின் நன்மை தீமைகளை அறியவல்லது. உறுதியில்லாத மனமுடைய நீர் குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதுபோல யாதொரு சிக்ஷையுமில்லாது உம்மைப்போல்சபலசித்தர்களாயுள்ள வானரர்களோடு சகவாசம் பண்ணித் தருமசூக்ஷுமத்தைத் தெரிந்துகொள்வ தெப்படி? நான் உமக்கு வெளியாய்ச் சொல்லுகிறேன் கேளும். என்னை நீர் நிந்திக்க நியாயமேயில்லை. கோபத்தினால் உம்மைக் கொன்றேனென்று நீர் எண்ணவேண்டாம். நான் உம்மைக்கொன்றதன் காரணம் புராதனமாயுள்ள தருமத்தை விட்டுவிட்டு நீர் உம்முடைய தம்பியின் மனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே. பாப கருமங்களைச் செய்துவரும் நீர் அந்த மகாத்துமாவான் சுக்கிரீவனுடைய மனைவியாயும் உமக்கு மருமகள் போன்றவளாயு முள்ள உருமை என்பவளை வைத்திருக்கின்றீர். நீர் தருமத்தினின்றும் விலகிவிட்டீர். நான் இதற்காக உம்மைத் தண்டித்தேன். வானரசிரேஷ்ட, தருமத்துக்கு விரோதமாயும் உலக வழக்கத்தை மீறியும் நடப்பவனுக்குத் தண்டனையன்றி மற்றொன்றும் யுக்தமாய்க் காணவில்லை. நான் நல்ல க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவன். நீர் செய்த பாபச்செய்கை

யைக் கேட்டு என்மனம் சகிக்கவில்லை. காமவசத்தனாய்த் தன்னுடைய மகள், தன் தங்கை, தன் தம்பியின் மனைவி இவர்களைக் கைப்பற்றுபவனைக் கொல்லவேண்டுமென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. நாங்கள் இப்புவியை ஆளும் பரதருடைய ஆணையை அனுசரித்து நடப்பவர்கள்; நீர் தருமத்தை மீறினவர். ஆகவே நாங்கள் எவ்வாறு உபேக்ஷையாக விருக்கமுடியும்? வெகு நீதிமானும் தெரிந்தவருமான பரதர், காமத்தில் மூழ்கி நெறி தப்பிநடப்பவர்களைச் சிக்ஷைசெய்யவேண்டுமென விதித்திருக்கிறார். நாங்களும் அவருடைய கட்டளையை விதிப்படிநிறைவேற்றிக்கொண்டு உம்மைப்போல் உலகமரியாதைகளைப் பேதிக்கின்றவர்களைத் தண்டிப்பதற்காகவே சஞ்சரித்து வருகின்றோம். லக்ஷ்மணனைப்போலச் சுக்கிரீவர்எனக்கு நண்பராயினர். அவர் தமது மனைவியையும் நாட்டையும் தாமடையவேண்டுமென்று என்னுடைய நன்மையைநாடத் துணிந்தார். நான் அவருக்கு அவரது மனைவியையும் நாட்டையும் மீட்டுக்கொடுப்பதாக வானரர்கள்முன்வாக்களித்தேன். நான்செய்தபிரதிக்கினையை நிறைவேற்றுதுவாளா விருப்பேனோ? தருமசாஸ்திரத்தையனுசரித்தே இவ்விதமான பெரிய காரணங்களால் நான் உம்மைத் தண்டித்தேன். நீர் இதை அறிந்துகொள்ளும். உம்மை நான் தண்டித்தது தருமமே. அன்றியும் ஒருவன் தனது நண்பனுக்கு உதவி செய்யவேண்டியதும் தருமமே. நன்று யாலோசித்துப் பார்க்குமிடத்து நீர் செய்த காரியத்துக்கு இத்தண்டனை எவ்விதத்தாலும் தருமமே. இதைப்பற்றி மனு என்பவர் இரண்டு சுலோகங்கள் சொல்லியிருக்கிறார்; அவை தருமசாஸ்திர மறிந்த யாவராலும் மிகவும் மதிக்கப்படுகின்றன. அவற்றைக் கேளும்:—பாபஞ் செய்தவர்கள் அரசனால் தண்டிக்கப்பட்டுப் பாபம் நீங்கிப் புண்ணியம் புரிந்தோரைப்போலப் புனிதராகிச் சுவர்க்கமடைகின்றனர். பாபம் செய்தோர் தங்களுடைய

குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்குத்தக்க தண்டனையை யடைந்தாவது மன்னிக்கப்பட்டாவது அப்பாபத்திலிருந்து விடுபடுகின்றனர். பாபத்திற்குத் தக்க தண்டனை விதிக்காத அரசன் அப்பாபத்தைத் தானே யனுபவிப்பான். உம்மைப்போலப் பெரும்பாப மியற்றிய ஒருபௌத்த சன்னியாசியை எங்கள் குலத்தரசரான மாந்தாதா இவ்விதமாகவே முன் தண்டித்திருக்கிறார். மற்றுமுள்ள அரசர்களும் பாபம் செய்தோரை இவ்விதமாய்த் தண்டித்திருக்கிறார்கள். குற்றவாளிகளும் தாங்க ளியற்றிய கொடுமைகளுக்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டு பாபத்தைப் போக்கி யிருக்கின்றனர். ஆகையால், வானர சிரேஷ்ட, நீர் இனிப் பரிதபிக்கவேண்டாம். உமது பாபத்துக்குத் தக்கபடி தருமானுசாரமாக நான் தண்டனை செய்தேன். நாங்கள் எங்களிஷ்டப்படி நடப்பவர்களல்லர். உம்மை நான் வதைத்ததற்கு மற்றுமோர் காரணமு முண்டு. அதையும் சொல்லுகிறேன் கேளும். அதைக் கேட்டபின் என்மீது கொள்ளும் கோபத்தை ஒழித்துவிடும். நீர் பேசினதால் எனக்குக் கோபமுமில்லை, மனஸ்தாபமுமில்லை. மாமிசத்தை அபேட்சிக்கும் மனிதர்கள் அநேக மிருகங்களை வலைகளாலும், கயிறுகளாலும், பலவிதமான கண்ணிகளாலும், எதிர்ப்பட்டும் மறைந்துநின்றும் பிடிக்கிறார்கள். அவர்கள் அம்மிருகங்களைப் பயந்து ஓடும்பொழுதும், நம்பி நிற்கும்பொழுதும், சண்டையிடும்பொழுதும், பராக்காயிருக்கும்பொழுதும், குத்தியும் அடித்தும் கொல்லுகிறார்கள். அதற்குத் தோஷம் ஒன்றும் சொல்லப்படவில்லை. தருமத்தை நன்றாயுணர்ந்த இராஜரிஷிகளும் வேட்டையாடி யிருக்கின்றார்கள். ஆகையால் நான் உம்மைக் கொன்றேன். நீர் வானரஜாதியானதால் நீர் என்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை. அடைதற்கரிய தருமத்தை நிலைநிறுத்திப் பிராணிகளுக்குச் சுகத்தை

விளைவிப்பது அரசர்களின் கடமை யென்பதில் சந்தேக மே யில்லை. ஆகையால் அரசர்களை வருத்துவதும் அவர்கள் மேல் கோபங்கொள்வதும், அவர்களுடைய யோக்கியதை யைக் குறித்து ஆக்ஷேபிப்பதும், அவர்களைப்பற்றிப் பிரிய மற்ற சொற்களைச் சொல்வதும் கூடாது. அவர்கள் மா னுட உருவங்கொண்டு பூமியில் சஞ்சரிக்கும் தேவர்கள். நீர் தருமம் இன்னதென் றுணராது, கோபத்தால், முன் னோர்களுடைய தருமத்தை அநுசரிக்கும் என்னைத் தூஷிக்கிறீர்'' என்று சொன்னார். இவ்வாறு இராமர் சொல்லக்கேட்ட வாலி தருமத்தையறிந்து, தன்னைப் பல வாறாக நிந்தித்து, இராமரிடத்தில் யா தொரு தோஷமும் கண்டிலனாயினன். பிறகு அவ்வானரேந்திரன் தன்னிருகை களையும் கூப்பிக்கொண்டு இராமரைநோ க்கி "புருஷோத்தம, நீர் சொல்வதுயாவும் உண்மை யே; அதில் சந்தேகமில்லை. பெரியார்களிடத்தில் சிறியார் எதிர்மொழி கூறுவது தகாது. இராகவ, நான் இதற் குமுன் அறிவின்மையால் உம்மைக்குறித்துத் தகாதன வும் பிரியமில்லாதனவுமான சொற்களைச் சொன்னேன். அதற்காக என்னைக் குறைகூறவேண்டாம். நீர் சகல தருமங்களையு மறிந்தவர்; எப்பொழுதும் குடிகளுடைய நன்மையை நாடுபவர்; இது செய்யத் தகுந்தது, இது செய்யத்தகாதது என்பதைத் தெளிவா யுணர்ந்தவர். நான் தருமமார்க்கத்தை விட்டு நீங்கிய பெரும்பாபி. அறநெறியுணர்ந்தாய், எனக்குத் தருமத்தை யுண ர்த்தி என்னை நல்வழிப்படுத்திக் காப்பாற்றுவீராக'' என்றான். மறுபடியும் வாலி கண்ணீர்விட்டுத் தொண் டையடைத்துக்கொள்ள மெல்லமெல்ல இராமரைப் பார்த்து "நான் இப்போது என்னைப்பற்றியும், என் மனைவி தாரையைப்பற்றியும் மற்றுமுள்ள பந்துக்களைப் பற்றியும் விசனப்படவில்லை; பொன்னாலாய அங்க

வாலி இராமரிடத்தில் தோஷமில்லை யெனத் தெளிதல்.

தங்களை யணிந்த நற்குணங்களையுடைய எனது புத்திரன் அங்கதனைக் குறித்தே விசனப்படுகிறேன். அவன் குழந்தைப்பருவம் முதல் என்னைப் பிரியா தென்னிடம் மிகச் செல்வமாக வளர்ந்தவன். இனி என்னைப் பிரியும் துயரத்தால் அவன் யானையுண்ட சுனை வரண்டு போவதுபோல் இளைத்துப்போவான். அவன் தாரையினிடத்து எனக்குப்பிறந்த ஒரே குமாரன்; யாதுமறியாப்பாலகன்; ஆயினும் மகாபலவான். அவனை நீர் காப்பாற்றவேண்டும். சுக்கிரீவனைப்போலவே அங்கதனையும் பாதுகாக்கவேண்டும். அவர்களைக் கண்டிப்பதும், காப்பாற்றுவதும், காரியாகாரியங்களறிந்து நடக்கச்செய்வதும் உம்முடைய பொறுப்பு. அரச, நீர் பரதலக்ஷ்மணர்களிடத்தில் அன்பு பாராட்டுவதுபோலவே சுக்கிரீவனிடத்திலும் அங்கதனிடத்திலும் அன்பு பாராட்டவேண்டும். குற்றமற்ற தாரையைச் சுக்கிரீவன் என் குற்றத்திற்காக அவமதிக்காதபடி நீர் செய்யவேண்டும். உம்முடைய கட்டளைகளைக் கேட்டு, உம்முடைய மனத்தின்படி நடந்து, உம்முடைய அனுக்கிரகத்தைப் பெற்றவன் இவ்வுலகத்தில் இராச்சியத்தை யடைந்து பிறகு சுவர்க்கத்தையும் சம்பாதித்துக் கொள்ளுவான். உம்முடைய கையால் மரணமடையவேண்டுமென்றே, தாரை தடுக்கவும் கேளாது, நான் என் தம்பியாகிய சுக்கிரீவனுடன் போர்புரிய வந்தேன்" என்று சொல்லி நிறுத்தினன். அப்போது இராமர் நல்லறிவுபெற்ற வாலியைச் சாதுக்களால் அங்கீகரிக்கப்படும் தருமசாரமான நன்மொழிகளால் சாந்தப்படுத்துபவராய் "வானரசிரேஷ்ட, இதில் நீர் தவறுசெய்துவிட்டீரென்றாவது, நான் தவறுசெய்துவிட்டேனென்றாவது எண்ணவேண்டாம். உம்மைக்காட்டிலும் நாங்கள் தருமத்தை நன்றாக வாராய்ந் தறிந்தவர்கள். குற்றவாளிகளைத் தக்கபடி தண்டிப்பவரும் குற்றத்திற்குத் தக்கபடி தண்

டிக்கப்பட்ட குற்றவாளிகளும் தருமநாச மடையார்கள். நீர் என்னால் சிக்ஷிக்கப்பட்டுப் பாபத்தினின்றும் நீங்கித் தருமத்தை யறிந்து தரும மார்க்கத்தில் செல்லப்போகிறீர். ஆதலால் உமது மனத்தில் சோகம், மோகம், பயம் முதலியவைகளை விட்டுவிடும். வானரபுங்கவ, விதியினால் வந்ததை விலக்க உம்மால் முடியாது. அங்கதன் உம்மால் வளர்க்கப்பட்ட வாறுபோலவே என்னாலும் சுக்கிரீவனும் வளர்க்கப்படுவான். இதில் சந்தேகம் வேண்டாம்" என்றார். இவ்வாறு இராமர்கூறிய இனியமொழிகளை வாலிகேட்டுப் பின் அவரைநோக்கி "நரேந்திர, இந்திரனுக்கொப்பான வலியையுடையாய், உம்முடைய பாணம் பாய்ந்து புத்திமயங்கி நான் உம்மைத் தூஷித்ததை மன்னித்து என்னை அனுக்கிரகிக்குமாறு வேண்டுகின்றேன்" என்றான்.

## பத்தொன்பதாஞ்சருக்கம்.

*வாலி விழுந்ததைக் கேட்டுத் தாரை அங்கதனுடன் ஓடிவருதல்.*

பாணந் தைத்துப் பூமியில் விழுந்துகிடக்கும் வானரேந்திரனாகியவாலி இராமர் சொன்ன இச்சொற்களைக்கேட்டுப்பேசாதிருந்தான். அவன் போரில் கற்களாலும் மரங்களாலும் தாக்கப்பட்டுப் பின் இராமபாணத்தால் துளைக்கப்பட்டு மரணங்கிட்ட மயக்கங்கொண்டவனானான். அவனுடைய மனைவி தாரை இராமர் எய்த பாணத்தால் வாலி மாண்டான் என்று கேள்விப்பட்டு, மெய் நடுங்கித் தன்குமாரனுடன் தானிருந்தகுகையைவிட்டு வெளிப்பட்டாள். அங்கதனைச் சூழ்ந்துவந்த வானரக்கூட்டங்கள் இராமர் விற்பிடித்து நிற்பதைக்கண்டு வெருவியோடின. தலைமான் மாண்டபின் மான்கூட்டங்கள் வெருண்டோடுவதுபோல் வானரர்கள் கலைந்தோடினார்கள். இராம

ரைக்கண்டவுடன் அவருடைய பாணம் பாய்ந்தவர்களைப் போலவானரர்கள் பயந்தோடுவதைத் தாரை கண்டு துக்கமுற்று, அவர்களைத் தடுத்து "வானரர்களே, நீங்கள் யாவரை முன்னிட்டுக்கொண்டுபோர்செய்வதற்குச் செல்லுவீர்களோ அந்த வானரர் கோமானை இப்போது களத்தில் விட்டிட்டு நீங்கள் அணிந்துள்ள ஆடையவிழ்ந்ததுந்தெரியாமல் ஏன் ஓடுகிறீர்கள்? இராச்சியத்தினிமித்தம் சுக்கிரீவனால் ஏவப்பட்டு இராமர் வெகுதூரத்திலிருந்து எய்த பாணத்தால் என் நாயகர் உயிர்மாண்டாரோ? நீங்களேன் ஓடுகிறீர்கள்?" என்று வினவினாள். நினைத்தவுருவ மெடுக்கவல்ல வானரர்கள் அதுகேட்டுத் தாரையைநோக்கி "அம்மணீ, உம்முடைய குழந்தை உயிரோடிருக்கின்றது; ஆதலால்திரும்பிச்சென்று உம்முடையகுழந்தையைக்காப்பாற்றும். யமனே இராமனுருவெடுத்துவந்து வாலியை வதைத்தனன். வாலி யெறிந்த பெரிய விருக்ஷங்களையும் மலைகளையும் இராமன் வச்சிராயுதத்துக் கொப்பான தனது பாணங்களால் பிளந்து அவனைக் கொன்றனன்.

இராமரைக் கண்டுவெருவியோடிய வானரர்களைத்தாரை தடுத்தல்.

வானரர்கள் தாரையை நகரத்துக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டல்.

இந்திரன்போன்ற பராக்கிரமத்தை யுடைய நமது மன்னன் மாண்டது கண்டு இந்தப் பெரிய வானரசேனை பயந்து கலங்கோடுகின்றது. கிஷ்கிந்தையின் கோட்டைவாயிலைக் காவல்செய்து அங்கதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும். வானரர்கள் வாலியின் புத்திரனை மன்னவனாகக்கொண்டு அவனுக்கு அடங்கி நடப்பார்கள். நாமிவ்விடத்திலிருப்பது உசிதமல்ல. நமது சத்துருக்களாயுள்ள மற்றை வானரர்கள் இக்கோட்டைக்குள் புகுந்து கொள்வார்கள். அவர்களுள் பத்தினி யுள்ளார்களும் இல்லாதவர்களும் அநேகர் இருக்கின்றார்கள். அவர்கள் வாலியால் முன்னே தங்களுடைய பதியை இழந்தவர்க

ளாதலால் அவர்களைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதாயிருக்கிறது" என்று சொன்னார்கள். தன் சமீபத்தில் நின்ற வானரர்கள் கூறியதைத் தாரை கேட்டு அவர்களைப் பார்த்துத் தனது பெருமைக்குத் தக்கவாறாக "மகா பாக்கியம் பொருந்திய வானர சிங்கமான என்னாயகன் மாண்டதற்பின் எனக்குப் புத்திரன் ஏன்? இராச்சியம் ஏன்? என் உயிர் தான் ஏன்? இராமபாணத்தால் உயிர் துறந்து கிடக்கின்ற அந்த மகாத்துமாவின் திருவடிகளை நான் அடைவேன்" என்று சொல்லி, சோகத்தால் மெலிந்து புலம்பி, தனது தலையிலும் மார்பிலும் கைகளா லறைந்துகொண்டு, வெகு துக்கமுடையவளாய் வாலி விழுந்து கிடக்குமிடத்திற்குச் சென்றாள். அப்படிச் செல்லும்பொழுது அசுரத் தலைவர்களைக் கொன்றவனும், ஒருபொழுதும் போரில் புறங்காட்டாதவனும், இந்திரன் வச்சிராயுதத்தை எறிவதுபோல் சத்துருக்களின்மேல் மலைகளைப்பிடுங்கி எறிபவனும், பெருங்காற் றடிக்கும்பொழுது பெரிய மேகம் கர்ச்சிப்பதுபோல் கர்ச்சனை செய்பவனும், இந்திரன்போன்ற பராக்கிரமம் உடையவனுமான வாலி தன்னின்மிக்க சூரனா லடிபட்டு, மழையைப் பொழிந்துவிட்ட மேகம்போலவும், மாமிசத்தின்பொருட்டுப் புலியா லடிபட்டு வீழ்ந்த மிருகராஜன் போலவும், சர்ப்பங்களைக் கொல்லு நிமித்தம் கருடனால் இடிபட்டபதாகைகளையும் வேதிகைகளையும் உடைய கோபுரத்தைப் போலவும் விழுந்துகிடப்பதையும், இராமர் தமதுசிறந்தவில்லை ஊன்றிக்கொண்டு நிற்பதையும் அவரைச்சார்ந்து லக்ஷ்மணரும் சுக்கிரீவனும் நிற்புதையும் தாரை கண்டாள். அவர்களை அவள் கடந்துசென்று, தனது நாயகனருகில்போய், அவன் மடிந்து கிடப்பதைக்கண்டு, மெய்பதறி, மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தாள். தூங்கி விழித்தவள்போல

தாரை கணவனிறந்தபின் தான் ஒன்றையும்வேண்டேனென்று துக்கித்தல்.

அவள் மறுபடி எழுந்து, காலபாசத்தால் கட்டுண்டிருக்கும் கணவனைப்பார்த்து "ஆரியபுத்திர!" என்று கூவி அழுதாள். சுக்கிரீவன் பெண் யானைபோன்ற தாரையும் அங்கதனும் புலம்புவதைக் கண்டு பெருந்துன்ப மடைந்தான்.

## இருபதாஞ்சருக்கம்.

### தாரை புலம்பல்.

மரணத்தைச் செய்யும் இராம பாணத்தால் தனது நாயகன் உயிர் மாண்டு யானையைப்போலவும் பெரிய மலையைப்போலவும் வேருடன் பாறிய மரத்தைப்போலவும் விழுந்துகிடப்பதைக் கண்டு சந்திரனைப்போன்ற முகத்தையுடைய தாரை அவனிருந்த விடத்தை யணுகி அவனைக் கட்டிக்கொண்டு பிரலாபிக்கலானாள்:—"ஐயனே, போரில் பயங்கரமானவனே, வீரனே, வானரசிரேஷ்டனே, உமக்கு யாதொரு குற்றமும் செய்யாதவளும் இப்போது வெகுபரிதாபமான நிலைமையி லிருப்பவளுமாகிய என்னிடத்தில் ஏன் பேசாமலிருக்கிறீர்? எழுந்திருந்து நல்ல படுக்கையில் படுத்துக்கொள்ளும்; மன்னர்கள் வெறுந்தரையில் இவ்விதமாகப் படுக்கமாட்டார்கள். பூபதியாகிய உமக்குப் பூமிதேவியினிடத்தில் அதிக பிரியம்போலும்; உயிர்துறந்து என்னை நீங்கியும் நீர் உமது உடலால் அவளைத் தழுவிக்கொண்டு கிடக்கின்றீரே. போர்புரியும் பொழுதே, நீர் சுவர்க்கலோகம் சென்றவுடன் வசித்தற்கென்று வேறொரு கிஷ்கிந்தாநகரத்தை அங்கு நிர்மாணம் செய்துகொண்டீர்போலும். மதுமணம் வீசுமிவ்வனங்களில் நான் உம்முடன் சுகமாகச் சஞ்சரித்துவந்த தெல்லா மின்றோடு முடிவுற்றது. யூகபதிகளுக்

தாரை புலம்பல்.

குள் சிரேஷ்டரான நீர் மாண்டதற்பின் நான் சந்தோஷ மும் ஆசையும் நீங்கினவளாய்த் துயர்க்கடலி லாழ்ந்து விட்டேன். என் இதயம் வெகு கடினமானது; ஏனெ னில், எனது நாயகனுகிய நீர் இவ்விதம் விழுந்து மாண்டு கிடப்பதைக் கண்டும் அது துன்பம் மிகுத்து ஆயிரம் துண்டுகளாய்ப் பிளந்து போகவில்லை. சுக்கிரீவனுடைய மனைவியைக் கைக்கொண்டு அவனை ஊரைவிட்டுத் துரத் திய தீவினையின் பயனன்றோ நீர் இப்பொழுது அடைந் திருப்பது? உம்முடைய நன்மையை நாடி நான் சொன்ன இதமான வார்த்தைகளைக் கேளாது என்னை நிந்தித் தீரே! நீர் இன்று நல்லுருவும் இளமையும் உடைய தேவலோகத்து அப்ஸரஸ்திரீகளுடைய மனத்தைக் கவ ரப்போகின்றீர். உமக்குக் காலவிறுதி நேர்ந்ததென்ப தில் சந்தேகமில்லை. அதனுற்றான் ஒருவருக்கும் தோற் காத நீர் இன்று சுக்கிரீவனுக்குத் தோற்று மாண் டீர். இதற்கு முன் ஒருவித துக்கத்தையும் அனுபவிக்கா மலிருந்து, இப்பொழுது நாதனின்றி, கைம்மை, துக்கம், தாழ்வு இவைகளை நான் எங்ஙனம் சகிப்பேன்? இதுகா றும் யாதொரு கஷ்டமு மறியாமல் செல்வத்தில் வளர்ந்து லாலனை செய்யப்பட்டுவந்த என்குமாரனுகிய அங்கதன் அதிக கோபங்கொண்டிருக்கும் சிறிய தந்தையாகிய சுக் கிரீவனுல் யாது பாடுபடுவானே அறியேன்! குழந்தாய், தருமத்தி லன்புள்ள உனது தந்தையார் முகத்தை இப் போது நன்றுய்ப் பார்; இனிமேல் அவருடைய முகதரிச னம் கிடைப்பது கூடாது. நாதனே, நீர் இப்போது நெடும் பிரயாணம் போகப்போகின்றீ ராதலால் உம்முடைய புத்திரனை உச்சிமோந்து சமாதானப்படுத்தி அவனுக்குச் சொல்லவேண்டியதைச் சொல்லும். உம்மைக் கொன்று இராமர் பெரியதொரு காரியத்தைச் செய்தார். இதனுல் சுக்கிரீவனுக்குச் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றி னர். சுக்கிரீவ, உம்முடைய மனேபீஷ்டம் நிறைவே

றிற்று. இனி நீர் உருமையைப் பெற்றுக்கொண்டு யாதொரு விக்கினமுமின்றி இராச்சியத்தை யனுபவியும்; உமக்குச் சத்துருவாயிருந்த உம்முடைய தமையனார் கொல்லப்பட்டார். நாத, உம்முடைய அன்பின் மனைவியான நான் இவ்வாறு கதறியழவும் நீர் ஏன் ஒரு மறுமொழியும் கூறாதிருக்கிறீர்? உம்முடைய மற்றை மனைவிமார்களும் இதோ வந்து என்னைப்போலவே துக்கப்படுகின்றார்கள் பாரும்" என்று புலம்பினாள். இவ்விதமாய்த் தாரை புலம்புவதைக் கண்ட மற்றை மாதர்கள் வந்து அங்கதனை எடுத்து மடியின்மேல் வைத்துக்கொண்டு வெகு துக்கத்துடன் அழுதார்கள். "தோள்வளைக ளணிந்த வீரனே அங்கதனை விட்டு நெடும் பிரயாணம் ஏன் போகிறீர்? உத்தமகுணங்களையுடைய உமது செல்வக் குமாரனாகிய அங்கதனை இவ்வாறு விட்டுப்போவது யுக்தமன்று, அழகுள்ள நாத, நானாவது உமது குமாரனாவது உமக்குக் குற்றம் ஏதேனும் செய்ததுண்டோ? யாது காரணம்பற்றி என்னையும் அங்கதனையும் விட்டுத் தூர தேசம் போகின்றீர்? நீண்ட கைகளையுடையானே, நான் ஏதேனும் குற்றம் செய்திருப்பின் அதைப் பொறுத்தருளவேண்டும். உம்முடைய பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றேன்" என்று குற்றமற்ற தாரை மற்றுமுள்ள வானரப்பெண்டிருடன் வெகுபரிதாபமாகத் தனது கணவனருகில் நின்று கதறி, அவன் கிடந்தவிடத்திற்றானே தான்பட்டினிகிடந்து உயிர் துறக்க நிச்சயித்தாள்.

## இருபத்தொன்றாஞ்சருக்கம்.

*அனுமான் தாரையைத் தேற்றல்.*

அப்போது விண்ணினின்று விழுந்த விண் மீன் போலத் தரையிற்கிடந்த தாரையை வானரத் தலைவனாகிய அனுமான் கண்டு அவளைத் தேற்றுவானாயினன்:—

"உயிர்கள் எல்லாம் அறிந்தும் அறியாதும் செய்த நல்வினை தீவினைகளினால் சுக துக்கங்களை அடைகின்றன. நீவிர் உம்மைக் குறித்துத் துக்கப்படவேண்டியவரா யிருந்துகொண்டு மற்றொருவர் பொருட்டுத் துக்கப்படுவானேன்? நீவிரே ஏழையாயிருந்துகொண்டு மற்றோரேழையின் பொருட்டுப் பரிதாபப் படுவது யாதுகாரணம் பற்றி? நீரிற் குமிழிபோல நிலையற்ற இவ்வியாக்கை காரணமாக யார்பொருட்டு யார் துக்கப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள்? இனி உயிரோடுள்ள உமது குமாரன் அங்கதனைப் பாதுகாத்து மற்று மும்மால் செய்யவேண்டியவைகளைச் செய்தல் உமக்குத் தக்கது. உயிர்களுக்குப் பிறப்பு மிறப்பும் நிலையில்லாதன வென்பதை நீரறியீரோ? அறிவிலாரைப்போல அழுவது உமக்குத் தக்கதன்று. இகலோகத்திற்கு வேண்டியகாரியங்களை இனிச் செய்யவேண்டும். ஆயிரக்கணக்கான வானரர்கள் சூழவாழ்ந்த வாலியும் இன்று தன் வினையின்படி முடிவெய்தினர். அவர் அறநூலிற் கூறியபடி ராஜதருமத்தை நடத்தி, கொடுத்தல், இன்சொற் சொல்லல், பொறுத்தல் முதலிய நற்செய்கைகளிற் பயின்றுவந்தார். அவரிப்போது தருமஞ்செய்தார் சேரும் சுவர்க்கலோக முற்றார்; ஆதலால் அவர் பொருட்டுத் துக்கப்படலொழிக. நல்லாய், இங்குள்ள வானர சிரேஷ்டர்களும், இந்த அங்கத குமாரனும், இந்த வானர ராச்சியமும் எல்லாம் இனி உம்முடைமையன்றோ? ஆதலால் இனிச் சோகத்தையும் தாபத்தையும் விட்டு விடும். உம்முடைய சொல்லின்படி அங்கதன் அரசாளட்டும். புத்திரர்களாற் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுள்ள சடங்குகளெல்லாவற்றையும் இப்போது அங்கதன் வானர வேந்தன் பொருட்டுச் செய்யட்டும். அந்திய கருமங்கள் செய்யவேண்டிய காலமிதுவே. அவைகள் செய்தா

அனுமான் தாரையைத் தேற்றல்.

யினபின் அங்கதனுக்கு முடிசூட்டும். பின்பு உமது புத்திரனைச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கக்காண உமக்குத் துக்கம் ஆறி விடும்.''

இந்த வார்த்தைகளைக் கணவனை யிழந்த துன்பத்தால் வருந்துந் தாரைகேட்டு, அருகில் நின்ற அனுமானைப் பார்த்து "அங்கதன்போன்ற நூறுகுமாரர்களை உடையவளா யிருத்தலினும் இங்குமாண்டு கிடக்கும் வீரனாகிய என் நாயகனோடு உயிர் துறப்பதே எனக்கு மேலான காரியம். என் நாயகனுக்குச் செய்யவேண்டிய பிரேதகர்மங்களைச் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு முடிசூட்டுதற்காவது யான் உரியளல்லேன். அந்தக் கடமைகளெல்லாம் அங்கதனுக்குச் சிற்றப்பனுன சுக்கிரீவனைச் சேர்ந்தவை. ஐய அனும, நான் இந்த இராச்சியத்தை அங்கதனுக்குக்கொடுக்கவேண்டுமென்று நீர் எண்ணுவதை விட்டுவிடும். இந்தக்காரியத்தில் பிள்ளைக்குப் பந்துவாயுள்ளவன் தந்தையே அன்றித் தாயல்லள். எனக்கு என்கணவனைப்பின் தொடர்வதை விட இம்மையிலாவது மறுமையிலாவது நன்மை தருவது வேறொன்று மில்லை. இதோ மாண்டு கிடக்கும் என் நாயகன் படுக்கையே எனக்கும் ஏற்றது'' என்று கூறினாள்.

தாரை கூறிய விடை.

---

## இருபத்திரண்டாஞ் சருக்கம்.

சுக்கிரீவனுக்கும் அங்கதனுக்கும் வாலி புத்தி கூறல்.

---

மரணதசையை யடைந்த வாலி மூர்ச்சை தெளிந்து, கண் விழித்து, மெதுவாக மூச்சுவிட்டு, நான்கு பக்கங்களிலும் பார்த்து, தன் முன் நிற்குஞ் சுக்கிரீவனைக் கண்ணுற்று, தெளிவான வார்த்தைகளால் அவனைத் தன்னருகில் வரவழைத்து, அவனுக்கு அன்போடு கூறுவானாயினன் :—

"சுக்கிரீவ, நான் உனக்குச் செய்த குற்றங்களை நீ மனத்திற்கொள்ளற்க. அவற்றையான் அறியாமையாலும் வினைவலியாலும் செய்தேனென்று கொள். ஓரேகாலத்தில் நாங்களிருவரும் தமையன் தம்பியாய்க் கூடியிருந்து இந்த ராச்சியத்தை அனுபவித்தற்கு எங்களுக்கு விதியில்லை என்று எண்ணுகிறேன். அன்றேல் இப்படிச் சம்பவிக்கவேண்டிய காரணமென்ன? என்னை யமபுரஞ் சென்றவனாகப் பாவித்து நீ இன்றைக்கே இந்த ராச்சியத்தை வகித்துக்கொள். நான் இதோ எனது உயிரையும் அரசையும்பெரும்பாக்கியத்தையும் ஒப்பற்ற புகழையும் துறக்கப் போகின்றேன். அரச, இந்தத் தசையில் நான் சொல்லுவனவற்றை, அவை செய்தற்கரியன வாயிருப்பினும், நீ செய்யவேண்டும். தரையில் விழுந்து கண்ணீர்விட்டழுகின்ற அங்கதனைப் பார். அவன் குழந்தை; கஷ்டமறியாதவன்; இதுவரையும்செல்வத்தில்வளர்ந்தவன்; இனிமேலும் இன்பத்தைஅனுபவிக்கவேண்டியவன். என்உயிரினு மினிய என் குழந்தையாகிய இவனை, யானிறந்ததன் பின், நீ அவன் குறைகளை முடித்து, உன்வயிற்றிற் பிறந்த உன்னுடைய சொந்தக்குழந்தைபோலப் பாவி. வாநரசிரேஷ்ட, இனி என்னைப்போல நீயே இவனுக்குத் தந்தையும், பாதுகாப்பவனும், வேண்டியவற்றைக் கொடுப்பவனும், வருந்தீங்குகளைத் தீர்ப்பவனுமாகின்றனை. தாரைகுமாரனை இவ்வினைஞன் ஊக்கமும் வலியுமுடையன்; வீரத்தால் உன்னையொத்தவன்; அரக்கர்களுடைய போரில் உனக்கு முன்னின்று பேராண்மை செய்யத்தக்கவன். சுஷேணன் குமாரியாகிய தாரை நுட்பமான காரியங்களை ஆய்ந்தறிவதிலும் அபாயகாலத்தில் புத்திசொல்லுவதிலும் வல்லள். அவள் ஆராய்ந்து தெளிந்த விஷயம் ஒருகாலும் தவறுவதில்லை; ஆதலால் அவள் எந்தக்காரியத்தைச் செய்யச் சொல்லுகின்றாளோ அதை நீ சிறிதும் ஐயமின்றிச் செய்.

வாலி சுக்கிரீவனுக்குப் புத்தி சொல்லல்.

இராமருடைய வேலைகளை நீ சிறிதும் பின்னில்லாது செய்ய வேண்டும். பின்னிற்பையாயின் உனக்குப் பாபம் உண்டாம்; அவர் கோபங்கொண்டு உன்னைத் தண்டிக்கவுங் கூடும். சுக்கிரீவ, என் கழுத்திலுள்ள இந்தத் திவ்விய பொன்மாலையை எடுத்து நீ அணிந்துகொள்; இதிலுள்ள லக்ஷ்மி யானிறந்தாற் போய்விடுவள்."

சகோதரவாஞ்சையால் வாலி இவ்வாறு கூற, சுக்கிரீவன் சினந்தணிந்து, மகிழ்ச்சிகுன்றி, இராகு கௌவப்பட்ட சந்திரன்போல் ஒளியிழந்து, அவன் சொன்ன சொற்களை அங்கீகரித்து, அவன் கொடுத்த காஞ்சனமாலையைப் பெற்றுக்கொண்டான். வாலி, பொன்மாலையைக் கொடுத்துவிட்டு, உயிர்விட ஆயத்தமாகி, தன்முன்னே நிற்குந் தனது பிள்ளையாகிய அங்கதனைப்பார்த்து "மகனே, இனி நீ சுக்கிரீவன் சொற்படிநின்று, காலமுமிடமுமறிந்து, சுகமடைதல் காரணமாக உனக்கு நேருந் துக்கங்களைப்பொறுத்து நடந்துகொள். என்னிடத்தில் வளர்ந்ததுபோல நீ இன்னும் இருப்பையாகில், சுக்கிரீவன் உன்னை மதிக்கமாட்டான். நீ ஒருபோதும் சுக்கிரீவனுடைய பகைவர்களோடு சேராதே. அவனுடைய நல்வாழ்விலே எப்போதுங் கருத்துடையவனாய், அவனுக்கடங்கி நடந்துகொள். நீ யாருடனாவது அதிக நண்பு பாராட்டவும் வேண்டாம், நண்பு பாராட்டாது நடக்கவும் வேண்டாம்; இவை யிரண்டும் மிக்க தீமை பயக்கும்; ஆதலால் நடுத்தரமாக நடந்துகொள்" என்று சொல்லி, அம்புதைத்தவருத்தம்மேலிட்டமையால் கண்களைப்புரட்டி, வாயைத்திறந்து உயிரை விட்டான்.

அங்கதனுக்குப் புத்தி கூறல்.

அப்போது வானரத் தலைவர்கள் "ஐயோ, கிஷ்கிந்தைதலைவனை யிழந்ததே! தோட்டங்களும், மலைகளும், காடுகளும் பாழாயினவே! வானரர்கள் ஒளியிழந்தார்

வானரர் புலம்பல்.

களே! காடுகளையும் நீர் நிலைகளையும் எப்போதும் பூத்து விளங்கச்செய்த மன்னவன் போய்விட்டானே! கோலபனென்னும் கந்தர்வனுடன் பதினைந்து வருடம் இரவும் பகலும் இடைவிடாது போர் பொருது பதினாரும் வருடத்தில் அவனைக்கொன்று நமக்கெல்லாம் இன்பஞ்செய்த மகா வீரன் எவ்வாறு கொல்லப்பட்டான்!" என்று சொல்லிப் புலம்பி யழுதார்கள். வாலி இறந்ததனால் வானரர்களெல்லாம் சிங்கங்கள் நிறைந்த காட்டிலுள்ள பசுக்கூட்டம்போலக் கலக்கமுற்று வருந்தினார்கள். அப்போது தாரை, உயிர்துறந்த தனது நாயகன் முகத்தைக் கண்ணுற்று, துன்பத்திலாழ்ந்து, வெட்டுண்டு சாய்ந்த மரத்தின் மேற்படருங் கொடிபோல அவனுடலின்மேல் வீழ்ந்து அவனைத் தழுவினாள்.

---

## இருபத்துமூன்றாஞ் சருக்கம்.

தாரை புலம்பல்.

---

பின்பு தாரை இறந்து கிடக்கின்ற வானர வேந்தனாகிய தன் நாயகனது முகத்தைமோந்து அவனை விளித்து "வீர, என்சொல்லைக் கேளாமையாலன்றோ, நீர் பருக்கைக் கற்களையுடையதும் மேடும்பள்ளமுமாயதுமான இவ்வன்னிலத்தில் கிடக்கின்றீர். வானரர்கோமானே, என்னைப்பார்க்கிலும் உமக்கு இப்பூமி அன்பினள்போலும்! ஏனெனில் என்னை உவந்தேற்றுக்கொள்ளாது நீர் அவளையே தழுவிக்கொண்டு கிடக்கின்றீரே! காதல,தெய்வமும்சுக்கிரீவன் பக்கலிலிருக்கின்றதே! இது என்ன அதிசயம்! இனி அவனன்றோ வீரனாக மதிக்கப்படுவான். உமது தொழும்புபுரியும் குரங்குகளும் கரடிகளும் அங்கதனும் நானும் புலம்புவதைக் கேட்டும் நீர் ஏன் எழும்பாதி

ருக்கின்றீர். உம்மாற்கொல்லப்பட்டு உமது பகைவர்கள் விழுந்துகிடந்த சேக்கையிலே நீர் இப்போது மாண்டு கிடக்கின்றீரே. நற்குலத்தில் பிறந்தவரே, போரில் பிரிய முள்ளவரே, என் காதலரே, என்னைக் கைம்மையாக்கி நீர் எங்கு போயினீர்? இனி உலகத்தார் தங்கள் பெண்களை வீரர்களுக்கு விவாகம் செய்துகொடாதொழிவாராக; ஐயோ! வீரனுக்குப் பெண்டாகிய நான் இதோ கணப்பொழுதில் கைம்பெண்ணானேனே! என் மானம் அழிந்தது; இன்பம் தொலைந்தது; நானும் துன்பக் கடலி லாழ்ந்துவிட்டேன். ஆ! என் கணவனிறக்கக்கண்டும் எனது கன்னெஞ்சம் நூறு துண்டுகளாகப் பிளவாதிருக்கின்றதே! என் அன்ப, என் காதல் நாயக, வீர, நீர் போரில் மாண்டு கிடக்கின்றீரே! கணவனை யிழந்தவளுக்குப் பிள்ளையிருந்தென்? பெருஞ்செல்வ மிருந்தென்? அவளை உலகத்தார் க்கம்பெண் என்றுதானே கூறுவார்கள்! இந்திரகோபம் போன்ற சிவந்த பட்டினாற் செய்யப்பட்ட உமது படுக்கையிற்போல, உமது உடலிலிருந்து பெருகும் இரத்தவெள்ளத்திற் கிடக்கின்றீரே. உம்முடைய தேகம் முழுவதும் இரத்தம் தோய்ந்து புழுதிபடிந்திருத்தலினால் உம்மைக் கையால் தழுவ எனக்கியலாதிருக்கின்றதே. இராமர் விடுத்த ஒரே பாணத்தால் இன்று சுக்கிரீவனுடைய பயமும் போய் அவனுடைய எண்ணமு மெல்லாங் கைகூடின. நீர் இறந்து சுவர்க்கமடையவும், உமது மார்பில் தைத்திருக்கின்ற அம்பினால் நான் உம்மைத் தழுவமுடியாது வாளா பார்த்திருக்கின்றேனே" என்று புலம்பினாள்.

தாரை புலம்பல்.

அதுகேட்டு நீலன் மலைமுழைஞ்சில் புக்க சர்ப்பம்போல வாலி மார்பில் பாய்ந்திருந்த பாணத்தைப் பிடுங்கி எடுத்தனன். அப்போது அந்தப் பாணம் அஸ்தமன கிரியிலுள்ள சூரியனது சிவந்த கிரணம்போல

விளங்கிற்று. மலையினின்று பெருகும் செந்தாதுகலந்த நீர்போல, வாலியினுடைய உடலினின்றும் இரத்தம் தாரைதாரையாக ஓடிற்று. இவ்வாறு அம்பு தைத்து, கொலையுண்டு, இரத்தந் தோய்ந்து, புழுதிபடிந்து கிடக்கின்ற தனது கணவனினுடலைத் தாரை தன் கண்ணீரால் கழுவி, அழுது சிவந்த கண்களையுடைய தனது குமாரன் அங்கதனை நோக்கி "உன் தந்தை படுகின்ற பயங்கரமான மரணாவஸ்தையைப் பார். அவரது பாவச்செயல்களால்நேர்ந்தபகையின்முடிவு இது. மகனே, இளஞாயிறு போன்ற ஒளியுள்ள உடலையுடையவரும், பெருமை யளிப்பவருமான உனது கோத்தந்தை யமலோகம் செல்கின்றாராதலின், அவரைப் பணிவாயாக" என்றாள். தாரை அவ்வாறு சொல்ல அங்கதனெழுந்து "அடியேன் அங்கதனேன்" என்று சொல்லிக்கொண்டு தன் தந்தையின் பாதங்களைத் தனது கொழுங்கைகளால் கட்டிக்கொண்டான். அப்போது தாரை, "உம்மை வணங்குகின்ற அங்கதனை முன்போலப் பல்லாண்டு கூறி ஏன் வாழ்த்தாதிருக்கின்றீர் ? சிங்கேற்றாற் கொல்லப்பட்ட எருத்தின் பக்கலில் நிற்கும் பசுவும் கன்றும்போல, நானும் உமது குமாரன் அங்கதனும் உயிர் துறக்கும் உமது பக்கலில் நிற்கின்றோம். உமது போர் வேள்வியின் முடிவில், உமது தருமபத்தினியான் என்னைவிட்டு, நீர் மாத்திரம் எப்படி இராமருடைய அஸ்திர கங்கையில் அவப்ருதஸ்நானம் செய்தீர் ? உமது போர்வலியைக்கண்டுசந்தோஷமடைந்த தேவேந்திரனால் உமக்குக் கொடுக்கப்பட்ட காஞ்சனமாலையைக் காணேனே ! அதன் காரணமென்ன ? பெருமையிற் சிறந்தாய், சூரியன் மறைந்தபோதும் அவனுடைய ஒளி மேருமலையை விட்டகலாததுபோல, நீரிறந்துபோயும் உம்மை ராஜலக்ஷ்மி விட்டகலவில்லை. நான் சொன்ன நல்ல சொற்களை நீர் கேட்கவுமில்லை ; உம்மைத்தடுக்கவு மென்னால் முடியாது போய்விட்டது. இப்போது நானும் என் குமார

னும் போர்க்களத்தில் பட்ட உம்மோடு இறந்தவர்களா னோம். லக்ஷ்மியும் என்னை மெய்யாய் விட்டு நீங்கிவிட் டாள்" என்று கூறினாள்.

## இருபத்துநான்காஞ் சருக்கம்.

*இராமர் சுக்கிரீவனையும் தாரையையும் தேற்றுதல்.*

இவ்வாறு, தாரை, கண்ணீர்வார, மிகப் பெரிய துன் பக்கடலில் அமிழ்ந்து வருந்துவதைக் கண்ணுற்ற சுக்கிரீ வன், தனது தமையன் மாண்டதற்காக இரங்கி, மிகவும் வருந்தி, தனது பரிவாரங்கள் புடைசூழ, வில்லையும் பாம்புபோன்ற அம்புகளையும் கையிற்கொண்டு லக்ஷ் மணரோடு வீற்றிருந்த இராமரிடம் சென்று "நரேந் திர, உமது சொல்லை நீர் நிறைவேற்றிவிட்டீர். எளியேன் இன்றுதொட்டு உலகசுகங்க ளெல்லாவற்றையும் நீக்கிவிடு கின்றேன். இந்த வானரர் கோமகள் இவ்வாறு அழவும், அரசனிறந்தமையால் குடிகளும் பரிவா ரங்களும் புலம்பவும், அரசாளுதற்கு எவ்வாறு என்மனம் ஏவப்படும்? நான் அடைந்த அவமானத்தால் வந்த பகைமையுங் கோப முங் காரணமாக நான் முன்பு என் தமையனைக் கொல்ல விரும்பினேன்., அந்த வானரர் கோமகன் இறந்த பின் னர் நான் இப்போது மிகவும் பச்சாத்தாபப்படுகின்றேன். வாலியைக்கொன்று வானுலகைப் பெறுவதிலும் ரிசிய மூக பர்வதத்திலேயே எவ்வாறுவது சீவனஞ்செய்து எந் நாளும் வசிப்பது எனக்கு நலமெனப் புலப்படுகின்றது. "நீ எங்கேயாவது திரிந்துகொண்டு உயிரோடிரு; உன் னைக்கொல்ல எனக்கு இஷ்டமில்லை" என்று இப்பெருந்த கைமையுடையவன் எனக்குச் சொன்னான். அந்தச்சொல் அவனுக்கே தகும். இந்தச்சொல்லும் இந்தச் செய்கையும்

*சுக்கிரீவன் துக்கித்தல்.*

பாவியாகிய எனக்கே பொருந்தும். இராச்சியமடைவத னல் வருமின்பத்தைப் பெருந்தகைமையுடைய சகோதர னைக் கொல்லுவதனல் வருந் துன்பத்தோடு ஒத்திடுவா னயின் எவன் தான், எவ்வளவு பேராசையுடையோனயி னும், தன் சகோதரனைக் கொல்ல விரும்புவான் ? வாலி தன் பெருந்தகைமைக்கேற்க என்னைக்கொல்ல விரும்ப வில்லை; நான் என் இழிதகைமையினல் சகோதரனைக் கொன்று பெரும்பாவ மியற்றினேன். நான் மரக்கிளைக ளால் அடியுண்டு கதறியோடும்போது 'இவ்வாறு செய் யாதே' என்று அவன் என்னைத் தேற்றி, எப்போதும் தனது சகோதர வாஞ்சையையும், பெருந் தகைமையை யும், தருமத்தையும் அழியாது பாதுகாத்தான்; நான் அதற்கு மாருக என் கோபத்தையும், காமத்தையும், குரங் குத் தன்மையையும் காட்டி விட்டேன். அன்ப, தேவேந் திரன் விசுவரூபனைக் கொன்று பாபம் புரிந்ததுபோல, நான் என் தமையனைக்கொன்று நினைத்தற்கரியதும், நீக் கத்தக்கதும், விரும்பவொண்ணுததும், காணமுடியாதது மான இந்தப்பாவத்தைத் தேடிக்கொண்டேன். இந்திர னுடைய பாபத்தில் பூமியும் நீரும் மரங்களும் பெண்க ளும் பங்கு பற்றினர்கள்; இந்தக் குரங்கின் பாபத்தில் பங் குபற்ற விரும்புவர்யார்? தகுதியில்லாததும் தருமமல்லாத தும் குலநாசத்தை வருவிப்பதுமாகிய இச்செயலைப் புரிந்த நான்குடிகள் செய்யும் வழிபாட்டிற்கும் இளவரசுப் பதவிக் கும் அருகனல்லேன்; அங்ஙனமாயின் ராஜபதவிக்கருக னவேனே? பெரும்பழியைத்தருவதும் உலகத்தாரால் நிந் திக்கப்படுவதுமான கொடும் பாபத்தை நான் செய்துவிட் டேன். பள்ளத்தைநோக்கி ஓடும் மழைவெள்ளம்போல, இப்பெருந்துக்கம் என்னை மீதூர்ந்து செல்கின்றது. தமை யன்கொலை என்னும் வாலையும் பின்புறத்தையும், பரிதாப மென்னும் துதிக்கை, தலை, கண், தந்தங்களையுமுடைய இந்தப் பெரிய மதயானை, ஆற்றின்கரையை இடிப்பது

போல், என்னை இடிக்கின்றது. நெருப்பிலிட்டிருக்கும் பொன்னிலிருந்து மாசு கழியுமாறுபோல, இப்பொறுத் தற்கரிய பாபத்தைச் செய்த என்னிடமிருந்து நல்லெண் ணங்களெல்லாம் நீங்கிவிடுகின்றன. இந்த வலிய வானர வீரர்களும் அங்கதனும் துன்பத்தினால் பாதி உயிர் போனவர்கள்போல் காணப்படுகிறார்கள். நற்குண நற் செய்கைகளையுடைய புதல்வனைப் பெறுதலரிது. இவ்வங் கதனுக்கு நிகரான பிள்ளையை எங்கே காணலாம்? வீர, நான் என் அண்ணனைக் காணக்கூடிய நாடு எங்குமில்லை யே. அங்கதன் இன்று இறந்துவிடுவான் போலும்; இறவா து பிழைப்பானாயின் அவனை வளர்ப்பதற்கு அவன் தாயும் பிழைத்திருக்கவேண்டும். தன் குமாரனையின்றி அவள் ஒருகாலும் உயிரோடிருக்கமாட்டாள். ஆதலால் நான் என் தமையனையும் அவன் குமாரனையும் சேர்வது காரண மாக இத்தீயில் வீழ்ந்திறப்பேன். இந்த வானரவீரர்கள் உமதாணையின்படி சீதையைத்தேடித் தருவார்கள். நானி றந்தபின்னும் இவர்கள் உமது கட்டளையின்படி நடப்பார் கள். ஆதலால், கொடும்பாபியும், குலத்தை நாசஞ்செய்த வனும், இவ்வுலகில் வாழ்தற்கு யோக்கியனல்லாதவனு மாகிய நான் தீயிற் குதித்தற்கு உத்தரவு தாரும்" என்று கேட்டான்.

இவ்வாறு துன்புற்றுப் புலம்பிய சுக்கிரீவனுடைய வார்த்தையை ரகுகுலதிலகரும் பகைவரேறுமாகிய இரா மர் கேட்டுக் கண்களில் நீர் ததும்பச் சிறிதுநேரம் மனங் கலங்கியிருந்து, துக்கசாகரத்தில் மூழ்கி வருந்துகின்ற தாரையைக் கருணையோடு அடிக்கடி பார்த்தார். அப் போது தன் நாயகனைத் தழுவிக்கொண்டு தரையிற் கிடந்த அழகிய கண்களையுடைய தாரையை வானரத்தலைவர்கள் தூக்கிவிட்டார்கள். அவ்வாறு தன் நாயகனினின்றும் பிரிக்கப்பட்ட தாரை நடுக்கமடைந்து, தன் முன்னே வில் லும் அம்பும் பிடித்த கையராய், தமது தேககாந்தியால்

சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டு நிற்கின்ற இராமரைக் கண்டாள். ராஜலக்ஷணங்களெல்லா மமைந்தவரும், அழகிய கண்களையுடையவரும், தன்னால் முன் காணப்படாதவருமான இராமரை மான்போன்ற கண்களையுடைய தாரை கண்டு "இப்பெருமான் தான் இராமர் போலும்" என்று தன் மனத்து ளெண்ணினாள். அவள் இடுக்கணுற்று, தனக்கு நேர்ந்த பெருந்துன்பத்தால் அலமந்து, அழுதுகொண்டு, இந்திரனை ஒப்பவரும் அடைதற்கரியவரும் புண்ணியாத்துமாவுமாகிய இராமரை விரைந்து கிட்டி, நடுங்கிக்கொண்டு, அவரைநோக்கி "நீர் அளவைகளைக் கடந்தவரும், அடைதற் கரியவரும், புலன்களை வென்றவரும், மேலான தருமத்தை யுடையவரும், அழியாத புகழ்படைத்தவரும், பேராற்றலுள்ளவரும், பூமி போன்ற பொறுமையுள்ளவரும், இரத்தம்போலச் சிவந்த கண்களையுடையவருமாயுள்ளீர். நீர் வில்லு மம்புங் கையிற் பிடித்தவராயும் மிக்க வலியும் திண்ணிய தேகமுமுடையவராயு மிருக்கின்றீர்? மானுடரூபத்தைவிட்டுத் தேவ வடிவம் பூண்டிருக்கின்றீர். என் நாயகனைக் கொன்ற அம்பினால் என்னையுங் கொன்றருளும். அவ்வாறு கொல்லப் பட்டால் நான் என் நாயகனைச் சென்று கூடுவேன். என்னையன்றி அவர் வேறொருவரைச் சேரவிரும்பார். தாமரைக்கண்ண, அவர் சுவர்க்கம் சென்று என்னைக் கண்டு

தாரை தன்னையுங் கொல்லும்படி வேண்டல்.

கொள்ளப் பெறாதவராய், சிறந்த ஆடையாபரணங்களை யணிந்த தேவரம்பையர் கூட்டத்தில் விழைவுறார். இந்த அழகிய மலையின் மத்தியில் வைதேகியைப் பிரிந்து வருந்தும் உம்மைப்போல் சுவர்க்கத்திலும் என் நாயகர் என்னைப் பிரிந்தமையால் வருந்தி ஒளியிழந்து தோன்றுவார். மனைவியைப் பிரிந்த அழகிய ஆண்மகனுறுந் துயரத்தை நீர் நன்றாயறிவீர்; ஆகையால் என்னைப்பிரிந்து என் நாயகன் அலக்கணுறாவண்ணம் என்

னைக் கொன்றருளும். மகாத்துமாவாகிய நீர் என்னைக் கொன்றால் பெண்கொலை செய்தபாபம் வருமென்று எண்ணுகின்றீர் போலும். என்னை வாலியின் ஆன்மாவாகப் பாவித்து நீர் கொல்லும்; அவ்வாறு செய்தால் நீர் பெண் கொலைசெய்த பாபத்திற்குள்ளாகமாட்டீர். வேதங்களும் மற்றை நூல்களும் பத்தினி தன் பதியினின்றும் வேறல்லள் என்று கூறுகின்றனவே. பத்தினியை அவள் பதியினிடத்துச் சேர்ப்பதிலும் சிறந்த தருமம் வேறில்லை என்று தரும நூலுணர்ந்தோர் கூறுகின்றனர். ஆதலால் நீர் என்னை என் பதியினிடத்துச் சேர்த்துவிடும்; அப்படிச் சேர்த்துவைப்பதனால் நீர் பெண்கொலை செய்த பாபத்திற்கு ஆளாகமாட்டீர். நாயகனை யிழந்து, அவனினின்றும் பிரிக்கப்பட்டு, அலக்கணுற்று வாடுகின்ற என்னைக் கொல்லாதிருப்பது உமக்குத் தகுதியன்று. மதயானைபோல்பவனும் பொன்மாலையணிந்தவனுமாகிய அறிவிற்சிறந்த வானரர்கோமகனைப் பிரிந்து நான் உயிர் வாழேன்" என்று கூறினாள்.

இவ்வாறு முறையிடப்பட்ட மகாத்துமாவாகிய இராமர் தாரையை நோக்கி "வீரபத்தினீ, நீ கலக்கமுறவேண்டாம். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் கடவுளாணையால் நடைபெறுகின்றது. உயிர்களுக்கு வரும் இன்ப துன்பங்கள் அவரேவலினால் வருகின்றன. இந்த மூன்றுலகங்களும் அவராணையின் வசப்பட்டனவன்றி அதனை மீறி நடப்பனவல்ல. உன்னுடைய குமாரன் இந்தராச்சியத்திற்கு இளவரசனாக வைக்கப்படுவான்; அதனால் நீ இன்பமடைவாய். இது வரம்பிலாற்றலுடைய கடவுளால் விதிக்கப்பட்டுளது. வீரபத்தினிகள் இவ்வாறொருபோதும் கலக்க முறார்கள்" என்று இன்சொற் கூறித் தேற்றினார். இவ்வாறு பெருந்திறலிராமரால் தேற்றப்பட்டு வீர பத்தினியாகிய தாரை அழுகை ஒழிந்தாள்.

இராமர் தாரையைத் தேற்றுதல்.

## இருபத்தைந்தாஞ் சருக்கம்.

வாலியைத் தகனம்செய்தல்.

அதன்பின் இராமர், துக்கமடைந்த லக்ஷ்மணரோடு, சுக்கிரீவனுக்கும் தாரைக்கும் அங்கதனுக்கும் தேற்றரவு கூறுவாராயினர்:—

"அழுவதும் துக்கப்படுவதும் இறந்துபோன வாலிக்கு நன்மை பயப்பனவாகா. ஆதலால் இனி அவனுக்குச் செய்யவேண்டிய அந்தியகர்மங்களைச் செய்வது தக்கது. உலகவழக்கத்தோடொட்டி நீங்கள் மிகவும் கண்ணீர்பெருக்கி அழுதுவிட்டீர்கள். இனிச்செய்யக்கடவ கிர்த்தியங்களைச் செய்யாது பாணிப்பது தக்கதன்று. உலகத்தில் காலமே முதற்காரணம்; காலமே கர்மசாதனம்; காலமே எல்லாவுயிர்களின் தொழிலுக்குங் காரணம். ஒருவனும் ஒரு செயலிற்கும் கர்த்தா வல்லன்; ஒருவனை ஒரு செயல் செய் என்று ஏவுதற்கும் வல்லனல்லன்; உலகம் வினையினற் காரியப்படுகின்றது; காலமதற்கு ஆதாரமா யிருக்கின்றது. காலமும் தன் வரையறையைக் கடக்கமாட்டாது; வினைப்பயனை யடைந்தவரெவரும் அதனை மீறிச்செல்லமாட்டார். காலத்திற்கு அழிவில்லை. அதற்கு நண்பினரும் உறவினரும் சுற்றத்தாரும் கிடையாது. அதற்குக் கருவியுமில்லை வலியுமில்லை. அது பரதந்திரமுடையதன்று. அறிவுடையாரே காலத்தின் பரிணாமங்களை யறியவல்லார். அறம் பொருள் இன்பமெல்லாம் காலத்தின் வரையறையிற்பட்டன. வானராதிபனுகிய வாலி அறம்பொருளின்பங்களினு லீட்டியவினைப்பயனை அடைந்து நற்கதிபெற்றுன். முன்செய்த புண்ணியத்தினுல் தனக்குக் கிடைத்த சுவர்க்கத்தை வாலி தனதுடலை நீத்துவிட்டுப் போய்ச்சேர்ந்தான். வாலிக்கு வந்தது நல்ல

இராமர் தேற்றரவு கூறுதல்.

காலம். இனி அழுகைவேண்டாம். இப்போது செய்யக் கடவ காரியங்களைச் செய்யுங்கள்."

இவ்வாறு இராமர் கூறிய பின்பு, லக்ஷ்மணர், துக்கத்தில் மாழ்கிக்கிடக்கும் சுக்கிரீவனைப்பார்த்து "சுக்கிரீவ, தாரையும், அங்கதனும் நீருமாக வாலிக்குச் செய்யவேண்டும் அந்திய கர்மங்களைச் செய்யுங்கள். தகனத்திற்காகத் திவ்வியமான சந்தனக் கட்டைகளையும் காய்ந்த விறகுகளையும் வருவியும். துன்பத்தால் மாழாந்து கிடக்கும் அங்கதனுக்குத் தேற்றரவு கூறும். பேதைபோல் நடவாதேயும்; இவ்விராச்சியம் இப்போது உமதாயிருக்கின்றது. துணி, மாலை, கந்தம், நெய், எண்ணெய் முதலியவைகளை அங்கதன் கொண்டுவரட்டும். தார, நீ போய் விரைவிலொரு சிவிகை கொண்டுவா. இந்தக் காலங்களில் ஒவ்வொரு காரியத்தையும் விரைவில் நடத்தவேண்டும். சிவிகைதூக்கும் வானரர்கள் உடுத்துக்கொண்டு ஆயத்த மாகட்டும்; வலியும் ஆற்றலும் உள்ளவர்களே வாலியைத் தூக்குவதற்குத் தக்கவராவர்" என்று சொல்லிவிட்டுத் தன் தமையன் முன்போய் நின்றார்.

லக்ஷ்மணர் வாலிக்கு அந்தியகர்மம் செய்யச் சொல்லல்.

லக்ஷ்மணர் சொன்னதைக் கேட்ட தாரனென்னும் வானரத்தலைவன் சிவிகையெடுக்கும் பொருட்டுக் குகைக்குள் புகுந்து, வீரர்கள் தூக்குதற்குத் தகுதியான சிவிகையொன்றை வானரர்களா லெடுப்பித்துக்கொண்டு புறப்பட்டு வந்தான். அது ஒரு போரிரதம் போன்று அழகிய பீடமுடையதா யிருந்தது. அதன் நாலு பக்கத்திலும் வரிசையாக மரங்கள்போலவும் பக்ஷிகள்போலவும் சித்திரங்கள் எழுதப்பட்டிருந்தன. அது மரத்தினாற்செய்த ஒரு செய்குன்று போலவும், சித்தர்களுடைய விமானம் போலவும், அகலமாகவும் அழகாகவும் மிகவும் பலமுடையதாகவுஞ் செய்யப்பட்டுச் சிறந்த சாளரங்களையுஞ் சித்திர

வேலைகளையுமுடையதா யிருந்தது. அது அழகிய அணிகள் புனைந்து, மாலைகள் நாற்றி, செஞ்சந்தனம் பூசி, மலர்கள் தூவி, தாமரைப் பூமாலை தூக்கி, அழகிய பட்டணிந்து, கிடுகுசுற்றி, இளஞாயிறுபோல விளங்கிற்று.

அதைக் கண்டவுடன் இராமர் லக்ஷ்மணரைப் பார்த்து "விரைவில் வாலியினுடைய பிரேதகாரியங்களைச் செய்வி" என்று சொன்னார். பின்பு சுக்கிரீவனும் அங்கதனும் வாலியினுடைய உடலை எடுத்து அந்த யானத்தின் மேல் வைத்து அதற்கு ஆடை ஆபரணங்கள் மாலை முதலிய சாத்திவிட்டு அழுதார்கள். அதன்பின் சுக்கிரீவன் வாலியின் அந்தியகர்மங்களைச் செய்வதற்குக் கட்டளையிடுவானாய் "வானரர்கள் விலையுயர்ந்த மணிகளை இறைத்துக்கொண்டு முன்னே போகட்டும்; அதன்பின் பிரேதயானம் செல்லட்டும். எங்கள் அரசனுக்குச் செய்யவேண்டிய கிரியைகளை யெல்லாம் உலகமன்னர் பெருஞ்செல்வத்திற்குத் தக்கபடி செய்யுங்கள்" என்றான்.

அதைக்கேட்டு வானரத்தலைவர்களும் மற்ற வானரர்களும் அரசனையிழந்த துக்கத்தால் அங்கதனைக் கட்டி அழுதுகொண்டு சென்றார்கள். நாயகனை யிழந்த தாரை முதலிய வானரப்பெண்கள் "வீர, வீர" என்று சொல்லிப் பரிதபித் தரற்றிக்கொண்டு பிரேதயானத்தைப் பின்றொடர்ந்தார்கள். அவர்கள் அரற்றுவதாலுண்டாகிய எதிரொலியினால் நான்கு புறத்திலுமுள்ள மலைகளும் காடுகளும் அழுவதுபோல் தோன்றின. மலையாற்றின் கரையிலே ஓரேகாந்தமான விடத்திலே வானரர்கள் வாலியைத் தகனஞ் செய்வதற்குச் சிதையடுக்கினார்கள். பிரேதயானத்தைத் தூக்கிக்கொண்டு சென்ற வானரத்தலைவர் அதை அவ்விடத்தில் இறக்கி வைத்துவிட்டுத் துக்கத்தோடு ஒரு பக்கத்தில் நின்றார்கள். தாரை பிரேதயானத்தில் கிடந்ததனது நாயகன் தலையைத் தனது மடியின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு "ஓ வா

னரர்கோமானே! என் நாயகரே! என் காதலரே! பெருஞ்செல்வம் படைத்தவரே! நீண்ட கைகளையுடையவரே! என் அன்பரே! என்னைப் பாரீரோ! துன்பத்தால் மாழாந்து நிற்கும் இவ்வானரர்களை ஏன் பார்க்கின்றீரில்லை? ஓ வள்ளால், நீர் இறந்துபோயும் உயிரோடிருப்பவர் போலக் காணப்படுகிறீர்; உம்முடையமுகம் மலர்ச்சியடைந்து அத்தகிரியையடைந்த சூரியனைப்போல் காணப்படுகின்றது. வேந்தே, காலனே இராமருடைய உருவங்கொண்டு உம்மைப் பிடித்திழுத்து ஓரம்பினால் எங்களை எல்லாம் விதவைகளாக்கிவிட்டான். சந்திரன்போன்ற முகங்களையுடைய உமது மனைவியர்களெல்லாரும் உம்மிடத்தில்வைத்த அன்பால் நெடுந்தூரம் உம்மைத் தொடர்ந்து நடந்து வந்திருக்கின்றார்களே! அவர்களை நீர் பார்க்கமாட்டீரோ? சுக்கிரீவனைக் காணமாட்டீரோ? உம்முடைய மந்திரிமார்களும், தாரை முதலாகிய உம்முடைய மனைவியர்களும், நகரத்தார்களுமாகிய எல்லாரும் வந்து உம்மைச்சூழ்ந்து அழுகின்றார்களே. பகைவரேறே, மந்திரிமார்களை யெல்லாம் நகரத்திற் கனுப்பிவிடும்; நாங்கள் எல்லாரும் இந்த மதுமலர்ச் சோலையில் விளையாடுவோம் என்று புலம்பினாள்."

தாரை புலம்பல்.

இவ்வாறு துன்பமுற்றுப் பிரலாபித்த தாரையை மற்றை வானரப்பெண்கள் எடுத்துத் தேற்றினார்கள். அதன்பின் அங்கதனும் சுக்கிரீவனும் துன்பத்தால் மாழாந்து அழுதுகொண்டு வாலியைத் தூக்கிச் சிதையின் மேல் வளர்த்தினார்கள். பின்பு அங்கதன் சிதைக்கு நெருப்புவைத்து அதனைச் சுற்றிவந்து நீர்க்கடன் செய்வதற்காக ஒரு நதியின் புண்ணிய தீர்த்தக்கரையில் போய்ச் சேர்ந்தான். அங்கே சுக்கிரீவனும் தாரையும் மற்றை வானரர்களும் அங்கதனை முன்னிட்டுக்கொண்டு தர்ப்பணஞ் செய்தார்கள். பெருவிறலினையுடைய இராமர் சுக்

கிரீவன்போல் தாமும் துக்கமடைந்து வாலிக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்வித்தார். சடங்குகளெல்லாம் முடிந்தபின் சுக்கிரீவன் லக்ஷ்மணரோடிருந்த இராமரை வந்து கூடினன்.

---

## இருபத்தாறுஞ் சருக்கம்.

சுக்கிரீவன் பட்டாபிஷேகம்.

---

அப்போது துக்கமுற்று ஈரவாடையோடிருந்த சுக்கிரீவனை வானரர்களும் மகாமாத்திரர்களும் வந்து சூழ்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் சோர்வில்லாத இராமரை அடைந்து கை குவித்துக்கொண்டு பிரமதேவன் முன் நிற்கும் முனிவர்களைப்போல நின்றார்கள். அப்போது பொன்மலை போன்றவனும் இளஞாயிறுபோன்ற முகத்தை யுடையவனுமான அனுமான் கை குவித்துக் கொண்டு இராமரை நோக்கி "ஐய சுக்கிரீவன் உம்முடைய உதவியினால் பெறுதற்கரிய இந்தப் பெரிய வானரராச்சியத்தைப் பெற்றுக்கொண்டான். இனி உம்முடைய ஆஞ்ஞையின்படி அவன் இந்த நகரத்துட்புகுந்து அரசாட்சி செய்யவேண்டும். முறைமைப்படி அபிஷேகம் செய்யப்பெற்று அவன் உம்மை மணிகளும் மாலைகளும் கந்தங்களும் ஓஷதிகளும் கொண்டு பூசை செய்யவேண்டும். ஆதலால் நீர் இந்த அழகிய மலை நகருக்குச் சென்று சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வானரர்களை மகிழ்வித்தருளும்" என்று கேட்டான். அதற்குத்தரமாக வாக்கில் வல்ல இராமர் அநுமானை நோக்கி "அநுமானே, என் தந்தையாரின் கட்டளைப் பிரகாரம் நான் இந்தப் பதினன்கு வருஷமுங் கழியுமளவும் ஒரு நகரத்திற்குள்ளாவது நாட்டிற்குள்ளாவது

அநுமான் இராமரைச் சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும்படி கேட்டல்.

இராமர் மறுமொழி.

புகமாட்டேன். நீங்கள் எல்லாரும் சுக்கிரீவனை நகரத்துக் கழைத்துக் கொண்டுபோய் விரைவில் அபிஷேகம் பண்ணி வையுங்கள்" என்றார். பின்பு அவர் சுக்கிரீவனை நோக்கி "நீர் உலக வழக்கத்தை அறிந்தவர். உமது தமையன் குமாரனாகிய இந்த வீரமுடைய அங்கதன் இளவரசனாயிருக்க மிகவுந் தக்கவன். ஆதலால் இவனை உலக வழக்கை அநுசரித்து நீர் இளவரசனாக்கிவையும். நண்ப, மழைக்காலம் வந்துவிட்டது. இது மழைக்காலமான நான்கு மாதங்களுள் முதலாகிய ஆவணிமாதம். இப்போது சீதையைத் தேடுவதற்கு யாதொன்றுஞ் செய்து கொள்ள முடியாது. ஆதலால் நீர் உமது நகருக்குப்போம். நான் லக்ஷ்மணனோடு இந்த மலையில் இருக்கிறேன். இந்த மலைச் சூழல் விசாலமாய், நல்ல காற்றும் நல்ல நீரும் தாமரைகளு முடையதாய், மிக அழகுள்ளதா யிருக்கிறது. கார்த்திகைமாதம் பிறந்தவுடன் இராவணனைக் கொல்வதற்கு நீர் முயற்சி செய்யவேண்டும். இப்போது அதற்குக் காலமன்று. ஆதலால் நீர் உமது நகரம் போய்ச்சேர்ந்து அபிஷேகம் பண்ணப்பெற்று உமதன்பர்களை மகிழச் செய்யும்" என்றார். இராமரால் இவ்வாறு ஆஞ்ஞாபிக்கப்பட்டு வானரர் தலைவனான சுக்கிரீவன் வாலியால் கட்டப்பட்ட அழகிய கிஷ்கிந்தைக்குப் போயினான். அவனைச் சூழ்ந்துகொண்டு பல்லாயிரம் வானரர்கள் அந்நகரத்துள் புகுந்தார்கள். நகரத்திலுள்ள பிரஜைகள் அவனைக் கண்டு தலைவணங்கித் தரையில் விழுந்து பணிந்தார்கள். அவர்களுக்கு நல்லவார்த்தை சொல்லி அவர்களைத் தரையினின்றும் எடுத்துவிட்டிட்டு மகா வீரனான சுக்கிரீவன் வாலியினுடைய அந்தப்புரத்திற்குப் போயினான்.

நகரத்திற்குள் புகுந்த சுக்கிரீவனை, ஆயிரங் கண்ணனாகிய இந்திரனைத் தேவர்கள் அபிஷேகம் செய்து வைத்தாற்போல, வானரர்கள் பட்டாபிஷேகம் செய்து

13

வைத்தார்கள். பட்டாபிஷேகத்திற்காகப் பதினாறு கன்னிப்பெண்கள் மனமகிழ்ச்சியுடன் செம்பொற்குடை, வெண்சாமரம், பொற்றண்டம், பலவிதமணி, தானியம், மருந்து, பாலுள்ள மரங்களின் தளிரும் மலரும், வெண்பட்டு, கலவைச்சாந்து, மணமுள்ளமாலை, நிலப்பூ, நீர்ப்பூ, அரிசந்தனம், பலவகைக் கந்தம், அக்ஷதம், பொன், குங்குமப்பூ, தேன், நெய், தயிர், புலித்தோல், பன்றித்தோலால்செய்த பாதரக்ஷை, *சமாலம்பனம், கோரோசனை, மனோசிலை முதலியவைகளை எடுத்துக்கொண்டு வந்தார்கள். வானரர்கள் பிராமண சிரேஷ்டர்களுக்கு இரத்தினம் வஸ்திரம் போசனம் முதலியவை கொடுத்து மகிழ்ச்சி யடையச் செய்தார்கள். மந்திரங்களை அறிந்தவர்கள் தருப்பைப் புல்லைப் பரப்பி அதன்மேல் ஓமாக்கினியை வளர்த்து மந்திரங்களைச் சொல்லி அதனிடத்தில் நெய்யைச் சொரிந்தார்கள். அந்த அழகிய கோயிலின் மேனிலையிலே, சித்திராசனங்கள் பரப்பி மாலைகள் நாற்றி அலங்காரஞ் செய்யப்பட்ட பொன்மயமான ஓரறையின்கண்ணே, ஓரழகிய சிங்காசனத்தின்மீது, சுக்கிரீவனைக் கிழக்கு முகமாக விருத்தி, பல நதிகளினின்றும் கடல்களினின்றும் மற்றுள்ள புண்ணிய தீர்த்தங்களினின்றும் பொற்குடங்களிற் கொண்டுவந்து நறுமணமூட்டின நீரை, கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மயிந்தன், துவிவிதன், அநுமான், ஜாம்பவன், நளன் என்னும் வாநரத்தலைவர்கள் எடுத்து, அட்ட வசுக்கள் தேவேந்திரனை அபிஷேகம் பண்ணினாற்போல, பெரிய ரிஷிகளால் செய்யப்பட்ட சாஸ்திர விதிப்படி, மங்களமான இடபக் கொம்புகளினாலும் பொற் கலசங்களினாலும் அபிஷேகம் செய்தார்கள். அபிஷேகமானவுடன் வானரர்கள் ஆயிரக்கணக்காகவும் நூற்றுக்கணக்காகவும்

சுக்கிரீவன் பட்டாபிஷேகம்.

* ஒருவகை மெய்ப்பூச்சு.

கூடி மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். பின்பு சுக்கிரீவன், இராமர் சொற்படி அங்கதனை அழைத்துத்தழுவி, அவனுக்கு இளவரசப்பட்டம் சூட்டினன். அங்கதனுக்குப் பட்டமானவுடன் வானரர்களெல்லாரும் மகிழ் சிறந்து சுக்கிரீவனைப் பலமுறை புகழ்ந்து பணிந்தார்கள். அங்கதனும் சுக்கிரீவனும் பெருமகிழ்ச்சி யடைந்து இராமரையும் லக்ஷ்மணரையும் பலவாறு புகழ்ந்தார்கள். மலைச் சூழவின் நடுவிலுள்ள கிஷ்கிந்தா நகரம் பலவகைக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, வானரர்கள் களிப்படைந்து தேகங்கள் பூரிக்க விளங்கியது. சுக்கிரீவன் தனக்குப் பட்டாபிஷேகமான சமாசாரத்தை இராமருக் கறிவித்து, தன் மனைவி உருமையைப்பெற்று, இந்திரனைப் போல் அரசு புரிந்திருந்தான்.

---

## இருபத்தேழாஞ் சருக்கம்.

இராமர் சீதையை நினைந்து வருந்தல்.

---

வானரர்களெல்லாரும் கிஷ்கிந்தைக்குப் போய்ச் சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய, இராமர், லக்ஷ்மணரோடு புறப்பட்டு, மேகக்கூட்டம் போன்றதும், பலமரங்களும் பெருந் தூறுகளு மடர்ந்ததும், அஞ்சத்தக்க சிங்கங்கள் திரிவதும், புலிகளும் மான்களும் கத்துவதும், கரடி, குரங்கு, முசு, பூனை முதலிய விலங்குகள் வசிப்பதும், வற்றாத நல்ல நீரூற்றுக்களை யுடையதுமாகிய பிரஸ்ரவணமலையை யடைந்தார். அந்த மலைச்சிகரத்திலுள்ள ஓரகன்ற பெரிய குகையை அவர் தமக்கிருப்பிடமாகத் தெரிந்துகொண்டு, பணிவுள்ளவரும் செல்வத்தை வளர்ப்பவருமாகிய தமது தம்பி லக்ஷ்மணரை நோக்கி "இந்த மலைக்குகை அழகாயும், விசாலமாயும் நல்ல காற்றுடையதாயு மிருக்கின்றது; இதில் நாங்கள் இந்த மழைக்கா

லத்தைக் கழிப்போம். இந்த மலைக்கோடு உன்னதமான தாயும், அழகுள்ள தாயும், கறுப்பும் வெளுப்பும் சிவப்புமான கற்களையுடையதாயும், அநேக தாதுக்கள் நிறைந்ததாயும், குகைகளும் அருவிகளு முடையதாயும், பலவித மரச்சூழல்களும் பலநிறக்கொடிகளுஞ் செறிந்ததாயும், மயின்முதலிய பறவைகளொலிப்பதாயும், மலர்கள் நிறைந்த மாலதி, குருந்து, வெண்ணொச்சி, குறிஞ்சி, கடம்பு, மருது, ஆச்சாமுதலிய பூமரங்க ளடர்ந்ததாயு மிருக்கின்றது. அலர்ந்த மலர்களையுடைய அழகிய இந்தத் தாமரையோடை நமது குகைக் கணித்தாகவே யிருக்கின்றது.' இது வடகிழக்குப்பக்கம் தாழ்ந்து சாய்ந்து வெகு அழகாயும், மேற்குப்புறம் உயர்ந்து காற்றுக் கொதுக்கமாயு மிருக்கின்றது. குகைக்குச் செல்லும் வழியிலுள்ள கல் சமமான தலமுடையதாயும், நீண்டதாயும், மழமழப்பாயும், மைபோலக் கரியதாயு மிருக்கின்றது. அதோ வடக்கே பார், அந்த மலைக்கோடு கறுத்த வடிவமுடையதாய் மேகம்போல் உயர்ந்து தோன்றுகின்றது. தெற்கே மற்றொரு கோடு கைலைமலையின் சிகரம்போல வெள்ளிதாய்ப் பல தாதுக்கள் நிறைந்து விளங்குகின்றது. திரிகூட பர்வதத்திலே பெருகும் கங்கையைப்போலக் குகைக்கு முன்புறத்தில் தெளிந்த நீருடைய நதியொன்று கிழக்கு முகமாக வோடுகின்றது பார். அது, கரையில் சம்பகம், திலகம், தாலம், தமாலம், அதிமுக்தம், பத்மகம், சரளம், அசோகம், வாநீரம், திமிசு, வகுளம், கேதகை, தவம், இந்தாலம், தரிடம், நீபம், வேத்திரம், கிருதமாலகம், முதலிய மரங்கள் செறிந்து அங்கங்கே பல வர்ணங்களை யுடையதாய், வஸ்திராபரணங்களா லலங்கரிக்கப்பட்ட பெண்போல விளங்குகின்றது. ஒன்றோடொன்று அன்புள்ள சக்கரவாகங்களும், அன்னங்களும் சாரசங்களும் தங்கப்பெற்ற மிக வழகிய மணற்குன்றுகள்

இராமர் பிரஸ்ரவணமலைக் குகையை வர்ணித்தல்.

அணிசெய்யவும், பலவிதமான ஓசைகளையுடைய நூற்றுக் கணக்கான பறவைக் கூட்டங்கள் ஒலிசெய்யவும் விளங்குகின்ற இந்த நதி நன்று யலங்கரிக்கப்பட்ட ஒரு பெண் சிரிப்பதுபோலத் தோன்றுகின்றது. அது ஒரு பக்கத்தில் நீலோற்பலமும், ஒரு பக்கத்தில் செங்கழுநீரும், ஒருபக்கத்தில் வெண்ணெய்தலுஞ் செறிந்து விளங்குகின்றது. ரிஷிகூட்டங்கள் வந்து தங்கப்பெற்று, பலவித நீர்ப்பறவைகள் மிகுந்து, மயில்களும் அன்றில்களும் ஒலிக்கின்ற இந்த அழகிய நதி வெகு ரமணீயமா யிருக்கின்றது. அந்தச் சந்தன மரங்களின் பத்திநிரல்பட வைத்தாற்போலவும் மருதமரங்களின் பத்தி மனத்திலேநினைக்க ஒரேகாலத்தில் தோன்றினாற்போலவும் காணப்படுகின்றன பார். அம்ம! இந்த இடம் மிக அழகாகவிருக்கின்றது! நாம் இங்கே சிறிதுகாலம் சுகமாக வசிப்போம். இவ்விடத்திற்குச் சுக்கிரீவனுடைய அழகிய நகரமாகிய காடு சூழ்ந்த கிஷ்கிந்தை மிகவுந்தூரமன்று; அங்கே நர்த்தனம் செய்கின்ற வானரர்களின் மிருதங்கத் தொனியோடு கீதவாத்தியங்களி னொலியும் கேட்கின்றது. தனது மனைவியையும் இராச்சியத்தையும் பெற்றுப் பெருஞ் செல்வமடைந்து சுக்கிரீவன் தனது நண்பர்கள் சூழ விழாக் கொண்டாடுகின்றான்" என்றார். இவ்வாறு சொல்லிவிட்டு அழகிய அநேக குகைகளையுந் தூறுகளையுமுடைய அந்தப் பிரஸ்ரவண மலையிலே இராமர் லக்ஷ்மணரோடு வசித்தார். அந்த மலை பல பொருள்களையுடையதாய் வெகு சுகமாயிருந்தும், உயிரினு மினிய தம் மனைவியைப் பறிகொடுத்து வருந்திய இராமருக்கு அங்கு வசித்ததனால் சிறிதும் இன்பமுண்டாகவில்லை. இரவில் கிழக்கே யுதித்த சந்திரனைப் பார்த்துக்கொண்டு படுக்கையில் கிடந்த இராமருக்கு நித்திரை வந்ததில்லை. இந்தத் துன்பத்தினால் கண்ணீர்விட்டு அறிவிழந்து எப்போதும்

இராமர் சோகம்.

லக்ஷ்மணர் இராமரைத் தேற்றுதல்.

துக்கத்திலாழ்ந்து கிடந்த இராமரை ஒத்த துன்பத்தையுடைய லக்ஷ்மணர் தேற்றுவாராய் "வீர, நீர் துன்புற்றதுபோதும்; நீர் துன்பமடைதற் கருகரல்லர். துன்பப் படுபவர்கள் எல்லா வகையாலும் முயற்சி இல்லாதவ ராவார்கள். இதுநீரறிந்ததே. இவ்வுலகினில் நீவிர் வினைக் கஞ்சாதவர்; தெய்வத்தையே தஞ்சமென்று பற்றினவர்; தெய்வ முண்டென்ற கொள்கையுடையவர்; தருமசீலர்; முயற்சியுள்ளவர். முக்கியமாக, முயற்சி இல்லையாயின் நீர் அந்தக்கொடிய ராக்ஷசனை யுத்தத்தில் கொல்லமாட்டீர்? ஆதலால் நீர் துன்பத்தை வேருடன்களையும்; முயற்சியை மனத்திண்மையோடு செய்யும்; அப்படிச்செய்தால் நீர் அந்த ராக்ஷசனை அவன் பரிவாரங்களோடு வேரறுப்பீர். நீர் இந்தப் பூமியை அதிலுள்ள காடு மலைகளோடும் சமுத்திரத்தோடும் நிலைதடுமாறச்செய்ய வல்லீர்; அப்படிப்பட்ட உமக்கு இராவணனைக் கொல்வது எம்மாத்திரம்? இப்போது கார்காலம் வந்து விட்டது; இனிக்கூதிர்க்காலம் வருமளவும் பொறுத்திரும்; பின் இராவணனை அவன் சுற்றத்தோடும் இராச்சியத்தோடும் அழிக்கலாம். நீறுபூத்த நெருப்பை நெய்யாகுதியினால் சுவாலிக்கச்செய்வதுபோல் தூங்கியிருக்கின்ற உமது வீரியத்தை நானெழுப்பிவிடுகிறேன்" என்று கூறினார். லக்ஷ்மணர் கூறிய இந்த நல்ல இதமான வார்த்தையைக்கேட்டு இராமர் அவரை அன்போடு நோக்கி "லக்ஷ்மண, அன்பும் நேயமும் இதமும் உண்மையும் ஆண்மையு முடையவர்கள் சொல்வதை நீயும் சொல்லினை. சர்வகாரியங்களையும் கெடுக்கின்ற இந்தத்துன்பத்தை ஒழித்துவிட்டு ஆண்மை செய்வதில் தடைப்படுதலில்லாத ஊக்கத்தை யான்பூண்டு கொள்ளுகிறேன். உன்னுடைய சொற்படி நான் சரற்காலத்தின் வரவையும் நதிகளின் தெளிவையும் சுக்கிரீவனுடைய

தயவையும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன். வீரர்கள் ஒருபகாரம் செய்யப் பெறுவார்களாயின் அதற்குப் பிரத்தியுபகாரம் செய்யாது போகார்கள். பிரத்தியுபகாரம் செய்யாதவர்கள் பெரியோர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்குவார்கள்" என்று சொன்னர். இந்த வார்த்தையை லக்ஷ்மணர் தண்டனிட்டுக் கைகூப்பி ஏற்றுப் புகழ்ந்து, அழகிய தோற்றத்தையுடைய இராமரை நோக்கி, தமது நல்லறிவைத் தெரிவிப்பவராய் "நரேந்திர, நீர் சொல்லியவண்ணம் சுக்கிரீவன் சீக்கிரத்தில் நீர் விரும்பியவற்றை எல்லாம் செய்வான். நீர் பகைவனைக் கொல்வதில் திண்மை யுடையவராய்ச் சரற்காலத்தை எதிர் பார்த்துக்கொண்டு மழைக்காலத்தை இங்கே கழியும். கோபத்தை அடக்கிப் பகைவனை அழித்தற்கு வேண்டிய முயற்சியைச் செய்துகொண்டு, இந்தச்சிங்கங்கள் மிகுந்த மலையிலே என்னோடு இந்த நாலுமாதத்தையும் போக்கும்" என்று சொன்னர்.

## இருபத்தெட்டாஞ் சருக்கம்.

கார்கால வருணனை.

இராமர் வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்கு அபிஷேகம்செய்து மாலியவான் மலையின்மேல் வசிக்கையில் லக்ஷ்மணரை நோக்கிக் கூறலுற்றார்:—

"இதோ கார்காலம் வந்துவிட்டது; மலைகள்போன்ற மேகங்களால் ஆகாயம் மூடப்பட்டுளது பார். ஆகாயம் சூரியனுடைய கிரணங்களால் சமுத்திரத்தின் நீரைப்பருகி ஒன்பது மாதம் கர்ப்பந்தரித்திருந்து மழையைப் பெறுகின்றது. மேகமாகிய ஏணிவழியாக வானத்தில் ஏறி மருதமலராலும் வெட்பாலை மலராலும் சூரியனை யலங்கரிக்கத்தக்கதா யிருக்கின்றது. ஆகாயம் அந்திக்காலத்தின் செம்மையால் மேலே சிவந்து அடியில் வெண்மையா

இராமர் கார்காலத்தை வர்ணித்தல்.

யுள்ள முகில்களாகிய கிழிந்த துணியினால் கட்டப்பட்ட புண்ணுடையதுபோலத் தோன்றுகின்றது. மந்தமாருதமாகிய சுவாசத்தையும் அந்திவண்ணமாகிய சந்தனப் பூச்சையும் வெள்ளிய மேகங்களையு முடையதாகி ஆகாயம்விரகநோய் கொண்டவன்போல் காணப்படுகின்றது. வெப்பத்தால் வாடிப் புதுநீரால் நனைந்த பூமி, துக்கத்தால் வருந்திய சீதையைப்போல, கண்ணீர் விடுகின்றது. மேகத்தினின்று விடுபட்டுச் செங்கழுநீரில் படிந்து குளிர்ச்சியடைந்து தாழைமணம் வீசு மிந்தக்காற்றுக்கையாலள்ளிக் குடிக்கக்கூடியதா யிருக்கின்றது. மருது மலர்ந்து, கேதகைகமழ்ந்து விளங்கும் இந்தமலை பகைவரை வென்ற சுக்கிரீவனைப்போல மழைத்தாரைகளினால் அபிஷேகம்செய்யப்படுகின்றது. மேகமாகிய கரிய மான்றோலைத் தரித்து, மழைத்தாரையாகிய உபவீதத்தைப்பூண்டு, காற்று நிரம்பிய குகைகளையுடைய இந்த மலைகள் வேதமோதத் தொடங்கும் மாணவர்களைப்போலுள்ளன. ஆகாயம் மின்னலென்னும் பொற்கசைகளினால் அடிக்கப்பட்டு வேதனையுற்று மேகமுழக்கத்தால் கதறுவதுபோலும். நீலமேகத்தினிடத்தில் துடிக்கின்ற மின்னல் இராவணன்மடியில் கிடந்து துடிக்கின்ற மெல்லிய சீதையைப்போல எனக்குத் தோற்றுகின்றது. மேகத்தினால் மூடப்பட்டுச் சந்திரனும் நக்ஷத்திரங்களும் மறைந்திருக்கின்ற இந்தத் திசைகள் காமமுற்றவர்களுக்கு இதமாயுள்ளன. லக்ஷ்மண, மலைத்தாள்வரைகளில் புஷ்பித்து நீராவியினால் மூடப்பட்டு மழைக்காலத்தின் வருகையினால் உற்சாக முற்றவைகளாய் நிற்கும் வெட்பாலைகளைப் பார்; அவைகள் சோகத்தால் வருந்தும் எனக்குக் காதலை யுண்டாக்குகின்றன.

"பூதூளி அடங்கி விட்டது; காற்றுக்குளிர்ந்து வீசுகின்றது; வேனிற்காலத்தின் குற்றங்களெல்லாம் ஒழிந்துவிட்டன; அரசர்கள் படையெடுத்துச் செல்வது நின்றுவிட்டது; தூரதேசம் போயிருந்தவர்கள் தங்கள் தங்கள் சுவ

தேசம் செல்கின்றூர்கள். மானசவாவியில் வசிக்கவேண்டிச் சக்கர வாகங்கள் தங்கள் பேடைகளுடன் செல்லுகின்றன. இடையீடில்லாது மழை பொழிந்தமையால் வழிகளில் யானங்கள் செல்லுகின்றில. மேகங்கள் சிதறுண்டு சிலவிடத்தில் பிரகாசமாகவும் சிலவிடத்தில் அப்பிரகாசமாகவுமுள்ள ஆகாயம்சிற்சில விடங்களில் மலைகளால் சூழப்பட்டுள்ள, அசைவில்லாத சமுத்திரம்போலக் காணப்படுகின்றது. மலை யருவிகள் செந்தாதுக்களோடு கலந்து தாமிர நிறமுள்ள புது நீரையுடையனவாய், கடப்ப மலர்களையும் வெட்சி மலர்களையு மடித்துக்கொண்டு, மயிலின் கேகாவென்ற சத்தம்போன்ற அநுகரண வோசையோடு மிக வேகமாகப் பாய்கின்றன. வண்டுகள் போன்ற கரிய மதுரமான நாவற்பழங்கள் சனங்களுக்குப் பெரிதும் உணவாகின்றன. பலவகை நிறமுடைய அளிந்த மாம்பழங்கள் காற்றினு லடிக்கப்பட்டுத் தரையில் வீழ்கின்றன. பெரிய மலைபோன்ற வடிவுடைய மேகங்கள் மின்னற்கொடிகளும் வலாக மாலைகளுமுடையனவாய், போர்க்களத்திற் சென்று பிளிற்றுகின்ற மதயானைகள்போல, முழங்குகின்றன. வனங்கள் மழை வெள்ளத்தி லாழ்ந்த புற்களையும் களித்தாடுகின்ற மயில்களையும் மழையைப் பொழிகின்ற மேகங்களையு முடையனவாய் மாலைக்காலத்தில் மிகவும் விளங்குகின்றன் பார். மேகங்கள் அதிக பாரமான சலத்தைச் சுமந்து, வலாகங்கள் சூழ்ந்துவர, முழங்கிக்கொண்டு, பெரிய மலைச் சிகரங்களில் தங்கித் தங்கி இளைப்பாறிச் செல்லுகின்றன. மேகத்தின்மேற்கொண்ட காதலால் களிப்புற்று ஆகாயத்தில் பறக்கின்ற வலாகவரிசைகள் வானத்தில் கட்டப்பட்ட வெண்டாமரைமாலை காற்றி லசைவதுபோல் காணப்படுகின்றன். பூமி, இந்திர கோபங்களையுடைய இளம் புற்றரைகளினுலே, அலத்தகப் புள்ளிகள் பொருந்திய கிளிபோன்ற பச்சைப் பட்டுடுத்த பெண்போல விளங்கு

கின்றது. நித்திரை மெள்ள மெள்ளக் கேசவனையடை கின்றது; யாறுகள் வேகமாகக் கடலையடைகின்றன; களிப்புற்ற கொக்குகள் மேகங்களை யடைகின்றன; காதல் கொண்ட மங்கையர் பிரிய நாயகர்களை யடைகின்றார்கள். வனங்களில் மயில்களின் நடனமுண்டாகின்றது; கடப்ப மரங்களின் கிளைகளில் புஷ்பங்களுண்டாகின்றன; ரிஷபங்களுக்குப் பசுக்களிடத்தில் ஆசையுண்டாகின்றது; பூமிக்குப் பயிரினாலும் நீரினாலும் அழகுண்டாகின்றது. ஆறுகள் ஓடுகின்றன; மேகங்கள் மழைபொழிகின்றன; மதயானைகள் பிளிறுகின்றன; வனங்கள் பிரகாசிக்கின்றன; மனைவியைப் பிரிந்தோர் கவற்சியடைகின்றனர்; மயில்கள் ஆடுகின்றன; குரங்குகள் இளைப்பாறுகின்றன. மதத்தையுடைய யானைகள் தாழம்பூவின் வாசனையை மோந்து களிப்புற்று மலையருவி வீழ்கின்ற சத்தத்தினால் வெருண்டு மயில்களோடு கூடிச் சத்திக்கின்றன. கடப்பங் கிளைகளிலே மொய்த்திருக்கின்ற அறுகால் வண்டுகள் மழைத்தாரைகளின் வீழ்ச்சியினால் அடியுண்டு, புஷ்பங்களிலிருந் தெடுத்துச்சேர்த்த தேனை ஒழுக்குகின்றன. கரித் தூள்களை அள்ளி அப்பினாற்போன்ற சாறு மிகுந்த கரிய பழங்கள் நிரம்பிய நாவற்கிளைகள் வண்டுக்கூட்டங்கள் மொய்த்தனபோல விளங்குகின்றன. மின்னற்கொகடி ளால் அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமானபெரிய முழக்கத்தையுடைய மேகங்கள் யுத்தத்திற் கெழுந்த யானைகள் போலத் தோன்றுகின்றன. மலையிலும் வனத்திலும் நினைத்தபடி சஞ்சரிக்கின்ற பெரிய மதயானை, வழியிற் போகும்போது மேகத்தின் முழக்கத்தைக்கேட்டு, அதை மற்றொரு யானையின் தொனி என்று சந்தேகித்து, அதனோடு மாறுகொண்டு பொர விரும்பித் திரும்பிச் செல்லுகின்றது. காடுகள் வண்டுக் கூட்டங்களினால் ஒரு புறத்தில் பாடுவது போலவும், மயில்களினால் ஒரு புறத்தில் ஆடுவதுபோலவும், யானைகளினால் ஒரு புறத்தில் மதங்

கொண்டனபோலவும், அனேக தன்மைகளை யுடையன வாய்க் காணப்படுகின்றன. காட்டுநிலம் கடம்பு, வெட்சி, மருது, கந்தளம் முதலிய மலர்கள் மிகுந்து, புது நீர் நிறைந்து, களிப்புற்ற மயில்களின் நடனத்தினல் பான பூமியை நிகர்த்துத் தோன்றுகின்றது. தேவேந்திரனல் பெய்விக்கப்பட்ட மழைத்துளிகள் முத்துக்கள்போல நிர் மலமாய் இலைப்புறங்களில் ஒட்டிக்கொண் டிருப்பனவற் றைப் பல வர்ணமான இறகுகளையுடைய களிப்புற்ற பறவைகள் விடாய் கொண்டுண்ணுகின்றன. வண்டுகளா கிய யாழ்ப்பாடிகளின் மதுரமான இசையினுலும் குரங்கு கள் கண்டத்தால் செய்கின்ற தாளவோசையினுலும் மேக முழக்கமாகிய மத்தள வோசையினுலும் வனங்களில் சங்கீதம் தொடங்கினது போலும். அழகிய தோகையை யுடைய மயில்கள் சிலவிடத்தில் நடனஞ்செய்ய, சிலவிடத் தில் கூவ, சிலவிடத்தில் மரங்களின் நுனிகளில் உட்காந் திருக்க, வனங்களில் சங்கீதம் தொடங்கினதுபோலும். தவளைகள் மேகமுழக்கத்தினல் தங்கள் நெடுங்கால நித்தி ரையை விட்டெழுந்து அநேக ரூபங்களையும் வர்ணங்களை யும் தொனிகளையு முடையவைகளாய் மழைத் துளிகளி னல் மொத்துண்டு சத்திக்கின்றன. நதிகள் நீந்துகின்ற சக்கரவாகங்களையுடையனவாய், அழிந்தகரைகளின்வழி யே ஓடி, மதமுற்று, புதியபோகபதார்த்தங்களை நிறைய ஏந்திக்கொண்டு, விரைவாகத் தமது சொந்தநாயகனிடம் செல்லுகின்றன. அவைகள் நீலங்களோடு சேர்ந்து நீலம் போலவும், மேகங்களோடு சேர்ந்து மேகம்போலவும், காட்டாக்கினியால் தகிக்கப்பட்ட இடங்களோடு சேர்ந்து காட்டாக்கினியால் தகிக்கப்பட்ட இடம்போலவும், மலை களோடு சேர்ந்து மலைகள்போலவும் விளங்குகின்றன. களிப்புற்றுக் கூவுகின்ற மயில்களையுடையனவும் இந்திர கோபங்கள் நிறைந்த பசும்புற்றரைகளை யுடையனவும் வேப்பமலர் மருதமலர்களின் வாசனை கமழ்வனவுமாகிய

அழகிய காடுகளில் யானைகள் திரிகின்றன. புதிய மழைத் தாரைகள் விழுந்து தாதுக்கள் மடங்கிய தாமரை மலரை நீக்கிவிட்டு வண்டுகள் நல்ல தாதுக்களையுடைய புதிய கடப்பமலர்களில் வீழ்கின்றன.

"யானைகள் மதங்கொண்டிருக்கின்றன; எருதுகள் களிப்புற்றிருக்கின்றன; சிங்கங்கள் வனங்களில் இளைப்பாறுகின்றன; மலைகள் அழகாக விளங்குகின்றன; அரசர்கள் போர்த்தொழிலை விட்டிருக்கின்றனர்; தேவேந்திரன் மேகங்களோடு விளையாடுகின்றான். மேகங்கள் ஆகாயத்தில் திரிந்து சமுத்திரம்போல முழங்கி நீரைப் பொழிந்து நதிகளையும் தடாகங்களையும் குளங்களையும் வாவிகளையும் பூமியெங்கும் பெருகச்செய்கின்றன. மழை அதிகமாக வேகத்தோடு பெய்கின்றது; காற்று மிகவும் முழங்கி வீசுகின்றது; நதிகள் கரைகளை யுடைத்து வெள்ளத்தினால் வழிகளைத்தடுத்து விரைவாகப் பெருகுகின்றன. மலைகள், பூவுலகத்து அரசர்களைப்போல, இந்திரனால் கொடுக்கப்பட்டுக் காற்றினால் கொண்டுவரப்பட்ட மேகமாகிய நீர்க்குடங்களினால் அபிஷேகம் செய்யப்பட்டுத் தங்களுடைய அழகிய ரூபத்தைக் காட்டுகின்றன போன்றன. வானம் மேகங்களால் மூடப்பட்டிருக்கின்றது; சூரியனுடைய தரிசனமாவது தாரகைகளினுடைய தரிசனமாவது கிடைக்கவில்லை; புது நீர்ப்பெருக்கினால் பூமி திருத்தியடைந்துளது; எங்கும் இருள் மூடித் திசைகள் தெரியவில்லை. பெரியமலைகளின் சிகரங்கள் மழையினால் கழுவப்பட்டுச் சிறந்து விளங்குகின்றன. மிகவும் அதிகமாக விழுகின்ற பெரிய மலையருவிகள் தொங்குகின்ற முத்துமாலைகள்போல விளங்குகின்றன. பெரிய மலைகளில் நின்றும் விழுந்து கற்களைப் புரட்டிக்கொண்டு ஓடுகின்ற பெரிய அருவிகள் மயில்கள் சத்திக்கின்ற குகைகளின்மேல் அறுந்த மணிவடம்போலத் தோன்றுகின்றன. அதிகவேகமாய்ச் செல்லுகின்ற முத்து வடம்

போன்ற பெரிய அருவிகள் மலைகளின் சிகரங்களைக் கழுவிக்கொண்டு பெரிய குகையின் மத்தியில் வீழ்ந்து ஓடுகின்றன.

"சுவர்க்க மாது அணிந்துள்ள ஆரத்தின் முத்துக்கள் புணர்ச்சிக்காலத்தில் அறுந்து விழுந்தாற்போலத் திக்குகள் எங்கும் மழைத்துளிகள் விழுகின்றன. பறவைகள் கூடுகளில் போய் அடைகின்றமையாலும் தாமரை மலர்கள் குவிதலினாலும் மாலதி மலர்கின்றமையினாலுமே சூரியன் அஸ்தமித்தமை தெரிகின்றது. அரசர்கள் படையெடுத்துச்செல்லல் ஒழிந்துவிட்டது; சேனைகள் திரும்பிவிட்டன; பகையும் வழிப்போக்கும் நீரினால் ஒரே தன்மையனவாய்ச் செய்யப்பட்டுள்ளன. வேதமோதும் இச்சையுள்ள பிராமணர்களுக்குப் புரட்டாசி மாதத்திலே சாமவேதம் அத்தியயனம் செய்யும் காலம் வந்துவிட்டது. இப்போது கோசலாதிபனாகிய பரதன் மற்றுங் காரியங்களையெல்லாம்செய்து முடித்துவிட்டுப் பொருள் சேர்த்துக்கொண்டு ஆஷாடபௌர்ணமி விரதத்தைத் தொடங்கியிருப்பான். எனது வருகையைக்கண்டு அயோத்தியில் எழும்பும் ஒலிபோலு மொலியுடையதாகிச் சரயுநதியில் இப்போது நீர் நிறைந்து வெள்ளம் பெருகும். மழைக்காலத்தின் குணமெல்லாம் இப்போது நிறைந்திருக்கிறது. சுக்கிரீவன் பகையைவென்று, மனைவியையடைந்து, பெரியராச்சியத்தில் நிலைபெற்றுச் சுகமடைந்தனன். நான் மனைவியையும் பெரிய விசாலமான இராச்சியத்தையும் இழந்து விட்டு ஆற்றங்கரையைப் போலத் தேய்வுற்றிருக்கிறேன். எனது துக்கத்தின் பெருமையும் மழைக்காலத்தின் அடைதற்கருந்தன்மையும் இராவணனுடைய பெரிய பகைமையும் எனக்கு அபாரமாகத் தோன்றுகின்றன. இந்தக்காலம் யாத்திரைக் கேலாததையும் வழிகள் போதற்கு யோக்கியமில்லாதனவா யிருத்தலையும் கண்டே சுக்கிரீவன் வணங்கிக்கேட்கவும் நான் அவனை அனுப்பவில்லை. சுக்கிரீவன்

அதிக துன்பமடைந்து நெடுங்காலத்தின் பின் மனைவியைக் கூடினான்; அதனாலும் எனது வேலையின் பெருமையினாலும் நான் அவனைக் கேட்க விரும்பவில்லை. சுக்கிரீவன் சிறிதுகாலம் இளைப்பாறிக் காலம் வந்தவுடன் தானாகவே நான்செய்த நன்றிகளை நினைப்பான்; இதிற் சந்தேகமில்லை. ஆகையால் நான் காலத்தையும், சுக்கிரீவனுடைய தயையையும் யாறுகளின் தெளிவையும் எதிர் பார்த்துக்கொண்டு இங்கிருக்கிறேன். உபகாரம்செய்யப் பெற்ற வீரர்கள் அதனைப் பிரத்தியுபகாரம் செய்து தீர்த்து விடுவார்கள்; பிரத்தியுபகாரம் செய்யாதவர்கள் சாதுக்களின் மனத்தை வருத்துவார்கள்."

லக்ஷ்மணர் இதைக்கேட்டு அழகிய தோற்றத்தையுடைய இராமரைக் கைகூப்பி வணங்கி, அவருடைய வார்த்தையை மிகவும் மெச்சி, அவருக்கு நன்மை கூறுபவராய் "நரேந்திர, நன்றாகச்சொன்னீர். நீர் விரும்பியவைகளெல்லாவற்றையும் சுக்கிரீவன் விரைவில் செய்து முடிப்பான். சரற்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு, பகைவனை அழித்தலில் மனத்திண்மையுடையவராய், மழைக்காலத்தை இங்கே கழியும்" என்றார்.

## இருபத்தொன்பதாஞ் சருக்கம்.

சுக்கிரீவன் வானரசேனையைச் சேர்த்தல்.

ஆகாயம் நிர்மலமாய், மேகங்களும் மின்னலும் நீங்கி, வெள்ளை நாரையின் துழனி மிகுந்து, அழகிய நிலவாகிய பூச்சையுடையதாய் விளங்கிற்று. அப்போது சுக்கிரீவன் செல்வமடைந்து, அறம் பொருள்களை ஈட்டுவதில் பற்றின்றி, கெட்டவழியில் மனத்தை மிகவுஞ் செல்லவிட்டு, வேண்டியவற்றை வேண்டிய வண்ணமடைந்து, வினைசெய்தலைக் கைவிட்டு, எப்போதும் பெண்கள் கூட்

டத்தை விரும்பி, தன்னுடைய அன்புள்ள மனைவியை யும் தான் மிகவும் விரும்பிய தாரையையு மடைந்து, அச்சம் தீர்ந்து, நந்தவனத்திலே தெய்வப்பெண்களு டன் கூடி விளையாடுகின்ற இந்திரனைப்போல அல்லும் பகலும் விளையாடிக்கொண்டு, இராச்சியத்தை மந்திரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு, அவர்களைக் கவனியாமல், இராச் சிய காரியங்களை விசாரியாமல், காமத்தால் மீதூரப்பட்டி ருந்ததை, பொருள்களை நிச்சயஞ்செய்தவனும், பொருள் நூல்களை அறிந்தவனும், காலதர்மங்களை நன்றுயுணர்ந்த வனுமாகிய வாயு குமாரன் அநுமான் கண்டு, சொற் பொருளை நன்றுயுணர்ந்த அவ்வானர ராஜனையடைந்து, அன்பும் விசுவாசமு முடையனவும், நன்மை பயப்பன வும், உண்மை யுள்ளனவும், அறம் பொருள் பொறைக ளைப் போதிப்பனவுமாகிய சொற்களை இனிமை யாகவும், நியாயசகிதமாகவும், மனத்துக்கிணங்குமாறு கூறலுற் றான் :—

"அரச, உமக்கு இராச்சியமும் கீர்த்தியும் கிட்டி விட்டன ; குலமுறையாக வந்த செல்வமும் வளருகின் றது ; நண்பினருடைய கூட்டுறவே எஞ்சி நிற்கின்றது ; அதை இனி நீர் செய்து கொள்ள வேண்டும். காலத்தை யறிந்து நண்பர்களிடத்தில் நன்றாய் நடப்பவனுக்கு இராச்சியமும் கீர்த்தியும் பிரதாபமும் பெருகும். பொரு ளும் படையும் நட்பும் நீங்காதிருக்கு மரசனுக்கு இராச் சியம் நீடித்து நிற்கும். நற்குணம் பூண்டு நல்வழியில் நிற் கும் நீர் நட்பினருக்காக வேண்டியதைச்செய்தல் தக்கது. தனது காரியங்க ளெல்லாவற்றையும் விட்டிட்டு உற் சாகத்துடன் மித்திரனுடைய காரியத்தைச் செய்பவ னுக்குத் தீங்குவாராது. செய்தற்குரிய காலங் கழிந்தபின் மித்திரனுடைய காரியத்தைச் செய்பவன், பெரியகாரியத் தைச் செய்தானாயினும், அவனுக்கு நன்மைசெய்தவனு

அநுமான் சுக்கிரீவனைச் சேனைசேர்க்கச் சொல்லல்.

கான். அரிந்தம, நாம் இப்போது நமது மித்திரராகிய இராமருக்குச் செய்யவேண்டிய காரியம் வைதேகி யிருக்குமிடத்தைத் தேடுதல்; அது செய்தற்குரியகாலம், வீர, கழிந்துவிட்டது. காலங் கழிந்துவிட்டாலும் அதனை உமக்கு இராமர் அறிவியாதிருக்கின்றார். செய்யக்கடவ காரியத்தை விரைவிற் செய்யவேண்டுமென்ற விருப்பமுடையவராயினும் அவர் உம்முடைய எண்ணத்தின்படி நடப்பவராயிருக்கின்றார். இராமர் உம்முடைய குலவிர்த்திக்குக் காரணமாயுள்ளவர்; பெரிய நண்புடையவர்; ஒப்பில்லாத குணங்களையுடைமையால் அளவிடப்படாத பிரபாவமுடையவர். உமக்கு முன்னே அவர் உதவி செய்தார்; நீர் இப்போது அவருக் குதவிசெய்யும்; அது செய்தற்கு வானரத்தலைவர்களைக் கட்டளையிட்டருளும். இராமரால் ஏவப்படுமளவும் அவருடைய காரியத்தைச் செய்தற்குரிய காலம் கழிந்ததாகாது; ஏவப்பட்டபோது அதற்குரியகாலம் கழிந்துவிடும். முன் ஒரு நன்றி செய்யாதவருக்கும் நன்றி செய்யும் நீர் உமக்கு இராச்சியத்தையும் தனத்தையும் தந்த இராமருக்கு உதவிசெய்யாதிருப்பதென்! அரச, நீர் வலியும் ஆண்மையுமுடையீர்; இருந்தும் இராமர் விரும்பிய காரியத்தைச் செய்தற்கு முயலாதேனிருக்கின்றீர்? இராமர் தன்னுடைய சரங்களால் சுரர் அசுரர் நாகர் எல்லாரையும் வசப்படுத்த வல்லவர்; ஆயினும் அவர் உமது பிரதிஞ்ஞையின் முடிவை எதிர்பார்த்திருக்கின்றார். அவர் தம துயிருக்கு வரும் அபாயத்தையும் நோக்காது உமக்கு உதவி செய்தார்; அவருக்காக நாம் இப்போது வைதேகியை மண்ணுலகத்திலிருப்பினும் விண்ணுலகத்திலிருப்பினும் தேடிக் காணவேண்டும். தேவர்களாலும் கந்தருவர்களாலும் அசுரர்களாலும் மருத்துக்களாலும் யக்ஷர்களாலும் இராமருக்குப் பயமில்லை; ஆயின் இராக்ஷசர்களால் பயமென்? இத்தகைய வலியுள்ளவரும், முன்னரே உமக்கு நன்மை செய்த

வருமாகிய இராமருக்கு நீர் இப்போது எவ்வாற்ருனும் நன்மைசெய்ய வேண்டும். அரச, உம்முடைய கட்டளையின்படி பூமியின் கீழாயினும் நீரினுள்ளாயினும், விண்ணின் மேலாயினும் செல்லாதார் எங்களுள் யாவருளர்? அநக, வெல்லமுடியாத வாநர வீரர்கள் உம்மிடத்தில் கோடிக்குமேலுள்ளார்கள்; அவர்களுள் யார் போவதென்றும் எங்கே போவதென்றும் நீர் இனிக் கட்டளையிட்டருளும்."

சுக்கிரீவன் சேனை சேர்க்கக் கட்டளையிடல்.

தக்க காலத்தில் சொல்லப்பட்ட இந்த வசனத்தைக்கேட்டுச் சிறந்த குணங்களையுடைய சுக்கிரீவன் நல்ல புத்திசெய்து, எல்லாத் திக்குகளிலுமுள்ள சகல சைனியங்களையும் சேர்க்கும்படிக்கு, தன்னுல் நன்கு மதிக்கப்பட்டவனும் எப்போதும் சுறு சுறுப்புள்ளவனுமான நீலனை நோக்கி "எனது சேனைகளெல்லாம் தங்கள் தலைவர்களோடு தடையின்றி இங்கே வரும்படிசெய். என்னுடைய கட்டளையினுல் திகாந்தங்களிலுள்ள தலைவர்களும் விரைவாகச் செல்லுபவர்களும் சீக்கிரமாக வந்துசேரட்டும். அங்ஙனம் வந்து சேர்ந்தபின் நீயே சென்று அவர்களைப் பார். பதினைந்து நாளிற்குள் வராதவர்களுக்குப் பிராண தண்டனை செய்; இதில் விசாரம் வேண்டியதில்லை. என் கட்டளையினுல் நீ அங்கதனேடு சென்று வானரப் பெரியார்களைக் கண்டு எல்லாம் திட்டம் செய்" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு அந்தப்புரத்திற்குப்போயினன்.

---

## முப்பதாஞ் சருக்கம்.

சுக்கிரீவன் வரவில்லை என்று இராமர் கோபித்தல்.

---

இவ்வாறு சுக்கிரீவன் கிஷ்கிந்தையில் இருக்க, வர்ஷம் மேகங்கள் நீங்கி வெளியாக, காமத்தினுலும் சோ

கத்தினாலும் வருந்திய இராமர் மழைக்காலத் திரவினால் நொந்து, ஆகாயம் வெண்மை யடைந்ததையும், சந்திர மண்டலம் நிர்மலமா யிருப்பதையும், சரற்காலத் திரவு நிலவுபரந்து விளங்குவதையும் கண்டு, சுக்கிரீவன் காமந் துய்த்துக்கொண் டிருப்பதையும், ஜானகி கவரப்பட்டதையும், மழைக்காலங் கழிந்ததையும் நினைத்து மோகமடைந்தார். பின்பு ஒரு முகூர்த்த காலத்தில் அவர் அறிவு வரப்பெற்று வைதேகி தன் மனத்தினுள்ளேயே யிருப்பவும் அவளைப்பற்றிச் சிந்திப்பாராயினார். பொற்றாதுக்கள் நிறைந்த அந்த மலையினுச்சியிலே அவர் இருந்துகொண்டு, சரற்காலத்து வானம், மின்னலையுடைய மேகங்கள் நீங்கப்பெற்று, நிர்மலமாகி, சாரசப் பறவைகளின் ஒலி மிக்கு விளங்குவதைக் கண்டு மனைவியை நினைந்து வருந்தி " முன்பு நம தாச்சிரமத்திலே என்னோடு சாரசப் பறைவைகளைப் போலச் சத்தஞ்செய்து விளையாடுகின்ற சீதை இன்றைக்கு எப்படி விளையாடப் போகின்றாள் ? என்னைக் காணாமல் அவள் பொன்போல அழகாக மலர்ந்த வேங்கைமரங்களைக் கண்டு எப்படி மகிழ்ச்சி அடைவாள் ? முன்னர் அழகிய அன்னங்களின் ஓசையைக் கேட்டுத் துயிலுணரும் அந்த இனிய குரலையுடைய மாதுநல்லாள் இன்று எவ்வாறு துயிலுணர்வாள் ? இணைபிரியாது சஞ்சரிக்கின்ற சக்கரவாகப் புட்களின் ஓசையைக் கேட்டு அந்தத் தாமரைத் தடங்கண்ணாள் எவ்வாறு உயிர் வாழ்வாள் ? அந்த மான்போன்ற கண்ணாளை யின்றிக் காடுகளிலும் சோலைகளிலும் ஆறு குளம் வாவிகளின் கரைகளிலும் திரிந்தும் எனக்குச் சுகமுண்டாகவில்லை. என்து பிரிவினாலும் அவளது மென்மையினாலும் சரற்கால சகாயனாகிய காமன் அவளை மிகவும் வருத்துவானே !" என்று புலம்பினார்.

இராமர் புலம்பல்.

தேவேந்திரனிடத்து மழையை விரும்பிச் சாதகப் புள் புலம்புவதுபோலத் தசரத குமாரரான இராமர் இவ்வாறு புலம்பிக்கொண்டிருப்பதைச் சூரியகிரணங்கள் தவழுகின்ற மலை முகடுகளில் பழந் தேடிச்சென்று திரும்பி வந்த அழகிய லக்ஷ்மணர் கண்டார். ஒருவருமில்லாத காட்டில் பொறுத்தற்கரிய துக்கத்தினால் மூர்ச்சையடைந்து கிடந்த இராமரை, அவர் படுந்துயரத்தைக் கண்டு பரிதவித்த லக்ஷ்மணர் கிட்டி அவரை நோக்கி "ஐய, காமத்தின் வசப்பட்டு யாது செய்தீர்? உமது ஆண்மையை இழிவுபடுத்தி யாது செய்தீர்? உம்முடைய மனவொருமை கெட்டுவிட்டது! நீர் இப்போது முயற்சியை ஒழித்து யாது செய்தீர்? பெரிய வலியுடையாய், ஊக்கமுடைமையும், மனத்தெளிவும், மனவொருமையோடும் முயற்சியோடும் தொடர்ந்த காலமும், பிறருடைய உதவியும் உமது வலிமையுமாகிய இவற்றை நீர் எடுத்த காரியத்தை முடித்தற்குக் கருவிகளாகச் செய்துகொள்ளும். மநுகுலத்தலைவ, உம்மை நாயகராகவுடைய ஜானகி பிறருக்கு எளியளாகாள்; எரிகின்ற நெருப்பைச் அடைந்தவன் யாவன் சுடுபடாது தப்புவான்?" என்று சொன்னார்.

இராமரை லக்ஷ்மணர் தேற்றுதல்.

இவ்வாறு லக்ஷ்மணர் கூறிய உண்மையும் இதமும் தகுதியுமுள்ளதும் ராஜநீதிக்கும் தருமத்துக்கும் ஒத்ததுமான வாக்கியத்தை இராமர் கேட்டு "தம்பி, நாம் எடுத்த காரியத்தை மறந்துவிடப் படாதென்பதில் சந்தேகமில்லை. பெரிய காரியங்களை இடையில் விடாது செய்தல்வேண்டும். கஷ்டமான காரியத்தைத் தொடங்கி விட்டால் அதன் பயனை நினைத்தலாகாது" என்றார். பின்னர் இராமர் தாமரைமலர்போன்ற கண்களையுடைய மைதிலியை நினைத்து முகம் வாடி லக்ஷ்மணரை நோக்கிச் சொல்லலுற்றார்:—

“ஆயிரங்கண்ணன் பூமியை மழையினால் குளிரச் செய்து பயிர்களை வளர்த்துத் தன்து காரியத்தை முடித்துக்கொண்டு போய்விட்டான். மேகங்கள் மிகப் பயங்கரமாக முழங்கி, மலைகளுக்கும் மரங்களுக்கும் முன் சென்று, நீரைப் பொழிந்துவிட்டு, இளைப்பாறுகின்றன. பத்துத் திக்குகளையும் நீலோற்பல மலர்போலக் கறுக்கச் செய்த பயோதரங்கள் இப்போது மத மழிந்த யானை போல அடங்கிவிட்டன. நீர்த்துளி சுமந்ததும் மகாவேகத்தையுடையதும் மருது வெட்பாலை மலர்களின் வாசனையுடையதுமான மழைக்காற்று வீசி ஓய்ந்துவிட்டது. மேகங்கள் முழங்குதலும், யானைகள் பிளிறுதலும், மயில்கள் கத்துதலும், மலையருவிகள் ஒலித்தலும் நின்றுவிட்டன. பெரிய மேகங்கள் பொழிந்த மழையால் கழுவப்பட்டுச் சுத்தமாகிய பலவர்ணச்சிகரங்களையுடைய மலைகள் பலவித கிரணங்களைக்கான்று சாந்து பூசப்பட்டனபோல விளங்குகின்றன. நாயகரோடு முதன்முதல் கூடுகின்ற மங்கையர்கள் வெட்கத்தினால் சிறிது சிறிதாகத் தமது சகனத்தைக் காட்டுமாறுபோல இந்தச் சரற்காலத்து நதிகள் மெள்ள மெள்ளத் தம்மிடத்துள்ள மணற் குன்றுகளைக் காட்டுகின்றன. ஏழிலைம்பாலைகளின் கிளைகளிலும், சூரியசந்திர தாரகைகளின் ஒளியிலும், உத்தம வாரணங்களின் லீலைகளிலும் தனது திருவைத் தோற்றுவித்துக்கொண்டு சரற்காலம் வந்துவிட்டது. அநேக பொருள்களைப்பற்றி விளங்குகின்ற சரற்காலத்தின் திரு இப்போது சூரியனுடைய முதற் கிரணங்களால் மலர்ந்த தாமரைமலரில் அதிகமாகப் பிரகாசிக்கின்றது. இந்தக்காலம் ஏழிலைம்பாலை மலர்களின் வாசனையை வீசி, வண்டுக்கூட்டங்களின் வரிப்பாட்டைப் பாடி, காற்றைப் பின்றொடர்ந்து, வனங்களிலுள்ள மதயானைகளின் களிப்பை மிகுக்கச் செய்கின்றது. சரற்காலம் வந்ததும் திரும்பி வந்து, மகா

சரற்கால வர்ணனை.

நதிகளினிடையிலுள்ள புளினங்களைச் சேர்ந்த, அழகிய விசாலமான சிறகுகளை யுடையனவும், நீரிலாசையுள்ளனவும், தாமரை மலர்த்தாது படியப் பெற்றனவுமாகிய சக்கரவாகங்களோடு அன்னங்கள் விளையாடுகின்றன. சரற்காலத்தின் திரு மதங்கொண்ட யானைகளிலும் களிப்புற்ற எருதுகளிலும் தெளிந்த நீரையுடைய மலையருவிகளிலும் பிரிந்து நின்று, வெகு அழகாக விளங்குகின்றது. காட்டிலுள்ள மயில்கள் மேகங்கள் நீங்கிய ஆகாயத்தைக் கண்டு, தோகையை உதிர்த்து, பேடைகளைவிட்டுப்பிரிந்து, நடனஞ் செய்தலை யொழித்து, அழகு குன்றி, விசாரம் பூண்டிருக்கின்றன. வனாந்தரங்கள் நறுமணம் வீசுவனவும், புஷ்ப பாரத்தால் வளைந்த நுனிக்கொம்புகளை யுடையனவும், பொன்னிறமுள்ளனவும், கண்ணுக் கினியனவுமான அநேகம் பிரியக மரங்களினால் நெருப்புக் கொளுத்தி விட்டாற்போல விளங்குகின்றன. களிகொண்டு, மதப்பெருக்கினால் இளைப்புற்று, ஏழிலைம்பாலை மலரின் வாசனையுடையனவாய், பிடிகளோடு கூடி, தாமரை யோடைகளை நாடி, வனங்களிலே திரிகின்ற சிறந்த யானைகளின் கதி மந்த கதியாய்விட்டது. ஆகாயம் மேகங்களின்றித் தீட்டிய கத்தி போல விளங்குகின்றது; ஆறு நீர்ப்பெருக்குக் குறைந்து விட்டது; காற்றுச் செங்கழுநீர் வாசனையளாவி வீசுகின்றது; திசைகள் இருள் நீங்கி விளங்குகின்றன. சூரியனுடைய வெயிலின் வெம்மையால் சேறு உலர்ந்து தரையில் பூதூளி எழும்புகின்றது. ஒருவரோடொருவர் வயிரமுற்றுப் பொருகின்ற அரசர்கள் யுத்தஞ் செய்தற்கு இது ஏற்ற காலம். சரற்காலத்தினால் அழகு மேம்பட்டு, களித்து, உடலில் பூதூளிபடிந்து, மதம் மிகுந்து, போர்செய்ய விரும்பி, பசுக்கூட்டத்தின் நடுவினின்று, எருதுகள் முழங்குகின்றன. விரைந்த கதியையுடைய காதல்கொண்ட யானைப்பிடிகள் இனத்தோடு கூடி மதமுற்றுக் காட்டில் செல்லுகின்ற மந்தகதியை

யுடைய களிற்று யானைகளைச் சூழ்ந்து செல்லுகின்றன. மயில்கள் தமது மிகச் சிறப்புற்ற ஆபரணமாகிய தோகையை உதிர்த்து, நதிகளின் கரையையடைந்து, சாரசக் கூட்டங்களைக்கண்டு அஞ்சினவைகளைப்போல வருத்தமடைந்து, களிப்பற்றுப் போகின்றன. மதம்மீறிய சிறந்த யானைகள் தங்களுடைய பெரிய முழக்கத்தால் சக்கரவாகங்களையும் காரண்டவங்களையும் அஞ்சச்செய்து, தாமரை மலர்கள் நிறைந்த குளங்களைக் கலக்கிக் கலக்கி நீர் குடிக்கின்றன. சேறு நீங்கினவும், மணற்குன்றுகளையுடையனவும், தெளிந்த நீரையுடையனவும், பசுக்கூட்டங்கள் சேர்ந்தனவும், சாரசப் பக்ஷிகளின் ஒலி மிகுந்தனவுமாகிய நதிகளில் அன்னங்கள் களிப்புற்றுக் குதிக்கின்றன. நதியினொலியும் மேகத்தின் முழக்கமும் மலையருவியின் ஆரவாரமும் பெருங் காற்றினோசையும் மயிலின் சத்தமும் களிப்புற்ற தவளைகளின் கத்தும் எல்லாம் அடங்கிவிட்டன. அநேக வர்ணங்களையுடைய நச்சரவங்கள் கார்காலத்தில் மேகந் தோன்றினபோது புற்றில் புகுந்து ஒளித்திருந்து சரீரம் மெலிந்து இப்போது பசியுடையனவாய் வெளியே வந்து உலாவுகின்றன. அந்திக்காலமாகிய பெண் சந்திரனுடைய கரங்கள் பட்டதனாலுண்டாகிய மகிழ்ச்சியினால் தாரகைக்கண்மலர்ந்து இராகமுற்றுத் தானாகவே அம்பரத்தை நீத்துவிடுகின்றாள். இராத்திரிகாலம் உதய சந்திரனாகிய அழகிய முகத்தையும் தாராகணங்களாகிய விழித்த கண்களையும் நிலவாகிய ஆடையையும் உடையதாகி வெள்ளை வஸ்திரம் தரித்த ஒரு பெண்போல் விளங்குகின்றது. முற்றின நெற்கதிர்களை யுண்டு மகிழ்ச்சியடைந்த அழகிய சாரசக் கூட்டங்கள் அதிவேகமாக ஆகாயத்தில் பறந்து செல்வது காற்றி லசைகின்ற மாலைபோலத் தோன்றுகின்றது. தூங்குகின்ற ஒற்றை அன்னத்தையும் குமுத மலர்களையுமுடைய பெரிய குளங்களிலுள்ள நீர் மேகங்கள்

நீங்கிய இரவில் தாரகைகளின் நடுவிலுள்ள சந்திரனை யுடைய ஆகாயம்போல விளங்குகின்றது. சிதறுண்ட அன்னக் கூட்டங்களாகிய மேகலையையும் அலர்ந்த பத் மோற்பல மாலையையு முடைய சிறந்த வாவிகள் அலங் கரிக்கப்பட்ட பெண்களைப்போலத் தோன்றுகின்றன. மூங்கிலிளேசையில் தோற்றிய தூரிய வொலி விடியற்கா லத்து வரும் காற்றினால் பெரிதாகி முழங்குவது தயிர் கடைகிற சத்தமும் ஆனேற்றின் முழக்கமும் ஒன் றையொன்று வளர்ப்பதுபோன்றிருக்கின்றது. ஆற்றங் கரைகள் இளங்காற்றினால் அடிபட்டு விழுந்த அன்ற லர்ந்த மலர்களினாலும் நாணற் பூக்களினாலும் கழுவின சுத்தமான பட்டாடை யணிந்தனபோலத் தோன்றுகின் றன? ஆண்வண்டுகள் மதுவுண்டு களித்து, தாமரை வெட்சி முதலிய மலர்களின் மகரந்தத்தைப் பூசி மஞ்சள் நிறமடைந்து, பெண் வண்டுகளோடு கூடி வனங்களிலே காற்றைப் பின்றொடர்ந்து செல்கின்றன. தெளிந்த நீரும், அலர்ந்த குமுதமும், அன்றிலினொலியும், முற்றி விளைந்த நெற்பயிரும், மிருதுவான காற்றும், களங்கமற்ற சந்திர னும் மழைக்காலங் கழிந்து விட்டதென்று காட்டுகின்றன. மீன்களாகிய மேகலாபரணங்களை அணிந்த நதிப் பெண் களின்செலவு விடியற்காலத்திலே நாயகர்களோடு புணர்ந் திளைத்த வாரஸ்திரிகளின் செலவுபோல மந்தமாகவிருக் கின்றது. பாசிபடர்ந்து சக்கரவாகங்கள் தங்கப்பெற்றுப் பட்டாடைபோல நாணல்காளாற் சூழப்பட்டுள்ள நதி முகங்கள் பச்சை குத்திப் பொட்டிட்ட பெண்களின் முகங் கள்போல விளங்குகின்றன. அலர்ந்த வெட்சி மலர்களா லும் பாண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டுக் களித்த வண்டுகளின் ரீங்காரத்தையுடைய இந்தக் காட்டிலே மிக்க வலியுள்ள காமன் தனது கொடிய வில்லை எடுத்துக் கொண்டுநிற்கின்றான். மேகங்கள் உலகத்தை நல்ல மழை யால்மகிழ்வித்து, நதிகளையுந் தடாகங்களையும் நிறைவித்து,

பூமியில் பயிர்களை முளைக்கச்செய்து ஆகாயத்தில் நின்று மறைந்துவிட்டன. நீர் நிலைகள் தெளிந்த நீரை யுடையன வாய், அன்றில்களின் ஒலிமிக்கு, சக்கரவாகக் கூட்டங்கள் நிறைந்து விளங்குகின்றன. மலைச்சாரல்களில் வெட்சி, எழிலைம்பாலை, கோவிதாரம், பந்துஜீவம் முதலிய மரங்கள் பூத்து விளங்குகின்றன. லக்ஷ்மணா, நதிகளினிடையிலுள்ள மணற்குன்றுகள் அன்னம், வெள்ளைநாரை, சக்கரவாகம் அன்றில் முதலிய பக்ஷிகள் நிறைந்து விளங்குகின்றன பார். ஒருவரோடொருவர் வயிரங்கொண்டு ஒருவரை யொருவர் வெல்ல வெண்ணும் அரசர்கள் யுத்தத்திற்காயத்தம் செய்தற்கேற்ற காலம் வந்துவிட்டது. இதுவே அரசர்கள் படையெடுத்துச் செல்லற்குச் சிறந்தகாலம்; சுக்கிரீவன் அதற்கேற்ற முயற்சி ஒன்றும் செய்யக் காணவில்லை. சீதையைக் காணாது சோகமுற்றிருக்கும் எனக்கு இந்த மழைக்காலத்து நான்கு மாசங்களும் நூறு வருஷங்கள்போலக் கழிந்தன.

"காட்டிலே சக்கரவாகப் பறவை தன்பர்த்தாவைத் தொடர்ந்து செல்லுமாறு போலச் சீதை கொடிய தண்டகாரணியத்தை ஓர் உத்தியானவனம் போல எண்ணி என்னைத் தொடர்ந்துவந்தாள். அப்படிப்பட்ட மனைவியைப் பிரிந்து, இராச்சியத்தை யிழந்து, காட்டிற் கனுப்பப்பட்டுத் துன்பமடைந்த என்னிடத்தில், லக்ஷ்மணா, சுக்கிரீவன் கிருபைசெய்ய வில்லை. அநாதனையும், இராவணனால் வெல்லப்பட்டவனையும், தீனனையும், தூர தேசத்தானையும், வேட்கையுற்றவனையும், தன்னைச் சரணடைந்தவனையும், இருக்கின்றமையால் நான் வானர ராஜனாகிய கெட்டபுத்தியையுடைய சுக்கிரீவனுக்கு அவமதித்தற் காளானேன். அவன் சீதையைத் தேடுதற்குக் காலம் நியமித்துவிட்டு அது வந்ததை அறியாமலிருக்கின்றனன். ஆதலால் நீ கிஷ்கிந்தைக்குச் சென்று சிற்றின்பத்திலே ஆழ்ந்திருக்கின்ற மூர்க்கனை சுக்கிரீவனுக்கு நான் சொன்னதாகச்

சொல்:—முன்னர் நன்றி செய்தவர்கள் தன்னையடைந்து இரந்து நிற்கும்போது அவர்களுக்கு ஆசைகாட்டி உதவி செய்யாதொழிபவன் உலகத்தில் மனுஷர்களுக்குள் கடையானவன். தான் சொன்னசொல்லால் நன்மையுண்டாயினும் தீமையுண்டாயினும் அதைச்சத்தியந்தவறாமல் ஏற்றுக்கொள்பவனே வீரன்; அவனே மனுஷர்களுக்குள் உத்தமன். தான் விரும்பியதை அடைந்துவிட்டு அவ்வாறு தாம் விரும்பியதை அடையாத மித்திரர்களுக்கு உதவிசெய்யாத நன்றி யறிதலில்லாதவன் இறந்தால் அவன் பிணத்தை நாய் நரிகளும் தீண்டமாட்டா. சுக்கிரீவன் யுத்தஞ்செய்தற் பொருட்டு வளைக்கப்பட்ட பொன்னாலாகிய புறத்தினையுடைய எனது வில்லின் மின்போன்ற ரூபத்தைக் காண விரும்புகின்றானென்பது நிச்சயம். நான் கோபங்கொண்டு பாணப்பிரயோகஞ் செய்யும்போது இடிமுழக்கம் போன்ற எனது நாணி ஓசையைக் கேட்க அவன் விரும்புகின்றனன் போலும். வீர, என்னுடைய பராக்கிரமத்தையும் நீ எனக்குத் துணையாயிருப்பதையும் நன்றாயறிந்திருந்தும் அவனுக்கொரு சிந்தையுமில்லை. அவன் தன் காரியம்முடிந்தபின் நாம் ஒருவரோடொருவர் ஏன் நண்பு பூண்டோமென்பதை மறந்துவிட்டான். மழைக்காலம் கழிய வருவேனென்று பிரதிக்கினை செய்துவிட்டு நான்கு மாசங்களை அவன் விளையாடிக் கழித்துவிட்டான். அவன் அமாத்தியர்களோடும் பரிவாரங்களோடுங் கூடி விளையாடிக் களியாட்டயர்கின்றானே யன்றி, சோகத்தால் வருந்தும் எங்களிடத்துச் சிறிதும் தயை செய்கின்றானில்லை. பெருவிறலாய், நீ சுக்கிரீவனிடம் போய் நான் கோபமுற்றுச் சொன்ன இந்த வார்த்தைகளை அவ்விதமாகவேசொல்:—சுக்கிரீவ, வாலிசென்ற வழி இன்னும் அடைபட்டுப்போகவில்லை; ஆதலால் நீ சொன்ன சொல்லில் தவறாதே; வாலி

சரற்காலம் வந்தும் சுக்கிரீவன் வரவில்லையென்று இராமர் கோபித்தல்.

யைப் பின்றொடர்ந்து நீயும் போகாதே. வாலி ஒருவனையே யான் சரத்தினால் யுத்தத்தில் கொன்றேன்; சத்தியந்த வறின உன்னை உன் சுற்றத்தாரோடும் கொல்வேன். இவ் விதமாக நீ சுக்கிரீவனுக்கு எங்கள் காரியத்தில் சொல்ல வேண்டிய வைகளெல்லாவற்றையும் சொல்லு. காலமோ ஆகிவிட்டது; வாக்குச்செய்த தர்மத்துக்கழிவில்லை என்ப தை நன்றாயுணர்ந்து, உன் சத்தியத்தைத் தவறாதுசெய்; எனது பாணத்தாற் கொல்லப்பட்ட வாலியை யமலோ கத்திற்குச்சென்று காணவேண்டாம்."

தமது தமையன் இவ்விதமாகக் கோபமுற்றுப் புலம்பி வருந்துவதைக் கண்டு லக்ஷ்மணர் சுக்கிரீவனி டத்தில் அதிக கோபங்கொண்டார்.

---

## முப்பத்தொன்றாஞ் சருக்கம்.

லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக்குச் செல்லல்.

---

சீதையின் பிரிவினால் வருந்திச் சோகத்தால் மீதூ ரப்பட்டு அறிவழிந்து கோபத்தா லிவ்வாறுகூறிய இரா மரை லக்ஷ்மணர் நோக்கி "அந்த வானரன் சான்றவர் சென்ற வழியிற் செல்லான்; கர்மபலத் தொடர்ச்சியை யறியான்; அரச, செல்வத்தைக் காப்பாற்றான்; ஏனெ னில் அவனுடைய புத்தி அவைகளில் செல்ல மாட்டாது. அவன் உம்முடைய கருணையாற் செல்வத்தையடைந்து, புத் திக்குறைவால் சிற்றின்பங்களில் ஆழ்ந்து, செய்த நன்றியை மறந்துவிட்டான்; அவனைக்கொன்று வாலியைப்போய்க் காணும்படி செய்வோம்; அவனுக்கு இராச்சிய மேற்றதன்று. என் பெருங்கோபத்தைத் தாங்க என்னால் முடியவில்லை; சத்தியந்தவறின் சுக்கிரீ வனை இன்றைக்கே கொல்லுகின்றேன்; வாலிபுத்திர

லக்ஷ்மணர் சுக்கிரீவனைக் கொல்ல வேண்டுமெனல்.

ளுகிய அங்கதன் வானரசேனைகளோடு உமதுபத்தினி யைத்தேடட்டும்" என்று சொன்னார். இவ்விதமாகத் தம தெண்ணத்தைக் கூறி மிகுந்த கோபமுற்று வில்லைக் கையிலெடுத்துக்கொண்டு எழுந்த லக்ஷ்மணரை இராமர் நோக்கி, நய வசனமாக, "லக்ஷ்மணா, உன்னை ஒத்தவர்கள் உலகத்தில் இவ்விதமான பாபத்தைச் செய்யார்கள்; பாபத்தைத் தனது நல்லறிவால் நீக்கிவிடுபவனே வீரன்; அவனே புருஷோத்தமன். இத்தகைய காரியம் நல்லொழுக்கத்தையுடைய நீ செய்யத்தக்கதன்று; சுக்கிரீவனிடத்தில் நாம் முன்செய்த நட்பைப் பாராட்ட வேண்டுமன்றோ? காலந்தப்பிவிட்டானாயினும் அவனிடத்தில் நீகொடிய சொற்களைச் சொல்லாமல் நல்ல இதமான சொற்களையே சொல்லு" என்றார்.

இராமர் சுக்கிரீவன்மேற் கோபம் வேண்டாமெனல்

இவ்விதமாகத் தமையனாரால் நற்புத்தி சொல்லப் பட்ட லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக்குப் போனார். நற்புத்தியும் நல்லறிவு முடையவரும் தமது தமையன் நன்மையையே கருதுபவருமாகிய லக்ஷ்மணர் காலாந்தகன்போலக் கோபமுற்று, இந்திர தனுப்போன்ற தமது வில்லைக் கையிலெடுத்துக் கொண்டு, சுக்கிரீவனுடைய மனையை நோக்கிச் சென்றார். புத்தியால் பிருகஸ்பதியை ஒத்தவரும் தமையன் சொன்னவண்ணம் செய்பவருமான லக்ஷ்மணர் தாம் சுக்கிரீவனுக்குச் சொல்ல வேண்டியதையும், அவன் அதற்குச் சொல்லத்தக்க மறுமொழியையும், தாம் பின்சொல்லவேண்டுவதையும் எண்ணிக்கொண்டு, தமையனாருடைய வருத்தத்தையும் கோபத்தையும் நினைத்துக் கோபாக்கினியாற் சூழப்பட்டவராகி வாயுவைப்போல வேகமாகச் சென்றார். அவர் தமது வேகத்தால் சாலம் தாலம் அஸ்வகர்ணம் முதலிய பல மரங்களைத் தரையிலே விழுத்தி, மலைச்சிகரங்களையும் மற்றை மரங்களையு

லக்ஷ்மணர் கிஷ்கிந்தை செல்லல்.

முருட்டி, வேகமாகச் செல்லும் யானைபோல வழியிலுள்ள கற்களைப் பொடியாக்கி, தமது காரியத்தின் விரைவால் எட்டி யெட்டி அடியெடுத்து வைத்துக்கொண்டு சென்றார். பின்பு இக்ஷ்வாகு குலோத்தமராகிய லக்ஷ்மணர் வானரக்கூட்டங்களாலும் மலைகளாலுஞ் சூழப்பட்டதும் புகுதற்கரியதும் ஆகிய சுக்கிரீவனுடைய பெரிய கிஷ்கிந்தா நகரத்தையும் அந்நகர்ப்புறத்திற் றிரிந்து கொண்டிருந்த கொடிய வானரர்களையும் கண்டு சுக்கிரீவன்மேல் கொண்ட கோபத்தினால் உதடு துடித்தார். யானைகளுக்குச் சமானமான அந்த வானரர்கள் புருஷர்களுக்குட் சிறந்தவராகிய லக்ஷ்மணரைக் கண்டு, மலையினுள் நுழைந்து, மலைச்சிகரங்களையும் பெரிய மரங்களையும் நூற்றுக்கணக்காகக் கையி லெடுத்துக்கொண்டு நின்றார்கள். அப்படி ஆயுதங்களை யெடுத்துக் கொண்ட வானரர்களை லக்ஷ்மணர் கண்டு அதிகமாக விறகூட்டப்பட்ட அக்கினியைப்போல முன்னையிலும் இருமடங்கு கோபங் கொண்டார். யுகாந்த காலத்தில் தோற்றும் காலாந்தகனைப்போலக் கோபங்கொண்ட லக்ஷ்மணரைக்கண்டு நடுக்கங்கொண்டு வானரர்கள் நூற்றுக் கணக்காகத் திக்குகள் தோறும் ஓடினார்கள். அவர்களுட் சிலர் சுக்கிரீவனுடைய மாளிகைக்குச் சென்று லக்ஷ்மணர் கோபங்கொண்டு வந்திருப்பதை அறிவித்தார்கள். சுக்கிரீவன் ஏகாந்தத்திலே தாரையுடனேகூடிக் காமவின்பத்தி லாழ்ந்து வானரத் தலைவர்கள் வந்து சொல்லிய வார்த்தைக்குச் செவிகொடாதிருந்தான்.

*வானரர்கள் லக்ஷ்மணரைக் கண்டோடுதல்.*

மலைகளையும் மேகங்களையும் யானைகளையும் நிகர்த்த வானரர்கள் அமாத்தியர்களின் சொற்படி நகருக்குப் புறத்தே போனார்கள். அவர்கள் கூரிய நகங்களையும் பற்களையுமுடையவர்கள்; புலிபோன்ற வலியுடையவர்கள்; கோரமான முகத்தை யுடையவர்கள்.

*மந்திரிகள் நகரைக் காக்க வானரர்களை ஏவல்.*

அவர்களுட் சிலர் பத்து யானைப் பலமுள்ளவர்கள்; சிலர் நூறு யானைப் பலமுள்ளவர்கள்; சிலர் ஆயிரம் யானைப் பலமுள்ளவர்கள். அவர்கள் கையிலே மரங்களை யெடுத்துக்கொண்டு கிட்டுதற் கரிய கிஷ்கிந்தா நகரத்தை முழுதும் சூழ்ந்துகொண்டு நிற்பதை லக்ஷ்மணர் கண்டு கோபங்கொண்டார், அவர்கள் மதில் வாயிலினின்றும் புறம்போந்து வெளிப்பட்டு நின்றார்கள். லக்ஷ்மணர் சுக்கிரீவனுடைய குற்றத்தையும் தமது தமையனார் சீதையைப் பிரிந்து படும் வருத்தத்தையும் எண்ணிக்கொண்டு சென்றார். அவர் அக்கினிபோல உஷ்ணமான பெருமூச்சு விட்டுக்கொண்டு, கோபத்தாற் கண்கள் சிவந்து, புகைக்கின்ற நெருப்பைப்போலத் தோன்றினார். அவர் பாண முனைகளாகிய நாக்கையும், வில்லாகிய படத்தையும், பலமாகிய விஷத்தையுமுடைய ஐந்துதலை நாகம்போன்றிருந்தார். நாகேந்திரனைப் போலக் கோபங்கொண்டு காலாக்கினிபோ லெரிகின்ற லக்ஷ்மணரை அங்கதன் கண்டு மிகவுந் துன்பமடைந்தான். பெரும் புகழ் படைத்த லக்ஷ்மணர், கோபத்தால் கண்கள்சிவந்து, அங்கதனை யழைத்து "பிள்ளாய், சுக்கிரீவருக்கு யான் வந்ததைத் தெரிவி. இராமருடைய தம்பியாகிய லக்ஷ்மணர் தமையனா ரடைந்த விசனத்தினால் துன்பங்கொண்டு உம்மிடத்தில் வந்து வாயிலிலே நிற்கின்றார். நீர் அவர்களுக்கு வாக்குத் தத்தஞ் செய்ததை முடித்து வையும் என்று சொல்லிவிட்டுச் சீக்கிரந் திரும்பிவா" என்றார். லக்ஷ்மணருடைய வார்த்தையைக் கேட்டு அங்கதன் சோகங்கொண்டு லக்ஷ்மணரங்கே வந்திருக்கிறாரென்று சொல்லச் சிற்றப்பனிடத்திற்குப் போனான். அங்கதன் அந்த வார்த்தைகளைக் கேட்டு அச்சங்கொண்டு முகம் வாடி அவ்விடத்தை விட்டுச் சீக்கிரமாகச் சென்று சுக்கிரீவனுடைய பாதங்களை வந்தித்தான். அவன் முத

லக்ஷ்மணர் தன் வரவைச் சுக்கிரீவனுக் கறிவிக்கும்படி அங்கதனை ஏவுதல்.

வில் சிற்றப்பனுடைய பாதங்களைத் தொட்டு, பின்பு தன் தாயின் பாதங்களைப் பிடித்து, அதன்பின் உருமையின் பாதங்களைத் தடவி, அவர்களுக்கு நடந்த காரியங்க ளெல்லாவற்றையுஞ் சொன்னான். சுக்கிரீவன் கள்ளுண்டும் நித்திரையுற்றும் மயங்கி, காமத்தினால் மோகித்து, அங்கதன் சொன்ன தொன்றையும் தெரிந்து கொள்ளாதிருந்தான். லக்ஷ்மணர் கோபமுற்றிருப்பதை வானரர்கள் கண்டு அச்சங்கொண்டு அவரை உபசரித்துக் கலகலவென்று பெருஞ் சத்த மிட்டார்கள். அவர்கள் லக்ஷ்மணரைக் கிட்டி இடியேற்றுக்குச் சமானமாகச் சிம்மநாதஞ் செய்தார்கள். கள்ளுண்டு மயங்கிக் கண் சிவந்திருந்த சுக்கிரீவன் அந்தப் பெருஞ் சத்தத்தைக் கேட்டுத் தான் அணிந்திருந்த மாலை

சுக்கிரீவன் மயக்கந் தெளிதல்.

கள் அசைய எழுந்திருந்தான். அங்கதனுடைய சொற்களைக்கேட்டு நல்லறிவும் நல்ல தோற்றமு முடையவர்களாகிய பிலக்ஷன் பிரபாவன் என்னும் பெயருடைய சுக்கிரீவனுடைய மந்திரிகளிருவர் அங்கதனோடு சுக்கிரீவ னிடத்திற்குப்போய் அவனுக்கு நற்புத்தி சொல்லுபவர்களாய் லக்ஷ்மணருடைய வரவை அறிவித்தார்கள். அவர்கள் முதலில் நல்ல வசனங்களால் சுக்கிரீவனைச் சாந்தப்படுத்தி, அவன் பக்கலிலிருந்துகொண்டு "சத்தியசந்தர்களும் பெரியவலியுடையவர்களும் நமது நண்பர்களும் இராச்சியத்துக்குடையவர்களும் உமக்கு இராச்சியத்தைத் தந்த

மந்திரிகள் சுக்கிரீவனுக்கு நடந்த காரியத்தைச் சொல்லல்.

வர்களுமாகிய இராம லக்ஷ்மணர்களுள் ஒருவராகிய லக்ஷ்மணர் கையில்வில்லெடுத்துக்கொண்டு நமது வாயிலில் வந்து நிற்கின்றார். வானரர்கள் அவரைக்கண்டு நடுங்கிச் சத்தமிடுகின்றார்கள். அவர் சொல்லாகிய தேர்ப்பாகனும் முயற்சியாகிய தேருமுடையவராய், இராமருடைய கட்டளையால் இங்குவந்திருக்கின்றார். அவர் தாரையின் குமாரனாகிய

அங்கதனை உம்மிடத்தில் அனுப்பி விட்டுக் கோபங் கொண்டு வானரர்களெல்லாரையு மெரித்து விடுபவர்போ லக் கண்கள் சிவந்து வாயிலில் நிற்கின்றார். மகாராஜ, நீர் உமது புத்திரனோடுஞ் சுற்றத்தாரோடும் விரைவாகப் போய் அவரைப்பணிந்து அவருடைய கோபத்தை யாற் றும். தர்மாத்துமாவாகிய இராமர் கட்டளையிட்டதைச் செய்து நீர் சொன்ன சொல்லை நிறைவேற்றும்" என்று சொன்னார்கள்.

## முப்பத்திரண்டாஞ் சருக்கம்.

சுக்கிரீவன் லக்ஷ்மணர் வரவைக்கேட்டுச் சிந்தைகொள்ளல்.

சுக்கிரீவன் மந்திரிமாரை நோக்கி லக்ஷ்மணர் கோபத் திற்குக் காரணம் வினவல்.

சுக்கிரீவன் அங்கதனுடைய வார்த்தையைக்கேட்டு, லக்ஷ்மணர் கோபத்தோடு வந்திருக்கின்றாரென்பதை அறிந்து, தன் மந்திரிமார்களுடன் இருக்கையை விட்டெ ழுந்து, யாது செயற்பாலதென்று சிந்தித்து, சூழ்ச்சியில் வல்ல அவ்வமைச்சர்களை நோக்கி "நான் இராமருடைய தம்பி லக்ஷ்மணருக்கு ஒரு தீங்கும் செய் திலேன்; அவரைக் குற்றமாகப் பேசியுமி ல்லேன்; அங்ஙனமாக, அவர் என்மேல் ஏன் கோபங்கொண்டாரென்று சிந்திக்கி றேன். என்னிடத்தில் அன்பற்று எப் போது தருணம் வாய்க்குமென்று பார்த் திருக்கிற எனது பகைவர் என்னிடத்திலில்லாத குற்றங் களை அவருக்கெடுத்துக் கூறியிருக்கலாம். ஆகையால் நீங் களெல்லாரும் இப்போது உங்கள் புத்திக்கும் நூலின் விதிக்குமேற்க முறைமையாக நன்காராய்ந்து சொல்லுங் கள். இராமரிடத்திலாவது லக்ஷ்மண ரிடத்திலாவது எனக் குப் பயமில்லை; ஒரு காரணமுமின்றி என்மித்திரர்கள் ஏன் கோபங்கொள்ள வேண்டுமென்றே பயமுண்டாகின்றது. ஒருவரோடு நண்பு பூணுவது எவ்வாற்றானு மெளிது;

அதைக்காப்பாற்றுவது மிகவுமரிது; மனவுறுதியில்லா மையால் அற்பகுற்றத்தினாலும் நண்பு அழிந்துபோகும்; ஆகையால்தான் நான் அஞ்சுகின்றேன் மகாத்துமாவாகிய இராமர் எனக்குச் செய்த நன்றிக்கு நான் என்னகைம்மாறு செய்யவல்லேன்" என்று சொன்னான். சுக்கிரீவன் இவ்வாறு சொன்னவளவில் அங்குநின்ற வானரமந்திரிகளுள் ஒருவனான அநுமான் தன்னுள்ஆலோசித்து "அரிக்குலத்தலைவ, இராமர் மிக்கஅன்பினால் உமக்குச்செய்த உபகாரத்தின் நன்மையை நீர் மறக்கவில்லை என்பது எவ்வாற்றானும் ஆச்சரியப்படத்தக்கதொன்றன்று. வீரராகிய இராகவர் பயத்தைத்தூரத்தே எறிந்துவிட்டு, உம்முடைய நட்பின்பொருட்டு, இந்திரன்போன்ற வலியையுடைய வாலியைக்கொன்றார். இராமர் உம்பட்டுவைத்த அன்பினால் உம்மேற் கோபங்கொண்டு தமது தம்பி லக்ஷ்மணரை இங்கே அனுப்பியிருக்கிறாரென்பதற்கு எவ்வளவுஞ் சந்தேகமில்லை. காலமறிந்தவர்களுட் சிறந்தாய், நீர், களித்து மயங்கி இருக்கின்றமையின், இப்போது என்ன காலமென்பதை அறிந்துகொள்ளவில்லை. இப்போது ஏழிலைம்பாலை மலருகின்ற அழகிய சரற்காலம் வந்துவிட்டது. ஆகாயத்தில் மேகங்கள் நீங்கிக் கோள்களும் விண்மீன்களும் நன்றாகப் பிரகாசிக்கின்றன; ஆறுகளும் குளங்களும் தெளிந்துவிட்டன; திசைகள்வெளித்துவிட்டன. வானரத்தலைவ, நாம் வினைசெய்தற்கேற்ற காலம் வந்தும் அதை நீரறிந்துகொள்ளவில்லை. நீர் களித்து மயங்கியிருக்கின்றீரென்று உம்மைத் தெளிவிக்க லக்ஷ்மணர் வந்திருக்கின்றார். சீதையைப் பறிகொடுத்துத் துன்பத்தில் மூழ்கி யிருக்கின்ற மகாத்துமாவாகிய இராமருடைய கோபவார்த்தையை லக்ஷ்மணர் சொல்லப் போகின்றார்; அதை நீர் பொறுமையுடன் கேளும். அவரிடத்தில் அபராதப்பட்ட உமக்குக் கைகூப்பிப் பணிந்து

அநுமான் லக்ஷ்மணரைப் பணியும்படி சுக்கிரீவனுக்குச் சொல்லல்.

லக்ஷ்மணருடைய அருளைப்பெறுவதைவிட நல்லது வேறொன்றுளதென்று நான் எண்ணவில்லை. அரசர்களுக்கு நல்லபுத்தி சொல்லவேண்டியது புத்தி சொல்வதெற்கென்று ஏற்பட்ட மந்திரிகள் கடன்; அதனால் நான் பயமற்று உமக்கிந்த முடிவான வார்த்தையைக் கூறுகின்றேன். இராமர் கோபங்கொண்டு கையில் வில்லெடுத்தாராயின் தேவாசுர கந்தர்வலோகங்களை யெல்லாம் வெற்றிகொள்ளவல்லர். அவர் முன்பு உமக்குச் செய்த உபகாரங்களை மறவாதிருக்கின்ற நீர் அவரை இப்போது கோபங்கொள்ளும்படி செய்வது தக்கதன்று. அவரைப் பின்பு பணிந்து சாந்தப்படுத்த வேண்டுமன்றோ? நீர் புத்திரமித்திராதிகளுடன் சென்று, அவரைத்தலைவணங்கி, நீர் செய்த வாக்குத்தத்தை முடித்து, நாயகி தன் நாயகன் வசப்பட்டு நிற்குமாறுபோல, அவர் வசப்பட்டு நில்லும். கவியின் வேந்த, இராம லக்ஷ்மணர்களுடைய கட்டளையை நீர் மனத்தாலாயினும் தள்ளிவிடல் தக்கதன்று; இந்திரன் போன்ற இராமருடைய பலம் மக்கள் பலமோவென்பது உமது மனத்திற்குத் தெரியும்" என்றான்.

---

## முப்பத்துமூன்றாஞ் சருக்கம்.

லக்ஷ்மணர் கிஷ்கிந்தைக்குள் போதல்.

---

அதன்பின் உள்ளே செல்லும்படி அநுமதிபெற்ற லக்ஷ்மணர், இராமருடைய கட்டளையால், பயங்கரமான கிஷ்கிந்தை நகரத்துள் பிரவேசித்தார். கோபுரவாயிலில் நின்ற மிக்க வலியுடைய பெரியவானரர்கள் எல்லாரும் லக்ஷ்மணரைக்கண்டு கைகூப்பிக்கொண்டு நின்றார்கள். லக்ஷ்மணர் கோபமடைந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு வருவதைப்பார்த்து வானரர்கள் அச்சமுற்று அவரை வந்து சூழ்ந்துகொள்ளாது நின்றார்கள். லக்ஷ்மணர் கண்

ஹுக்குப் புலப்பட்ட அந்தப் பெரியநகரம் இரத்தினமயமாயும், தேவலோகத்தைப்போல அழகியதாயும், மலர்ச்சோலைகளையுடையதாயும், சாலைகளும் மாளிகைகளும் நெருங்கினதாயும், பலபலபண்டங்கள் நிறைந்ததாயும், விரும்பியவைகளைக் கொடுக்கின்ற பழமரங்களும் பூமரங்களுமுடையதாயும், திவ்வியமான மாலைகளையும் வஸ்திரங்களையுந் தரித்தவர்களும் பார்த்தற்கழகிய தோற்றத்தையுடையவர்களும் வேண்டிய ரூபமெடுக்கவல்லவர்களுமான தேவர்களுக்கும் காந்தருவர்களுக்கும் பிறந்த வானரர்கள் வசிக்கப்பெற்றதாயும், சந்தனம், அகில், தாமரைமுதலியவற்றின்வாசனையால் நன்மணங் கமழப்பட்டதாயும், கள்ளுந்தேனும் நாறுகின்ற பெரிய வீதிகளையுடையதாயுமிருந்தது. லக்ஷ்மணர் அங்கே தெளிந்த நீரினையுடைய மலையாறுகளையும், அரசர்வீதியிலே அங்கதன், மயிந்தன், துவிவிதன், கவயன், கவாக்ஷன், கஜன், சரபன், வித்யுன்மாலி, சம்பாதி, சூர்யாக்ஷன், அநுமான், வீரவாகு, சுவாகு, நளன், குமுதன், சுஷேணன், தாரன், ஜாம்பவன், ததிவக்கிரன், நீலன், சுபாடலன், சுநேத்திரன், முதலிய பெரியவானரத் தலைவர்களுடைய, திவ்வியமாலைகள் புனைந்து, தனதானியங்கள் நிறைந்து, மங்கை நல்லார்கள் துவன்றி விளங்குகின்ற வெண்முகில்போன்ற வீடுகளையும் கண்டார். அதன்பின் லக்ஷ்மணர், வெள்ளியமதிலினால் சூழப்பட்டதும், வெல்லற்கரியதும், தேவேந்திரன் மாளிகை போன்றதும், கைலாச முடிபோன்ற வெள்ளிய பிராசாத சிகரங்களையுடையதும், இந்திரனாற் கொடுக்கப்பட்ட, நீலமேகம் போன்றனவாகிய, வேண்டியவற்றைத் தரவல்ல, குளிர்ந்த நிழலையுடைய, அழகிய மலர் மரங்களையுடையதும், ஆயுதபாணிகளாகிய வலிய வானரர்களாற் காக்கப்பட்ட வாயிலையுடையதும், திவ்விய மாலைகள் புனையப்பட்

கிஷ்கிந்தை நகரம்.

லக்ஷ்மணர் சுக்கிரீவனுடைய மாளிகைக்குப் போதல்

டதும், பொற்றோரணங்கள் நாட்டப்பட்டதுமாகிய சுக்கிரீவனுடைய அழகிய மாளிகைக்குள், மேகமண்டலத்துள் சூரியன் புகுமாறுபோல, புகுந்தார். அவர் பலசனங்கள் நிறைந்துள்ள ஏழுகட்டுக்களையுங் கடந்து சென்று, பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட கட்டில்களும் சிறந்த ஆசனங்களு மிடப்பட்டு, இடங்கடோறும் விலையுயர்ந்த கம்பலங்கள் விரிக்கப்பட்டு விளங்கும் மறைவான பெரிய அந்தப்புரத்தைக் கண்டார். அங்கே பிரவேசித்த வுடனே அவர் இனியசுரத்தையுடைய நரப்புக் கருவியோடு பயின்ற பாடலாடல்களைக் கேட்டார். தங்கள் வடிவழகுகளால் செருக்குற்று, உயர்ந்த ஆபரணங்க ளணிந்து, சித்திரமாலை புனைந்து, அதிக கவனமாய் மாலை கட்டிக்கொண்டிருந்த நற்குலத்திற் பிறந்த பல மங்கையர்களையும், நல்லாடையுடுத்து, நல்லுணவுண்டு கவலையின்றித் திரிந்த சுக்கிரீவனுடைய அடிமைகளையும் அவர் கண்டார். அங்கே நூபுரத்தினுடைய ஓசையையும் காஞ்சியின் ஆரவாரிப்பையுங் கேட்டு லக்ஷ்மணர் வெட்கமடைந்து, பின்பு அதிக கோபங்கொண்டு, திசைகளெல்லாம் ஒலிமண்டும்படியாக வில்லைக்குணத்தொனி செய்துவிட்டு, அந்தப்புரத்தினுள் நுழைந்து என்செய்தேனென்று எண்ணி, இராமருடைய சோகத்தை நினைத்துத் துக்கமடைந்து, ஓரேகாந்த ஸ்தானத்திற்போய் நின்றார். அப்போது வானராதிபனாகிய சுக்கிரீவன், லக்ஷ்மணர் செய்த குணத்தொனியினால், அவருடைய வரவை யறிந்து, பயங்கொண்டு, ஆசனத்திலிருந்தபடியே நடுங்கி "அங்கதன் முன்சொல்லியபடி அண்ணன்மாட்டன்புள்ள லக்ஷ்மணர் உண்மையாகவேவந்து விட்டார்போலும் என்று நினைத்தான். லக்ஷ்மணருடைய வரவை முன் அங்கதன் சொல்லக் கேட்டுப் பின் அவர்செய்த குணத்தொனியினால் தெளிந்த சுக்கிரீவன் முகம் வாடி, மனமஞ்சி, அழகிய தாரையை நோக்கி "மாதே, சுபாவத்தில் இளகிய மனத்தையுடைய

வராகிய லக்ஷ்மணர் கோபங்கொண்டு வருதற்குக்காரண மென்னை? அவருடைய கோபத்திற்கு இடம் யாது என்று நீ அறிவாயா? ஒரு காரணமுமில்லாமல் அவர் கோபங் கொள்ளார். நான் அவருக்குச்சிறிதாவது குற்றஞ் செய்திருக்கின்றேனே வென்று நீ நன்காராய்ந்து எனக்குச் சீக்கிரஞ் சொல்லு; அல்லது நீயே நேரேபோய் அவரைக்கண்டு பேசி நல்ல வார்த்தைகளால் அவர் கோபத்தைத் தணி. உன்னைப் பார்த்து அந்தச் சுத்தாத்துமா கோபங்கொள்ளமாட்டார். பெரியவர்கள் பெண்களுக்கு ஒருகாலும் தீங்குசெய்யமாட்டார்கள். உன்னாற் கோபந்தணிந்து மனந் தெளிந்தபின் அந்தக் கமலக் கண்ணனை நான் காண்கின்றேன்" என்று இதமாகக் கூறினான்.

சுக்கிரீவன் லக்ஷ்மணரைச் சாந்தப் படுத்தும் படி தாரையை ஏவல்.

அழகிய தாரை கள்ளுண்ட மயக்கத்தால் கால்கள் தள்ளாட, கண்கள் சுழல, இடையிலணிந்த காஞ்சிக் கோவையும் பொன்னாணும் நழுவ, உடல் வளைய, லக்ஷ்மணருக்கு முன்னே போயினாள். வானரவேந்தன் பத்தினியாகிய தாரையை லக்ஷ்மணர் கண்டு, கோபத்தைத்துறந்து, தலைகுனிந்து, ஒதுங்கிநின்றார். தாரை லக்ஷ்மணருடைய அநுக்ஞைக்கத்தைப் பெற்று, கள்ளுண்ட மயக்கால் நாண்துறந்து "கோமானே, உமது கோபத்திற்குக் காரணம் யாது? உமது கட்டளைப்படி நடவாதவர் யார்? உலர்ந்த காட்டைநோக்கி வருகின்ற தாவாக்கினியைக் கண்டு மனக்கவற்சியின்றி இருப்பவன் யாவன்?" என்று அவருடைய கோபத்தைத் தணிக்குமாறு அன்பான வார்த்தைகள் கூறினாள்.

தாரை லக்ஷ்மணரைக் கண்டு பேசல்.

தாரை கூறிய சாந்தமுடையதும் அச்சமில்லாததுமான வார்த்தையை லக்ஷ்மணர்கேட்டுத் தமது அன்பினை நன்றாகக் காட்டவேண்டி அவளை நோக்கி "கணவனுக்கு

நன்மைசெய்பவளே, உன்னுடைய நாயகன் காம வின்பத்தில் ஈடுபட்டு, அறம் பொருள்களை ஈட்டாது கழிகின்றதை நீ காணவில்லையா? அவன் தன் இராச்சியத்தின் நன்மையையும் துன்பத்தால் மீதூரப்பட்ட எங்களையும் சிறிதும் எண்ணாது தனது மந்திரிமார் முதலிய பரிவாரங்களுடன் கள்ளுண்டு களிக்கின்றானே! அவன் நான்கு மாசங் கழித்து வருவேனென்று எங்களுக்குப் பிரதிக்ஞை செய்துவிட்டுக் களியாட்டில் மனம் வைத்தவனாய் அந் நான்கு மாசமுங் கழிந்ததை அறியாம லிருக்கின்றானே! அறம் பொருள்களை யடைவதற்குக் கள்ளுண்டல் காரணமென்று சொல்லப்படவில்லை; கள்ளுண்டலினால் அறமும் பொருளும் இன்பமும் அழிந்து விடும். செய்ந்நன்றி கொன்றவன் அறத்தை இழந்து விடுவான்; தக்கவர் நட்பை இழந்தவன் பொருளை இழந்துவிடுவான். உண்மையறமுடையாரோடு செய்த நட்புப் பொருளின்பங்களிற் சிறந்தது; அப்படிப்பட்ட நட்பை இழப்பவன் பொருளின்பங்களையு மிழந்தவனே; அவன் அறத்தையு மிழவாது போவதில்லை. இப்படி அவன் தனது நட்பினரை இழந்து போவதாயிருக்கிற காரியத்தில் எம்மால் செய்யத் தக்கது யாது? காரியங்களை யெல்லாமறிந்த நீயே அதைச் சொல்லக்கடவை" என்றார்.

லக்ஷ்மணர் தாரைக்கு மறுமொழி கூறல்.

இவ்வாறு லக்ஷ்மணர் கூறிய, அறம் பொருள் பொறையோடு பயின்ற, இனிய வார்த்தையைத் தாரை கேட்டு, அவரை நோக்கி "கோவிளங்குமர, இது கோபித்தற்குத்தக்க காலமன்று; அன்றி உற்றாரிடத்தில் கோபஞ் செய்வது தக்கதுமன்று. வீர, உமது நன்மையை விரும்பினவன் செய்த குற்றத்தைப் பொறுத்தல் உமது கடன். கோமக, நற்குணங்களால் நிறைந்தவன் குணமில்லாதவனிடத்தில் கோபங் கொள்வதெப்

தாரை சுக்கிரீவனுடைய குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று கேட்டல்.

படி? உம்மைப்போலச் சத்துவகுணமுடையவர்களாய்த் தவத்திற்குப் பிறப்பிடமானவர்கள் கோபமடைவார்களா? அரிக்குலத் தலைவனது நண்பரின் கோபத்தை நான் அறிவேன்; அவரது காரியத்தில் காலவிளம்பன மானதையும் அறிவேன்; நீங்கள் எங்களுக்குச் செய்த நன்றியையும் அறிவேன்; நாங்கள் அதற்கு யாது கைம்மாறு செய்ய வேண்டுமென்பதையும் அறிவேன். மக்களுட் சிறந்தாய், காமனுடையவலி கடத்தற் கரியதென்பதையும் அறிவேன்; அந்தக் காமனால் சுக்கிரீவன் யாரிடத்தில் ஈடுபட்டுச் செயலற்றிருக்கின்றானென்பதையும் அறிவேன். நீர் இவ்வாறு கோபமடைந் திருக்கின்றமையின் நுமது புத்தி காம தந்திரத்திற் செல்லவில்லை. காம வேட்கையுற்றவன் காலதேசங்களையாவது அறம் பொருள்களையாவது அறியான். என்னருகி லிருக்கின்றமையால் காமமுற்று அதனால் நாணிழந்திருக்கின்ற உமது பிராதாவாகிய அரிக்குலத் தலைவனைப் பொறுத்தருளும். தர்மத்திலும் தவத்திலும் பற்றுவைத்த முனிவர்களும் காமவின்பத்தை விரும்பி மோகமடைவார்களாயின் இயல்பாகவே திண்மையில்லாத குரக்கினத்தவனாகிய சுக்கிரீவன் காமவின்பத்திலழுந்தாதிருப்பது எவ்வண்ணம்?" என்று விசுவாசம் பிறக்கும்படியாகப் பொருள் பொதிந்த சொற்களைச் சொல்லிவிட்டு, பெயர்த்தும் தனது நாயகன் பொருட்டு லக்ஷ்மணரை நோக்கி "நரோத்தம, சுக்கிரீவன் காமமுற்றிருந்தானாயினும் முன்னரே தங்கள் காரியத்தை முடிப்பதில் முயற்சி செய்யும்படி கட்டளை யிட்டிருக்கின்றனன். பல மலைகளிலும் வசிக்கின்ற மகா பலமுள்ளவானரர்கள், நினைத்த உருவமெடுக்க வல்லவர்கள், நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் கோடிக் கணக்காகவும் வந்திருக்கின்றார்கள். தடந்தோள, நீர் ஒழுக்கத்தில் தவறினவரல்லர்; நல்லோர்கள் சிநேகத்தன்மையினாலே பிறர் மனைவியரைக் காணுவது குற்றமா

காது; ஆகையால் உள்ளேவருக" என்று கூறினள். இவ்வாறு தாரையா லழைக்கப்பட்ட லக்ஷ்மணர் தாம் வந்த காரியத்தைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று அந்தப்புரத்தினுள் பிரவேசித்து, அங்கே தேவேந்திரனைப்போல் வெல்லற்கரிய புகழ்படைத்த சுக்கிரீவன், விலையுயர்ந்த கம்பலம் விரிக்கப்பட்ட ஒரு சிறந்த பொன் னாசனத்தின் மேலே, திவ்வியாபரணம் அணிந்து, திவ்விய மாலை புனைந்து, திவ்விய வஸ்திரம் தரித்து, ஆபரணாலங்கிர்தராகிய பெண்கள் சூழ, ஆதித்தன்போல் வீற்றிருக்கக் கண்டார். பொன்னிறமுடைய சுக்கிரீவன் சிறந்தவாசனத்திலிருந்து, தன்மனைவியாகிய உருமையை இறுகத் தழுவிக்கொண்டு வீரமுள்ள லக்ஷ்மணர் வருவதைக் கண்டான்.

லக்ஷ்மணர் சுக்கிரீவனைக் காணல்.

---

## முப்பத்துநான்காஞ் சருக்கம்.

லக்ஷ்மணர் சுக்கிரீவனைக் கடிந்துபேசுதல்.

---

மக்களுள் ஏறுபோன்ற லக்ஷ்மணர் கோபங்கொண்டு, ஒருவராலும் தடுக்கப்படாது, அந்தப்புரத்தினுள் வந்ததைச் சுக்கிரீவன் கண்டு மனங்கலங்கினன். கோபங்கொண்டு, நெட்டுயிர்த்து, தேககாந்தியால் எரிகின்ற நெருப்புப்போல் விளங்கி, தமது தமையனுர்க்கு நேர்ந்த துக்கத்தால் வாடியிருக்கின்ற தசரதகுமாரரை அரியின்வேந்தன் கண்டு பொன்மயமான ஆசனத்தைவிட்டு அலங்கரிக்கப்பட்ட பெரிய இந்திரத் துவசம்போலத் திடீரென்று எழுந்திருந்தான். ஆகாயத்தில் பூரணசந்திரன் உதயமானபோது தாராகணங்களெல்லாம் தோன்றினாற்போல, சுக்கிரீவன் எழுந்திருக்கவே அவனைத் தொடர்ந்து உருமை முதலிய பெண்களெல்லாம் எழுந்திருந்தார்கள். சிவந்த கண்களையுடைய சுக்கிரீவன் கைகூப்பிக்கொண்டு ஒரு

பெரிய கற்ப விருக்ஷம்போல அவ்விடத்து நின்றான். விண்மீன்களின் நடுவே விளங்குகின்ற சந்திரனைப்போல உருமாசமேதனாய் நாரியர் நடுவில் நின்ற சுக்கிரீவனை லக்ஷ்மணர் கோபங்கொண்டு நோக்கி "நல்ல குலத்திற் பிறந்தவனும், அருளுடையவனும், புலன்களை வென்றவனும், நன்றியறிந்தவனும், உண்மை பேசுபவனுமாகிய அரசனை உலகம் மேலாகக்கூறும். அதர்மம் புரிந்துகொண்டு தனக்கு நன்றிசெய்த நண்பர்களுக்குப் பொய்ப்பிரதிஞ்ஞை செய்கின்ற அரசனிலும் கொடியன் யாவனுளன்?

லக்ஷ்மணர் சுக்கிரீவனைப் பேசுதல்.

கவியின் வேந்தே, "ஒரு குதிரையின் பொருட்டுப் பொய் பேசுபவன் நூறு குதிரைகளைக்கொன்ற பாபத்திற்காளாவான்; ஒரு பசுவின்பொருட்டுப் பொய் பேசுபவன் ஆயிரம் பசுவைக்கொன்ற பாபத்திற் காளாவான்; ஒரு மனிதன் பொருட்டுப் பொய்பேசுபவன் தன்னையும் தனது மித்திரரையுங் கொன்றவனாவான். முன்பொரு நன்மை செய்யப்பெற்று அதற்குப்பின் பொருகைம்மாறு செய்யாத செய்ந்நன்றி கொன்றவன் உலகத்தில் எல்லாராலும் கொல்லப்படத்தக்கவன்" என்று பிரமதேவர் ஒரு நன்றி கொன்றவனைக்கண்டு கோபங்கொண்டு பாடினார். இதை நீ யறிந்துகொள். பிரமக்கொலை செய்தவனுக்கும், கள்ளுண்டவனுக்கும், திருடனுக்கும், விரதந் தவறினவனுக்கும் அறநூல் செய்தவர்கள் உய்திகூறி யிருக்கின்றார்கள்; நன்றி கொன்றவனுக்கு உய்திகூறவில்லை. முன்னர் இராமரால் உதவிசெய்யப்பெற்றுப் பின்னர் அவருக்குக் கைம்மாறு செய்யாத நீ அநாரியனும், நன்றி கொன்றவனும், பொய்பேசுபவனுமாகின்றனை. இராமரால் உதவிசெய்யப்பெற்ற நீ, அவருக்குக்கைம்மாறு செய்ய இச்சைகொண்டு, சீதையைத் தேடுவதில் முயற்சி செய்யவேண்டாமோ? நீ பொய்ப்பிரதிஞ்ஞை செய்துவிட்டுச் சிற்றின்பத்தில் ஆழ்ந்திருக்கின்றனை. தவளைக்குரலையுடைய சர்ப்ப

மென்றுன்னை இராமர் அறியாது போய்விட்டார். துராத்துமாவும் பாபியுமாகிய நீ பெருந்தோளும் கருணையுமுடைய மகாத்துமாவாகிய இராமரால் வானரராச்சியத்தை அடைந்தனை. இராமர் உனக்குச் செய்த உதவியை நீ எண்ணுகின்றுயில்லை; ஆகையால் நீ கூரிய பாணங்களாற் கொல்லப்பட்டு வாலியை விரைவில் போய்க்காண்பாய். சுக்கிரீவ, வாலிசென்ற வழி இன்னும் மூடப்படவில்லை; ஆதலால் நீ செய்த வாக்குத்தத்தத்தில் தவருதே; வாலிசென்றவழியில் நீயும் செல்லாதே. இக்ஷ்வாகு குலோத்தமருடைய கார்முகத்தினின்று விடப்படும் வச்சிராயுதம்போன்ற பாணத்தை நீ காணவில்லை; அதனுற்றுன் நீ சுகத்தைப் பாராட்டிக்கொண்டு இராமருடைய காரியத்தை மனத்தினுலும் நினைக்காதிருக்கின்றனை" என்று கூறினர்.

## முப்பத்தைந்தாஞ் சருக்கம்.

*தாரை லக்ஷ்மணரைச் சாந்தப்படுத்தல்.*

தேககாந்தியால் எரிகின்ற அக்கினிபோல் விளங்கிய லக்ஷ்மணர் இவ்வாறு கூற, சந்திரன்போன்ற முகத்தையுடைய தாரை அவரை நோக்கி "லக்ஷ்மண, நீர் இவ்வாறு கூறுதலாகாது; வாநரவேந்தன் இந்தக் கடுஞ்சொல்லைக் கேட்கத்தகாது, அதுவும் உமது வாயிலிருந்து கேட்கலாகாது. வீர, கவியின் வேந்தனுகிய சுக்கிரீவன் நன்றி கொன்றவனு மல்லன்; கள்வனு மல்லன்; கொடியவனு மல்லன்; பொய்யனு மல்லன்; வஞ்சகனு மல்லன். வீரனுகிய சுக்கிரீவன் போரிலே மற்றொருவரால் செய்யப்படாத உதவியை இராமர் செய்ததை மறந்துவிட்டவனு மல்லன். இராமருடைய அருளினு

*தாரை லக்ஷ்மணர் கோபத்தை ஆற்றுதல்.*

லன்றோ அவன் நிலையான கீர்த்தியையும் வானர ராச்சியத்தையும் உருமையையும் என்னையும் பெற்றிருக்கின்றான்? அவன் முன்பு துன்பத்தில் அழுந்திக்கிடந்து இப்போது இந்தப்பெருஞ் சுகத்தை அடைந்ததனால் விசுவாமித்திர முனிவரைப்போலத் தனது முயற்சிக் கேற்றகாலம் வந்துவிட்டதை அறியாதிருக்கின்றான். லக்ஷ்மண, அந்த விசுவாமித்திர மாமுனிவர் முன்பு கிருதாச்சியினிடத்தில் மோகங்கொண்டு அவளோடு கழித்த பத்துவருஷங்களை ஒரு பகலாக எண்ணித் தம் முயற்சிக்குத்தக்ககாலம் வந்ததையும் அறியாதிருந்தாரன்றோ? பெருந் தவத்தினராகிய விசுவாமித்திரர் செய்தி இப்படியாயின் மற்றுள்ள பாமர ஜனங்களின் செய்தியைச் சொல்லவேண்டுவதென்! தேக சுபாவத்தின்படி நடந்து மெலிந்து திருப்தியடையாத சுக்கிரீவன் காமவின்பத்தில்வைத்த ஆசையை நீவிர் பொறுத்தல்வேண்டும். பொருள் நிச்சயம் பண்ணாத புல்லறிவாளர்போல நீவிர் கோபவசத்தராதல் தக்கதன்று. மக்களுள் ஏறுபோல்வாய், உம்மைப்போல நற்குணமுடையவர்கள் ஒன்றைத் தீர விசாரித்தறியாது உடனே கோபத்திற்கு வசப்பட மாட்டார்கள். அறமுணர்ந்தாய், சுக்கிரீவன் பொருட்டு நான் உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன்: பெருங் கோபத்தால் உண்டாகும் பெருந் துன்பத்தை விட்டுவிடும். இராமருடைய பிரீதிக்காகச் சுக்கிரீவன் உருமையையும், என்னையும், வானரராச்சியத்தையும், தன தானிய செல்வங்களையும் விட்டுவிடுவான் என்பது நான் அறிந்தது. சுக்கிரீவன் இராவணனைப்போரில் கொன்று, உரோகிணியோடு சந்திரனைச் சேர்த்து வைத்தாற்போல, சீதையோடு இராமரைச் சேர்த்துவைப்பான். இலங்கையிலுள்ள ராக்ஷசர்கள் நூறாயிரங்கோடி, பதினாயிரம், முப்பத்தாறாயிரம், நூறு என்னும் தொகையினர். அந்த வெல்லுதற்கரிய, வேண்டிய உருவெடுக்க வல்ல ராக்ஷசர்களையும் மைதிலியைக் கள

வெடுத்துச்சென்ற இராவணனையும் துணையின்றிக் கொல்லமுடியாது. சுக்கிரீவன் துணையின்றி ஒருவனு யிருந்து கொண்டு யுத்தத்தில் அந்த ராக்ஷசர்களையும் கொடிய இராவணனையும் கொல்லமாட்டான். இவ்வாறு அவற்றை நன்கறிந்த கவியின் வேந்தராகிய வாலி எனக்குச் சொன்னர். இவ்வளவு சேனை இராவணனுக்கு எவ்வாறு வந்ததென்பது எனக்குத் தெரியாது; நான் வாலியிடத்தில் கேட்டபடி சொன்னேன். உங்களுக்குத் துணைசெய்யும் பொருட்டு யுத்தத்திற் கென்று அநேக வானரவீரர்களை அழைக்கும்படி வானரத்தலைவர்கள் போயிருக்கின்றனர்கள். அந்த வலிய வீரர்கள் வரவை எதிர்பார்ப்பதனல் சுக்கிரீவன் இராமருடைய காரியத்தை முடிப்பதற்குப் புறப்படாதிருக்கிறன். லக்ஷ்மண, சுக்கிரீவன் செய்திருக்கின்ற ஏற்பாட்டின்படி அந்த மகா பலமுள்ள வானர சேனைகளெல்லாம் இன்றைக்கு வந்து சேர்ந்துவிடும். காகுத்த, இன்றைக்கு ஆயிரங்கோடி கரடிகளும் நூறுகோடி முசுக்களும், அநேககோடி வானரர்களும், உம்மை வந்தடைவார்கள். ஆதலால் நீர் உமது கோபத்தை அடக்கும். உமது சினந்த முகத்தையும் கோபத்தால் இரத்தம்போல் சிவந்திருக்கின்ற கண்ணையும் பார்த்துச் சிறந்த வானர வனிதைகள் மனக்கலக்க மடைந்திருக்கிறர்கள்; அவர்கள் எல்லாரும் முன்னையிற் பயம் பிடித்தவர்களா யிருக்கின்றர்கள்" என்று கூறினள்.

---

## முப்பத்தாறுஞ் சருக்கம்.

லக்ஷ்மணர் கோபமாறித் தாம் கூறிய கடுஞ்சொற்களை மன்னிக்க வேண்டுமென்று சுக்கிரீவனை வேண்டல்.

---

இவ்வாறு தாரை கூறிய தர்மமான பணிமொழிகளை நற்குணமுள்ள லக்ஷ்மணர் ஏற்றுக்கொண்டார். அவ்

வாறு அவர் ஏற்றுக்கொள்ளவே சுக்கிரீவன் லக்ஷ்மண ரிடத்துக் கொண்ட அச்சத்தை நனைந்த வஸ்திரத்தைக் கழிப்பதுபோல் நீக்கிவிட்டான். அதன்பின் அவன் தன் கழுத்திலிருந்த அழகிய பல வர்ணமுடைய மாலையை அறுத்தெறிந்துவிட்டுக் கள்ளுண்ட மயக்கத்தினின்றும் நீங்கினன். பின்னர் அவன் அஞ்சத்தக்க பலத்தையுடைய லக்ஷ்மணரை நோக்கி மிக வணக்கமாக "சுமித்திரை புத்திர, கெட்டுப்போன எனது செல்வத்தையும், கீர்த்தியையும், வானர ராச்சியத்தையும் நான் இராமருடைய அருளினல் மறுபடியும் நிலை பேறுடையனவாகப் பெற்றுக் கொண்டேன். பகைவரேறே, தமது தொழிலாற் புகழ் படைத்த அந்த இராமர் செய்த செய்கைக்குக் கைம்மாறு செய்ய யாரால் முடியும்? அவர் தமது சுயவலியினல், யான் செய்யும் சகாயமும் சிறிது துணையாக நிற்க, இராவணனைக் கொன்று சீதையை அடைவார். ஒரு பாணத்தினலேயே ஏழு மராமரங்களையும், மலையையும், பூமியையும் பிளந்த இராமருக்கு மற்றொருவர் துணை எற்றிற்கு? லக்ஷ்மண, தமது வில்லினுடைய ஞாணைத்தெறித்த சத்தத்தினல்பூமியையும் மலைகளையும் நடுங்கச்செய்த இராமருக்குத்துணையினல் யாது பயன்? மக்களுள் ஏறுபோல்வாய், அவர் தமது பகைவனகிய இராவணனை அவன் சேனைகளோடு கொல்லப் புறப்பட்டுப் போகையில் நான் அவரைப் பின்றொடர்ந்து போவேன். நான் அவரிடத்து வைத்த விசுவாசத்தினலாவது அன்பினலாவது சிறிது ஆணை மீறி நடந்திருப்பேனயின் அதைப் பொறுத்துக்கொள்வது அவர் கடமையாகும். உலகில் குற்றஞ் செய்யாதவன் யாவன்?" என்று கூறினன். மகாத்துமாவாகிய சுக்கிரீவன் இவ்வாறு சொன்னவுடன் லக்ஷ்மணர் பிரீதியடைந்து அன்போடு அவனை நோக்கி "சுக்கிரீவ, மிக்க வணக்க

சுக்கிரீவன் தனது குற்றத்தைப் பொறுக்க வேண்டுமெனல்.

முடைய உம்மைத் துணையாகப் பெற்ற என் தமையனார் எவ்வாற்றானும் துணையாற் சிறந்தவரே. வலியாலும், நேர்மையாலும், தூய்மையாலும் மிகச் சிறந்த நீர் இந்த வானர ராச்சியத்தின் திருவை அடைதற்குத் தக்கவரே. உம்முடைய சகாயத்தினால் வலியுடைய இராமர் தமது பகைவரை யுத்தத்தில் விரைவில் அழித்து விடுவார். இதிற் சமுசயமில்லை. சுக்கிரீவ, அற முணர்ந்தவரும் செய்ந்நன்றி அறிந்தவரும் யுத்தத்திற் பின்னிடாதவருமாகிய நீர் சொன்ன சொற்கள் மிகவும் பொருத்த முடையன. வானரோத்தம, நீரும் என்து தமையனாரு மன்றி, அறிவுடையவர் யார்தான் இவ்வாறு சொல்ல வல்லவர்? ஆண்மையாலும் வலியாலும் இராமரையே நிகர்த்த உம்மைத் தேவர்கள் அவர்க்குத் துணையாகக் கொடுத்திருக்கிறார்கள். வீர, நீர் சீக்கிரம் என்னோடு புறப்பட்டுவந்து மனைவியைப் பறிகொடுத்து வருந்துகின்ற உமது தோழனைத் தேற்றுதல் செய்யும். துன்பத்தில் மூழ்கியிருக்கும் இராமருடைய வார்த்தையைக் கேட்டு நான் உம்மைக் கூறிய கடுஞ் சொற்களை நீர் மன்னிக்க வேண்டும்" என்றார்.

லக்ஷ்மணர் சுக்கிரீவனைப் புகழ்தல்.

---

## முப்பத்தேழாஞ் சருக்கம்.

வானரசேனை புறப்பட்டு வருதல்.

---

லக்ஷ்மணர் இவ்வாறு கூற, சுக்கிரீவன் பக்கத்தில் நின்ற அநுமானை நோக்கி "மகேந்திரம், இமயம், விந்தம், கைலாசம் முதலிய மலைகளிலும், மந்தரமலையிலும், பாண்டு மலையிலும், பஞ்சசைலத்திலு மிருப்பவர்கள், மேற்குத்திக்கிலே சமுத்திராந்தத்திலே உதய சந்திரன்

சுக்கிரீவன் வானரர்களை யழைக்கும்படி அநுமானுக்குக் கட்டளையிடல்.

போலச் சிவந்த நிறமுடையனவும் எப்போதும் பிரகாசித்துக்கொண் டிருப்பனவுமாகிய மலைகளி லிருப்பவர்கள், கிழக்குத் திக்கிலே உள்ள அந்திவானம்போற் சிவந்த மலைகளிலும், அச்சம்பரந்த பத்மதால வனத்திலு மிருக்கும் வானர வீரர்கள், அஞ்சன மலையில் வசிக்கின்ற கருமேகம்போன்ற நிறமும் யானைபோன்ற பலமுமுடைய வானரர்கள், பொன்போன்ற நிறமுடைய மனோ சிலைக்குகைகளில் வசிக்கும் வானரர்கள், மேருமலையின் பக்கத்திலுள்ளவர்கள், தூமிரகிரியில் வசிப்பவர்கள், மகாருணமலையில் வசிப்பவர்களாகிய மைரேயம் என்னும் மதுவுண்ணும் பாலசூரியன்போன்ற வானரர்கள், அழகிய பெரிய நன்மணம் வீசுகின்ற வனங்களில் வசிப்பவர்கள், சிறந்த முனிவராச்சிரமங்களி லிருப்பவர்கள், பூமியில் அவ்வவ்விடங்களிற் சிதறுண் டிருப்பவர்கள் ஆகிய யாவரிடத்தும்வேகமுள்ள வானரர்களையனுப்பிக் கொடுத்தல் இன்சொற் சொல்லல் முதலிய உபாயங்களைச் செய்து அவர்களை அழைப்பி. முதலில் நான் அனுப்பின தூதர்கள் வேகமுடையவர்கள்; ஆயினும் அவர்களை விரைந்து வரச்செய்யும்பொருட்டு வேறுவானரர்களை நீ மறுபடியும் அனுப்பு. காமவின்பத்தில் மூழ்கியிருப்பவர்களையும் காலந் தாழ்ப்பவர்களையும் எனது கட்டளையென்று சொல்லி நீ சீக்கிரம் இங்கே அழைத்துவா. எனது கட்டளைப்படி பத்து நாளைக்குள் வராதவர்கள் எல்லாரையும் ராஜகட்டளையை மீறின கொடியவர்களென்று கொன்றுவிடு. என் கட்டளைப்படி நடப்பவர்களாகிய வானர சிங்கங்கள் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் கோடிக் கணக்காகவும் என் ஆஞ்ஞைப்படி திசைகளெங்குஞ் செல்லட்டும். அஞ்சத்தக்க உருவத்தையுடைய வானரர்கள் மேகம்போலவும் மலைபோலவும் ஆகாயத்தை மூடிக்கொண்டு செல்லட்டும். வானரர்

களின் இருப்பிடங்களையறிந்த வானரர்களெல்லாரும் அந்தந்த இடங்களுக்குப்போய் அங்கங்குள்ள வானரர்களை எல்லாம் சீக்கிரம் அழைத்து வரட்டும்" என்ருன்.

இவ்வாறு வானரராஜன் கூறிய வார்த்தையை வாயுகுமாரன் கேட்டு எல்லாத் திக்குகளிலும் போகும்படி வானரர்களை யனுப்பினன். அரசனுல் அனுப்பப்பட்ட வானரர்கள் அந்தக் கணத்திலே ஆகாய மார்க்கமாக நக்ஷத்திரங்களும் பறவைகளுஞ் செல்லும் வழியிலே சென்ருர்கள். வானர வீரர்கள் வானரர்களை இராம காரியத்தின் பொருட்டுச் சமுத்திரங்களுக்கும் மலைகளுக்கும் வனங்களுக்கும் யாறுகளுக்கும் அனுப்பினுர்கள். வானரர்கள் ராஜராஜனுகிய காலாந்தகன் போன்ற சுக்கிரீவனுடைய கட்டளையைக் கேட்டுப் பயந்து சென்ருர்கள். அஞ்சன மலையிலிருந்து மைபோன்ற கருநிறமுடைய வேகமுள்ள மூன்று கோடி வானரர்கள் இராமரிருக்கின்ற மலைக்குப் போனுர்கள். சூரியன் போய்ப்படுகின்ற அத்தகிரியிலிருந்து உருக்கின பொன்போன்ற மஞ்சள் வர்ணமுடைய பத்துக்கோடி வானரர்கள் போனுர்கள். கைலாச மலையிலிருந்து சிங்கத்தின் பிடர் மயிர் போன்ற நிறமுடைய ஆயிரங் கோடி வானரர்கள் சென்ருர்கள். இமய மலையிலிருந்து பல மூலங்களை உண்பவர்களாகிய ஆயிர மாயிரங்கோடி வானரர்கள் சென்ருர்கள். விந்த மலையிலிருந்து கொடிய அங்காரகன் போன்ற அச்சத்தைத் தருந் தொழிலையுடைய ஆயிரங் கோடி வானரர்கள் சென்ருர்கள். பாற்சமுத்திரத்தின் கரையிலிருந்தும் தமால வனத்திலிருந்தும் சென்றவர்களுக்கும் தேங்காய் தின்பவர்களுக்கும் ஓரளவில்லை. வானரர்கள், சூரியனை உண்ணுதற்கு வெளிப்பட்டாற்போல, வனங்களிலிருந்தும் குகைகளிலிருந்தும் யாறுகளிலிருந்தும் புறப்பட்டார்கள்.

வானரசேனைகளை விரைந்து புறப்படச் செய்யும் பொருட்டுப் போன வானரர்கள் இமயகிரியில் ஒரு பெரிய மரத்தைக் கண்டார்கள். அந்த அழகிய பெரிய மலையின்மேலே தேவர்களெல்லாருடைய மனத்தையும் சந்தோஷப்படுத்திய அழகிய மாகேசுவர யாகமொன்று முன் நடந்தது. அப்போது அங்கே சிதறின அன்னத்திலிருந்து முளைத்த அமுதம்போலும் பழங்களையும் கிழங்குகளையும் அவர்கள் கண்டார்கள். அந்தத் திவ்வியமான பல மூலங்களை ஒரு முறை புசித்தால் ஒருவனுக்கு ஒரு மாசம்வரையில் பசி யிருக்க மாட்டாது. அந்தத் திவ்வியமான பழங்களையும் கிழங்குகளையும் திவ்வியமான ஓஷதிகளையும் அந்த வானரத்தலைவர்கள் பிடுங்கினார்கள். சுக்கிரீவனைப் பிரீதிப்படுத்தும் பொருட்டு அவர்கள் அந்த வேள்வித்தானத்திலிருந்த நல்ல வாசனையுள்ள புஷ்பங்களையும் எடுத்துக்கொண்டார்கள். அந்த வானர வீரர்கள் பூமியிலுள்ள வானரசேனைகளெல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு அவைகளுக்கு முன்னே மிக விரைவாகச் சென்று ஒரு முகூர்த்த காலத்தில் சுக்கிரீவனிருந்த கிஷ்கிந்தை போய்ச் சேர்ந்தார்கள். அவர்கள் தாங்கள் கொண்டுவந்த பல மூலங்களையும் ஓஷதிகளையும் சுக்கிரீவன்முன் வைத்து "நாங்கள் காடுகள் மலைகள் சமுத்திரங்கள் எங்குஞ் சென்றோம்; பூமியிலுள்ள வானரர்களெல்லாரும் உமது கட்டளையின்படி வருகின்றார்கள்" என்றார்கள். அதைக்கேட்டுச் சுக்கிரீவன் சந்தோஷமடைந்து அவர்கள் கொண்டுவந்து வைத்த காணிக்கைகளை மனமகிழ்ந்து ஏற்றுக்கொண்டான்.

## முப்பத்தெட்டாஞ் சருக்கம்.

சுக்கிரீவன் இராமரிடம் செல்லல்.

சுக்கிரீவன் வானரர்கள்கொண்டுவந்து வைத்த அந்தக் காணிக்கைகளை யெல்லாம் பெற்றுக்கொண்டு அவர்க

ளைப் புகழ்ந்து விடைகொடுத் தனுப்பினன். அவன் தங்களுக் கிடப்பட்ட வேலையை முடித்துவந்த சூரராகிய வானரர்களை அனுப்பிவிட்டு இனித் தனது காரியமும் இராமருடைய எண்ணமும் முடிந்து விட்டனவென் றெண்ணினன். அப்போது லக்ஷ்மணர் மிக்க பலத்தை யுடைய வானரோத்தமனாகிய சுக்கிரீவனை நயமொழிகளால் சந்தோஷப்படுத்தி, வணக்கமாக "திருவுடையாய், உமக்குப் பிரியமாகில் இனிக் கிஷ்கிந்தையை விட்டுப் புறப்படுவேம்" என்றார். லக்ஷ்மணர் கூறிய இந்த வார்த்தையைக்கேட்டுச் சுக்கிரீவன் மிகவுஞ் சந்தோஷமடைந்து "அப்படியே யாகட்டும்; நாங்கள் போவோம். நீர் சொன்னபடி நான் செய்கிறேன்" என்றான். சுக்கிரீவன் சுபலக்ஷணங்களையுடைய லக்ஷ்மணருக்கு இவ்வாறு சொல்லிவிட்டுத் தாரை முதலாகிய பெண்களுக்கு விடைகொடுத் தனுப்பினன். பின்பு அவன் "இங்கே வாருங்கள்" என்று வானரத்தலைவர்களை உரத்துக் கூப்பிட்டான். அந்த வார்த்தையைக் கேட்டு அவர்கள் சீக்கிரம் வந்து சேர்ந்தார்கள். அவர்களுள் பெண்கள்முன் போகத்தக்கவர்கள் கைகூப்பிக்கொண்டு சுக்கிரீவன் முன் வந்து நின்றார்கள். அப்படி வந்து நின்றவர்களைச் சூரியன்போன்ற ஒளியுடைய சுக்கிரீவன் நோக்கி "சீக்கிரமாக எங்களுக்கொரு சிவிகை கொண்டுவாருங்கள்" என்றான். அதைக் கேட்டு வானரர்கள் விரைவாகச் சென்று ஓரழகிய சிவிகையைக் கொண்டுவந்தார்கள். அதனைப்பார்த்துச் சுக்கிரீவன் லக்ஷ்மணரை நோக்கி "லக்ஷ்மண, இதில் சீக்கிரம் ஏறும்" என்று சொன்னன். அப்படிச் சொல்லிவிட்டுச் சூரியன்போன்ற ஒளியுடைய சுக்கிரீவன் பெரிய வானரர்கள் சுமக்கின்ற அந்தப் பொற் சிவிகையின்மேல் லக்ஷ்மணருடன் ஏறினன். தலைக்குமேலே வெண்குடை நிழற்ற, நாற்புறத்தும் வெண்சாமரம்

சுக்கிரீவன் சிவிகையேறிச் செல்லல்.

இரட்ட, சங்க படகங்கள் முழங்க, வானரர்கள் புகழ, மேலாகிய ராஜ திருவுடனே சுக்கிரீவன் சென்றான். அவன் சுறு சுறுப்புடைய அநேக வானரவீரர்கள் ஆயுதபாணிகளாய்ச் சூழ்ந்து வர இராமர் இருக்குமிடம் போய்ச்சேர்ந்தான். அங்கு சேர்ந்தவுடன் அவன் லக்ஷ்மணரோடு சிவிகையை விட்டிறங்கி இராமரை அணுகிக் கைகூப்பி நின்றான். அவன் கைகூப்பினதைக் கண்டு அவனுடன் வந்த வானரர்களெல்லாரும் கைகூப்பினார்கள். தாமரை மூகைகள் நிறைந்த தடாகம்போலக் கைகூப்பி நிற்கும் வானரசேனையைக் கண்டு இராமர் சுக்கிரீவனிடத்தில் மகிழ்ச்சி யடைந்தார். சுக்கிரீவன் அவர் பாதத்தில் விழுந்து தலைவணங்க, இராமர் அவனை எடுத்து அன்பினாலும் மரியாதையினாலும் தழுவிக்கொண்டார்; தழுவினபின் "இப்படி இருக்க" என்று சொன்னார். பின்பு தரையிலிருந்த சுக்கிரீவனை இராமர் நோக்கி "அறம் பொருள் இன்பங்களைப் பாகுபாடுசெய்து ஒவ்வொன்றையும் தக்ககாலத்தில் அனுபவிப்பவனே அரசனாவான். அறத்தையும் பொருளையும் நீக்கிவிட்டு இன்பத்திற் பயின்று நிற்பவன் மரநுனியில் படுத்துறங்கிக் கீழேவிழுந்தபின் விழித்துக்கொள்பவனாவன். பகைவர்களை அழித்து நண்பினரைச் சேர்த்து அறம் பொருள் இன்பங்களின் பயனைத் தக்க காலத்தில் அனுபவிக்கின்ற அரசன் தருமமுடையவனாவன். பகைவரை யழிப்பவ, நாம் முயற்சி செய்தற் கேற்றகாலம் வந்துவிட்டது. நாம் இனிச் செய்யவேண்டுவதை மந்திரிகளோடு ஆலோசனை செய்க" என்றார். அப்போது சுக்கிரீவன் இராமரை நோக்கி "தடந்தோளா, கெட்டுப்போன எனது செல்வத்தையும் கீர்த்தியையும் நிலையான வானர ராச்சியத்தையும் உம்முடைய அருளினால் நான் மீளவும் பெற்றுக்கொண்டேன். ஒருவன் செய்த நன்றிக்குக்

இராமர் சுக்கிரீவனைச் சீதையைத் தேட முயற்சி செய்யச் சொல்லல்.

கைம்மாறு செய்யாதவன் மக்களுள் கடைப்பட்டவன். இந்த வலியுடைய நூறு வானரத் தலைவர்களும் பூமியிலுள்ள வானரர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டு இங்கு வந்திருக்கிறார்கள். பெருங் காடுகளையும் சோலைகளையும் துர்க்கங்களையும் நன்றா யறிந்தவரும் கோரரூபமுடையவருமான வீரத்தன்மையுடைய கரடிகளும், முசுக்களும், விரும்பிய ரூபமெடுக்கவல்ல தேவர் கந்தர்வர்களின் பிள்ளைகளாகிய வானரர்களும் தங்கள் தங்கள் சேனைகள் சூழ வழியில் வந்துகொண்டிருக்கிறார்கள். இந்திரன்போன்ற வலியுடைய வானரர்கள், நூறு, நூறாயிரம், கோடி, *அயுதம், சங்கு, அற்புதம், நூறற்புதம், மத்தியம், அந்தம், சமுத்திரம், பரார்த்தம் என்னும் தொகையினர்களாக வருகின்றார்கள். விந்தமலையிலும் மேருமலையிலும் வசிக்கின்ற மந்தரமலையும் மேருமலையும் போலும் பெரிய ரூபத்தையுடைய இந்த வானரர்கள் யுத்தத்தில் உமக்குத் துணையாக வந்து, இராவணனை அவன் சுற்றத்தாரோடும் கொன்று, மைதிலியை மீட்டுத் தருவார்கள்" என்றான். புத்திமானாகிய இராமர் தமது சொற்படி சுக்கிரீவன் செய்த ஏற்பாடுகளைக் கண்டு களிப்பெய்தி அலர்ந்த நீலோற்பலம்போல விளங்கினார்.

## முப்பத்தொன்பதாஞ் சருக்கம்.

வானர சேனை வருதல்.

சுக்கிரீவன் கைகூப்பிக்கொண்டு இவ்வாறு கூற, தருமவான்களுட் சிறந்த இராமர் அவனைத் தன் கைகளால் கட்டித் தழுவி அவனை நோக்கி "இந்திரன் மழை

* அயுதம் பதினாயிரம். அயுதம் பதினாயிரம் கொண்டது ஓரற்புதம்; அற்புதம் லக்ஷம் கொண்டது ஒரு சங்கு; சங்கு பத்துக்கொண்டது ஒரு சமுத்திரம்; சமுத்திரம் பத்துக்கொண்டது ஓரந்தம்; அந்தம் பத்துக்கொண்டது ஒரு மத்தியம்; மத்தியம் பத்துக்கொண்டது ஒரு பரார்த்தம்.

யை வருஷிப்பதும், ஆயிரங் கிரணனுகிய சூரியன் ஆகாயத்திலிருந்து இருளைப் போக்குவதும், சந்திரன் தன் கிரணங்களால் பூமியை நிர்மலமாகச் செய்வதும், உம்மைப்போன்றவர்கள் நண்பர்களுக்குக் கைம்மாறு செய்வதும் ஆச்சரியமன்று.

இராமர் சுக்கிரீவனைப் புகழ்தல்.

நற்குணங்களெல்லாம் உம்மிடத்தில் கூடியிருப்பதும் ஆச்சரியமன்று. நீர் எப்போதும் நன்மையையே பேசுபவர் என்பதை நான் அறிவேன். அன்ப, உம்முடைய துணையைக்கொண்டு நான் என் பகைவரை எல்லாம் வெற்றியடைவேன்; எனது இனிய நண்பராகிய நீரே எனக்குத் துணைசெய்யவேண்டும். புலோமனின் புத்திரியாகிய சசியை இந்திரன் எடுத்துக்கொண்டு சென்றாற்போல, அந்த ராக்ஷசர்களுட் கடையாயினன் தனது நாசத்தின்பொருட்டே சீதையை எடுத்துக்கொண்டு போயினன். செருக்குற்றிருந்த சசியின் பிதாவை இந்திரன் கொன்றாற்போல, நான் எனது கூரிய பாணங்களால் இராவணனைச் சீக்கிரத்தில் கொல்வேன்" என்று சொன்னார்.

அப்போது பூதூளி எழுந்து ஆகாயத்தின் கண்ணே சூரியனுடைய தீவிரமான உஷ்ணகிரணத்தை மறைத்தது. பூதூளிமிகுதியால் திசைகள் மூடுண்டன. பூமி, மலை, காடு, பெருங்காடு முதலியவெல்லாம் நடுங்கின. அதன்பின் மேரு மலைபோன்றவர்களும் கூரிய பற்களையுடையவர்களும் மகாபலமுள்ளவர்களுமான கணக்கிறந்த வானரர்கள் பூமி முழுவதையும் மூடிக்கொண்டார்கள். பின்னர் ஒரு நிமிஷத்திற்குள் வேண்டிய ரூபமெடுக்க வல்லவர்களும், நதிகளில் வசிப்பவர்களும் சமுத்திரத்தில் வசிப்பவர்களும், மலைகளில் வசிப்பவர்களும், மகா பலமுள்ளவர்களும், மேகமுழக்கம்போன்ற உறுக்குடையவர்களும், வனத்திற் சஞ்சரிப்பவர்களும், இளஞ் சூரியன்போன்ற

வானர சேனை வருகை.

சிவந்த நிறமுடையவர்களும், சந்திரன்போன்ற வெண்ணிறமுடையவர்களும், தாமரைப் பூந்தாதின் நிறமுடையவர்களும், சுவேத வர்ணமுடையவர்களும், மேரு மலையில் வசிப்பவர்களுமாகிய பதினாயிரங்கோடி பரிவாரங்களோடு நூறுகோடி வானரத் தலைவர்கள் உடன் வர, வீரனாகிய சதவலி என்னும் வானரன் வந்து தோன்றினான். அதன்பின் பொன்மலைபோன்ற வீரியவானாகிய தாரையின் பிதா அநேக பதினாயிரங்கோடி சேனைகளோடும் சார்ந்தான். பின்னர்த் தாமரைப் பூந்தாது போன்றவனும், இளஞ் சூரியன்போன்ற முகமுடையவனும், புத்திமானும், வானரர்களுட் சிறந்தவனுமாகிய உருமையின் பிதா ஆயிரங்கோடிசேனைகள் உடன் வர வந்தான். அநேகமாயிரம் வானரச் சேனைகள் உடன் வர அனுமன் தந்தையாகிய சீமான் கேசரி வந்து சேர்ந்தான். அஞ்சத்தக்க வலியுடைய முசுவினங்கட் கரசனாகிய கவாக்ஷன் ஆயிரங்கோடி வானரர்கள் சூழ வந்தடைந்தான். மிக்கவேகத்தை யுடையவனும், பகைவரை யழிப்பவனுமாகிய கரடித்தலைவன் தூமிரன் இரண்டாயிரங் கோடி சேனைகள் சூழ வந்து புகுந்தான். மகாவீரனாகிய பனசனென்னும் வானரத் தலைவன் பெரிய மலைபோன்ற கோரமான ரூபத்தையுடைய மூன்றுகோடி சேனைகளோடு வந்தான். நீலாஞ்சனம் போன்ற பெரிய கரிய ரூபத்தையுடைய நீலனென்னும் வானரத்தலைவன் பத்துக்கோடி படைகள்சூழ வந்துதோன்றினான். மகாவீரனாகிய பொன்மலைபோன்ற ரூபத்தையுடைய கவயனென்னும் வானரத்தலைவன் ஐந்துகோடி சேனைகளோடு வந்து சார்ந்தான். பலவானான தரீமுகனென்னும் வானரத்தலைவன் ஆயிரங்கோடி தானைகள் சூழ வந்து சுக்கிவன் பக்கலில் நின்றான். அசுவினி தேவதைகளின் குமாரர்களாகிய மகாபலமுள்ள மயிந்தனும் துவிவிதனும் பல்லாயிரங்கோடி சேனைகளோடு வந்து புகுந்தார்கள். வலிய

வீரனாகிய கஜனென்பவன் மூன்றுகோடி தானைகளோடு சுக்கிரீவன் பக்கலில் வந்தடைந்தான். மிக்க வலியுடைய கரடித்தலைவனாகிய சாம்பவன் பத்துக்கோடி தானைகளோடு சுக்கிரீவன் பக்கலில் வந்துநின்றான். ருமண்வானென்னும் பெயருடைய வானரத்தலைவன் வலிய நூறுகோடி சேனைகள் சூழச்சுக்கிரீவனை வந்தணைந்தான். அதன்பின் வானரர்கள் நூறாயிரங்கோடி ஆயிரமாயிரங்கோடி என்னும் கணக்காகப் பின்றொடர்ந்துவரக் கந்தமாதனன் வந்தடைந்தான். பின்பு தன் தந்தையையொத்த பலமுடைய யுவராஜனான அங்கதன் ஆயிரம் பதுமம் நூறு சங்கென்னும் கணக்கினையுடைய வானரர்கள் சூழ வந்தான். பின்னர் விண்மீன்போன்ற ஒளியுடைய தாரனென்பவன் அஞ்சத்தக்க பராக்கிரமத்தையுடைய அஞ்சுகோடி வானரர்கள் சூழச் சிறிது தூரத்தில் தோன்றினான். இந்திரஜானு வென்னும் வானரவீரன் பதினொருகோடி சேனைகள் சூழ வந்துதோற்றினான். இளஞாயிறுபோன்ற அரம்பன் அயுதம், ஆயிரம், நூறென்னும் கணக்காகச் சேனைகள் சூழ வந்து சேர்ந்தான். பின்பு வீரனாகிய துன்முகன் என்னும் வானரத்தலைவன் இரண்டு கோடி வானரர்கள் சூழ வந்துதோன்றினான். மிக்கவலியுடைய கைலாச சிகரம்போன்ற உடலினையுடைய ஆயிரங்கோடி வானரர்கள் சூழ அனுமான் தோன்றினான். மகாவீரனாகிய நளன் மரங்களில் வசிக்கின்ற வானரர்கள் நூறு கோடி, ஆயிரம், நூறென்னும் கணக்காகச்சூழ வந்தான். பின்பு சீமானாகிய ததிமுகனென்பவன் பத்துக்கோடி சேனைகள்சூழ மகாத்துமாவாகிய சுக்கிரீவனுக்கு முன்னே வந்து சேர்ந்தான். நினைத்த உருவம் எடுக்கவல்ல சரபன், குமுதன், வன்னி, முதலியவர்களும் மற்றும் பல வானரர்களும், அளவில்லாத வானரத்தலைவர்களும் பூமியும் மலைகளும் காடுகளும் மறையும்படியாக வந்தார்கள். சூரியனை மேகக்கூட்டங்கள் சுற்றுமாறுபோல வான

ரர்கள் குதித்துக் கூத்தாடிக்கொண்டும், கர்ச்சித்துக் கொண்டும், சுக்கிரீவனை வந்து சூழ்ந்தார்கள். பெருந் தோளையுடைய அந்த வானரர்கள் சந்தோஷமடைந்து பலவிதமாகச் சத்தித்துக்கொண்டு தலைவணங்கிச் சுக்கிரீவ னுக்குத் தம் வரவை அறிவித்தார்கள். மற்ற வானரத் தலைவர்களும் சுக்கிரீவனிடம் சென்று அஞ்சலிசெய்து நின்றார்கள். சுக்கிரீவன் கை கூப்பிக்கொண்டு இராம ருக்கு வானரர்க ளெல்லாரும் வந்ததை அறிவித்து விட்டு, வானரத்தலைவர்களை நோக்கி "வானரேந்திரர் களே, சேனைகளை மலைக்குகைகளிலும் காடுகளிலும் தக்க படி நிறுத்திவிட்டு, யார் வந்தார்கள் யார் வரவில்லை என்று பாருங்கள்" என்றான்.

## நாற்பதாஞ் சருக்கம்.

*சீதையைத் தேட வானரர்களைக் கீழ்த்திசைக் கனுப்பல்.*

அதன்பின் தனதெண்ணம் முற்றுப்பெற்ற வானர வேந்தனாகிய சுக்கிரீவன் பகைவரை யழிக்கும் பெருந்திற லுடைய இராமரை நோக்கி "எனது தேயத்திலுள்ள, இந்திரன்போன்ற வலிபடைத்த, நினைத்த ரூப மெடுக்க வல்ல வானரர்க ளெல்லாரும் வந்து விட்டார்கள். இவர் கள் கொடிய தைத்தியர்களையும் தானவர்களையும் ஒத்த வர்கள்; நற்றொழிலும் நல்லொழுக்கமு முடையவர்கள், வலியுள்ளவர்கள்; இளைப் பில்லாதவர்கள், ஆண்மையிற் சிறந்தவர் கள்; காரியத்தில் தேர்ந்தவர்கள்; தரை யிலும் நீரிலும் சஞ்சரிப்பவர்கள்; மலைக ளில் வசிப்பவர்கள். இவர்கள் ஆண்மையும் வெற்றியு முள்ள அநேக வானரர்கள் சூழக் கோடிக் கணக்காக வந்

சுக்கிரீவன் சீதையைத் தேட வானரர்களை ஏவும்படி இராம ருக்குச்சொல்லல்

திருக்கிருர்கள்; இவர்க ளெல்லாரும் உம்முடைய ஏவலாளர்கள்; எல்லாரும் உம்முடைய கட்டளையைக் கேட்பவர்கள்; தந் தலைவனுக்கு நன்மைசெய்யும் விருப்பமுள்வர்கள்; நீர் விரும்பியதை முடிக்கவல்லவர்கள். மக்களுட் புலிபோல்வாய், நாம் முயற்சி செய்யத்தக்க காலம் வந்துவிட்டதென்று எண்ணுவீராயிற் சொல்லும்; உம்மிடத்தில் வந்துள்ள உமது சைநியத்திற்கு நீரே கட்டளைசெய்யவேண்டும். இவர்கள் செய்யவேண்டிய காரியம் எனக்கு நன்ருய்த் தெரியுமாயினும் நீரே முறைப்படி அதைக் கட்டளையிடல் வேண்டும்" என்று சொன்ஞன். இவ்வாறு கூறிய சுக்கிரீவனைத் தசரத புத்திரராகிய இராமர் தன் கைகளால் கட்டித்தழுவி "பேரறிவாள, நமது வைதேகி உயிரோடிருக்கிருளர் இல்லையா என்பதையும் இராவணன் எவ்விடத்தில் வசிக்கின்ருன் என்பதையும் அறியவேண்டும். இராவணனுடைய இருப்பிடத்தையும் வைதேகி உயிரோடிருப்பதையும் அறிந்தபின் நாம் செய்யத்தக்கதை நானும் நீருமாகச் செய்வோம். இந்தச் சேனையை ஏவுதற்கு உரியவன் நானுமன்று, லக்ஷ்மணனுமன்று; அது செய்யவேண்டியவர் நீரே. என்னுடைய காரியத்தில் செய்யவேண்டிய திது வென்பதை நீரே கட்டளையிடும். நீர் அந்தக் காரியத்தை நன்ரு யறிவீர்; இதில் சந்தேகமில்லை. எனக்கு உற்ற துணைவரும், ஆண்மையுள்ளவரும், அறிவுடையவரும், கால விசேஷமறிந்தவரும், எனது நன்மையை விரும்பினவரும், பொருளறிந்தவரும் நீரே" என்று சொன்னூர்.

இராமர் சுக்கிரீவனையே ஏவும்படி சொல்லல்.

இராமர் இவ்வாறு கூறினவுடன் சுக்கிரீவன் அவருக்கும் புத்திமானுகிய லக்ஷ்மணருக்கும் முன்னிலையில் மலைபோன்றவனும் இடிபோன்ற குரலுடையவனுமாகிய விநதனென்னும் வானரத்தலைவனை நோக்கி "வான

ரோத்தம, செய்யத்தகுவதிது, தகாததிது வென்று நிச்சயித்தறிந்த நீ, காலமும் இடனு மறிந்த சோம சூரிய புத்திரர்களாகிய வேகமுள்ள நூறுயிரம் வானரர்கள் சூழ, மலைகளும் சோலைகளும் காடுகளு மடர்ந்த கீழ்த் திசைக்குச் செல். அங்கே மலைகளிலும் வனங்களிலும் நதிகளிலும் சீதையையும் இராவண னுடைய இருப்பிடத்தையும் தேடு. அழகிய பாகீரதி நதியிலும், சரயு, கௌசிகி, காளிந்தி, யமுனைகளிலும், யமுனு நதியின் கரையிலுள்ள பெரிய மலைகளிலும், சரஸ்வதி, சிந்து நதிகளிலும், மாணிக்கம்போன்ற நீரையுடைய சோணை நதியிலும், மலைகளும் காடுகளுஞ் செறிந்த மகி, காளமகி நாடுகளிலும், பிரமமாலம், விதேகம், மாளவம், காசி, கோசலம், மகதம், புண்டரம், வங்கம் முதலிய நாடுகளிலும், கோசகார ராஜர்களின் பட்டணங்களிலும், வெள்ளி வெட்டி எடுக்கப்படும் நிலங்களிலும், கடல்களின் நடுவிலுள்ள மலைகளிலும் பட்டணங்களிலும் தசரதன் மருகியும் இராமர் மனைவியுமாகிய சீதையைத் தேடுங்கள். மந்தர மலையிலே நீண்ட அங்கவஸ்திரம் போன்ற காதுடையவர்களும், உதடுவரைக்கும் நீண்ட காதுடையவர்களும், இரும்புபோன்ற கொடிய முகமுடையவர்களும், வேகமுள்ள ஒற்றைக்காலர்களும், குன்றுத பலமுள்ளவர்களும், நரமாமிச பக்ஷணம்செய்யும் கிராதர்களும், கன்னக்குடுமிகளும், அழகிய பொன்னிற முள்ளவர்களும், பச்சைமீன் தின்பவர்களும், தீவில் வசிப்பவர்களும், நீரினுள் வசிப்பவர்களும், பயங்கரமான புலிமுகமுடையவர்களும், இருக்கின்றூர்களென்று கேள்வி. இவர்களுடைய இருப்பிடங்களெல்லாவற்றையுந் தேடுங்கள். நீந்தியும் பாய்ந்தும் அடையத்தகும் மலைகள், ஏழு ராச்சியங்களையுடைய ரத்தினம் நிறைந்த யவத்துவீபம், பொன்னுகரங்களையுடைய சுவர்ணரூப்பியகம், தன் கோடுகளால் அண்ட முகட்டைக்

சுக்கிரீவன் கீழ்த்திசையைத் தேட விநதனை அனுப்பல்.

கிழிப்பதும், தேவர் தானவர் வாசஞ் செய்வதுமாகிய யவத்துவீபத்திற் கப்பாலுள்ள சிசிரமென்னும் மலை, ஆகிய இவைகளிலுள்ள துர்க்கங்கள், நீரருவிகள், சோலைகள் முதலிய எல்லாவிடங்களிலும் நீங்களெல்லாரும் புகழ்படைத்த இராமருடைய பத்தினியைத் தேடுங்கள். அதன்பின் ஆழமான சிவந்த நீருள்ள சோணை நதியைக் கடந்து, சித்தரும் சாரணரும் வசிக்கின்ற சமுத்திரத்தின் கரையை யடைந்து, அங்கேயுள்ள அழகிய தீர்த்தங்களிலும் விசித்திரமான வனங்களிலும் வைதேகியையும் இராவணனையும் தேடவேண்டும். மலையில் தோன்றும் நதிகளையும் அழகிய பூஞ்சோலைகளையும் குகைகளையுடைய மலைகளையும் வனங்களையும் தேடவேண்டும். அதன்பின் பயங்கரமான சமுத்திரத்திலுள்ள தீவுகளையும் பார்க்கவேண்டும். காற்றினால் மோதுண்டு முழங்குகின்ற அலைகளையுடைய சமுத்திரத்தையும் தேடவேண்டும். அங்கே பெரிய உடலையுடைய அசுரர்கள் நெடுங்காலம் பசிகொண்டு பிரமதேவன் அருளினால் சாயையைக் கிரகிப்பார்கள். காளமேகம் போன்றதும், பெரும் பாம்பு வசிப்பதும், பேரொலி யுடையதுமாகிய பெருங்கடலை யடைந்து, சிவந்த நீருடைய லோகிதமென்னும் கடலைக் கடந்தால் ஒரு பெரிய அசையாத முள்ளிலவ மரத்தைக் காண்பீர்கள். அங்கே கைலாசமலையை நிகர்த்ததும், விசுவகருமனால் செய்யப்பட்டதும், பலவித ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமாகிய வைனதேயனுடைய கிருக முளது. அங்கே அச்சத்தைத் தரும் நானாவித ரூபமுடையவர்களும் மலைபோன்றவர்களுமாகிய கொடிய மந்தேகரென்னும் ராக்ஷசர்கள் மலைக்கோடுகளில் தொங்கிக்கொண் டிருப்பார்கள்; அவர்கள் நாள்தோறும் சூரியோதய காலத்தில் சூரியனுக்கு முன்னே பிரம தேசுவினாலடிபட்டு நீருள் விழுந்து பெயர்த்தும் பெயர்த்தும் சூரியனால் தகிக்கப்பட்டுத் தொங்கிக்கொண் டிருப்பார்

கள். அதற்கப்புறம் சென்றால் அலைகளினால் முத்து மாலை அணிந்ததுபோல விளங்குகின்ற வெள்ளிய மேகம் போன்ற பாற்கடலைக் காண்பீர்கள். அதன் மத்தியிலே திவ்விய பரிமளமுள்ள புஷ்பங்களையுடைய வெள்ளிக் குன்றுகளாற் சூழப்பட்ட பெரிய வெள்ளிய ரிஷபமென்னும் மலையும், அரசவன்னங்கள் நிறைந்து பிரகாசிப்பதாகிய பொன்னல்லிகள் வாய்ந்த வெள்ளித் தாமரைகளையுடைய சுதரிசனமென்னுங் குளமு மிருக்கின்றன. அந்தக் குளத்தில் களித்த விபுத சாரண யக்ஷ கின்னர அப்சரக் கூட்டங்கள் சென்று நீர் விளையாடுவார்கள். பாற்கடலைக்கடந்து அப்பாற் சென்றால் உயிர்க்கூட்டங்களெல்லாவற்றையும் அஞ்சச்செய்யும் பெரிய நன்னீர்க்கடலைக் காண்பீர்கள். அங்கே ஔர்வருடைய கோபத்திற் பிறந்த வடவாமுகாக்கினி யிருக்கின்றது. அந்த அக்கினிக்கு இந்த மகா வேகத்தையுடைய சராசர மனைத்தும் உணவாகும். அந்த வடவைத்தீயைக் கண்டு அக்கடலில் வசிக்கும் உயிர்க் கூட்டங்களெல்லாம் அலறிக்கொண்டிருக்கும். அந்த நன்னீர்க் கடலுக்கு வடக்கே பதின்மூன்று யோசனை தூரத்தில் சாதரூபமென்னும் பொன்மலை யிருக்கின்றது. அங்கே மலைமுடியின்மேலே சந்திரன்போன்ற பிரகாசமுடையதும், தாமரை யிதழ்போன்ற விசாலமான கண்களையுடையதும், உயிர்க்கூட்டங்களால் வணங்கப்படுவதும், ஆயிரந் தலைகளையுடையதும், நீலவாடை தரித்ததுமாகிய பூமியைத் தாங்குகின்ற அநந்தனென்னும் சர்ப்பத்தைக் காண்பீர்கள். அந்த மலையின் சிகரத்திலே ஒரு வேதிகையின்மேல் அவ்வனந்தனால் தாபிக்கப்பட்ட மூன்று தலைகளையுடைய பொன்னாலாகிய பனைக்கொடி யிருக்கின்றது. அது இந்திரனால் கிழக்குத் திக்கிற்கு எல்லையாக நாட்டப்பட்டது. அதற்கப்பால் பொன்மயமாகிய அழகிய உதயபர்வத மிருக்கின்றது. அதன் சிகரம் நூறு யோசனை நீளமுடையதாய் ஆகாயத்தை

அளாவி, வேதிகையுடையதாய், சால தால தமால மரங்களாலும் புஷ்பித்துள்ள கோங்க மரங்களாலும் பொன்மயமாய்ச் சூரியனைப்போல விளங்கும். அதனிடத்தே ஒரு யோசனை அகலமும் பத்துயோசனை உயரமு முடைய பொன் மயமான அசையாத சௌமனசமென்னும் சிகரமொன்றுண்டு. முற்காலத்தில் திருமால் உலகத்தை மூன்றடியால் அளந்தபோது முதலில் ஒருகாலை அதன்மேல் வைத்து மற்றக்காலை மேருவின் சிகரத்தின்மேல் வைத்தார். சூரியன் நாவலந்தீவை வடபுறமாகச் சுற்றிவந்து மிகவுயர்ந்த அந்தப் பெரிய சிகரத்தின்மேல் தோன்றுவான். அங்கே இருப்பவர்கள் விளக்கமுள்ள சூரியன் போன்ற காந்தியுடைய தபோதனர்களாகிய வைகானசரென்று பெயர் கூறப்படும் வாலகில்லிய மகரிஷிகள். அங்கே சுதரிசனமென்னும் தீவு உளது; அதனிடத்தே உயிர்களெல்லாம் கட்புலன் கொள்ளற்குக் காரணமாகிய ஒளியையுடைய சூரியன் பிரகாசிப்பான். அந்த மலையின்சிகரங்களிலும், குகைகளிலும், வனங்களிலும் இராவணனையும் வைதேகியையுந் தேடுங்கள். அந்தப் பொன் மலையின் ஒளியாலும், பெரிய சூரியனுடைய கிரணங்களாலும் விடியற்காலம் செந்நிறமுடையதாக விளங்குகின்றது. பூமிக்கும் உலகத்திற்கும் பூர்வத்தில் செய்த வாயிலாதலாலும் சூரியன் உதிக்குமிடமாதலாலும் அது பூர்வதிசை என்று பெயர் கூறப்படும். அந்த மலையின் பக்கத்திலும் அருவிகளிலும் குகைகளிலும் சீதையையும் இராவணனையுந் தேடுங்கள். அதற் கப்பால் கீழ்த்திசையில் செல்லமுடியாது; அவ்விடம் தேவர்கள் சூழ்ந்து, சந்திர சூரியர்களின்றி, இருளடைந்து, கண்ணுக்குப் புலனாகா திருக்கும். நான் சொல்லாத மலைகள் குகைகள் வனங்கள் முதலாகிய எல்லாவிடங்களிலும் சீதையைத் தேடுங்கள். வானர புங்கவ, இதுவரையும்தான் நீங்கள் போகக்கூடும்; அப்புறம் ஒளியின்றியும் எல்லையின்றி

யுமிருக்கும்; அதை நானறியேன். நீங்கள் உதய பர்வதத்தை அடைந்து வைதேகியையும் இராவணனுடைய இருப்பிடத்தையுங்கண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பிவிடவேண்டும். ஒரு மாதத்தின்மேல் நிற்கப்படாது; நின்றால் என்னால் கொல்லப்படுவீர்கள்; மைதிலியைக்கண்டு உங்கள் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிடுங்கள். இந்திரன் விரும்பி யுறைகின்ற வனங்களடர்ந்த கீழ்த்திசையில் புத்தியாய்ச் சென்று ரகுநந்தனர் மனைவி யாகிய சீதையைக்கண்டு திரும்புங்கள். சுகமடைவீர்களாக" என்று கூறினான்.

---

## நாற்பத்தொன்றாஞ் சருக்கம்.

*சீதையைத்தேட வானரர்களைத் தென்றிசைக்கனுப்பல்.*

---

அந்தப்பெரிய வானரசேனையை அனுப்பி விட்டுக் குறிக்கப்பட்ட வானரர்கள் சிலரைச் சுக்கிரீவன் தென்றிசைக் கேவுவானாயினான். பேராற்றலுள்ள அங்கதனைத் தலைவனாகக்கொண்ட, வேகமும் ஆண்மையுமுள்ள, அக்கினி குமாரனான நீலன், அநுமான், பிரமதேவன் புத்திரனாகிய பெருவலியுடைய ஜாம்பவன், சுகோத்திரன், சராரி, சரகுன்மன், கஜன், கவாக்ஷன், கவயன், சுஷேணன், ரிஷபன், மயிந்தன், துவிவிதன், விஜயன், கந்தமாதனன், அக்கினி குமாரர்களான உல்காமுகன், அசங்கன் முதலிய வீரர்களைத் தேசங்களையறிந்த அரிகுலத்தலைவன் தெற்குத் திக்குக்குப் போங்களென்று கட்டளை யிட்டான். அவர்களுக்கு முன்னே போகும்படி தாமதமின்றிச் செல்லவல்ல பெருஞ் சேனையையும் ஏவினான். பின்பு அவன் தென்றிசையில் எந்த இடம் போதற்கரிதா யிருக்கு மென்பதைப்பற்றி அவர்களை நோக்கிச் சொல்லத்

அங்கதன் முதலான வர்களைச் சுக்கிரீவன் தென்றிசைக் கேவல்.

தொடங்கி "பலவித மரங்களும் கொடிகளும் செறிந்த ஆயிரஞ்சிகரங்களையுடைய விந்தமலையையும், பெரும்பாம்புகள் தங்குவதும் கடத்தற் கரியதுமாகிய நருமதா நதியையும், அழகிய கோதாவரியையும், பெரிய கிருஷ்ணவேணி நதியையும், பெரும் பகுதிகளையுடைய வரதா நதியையும், மேகலை, உற்கலை, தசார்ணம் முதலிய நகரங்களையும், அஸ்வவந்தி அவந்தி முதலிய நகரங்களையும் நீங்கள் காண்பீர்கள். விதர்ப்பம், ரிஷிகம், மாகிஷகம், வங்கம், கலிங்கம், கௌசிகம், மலைகளும் நதிகளும் குகைகளுமுடைய தண்டகாரணியம், கோதாவரி நதி முதலியவற்றையும் காண்பீர்கள். அவ்வாறே ஆந்திரம், புண்டரம், சோளம், பாண்டியம், கேரளமுதலிய நாடுகளையும் காண்பீர்கள். பின்பு தாதுக்கள் நிறைந்ததும், விசித்திரமான சிகரங்களையுடையதும், பல வர்ணமான பூக்கள் நிறைந்த சோலைகளையுடையதும், சந்தன வனங்கள் செறிந்ததுமான பெரிய அயோமுக மலையைத்* தேடுங்கள். அதன்பின் தேவரம்பையர்கள் வந்து நீராடுகின்ற, திவ்வியமான தெளிந்த நீரையுடைய அழகிய காவேரி நதியை அங்கே காண்பீர்கள். அந்த மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள். பின்பு அம்மகரிஷி யிடத்தில் விடைபெற்றுச் சென்று முதலைகள் நிரம்பிய பெரிய தாமிரபருணி நதியைத் தாண்டுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளாலே மூடப்பட்ட துவீபங்களை யுடையதாய், தனது நாயகனிடத்திற் போகும் பெண்ணைப்போல, சமுத்திரத்தினிடத்திற் சென்று விழும். அதை விட்டு அப்பாற் சென்றால் முத்தாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகிய பொன்மயமான பாண்டி நாட்டின் கதவைக் காண்பீர்கள். அதன்பின் தென் சமுத்திரத்தை யடைந்து பின்பு செய்ய

* மலயமலை.

வேண்டியதை நிச்சயம் பண்ணுங்கள். அந்தச் சமுத்திரத்தின் கண்ணே மலைகளுட் சிறந்ததும், சித்திரமான பலவித குன்றுகளை யுடையதும், பொன்மயமானதும், நானாவித மரங்களும் கொடிகளுஞ் செறிந்ததும், தேவர்ளும் ரிஷிகளும் யக்ஷர்களும் அப்சரப் பெண்களும் தங்குவதும், சித்தர்களும் சாரணர்களும் கூட்டங் கூட்டமாக இருப்பதுமாகிய அழகிய மகேந்திரமலை முழுகிக்கிடக்கின்றது. அது அகத்திய முனிவராலே அங்கு வைக்கப்பட்டது. பர்வகாலங்களில் எப்போதும் இந்திரன் அங்கே வருவான். அந்தச் சமுத்திரத்தின் மற்றக்கரையிலே நூறுயோசனை நீளமுள்ள ஒரு தீவிருக்கின்றது; அது மனுஷரால் அடையக்கூடாதது; அதை முழுதும் நீங்கள் தேடுங்கள். அங்கே நீங்களெல்லாரும் சீதையை விசேஷமாகத் தேடவேண்டும். அந்தத் தீவு கொல்லப்படத் தக்கவனும், கெட்டவனும், ராக்ஷசாதிபனும், இந்திரன் போன்ற செல்வமுடையவனுமாகிய இராவணனுடைய இருப்பிடம். அந்தத் தக்ஷிண சமுத்திரத்தின் மத்தியிலே அங்காரகை யென்னும் பெயருடைய ராக்ஷசி ஒருத்தி இருக்கின்றாள். அவள் தனக்கு இரையாயுள்ளனவற்றை அவற்றின் நிழலைப்பற்றி இழுத்துப் போசனம் செய்பவள். இவ்விதமாக நீங்கள் சந்தேகமுள்ள இடங்களிலெல்லாம் தேடிச் சமுசயம் நீங்கினவர்களாய் அளவில்லாத புகழையுடைய இராமருடைய பத்தினியைத் தேடுங்கள். அதைக்கடந்து சென்றால் சமுத்திரத்தில் நூறு யோசனைதூரத்தில் சித்தர்களும் சாரணர்களும் தங்குவதாகிய அழகிய புஷ்பிதகமென்னும் மலை யொன்றுளது. அது சமுத்திர நீரால் சூழப்பட்டுச் சூரிய சந்திரர்களின் ஒளியுடையதாய்த் தனது பெரியசிகரங்களால் ஆகாயத்தைப் பிளப்பதுபோல் விளங்கிக் கொண்டிருக்கும். அதின் பொற்சிகர மொன்றில் சூரியன் தங்குவான்; வெள்ளிச் சிகரமொன்றில் சந்திரன் தங்குவான். அதை நன்றிகொன்

றவர்களும் கொடியவர்களும் நாஸ்திகர்களும் காணமாட்டார்கள். நீங்கள் அதைத் தலையால் வணங்கித் தேடுங்கள். அதைக் கடந்து புகுதற்கரிய வழியால் பதினறு யோசனை சென்றால் சூரியவான் என்னும் மலை யிருக்கின்றது. அதன்பின் அதையுங் கடந்து சென்றால் எந்தக் காலத்திலும் பார்த்தற் கழகாய் விரும்பிய பழங்க ளெல்லாவற்றையுங் கொடுக்கும் வைத்துதம் என்னும் மலை இருக்கின்றது. அங்கே விலையுயர்ந்த பழங்களையுங் கிழங்குகளையும் சாப்பிட்டுச் சிறந்த தேனையுண்டு அப்புறம் செல்லுங்கள். அங்கே கண்ணுக்கும் மனத்திற்கு மினிய குஞ்சரமென்னும் மலை உளது; அதில் விசுவகர்மன் அகஸ்தியருக்கு ஒரு கோயில் கட்டி யிருக்கின்றான். இன்னும் அங்கே ஒரு யோசனை அகலமும் பத்து யோசனை உயரமுமுள்ளதும் பலவகை ரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான பொன்னாற்செய்த அழகிய சரண மொன்றுளது. அங்கேயே நாகர்களுக் கிருப்பிடமாகிய போகவதி என்னும் ஆலய மிருக்கின்றது. அது விசாலமான வீதிகளுடையது. அதை நான்கு புறத்திலும் கூரிய பற்களையும் பெரிய விஷத்தையுமுடைய கொடிய பாம்புகள் காத்துக்கொண்டிருக்கும். பேரறிவுடைய வாசுகி என்னும் சர்ப்பராஜன் அங்கேயே வசிக்கின்றான். அந்தப்போகவதிபுரியை நீங்கள் கவனமாய்ச் சென்று தேடவேண்டும்; அதுபோலவே அவ்விடத்திலாவது வேறிடத்திலாவது மறைந்திருக்கின்ற இடங்களையும் தேடவேண்டும். அந்த இடத்தைக் கடந்து சென்றால் இடபம் போன்ற, ரத்தினமயமாகிய அழகிய இடபமென்னும் மலை இருக்கின்றது. அங்கே அக்கினி போன்ற நிறமுடைய கோசீரிஷம், பத்மகம், அரிசியாமம் என்னும் திவ்விய சந்தனங்கள் உற்பத்தி யாகின்றன. அவைகளைப் பார்த்து நீங்கள் விரும்பலாகாது. உரோகிதர் என்னுங் கந்தருவர்

கள் அந்த வனத்தைக் காக்கின்றார்கள். அங்கே சூரியன் போன்ற ஒளியுடைய சைலூஷன், கிராமணி, சிக்குரு, சுப்பிரன், பப்புரு என்னும் ஐந்து கந்தருவத் தலைவர்க ளிருக்கின்றார்கள். அதற்கப்பால் அடைதற்கரிய பூமியின் அந்தத்திலே சூரியன், சந்திரன் அக்கினி என்னும் முச் சுடர்களையும் ஒத்த ஒளிபொருந்திய உடலையுடைய புண் ணியவான்களுக் கிருப்பிடமுளது; அங்கே சுவர்க்கத்தை அடைந்தவர்கள் வசிப்பார்கள். அதற் கப்புறத்தில் பயங் கரமான பிதிர்லோகமிருக்கின்றது. அங்கு நீங்கள் போக வேண்டியதில்லை. அதுயமனுடைய ராஜதானி; மிகுந்த இருளால் சூழப்பட்டது. இவ்வளவும் தான், வீரர்களே, உங்களாற் செல்லமுடியும். அப்பால்வழி இல்லை. நான் கூறியவைக ளெல்லாவற்றையும் தேடிமற்றுள்ளவைகளை யும் பார்த்துவிட்டு வைதேகி சென்ற வழியையறிந்து திரு ம்பி வரக்கடவீர்கள். ஒரு மாதத்திற்குள் திரும்பி வந்து நான்சீதையைக்கண்டேனென்று முதலிற் சொல்லுபவன் எனது செல்வத்துக்கொப்பான செல்வத்தையடைந்து சுக மனுபவிப்பான். அவன் எனக்கு என் உயிரினும் இனியவ னும் எனது நண்பரிற் சிறந்தவனும் ஆவான்; அவன்பல குற்றங்களைச் செய்தவனாயினும் என் சுற்றத்தவனாவான். அளவில்லாத பலத்தையும் பராக்கிரமத்தையு முடைய வர்களும் நல்ல குணங்களாற் சிறந்த குலங்களிலே தோ ன்றினவர்களுமான நீங்கள் ஜனகராஜன் புத்திரியைக் காணவல்ல சிறந்த முயற்சியைச் செய்யுங்கள்" என்றான்.

---

## நாற்பத்திரண்டாஞ் சருக்கம்.

வானரர்களை மேற்றிசைக் கனுப்பல்.

---

சுக்கிரீவன் அந்த வானரர்களைத் தக்ஷிணதிசைக் கனுப்பி விட்டு மேகம்போன்ற சுஷேணனை நோக் கினான். அவன் தாரையின் பிதாவாகிய அச்சந்தரும்

ஆண்மையினையுடை தன் மாமனைக்கிட்டிக் கைகூப்பிப் பணிந்து, மரீசி புத்திரனன் மாரீசனையும், புத்தியு மாண் மையுமுடைய சிறந்த வானர வீரர்களாற் சூழப்பட்ட மகேந்திர மலை போன்ற காந்தியினையுடைய அர்ச்சிஷ்மானையும், மற்றுமுள்ள ரிஷிபுத்திரர்க ளெல்லாரையும் மேற்குத் திசைக்கேவுபவனய் "வானரவீரர்காள், சுஷேணர் முதலாக நீவிர் இருநூறுயிரவர் சென்று வைதேகியைத் தேடுங்கள். சௌராஷ்டிரம், வாகிலிகம், சூரதேசம், பீமதேசம் முதலிய தேசங்களையும் மற்றை ரமணீயமான நாடுகளையும், பெரிய நகரங்களையும், புந்நாக வனத்தையும், வகுளமும் உத்தாலகமும் நிறைந்த குக்ஷியையும், கேதக வனத்தையும் தேடுங்கள். மேற்கேயோடுகின்ற குளிர்ந்த சலத்தையுடையபுண்ணிய நதிகளையும், தவஞ்செய்யும் முனிவர்வசிக்குங் காடுகளையும், மலைக்காடுகளையும் தேடுங்கள். பின்பு மணற்காடுகளையும், உயர்ந்த சிகரங்களையுடைய மலைகளையும், மலைக் கூட்டங்களாற் சூழப்பட்ட துர்க்கங்களையும் தேடினபின், சிறிது தூரம் மேற்கேசென்றால், திமி மீனும் முதலையும் நிறைந்த சமுத்திரத்தைக் காண்பீர்கள். பின்பு கேதகவனத்திலும், தமாலக வனத்திலும், தெங்கங்காட்டிலும் நீங்கள் விளையாடலாம். அங்கே கடற்கரையிலுள்ள மலைகளிலும் வனங்களிலும் சீதையையும் இராவணனுடைய இருப்பிடத்தை தேடுங்கள். அழகிய முரசிபட்டணத்தையும், சடிபுரத்தையும், அவந்தியையும், அங்கலோபையையும், அலக்ஷிதவனத்தையும், விசாலமான ராச்சியங்களையும், பட்டணங்களையும் தேடுங்கள். சிந்துநதி போய்க் கடலிற் சங்கமமாகின்ற இடத்தில் பெரிய மரங்களடர்ந்த, நூறு கொடுமுடிகளையுடைய பெரிய ஏமகிரியென்றொரு மலை யிருக்கின்றது. அந்த அழகிய மலைப்பக்கத்தில் சிங்கை என்னும்

சுக்கிரீவன் சுஷேணனை மேற்குத்திக்கிற் கனுப்பல்.

பறவைகளிருக்கின்றன. அவைகள் திமிமீனையும் யானைகளையும் தங்கள் கூடுகளிற் கொண்டுபோய் வைக்கும். அப்புடிக்கூடுகளில் வைக்கப்பட்ட யானைகள் உண்டு திருத்தியடைந்து மேகம்போல முழங்கிக்கொண்டு நீர் நிறைந்த மலைத்தடத்தில் விளையாடித்திரியும். பல வர்ணமான மரங்கள் செறிந்து ஆகாயத்தை அளாவிப் பொன்மயமாய் விளங்குகிற அந்த மலைமுடிகளை யெல்லாம் வேண்டிய ரூபமெடுக்க வல்ல உங்களால் சீக்கிரம் தேடமுடியும். அப்புறம் சென்றால் அந்தச் சமுத்திரத்திலே நூறு யோசனைதூரம் அகன்றிருக்கிற காணற்கரிய பாரியாத்திர மலையின் பொற்கொடுமுடியைக் காண்பீர்கள். அங்கே அக்கினி போன்றவர்களும் வேண்டிய ரூபமெடுக்க வல்லவர்களும் கொடியவர்களுமாகிய வலிமையுள்ள இருபத்துநான்குகோடி கந்தருவர்கள் ஆயிரம் தீச்சுடர்கள் ஒன்றுகூடினாற்போல வசிக்கிறார்கள். நீங்கள் அங்கே போகவும் வேண்டாம், அவ்விடத்திலுள்ள பழங்களைப் பறிக்கவும் வேண்டாம். அந்தக் கந்தருவர்கள் அணுக முடியாதவர்கள், சத்தியவந்தர்கள், பெரிய வலியுடையவர்கள். அவர்கள் அங்கேயுள்ள பழங்களையும் கிழங்குகளையும் போற்றிக் காப்பாற்றுவார்கள். அங்கே நீங்கள் மிக்க முயற்சி செய்து ஜானகியை நன்றாய்த் தேடுங்கள். குரங்குகளின் செய்கையைப் பின்பற்று முங்களுக்கு அவர்களால் ஒரு பயமுமில்லை. அங்கே வைடூரியம்போல நிறமுடையதும், வச்சிரக்கூட்டம் போன்றதும், பலவித மரங்களும் கொடிகளுமுள்ளதுமாகிய வச்சிரமென்றொரு பெரிய மலை யிருக்கின்றது. அது நூறு யோசனை உயரமுள்ளது. நீங்கள் அங்கேயுள்ள குகைகளெல்லாவற்றையும் நன்றாய்த் தேடவேண்டும். சமுத்திரத்தின் நான்காவது பாகத்திலே சக்கரவான் என்றொரு மலையிருக்கின்றது. அங்கே விசுவகர்மன் சகஸ்ராரம் என்னும் சக்கரத்தைச் செய்தான். அங்கே பஞ்சசனனையும் அயக்கிரீவ னென்னும் தானவ

னையுங் கொன்று திருமால் சங்கும் சக்கரமும் பெற்றுக் கொண்டார். அதனுடைய அழகிய பக்கங்களிலும் விசாலமான குகைகளிலும் இராவணனையும் வைதேகியையுந் தேடவேண்டும். ஆழ்ந்த சமுத்திரத்திலே ஆறுயோசனைதூரத்திலே பொற் கொடுமுடிகளையுடைய அழகிய வராகமென்னும் மலை யிருக்கின்றது. அதனிடத்திலே பொன்மயமான பிராக்சோதிஷ நகர் உளது. அங்கே கொடிய நரகனென்னும் அசுரனிருக்கின்றான். அங்கேயுள்ள அழகிய மலைப்பக்கங்களிலும் விசாலமான குகைகளிலும் இராவணனையும் வைதேகியையுந் தேடுங்கள். அந்த மலையைக்கடந்து சென்றால் உள்ளே பொன்மயமான குகைகளையும் மலையருவிகளையுமுடைய சர்வ சௌவர்ணமென்னும் மலை வரும். அங்கே யானைகளும், பன்றிகளும், சிங்கங்களும், புலிகளும், அருவிகளின் சத்தத்தால் கோபங்கொண்டு எப்போதும் கர்ச்சித்துக் கொண்டிருக்கும். இந்த மலைக்கு மேகவானென்று மறு பெயருண்டு. இதனிடத்திலேயே பச்சைக் குதிரைகளையுடையவனும் பாகாசுரனைக் கொன்றவனுமான இந்திரனுக்குத் தேவர்கள் முடிசூட்டினார்கள். இந்திரனாற் பரிபாலிக்கப்படும் அந்த மலையைக் கடந்து சென்றால் அறுபதினாயிரம் பொற்குன்றுகளை அடைவீர்கள். அவைகள் இளஞ்சூரியனைப்போல ஒளிகான்று அழகாகப் பூத்த பொன் மரங்களால் விளங்காநிற்கும். அவைகளுக்குநடுவே மலைக்கரசனாகிய மேருமலை திகழ்ந்து தோன்றும். முற்காலத்தில் அந்த மலைக்கு ஆதித்தன் "மலைக்கரச, என்னுடைய அருளினால் உன்னைச் சுற்றி யுள்ள சிறுமலைகளெல்லாம் இரவும் பகலும் பொன்போல் விளங்கிக்கொண்டிருக்கக்கடவன. உன்னிடத்தில் வசிக்கும் தேவர்களும் கந்தருவர்களும், தானவர்களும் இரத்தம்போற் சிவந்து பொன்னிற மடையக்கடவார்கள்" என்று வரமளித்தான். ஒவ்வொரு நாளும் அந்திப்போதில் விசுவ தேவர்களும்,

மருத்துக்களும், வசுக்களும், தேவர்களும் அந்த மேருமலையில்போய் ஆதித்தனைப் பூசிப்பார்கள். அவ்வாறு பூசிக்கப்பட்ட பின் சூரியன் உலகத்திற்குக் காணப்படாதவனாய் அத்தகிரியைப் போயடைவான். அந்த மலை பதினாயிரம்யோசனை தூரமுள்ளது; அதனை ஆதித்தன் அரைமுகூர்த்தத்தில் விரைவாகக் கடந்து விடுவான். அந்த மலையினுச்சியிலே சூரியனைப்போல ஒளிகாலுகின்ற அழகிய பெரிய கோயிலொன்றுளது. அது பல மாளிகைகளடங்கி யுள்ளது; விசுவகருமனாற் செய்யப்பட்டது; பல மரங்களும் பறவைகளும் நிறைந்துள்ளது. அது பாசம் பிடித்த கையையுடைய வருணனுடைய கோயில். அத்தகிரிக்கும் மேருமலைக்கு மிடையில் பத்துத் தலையுடைய பெரிய பனை மரமொன்றுண்டு. அது அழகிய வேதிகையின்மேல் பொன்மயமாய் விளங்கும். அங்கேயுள்ள ஆறுகள் குளங்கள் தூர்க்கங்க ளெல்லாவற்றிலும் சீதையையும் இராவணனையுந் தேடவேண்டும். அந்த மலையிலே பிரமதேவரை ஒத்தவரும் தருமமறிந்தவருமான தவத்தான் மேம்பட்ட மேருசாவர்ணி என்னும் முனிவர் இருக்கின்றார். சூரியனுக்குச் சமானமான அந்த மகரிஷியைத் தரையிற் படும்படி தலையைக்குனிந்து வணங்கி மைதிலியின் செய்தியைக் கேளுங்கள். இந்த உலகத்தில் இதுவரைக்குந் தான் சூரியன் இரவு கழிந்தபோது இருளை நீக்கிப் பின்பு அத்தகிரியை அடைவான். வானரத்தலைவர்காள், இதுவரைக்குந் தான் நீங்கள் போகமுடியும். அப்பால் ஒளியின்றியும் எல்லையின்றியு மிருக்கும்; அதை நான் அறியேன். அத்தகிரிவரைக்கும் சென்று வைதேகியையும் இராவணனுடைய இருப்பிடத்தையுங் கண்டு ஒரு மாதத்திற்குள் திரும்பிவிடுங்கள். ஒரு மாதத்தின்மேல் நிற்கப்படாது; நின்றால் நீங்கள் உயிரிழப்பீர்கள். உங்களோடு கூட வீரராகிய என் மாமனார் செல்லுகின்றார். இந்தக் காரியத்தில் செல்லும் நீங்கள் யாவரும் அவ

ருடைய சொல்லைக்கேட்டு அதன்படி நடவுங்கள். பெரிய வலியுடைய என் மாமனார் எனக்குக் குருவுமாவர். எல்லாக் காரியங்களுக்கும் நீங்களே பிரமாணமாயிருக்கின்றீர்கள். இதையே எல்லையாகக்கொண்டு நீங்கள் மேற்றிசையைத் தேடுங்கள், அளவில்லாத புகழையுடைய இராமருடைய பத்தினியைக் காண்போமானால் நாங்கள் அவர் செய்த நன்றிக்குக் கைம்மாறு செய்தவர்களாய் விடுவோம். வேறேதாவது நீங்கள் செய்யும் காரியத்திற்கு இதமாய்த் தோன்றுமானால் அதையும் நீங்கள் செய்துகொள்ளலாம்" என்றான். சுஷேணன் முதலாகிய வானரத் தலைவர்கள் சுக்கிரீவன் கூறிய இந்த வார்த்தையைக் கேட்டு வருணன் பாதுகாக்கும் மேற்குத்திக்கை நோக்கிச் சென்றார்கள்.

## நாற்பத்துமூன்றாஞ் சருக்கம்.

வானரர்களை வடதிசைக்கனுப்பல்.

தருமமறிந்த வானரோத்தமனாகிய சுக்கிரீவன் தனது மாமனை மேற்றிசைக்கனுப்பிவிட்டு, வானரர்களுள் ஏறுபோன்ற சதவலி என்னும் வீரனைநோக்கி, இராமருக்கும் தனக்கும் இதமா வார்த்தையினால் "உன்னைப்போலும் நூறாயிரம் வானரர்கள் உன்னைச் சூழ்ந்துவர, நீ யமனுடைய குமாரனோடும் உனது மந்திரிகளோடும் இமய மலையாகிய காதணியையுடைய வடதிசைக்குச்சென்று குற்றமில்லாத இராமருடைய பத்தினியை எவ்விடத்திலும் தேடவேண்டும். தசரத குமாரராகிய இராமருக்குப் பிரியமான இந்தக்கருமத்தைச்செய்து முடித்தபோது நாம் கடன்நீங்கிக் காரியம்

சுக்கிரீவன் சதவலியை வடதிசைக் கனுப்பல்.

கைகூடினவர்களாவோம். மகாத்துமாவாகிய இராமர் நமக்கொருநன்மை செய்தார்; நாம் அவருக்கொரு கைம்மாறு செய்வேமானல் நமது வாழ்நாள் பயனடைந்ததாகும். முன் ஒரு நன்றி செய்யாதவனுக்கும் ஒருபகாரத்தைச் செய்வதனல் ஒருவனுடைய பிறப்புப் பயனடைந்ததாகுமாயின் முன் ஒரு நன்றி செய்தவனுக் கோருபகாரம் செய்வதனல் அது எவ்வளவு பயனடைந்ததாகும்? இதனை மனத்தில் நன்றுயெண்ணி, ஜானகியைக் காணவல்ல காரியங்களை எமது நன்மையை விரும்பும் நீங்கள் செய்யவேண்டும். இந்த நரசிரேஷ்டர் உயிர்க்கூட்டங்களெல்லாவற்றுலும் பூசிக்கப்படத்தக்கவர்; இவர் எம்மேல் அன்புடையவரா யிருக்கிறுர். புத்தியும் ஆண்மையுமுடைய நீங்கள் நதிகளையும், மலைகளின் நடுக்களையும், வனத்திலுள்ள துர்க்கங்களையும் தேடுங்கள். அங்கே மிலேச்சம், புளிந்தம், சூரசேனம், பிரஸ்தலம், பரதம், குரு, மத்திரகம், வரதம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டகம், வாகிலிகம், ருஷிகம், பௌரவம், டங்கணம், சீனம், பரமசீனம், நிகாரம் முதலிய நாடுகளை யெல்லாம் பெயர்த்தும் பெயர்த்தும் தேடி இமயமலையையும் அவ்வாறு தேடுங்கள். அங்குள்ள வெட்பாலை வனம், பத்மகவனம் தேவதாருவனம் என்னும் வனங்களொவ்வொன்றிலும் இராவணனையும் வைதேகியையுந் தேடுங்கள். பின்பு தேவர்களும் கந்தருவர்களும் வாசம்செய்யும் சோமாச்சிரமத்திற்குப் போய்ப் பெரிய தடங்களையுடைய காலமென்னும் மலையை யடைவீர்கள். அந்தப் பெரியமலையின் அருவிகளிலும் குகைகளிலும் குற்றமில்லாதவளும் பெருந்தன்மை யுடையவளுமாகிய இராம பத்தினியைத் தேடுங்கள். பொன்னையுடைய அந்தப் பெரிய மலையைக் கடந்து சென்றுல் சுதரிசனமென்னும் மலையைச் சேருவீர்கள். அதற்கப்பால் பதகாலயமென்னும் தேவசகமலையுளது. அது அநேக பறவைக்கூட்டங்கள் மிகுந்து பலவித மரங்

கள் செறிந்து விளங்கும். அந்த மலையிலுள்ள வனங்களிலும் அருவிகளிலும் குகைகளிலும் நீங்கள் இராவணனையும் வைதேகியையுந் தேடுங்கள். அதைக் கடந்து சென்றால் நூறுயோசனை அகலமுள்ளதும், மலை, நதி, மரம் முதலிய ஒன்றுமில்லாததும், உயிர்க்கூட்டங்களில்லாததுமாகிய ஒரு வெளியை அடைவீர்கள். கண்டவர் மயிர்சிலிர்த்தற்குக் காரணமாகிய அந்தக் காந்தார பூமியைக்கடந்து சென்றால் வெள்ளிய கைலாசமலையை யடைந்து களிப்புறுவீர்கள். அங்கே குபேரனுடைய அழகிய மாளிகை உளது. அது வெண்மேகம் போன்றது; விசுவகர்மனால் பொன்னினாற் செய்யப்பட்டது. அங்கே ஒரு விசாலமான தாமரை ஓடை யுளது; அது கமலமும் உற்பலமும் மலர்ந்து, அன்னமும் காரண்டவமும் மிகுந்து, அரம்பையர் சூழ்ந்து விளங்கும். அதிலே யக்ஷராசனாகிய குபேரன், உயிர்களெல்லாம் வணங்க, குஹ்யகர்களுடன் விளையாடுவான். அங்குள்ள சந்திரன்போன்ற மலைகளிலும் குகைகளிலும் இராவணனையும் வைதேகியையும் தேடுங்கள். பின் கிரவுஞ்சமலையை அடைந்து நுழைதற்கரிய அதன் குகையுள் சாவதானமாய்ச் செல்லுங்கள்; ஏனெனில் அது புகுதற்கரியதென்று பேர்பெற்றது. அங்கே சூரியனைப்போன்ற ஒளியுடைய பெரிய முனிவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தேவரூப முடையவர்கள்; தேவர்களால் தேடப்படுபவர்கள். அந்தக்கிரவுஞ்ச மலையிலுள்ள மற்றைய சிகரங்களையும், சாரல்களையும், குகைகளையும் அருவிகளையும், பக்கங்களையும் தேடுங்கள். அதன்பின் மரங்களில்லாத காமசைலமென்னும் சிகரத்தையும் பறவைகளுக் கிருப்பிடமாகிய மானசமென்னும் வாவியையுந் தேடுங்கள். அங்கே தேவர்களுக்காவது, தானவர்களுக்காவது, ராக்ஷசர்களுக்காவது வழியில்லை. அங்குள்ள மலைகளையும் தாள்வரைகளையும் முழுதுந் தேடுங்கள். கிரவுஞ்சகிரியைக் கடந்து சென்றால் மைநாகமலை யிருக்கின்

றது; அங்கே மயனென்னும் அசுரத்தச்சன் ஒரு மாளிகை கட்டி இருக்கின்றான். அந்த மைநாக பர்வதத்தையும் அதன் சாரல்களையும் குகைகளையும் நீங்கள் தேடவேண்டும். அங்கே இடங்கடோறும் குதிரை முகப் பெண்களின் வீடுகளிருக்கின்றன. அந்த இடத்தைக் கடந்து சென்றால் சித்தராச்சிரமத்தை யடைவீர்கள். அங்கே சித்தர்களும் வைகானசரும் வாலகில்லியரும் வசிக்கின்றார்கள். தமது தவத்தினால் பாபத்தினின்றும் நீங்கிய அந்தச் சித்தர்களை வந்தித்து விநயத்தோடு சீதையின் செய்தியைப்பற்றி விசாரியுங்கள். அங்கே பொற்றாமரைகள் நிறைந்த வைகானசமென்றொரு குளமுண்டு; அது அழகிய இளஞ் சூரியன்போன்ற அன்னங்கள் மிகுந்திருக்கும். அங்கே குபேரனுடைய வாகனமாகிய சார்வபௌமம் என்னும் யானை பிடிகளோடு எப்போதும் திரிந்துகொண்டிருக்கும். அந்தக் குளத்தைக் கடந்து சென்றால் சந்திர சூரியர்களும் நக்ஷத்திரங்களும் மேகமுமின்றி ஒலி யில்லாதிருக்கும் ஓரிடத்தை யடைவீர்கள். அந்த இடம் அங்கு இளைப்பாறுகின்ற தேவர்போலச் சுயம்பிரகாசகர்களான முனிவர்களது சூரியனுடைய ஒளிபோன்ற ஒளியினால் பிரகாசிக்கும். அதைக்கடந்து சென்றால் சைலோதை நதியை அடைவீர்கள். அதன் இரு கரையிலும் கீசகமென்னும் மூங்கில் முளைத்திருக்கும்; அதைக்கொண்டே சித்தர்கள் அந்த நதியைக் கடந்து செல்வார்கள். புண்ணியஞ் செய்தவர்களுக் கிருப்பிடமாகிய உத்தர குரு அங்கே உளது. அப்பால் பொற்றாமரை வாவிகளும் நீலவைடூரிய பத்திரங்களையுடைய ஆறுகளும் ஆயிரமுள. அங்கேயுள்ள இளஞ்சூரியனைப்போலப் பிரகாசிக்கும் நீர்நிலைகள் பொன்மயமான செங்கழுநீர் நிறைந்தன. அந்த இடம் முழுதும் விலையுயர்ந்த இரத்தின பத்திரங்களாலும் பொற் பூந்தாதுகளாலும் அழகிய நீலோற்பல வனங்களாலும் உருண்ட முத்துக்களாலும் விலைபெற்ற

மணிகளாலும் சூழப்பட்டது. அங்குள்ள ஆறுகள் பொன்மயமான புளினங்களுடையன; அவற்றிலுள்ள குன்றுகள் நெருப்புப்போல ஒளிகான்று இரத்தினமய மாயும் பொன்மயமாயும் விளங்கும். அங்குள்ள மரங்கள் பறவைகள் மிகுந்து திவ்வியமான மணமும் சுவையும் ஊறுமுடைய பூக்களையும் பழங்களையும் எப்போதும் கொடுக்கும்; அவை விரும்பியவைகளையு மெல்லாம் கொடுக்கும். சில மரங்கள் ஆடவர்களும் பெண்களும் விரும்பும் பலவிதமான உடைகளையும் முத்துக்களாலும் வைடூரியங்களாலும் செய்த பூஷணங்களையுங் கொடுக்கும். சில மரங்கள் எக்காலத்திலும் தின்னத்தக்கபழங்களைக் கொடுக்கும். சிலமரங்கள் அழகிய பொன்மயமான விலையுயர்ந்த படுக்கைகளையும் அவைகளின்மேல் விரிக்கப்படும் சித்திரப் படாங்களையும் கொடுக்கும். சிலமரங்கள் மனத்துக்கினிய மாலைகளையும் விலையுயர்ந்த பானங்களையும் பலவிதமான பக்ஷணங்களையும் கொடுக்கும். அழகும் இளமையும் நற்குணமுமமைந்த பெண்களும், தங்கள் மனைவியர்களோடு கூடின சூரியன்போன்ற ஒளியுடைய கந்தருவர்களும், கின்னரர்களும், சித்தர்களும், நாகர்களும் வித்தியாதரர்களும் அங்கே விளையாடுவார்கள். அங்கே எல்லாரும் தங்கள் மனைவியர்களுடன் கூடி நல்லொழுக்கமுடையவர்களாய், இன்பநுகர்ந்து, விரும்பிய பொருளை யடைந்து வாழ்வார்கள். அங்கே எல்லாருடைய மனத்தையும் கவருந் தன்மையுள்ள கீதவாத்தியத்தொனியும் சிறந்த சிரிப்பொலியும் எப்போதும் கேட்கும். அங்கே களிப்படையாதவர்கள் ஒருவருமில்லை; தீமையை விரும்புபவர்களும் ஒருவருமில்லை. அழகிய நற்குணங்களெல்லாம் அங்கே நாளுக்கு நாள் வளரும். அந்த இடத்தைக் கடந்து சென்றால் வடகடல் வந்து சேரும். அக்கடலின் நடுவிலே பொன்மயமான பெரிய சோமகிரி என்னும் மலை உளது; இந்திரலோகம்

செல்பவர்களும் பிரமலோகம் செல்பவர்களும் ஆகாயத்தில் செல்லும் தேவர்களும் அதைக்காண்பார்கள். சூரியனில்லாதிருப்பினும் சோமகிரியின் ஒளியினுல் அந்த இடம் சூரியனுெளியினுல் பிரகாசிப்பதுபோலவே பிரகாசித்துக் கொண்டிருக்கும். விசுவாத்துமாவாகிய பகவான் சம்புவும் தேவேசனுகிய பிரமாவும் முறையே பதினுெரு ருத்திரர்களும் பிரமரிஷிகளும் சூழ அங்கு வசிக்கின்றுர்கள். உத்தர குருவிற்கப்பால் உங்களால் செல்லமுடியாது; மற்றையோர்களுக்கும் அங்கே போவதற்கு வழிஇல்லை. தேவர்களாலும் கிட்டுதற்கரிய சோமகிரியைக் கண்டவுடன் நீங்கள் சீக்கிரம் திரும்பிவரவேண்டும். வாநரபுங்கவர்காள், அதுவரையும் தான் வானரர்களாற் செல்லமுடியும். அதற் கப்பாலுள்ளது ஒளியின்றியும் எல்லையின்றியுமிருக்கும். அதை நான் அறியேன். யான் கூறிய இந்த இடங்களையும் யான் கூருதொழிந்த மற்றை இடங்களையும் நீங்கள் தேடவேண்டும். காற்றும் நெருப்பும் போன்றவர்களே, நீங்கள் வைதேகியைக் கண்டுபிடிப்பீர்களாயின் இராமருக்கும் எனக்கும் பிரியமாகிய செய்கையைச் செய்தவர்களாவீர்கள். அதைச்செய்து முடிப்பின் நீங்கள் என்னுற் சிறப்புச்செய்யப்பெற்று, மனத்துக்கினிய நற்குணங்களெல்லா முடையவர்களாய், பகையொழித்து, பந்துக்களோடும் மனைவியர்களோடும் உலகத்தில் உலாவுவீர்கள்" என்று சொன்னுன்.

---

## நாற்பத்து நான்காஞ் சருக்கம்.

*இராமர் அநுமானிடம் தமது மோதிரத்தைக் கொடுத்தல்.*

---

வானர வேந்தனுகிய சுக்கிரீவன் வாயு குமாரனுகிய ஆண்மையுடைய அநுமானே சீதையைத் தேடுங்காரியத்தைச் செய்து முடிக்கவல்லனெ்ன முழுதும் நம்பி, மிக்க

சந்தோஷமடைந்து, அவனை நோக்கி "அரிபுங்கவ, பூமியிலாவது, ஆகாயத்திலாவது, அம்பரத்திலாவது, தேவருலகத்திலாவது, நீரிலாவது, உனது செலவிற்கொருதடை யிருப்பதாய் நான் காணவில்லை. அசுரலோகம், கந்தருவலோகம் நாகலோகம், நரலோகம், தேவலோகமுதலிய எல்லாலோகங்களையும், சமுத்திரங்களையும், மலைகளையும் நீ நன்குணர்ந்திருப்பாய். வீர, செலவாலும் வேகத்தாலும் ஆண்மையாலும் விரைவாலும் நீ உனது பிதாவை ஒப்பாய். இந்தப் பூமியில் உன்னை ஆண்மையால் ஒப்பானவர்களை யான் அறியேன். ஆகையால் சீதையை அடையும் வழியை நீதான் தேடவேண்டும். நீதி யுணர்ந்தாய், உன்னிடத்திலேயே வலியும், அறிவும், ஆண்மையும், காலமுமிடமு மறிந்துநடத்தலும், நீதியும் இருக்கின்றன" என்று கூறினன். அதுகேட்டு இராமர் தமது காரியம் அநுமானலேயே கைகூடவேண்டு மென்றும் அநுமானுடைய வலியின்னதென்றும் அறிந்து, "வானரவேந்தன் எல்லாவிதத்தாலும் அநுமானே காரியத்தை முடித்து வைப்பானென்று எண்ணுகிறன்; அநுமானும் அவ்வாறே தானே காரியத்தை முடிக்கவல்லனென்று பெரிதும் நிச்சயமுள்ளவன யிருக்கிறன். தொழிலினலறிந்து அரசனல் தெரிந் தெடுக்கப்பட்டவனலே காரியம் சித்தியாவதிற் சந்தேகமில்லை" என்று சிந்தித்து, எடுத்தகாரியத்தை முடிக்கவல்ல அநுமானைப்பார்த்து, காரியம் கைகூடியவராகத் தம்மை மதித்து, இந்திரியங்களும் மனமுங் களிப்படைந்தார். பின்பு அவர் பிரீதியடைந்து தமது பெயர் பொறிக்கப்பட்ட மோதிரத்தைச் சானகிக்கு அறிகுறியாக அநுமானிடத்தில் கொடுத்து "வானரோத்தம, இந்த அடையாளத்தினலே சானகி உன்னை என்னிடத்திலிருந்து வந்தவனகத் தடையின்றி அறிந்து

சுக்கிரீவன் அநுமானிடம் சீதையைத்தேடச்சொல்லல்.

இராமர் அநுமானிடம் மோதிரம் கொடுத்தல்.

கொள்வாள். உன்னுடைய தொழிலாற்றலும் வலியும் சுக்கிரீவன் உன்னிடத்து வைத்த நம்பிக்கையும் எனக்குக் காரியம் சித்தியாகுமென்று சொல்லுகின்றன" என்று கூறினர். அநுமான் அந்த மோதிரத்தைப் பெற்றுக் கொண்டு தலைமேல் கைகுவித்து இராமருடைய பாதத்தை வந்தித்துப் புறப்பட்டான். பெரிய வானரசேனை தன்னைச் சூழ்ந்துவரச் சென்ற அநுமான் மேகம் நீங்கிய ஆகாயத்தில் நக்ஷத்திர கணங்கள் சூழத் தோன்றும் சந்திரன்போல விளங்கினன். சுக்கிரீவன் அநுமானை நோக்கி "மிக்க வலியுடையாய், உன்னுடைய வலியையே நான் தஞ்சமாகப் பற்றினேன்; சிங்கேறுபோன்ற ஆண்மையுடையானே, உன்னுடைய அளவற்ற வலியைக் கொண்டு சானகியை நாமடைதற்கேற்ற முயற்சியைச் செய்வாயாக" என்றான்.

---

## நாற்பத்தைந்தாஞ் சருக்கம்.

வானரர்கள் சீதையைத் தேடப் புறப்படல்.

---

வானரர்களுள் ஏறுபோன்ற சுக்கிரீவன் வானரர்களை எல்லாம் வரவழைத்து இராமருடைய காரியம் சித்திக்கும்பொருட்டு அவர்களெல்லாரையும் நோக்கி "நான் சொல்லிய இடங்களெல்லாவற்றையும் நீங்கள் தேட வேண்டும்" என்றான். தமது அரசனுடைய அந்தக் கடிய கட்டளையைக்கேட்டு வானர வீரர்கள் விட்டிற் பறவையைப்போல் தரையை மூடிப் புறப்பட்டார்கள். இராமர், லக்ஷ்மணரோடு, சீதையைத் தேடிக் காண்பதற்காக நியமிக்கப்பட்ட ஒரு மாசமும் கழியும் வரைக்கும் அந்தப் பிரஸ்ரவண மலையின்மே லிருந்தார். இமயமலை வளைந்த அழகிய வடதிசையை நோக்கி வீரனாகிய சதவலி விரைந்து புறப்பட்டான். விநதனென்

னும் வானரத்தலைவன் கீழ்த்திசையை நோக்கிப் போயி னன். வாயுகுமாரனுன அநுமான் தாரன் அங்கதன் முதலிய வீரர்களுடன் அகத்திய முனிவர் வசிக்கும் தென் திசைக் கேகினன். வானரர்களுக்குள் புலி போன்ற சுஷேணனென்னும் சேனைத்தலைவன் வருண னூற் பாதுகாக்கப்படும் கொடிய மேற்றிசைக்குச் சென் ருன். இவ்வாறு எல்லாத்திசைகளுக்கும் சிறந்த வானர வீரர்களை அனுப்பிவிட்டு, சுக்கிரீவன் சுகமடைந்து சந்தோஷமாயினன். சுக்கிரீவனுல் இவ்வாறு அனுப்பப் பட்ட வானர வீரர்களெல்லாரும் தங்கள் தங்களுக்கு நிய மிக்கப்பட்ட திசையைநோக்கி விரைந்து புறப்பட்டார் கள். பெரிய வலியையுடைய வானரர்கள் "சீதையை மீட்டுக் கொண்டு வருவோம், இராவணனைக் கொன்றுவிடு வோம்" என்று சொல்லிக்கொண்டும், பூசலிட்டுக்கொண் டும், கர்ச்சித்துக்கொண்டும் குதித்துப் பாய்ந்துகொ ண்டு போயினர்கள். அவர்கள் ஒவ்வொருவரும் 'யுத் தத்தில் வந்தெதிர்க்கும் இராவணனை நான் ஒருவனே கொன்றுவிடுவேன். அவனைக் கொன்றுவிட்டுக் களைத்து நடுங்குகின்ற சீதையை "தேவி, இளைப்பாறுக" என்று சொல்லி நான் விரைவில் எடுத்துக்கொண்டு வந்துவிடு வேன்'; 'பாதாளத்திலிருந்தபோதிலும் சானகியை நான் ஒருவனே சென்று எடுத்து வந்துவிடுவேன்'; 'நான் மரங்களை அழித்து விடுவேன்'; 'நான் மலைகளைப் பிடு ங்கி விடுவேன்'; 'நான் பூமியைப் பிளந்து விடு வேன்'; 'நான் கடலைக் கலக்கிவிடுவேன்.' 'நான் ஒரு யோசனைதூரத்தை ஒரேபாய்ச்சலில் பாய்ந்து விடுவேன்; இதில் சந்தேகமில்லை'; 'நான் நூறுயோசனை கடந்துவிடு வேன்'; 'நான் நூற்றுக்கு மேலே கடந்து விடுவேன்'; 'பூதலத்திலாவது, கடலிலாவது, வாவியிலாவது, மலையி லாவது, வனத்திலாவது, பாதாளத்திலாவது நான் போவ

வானரர்கள் தமதாண்மையை எடுத்துக் கூறல்.

தற்கு ஒரு தடையுமிராது' என்று தங்கள் பலச்செருக்கிஞல் வானரவேந்தனுகிய சுக்கிரீவன் முன்னிலையில் சொன்னார்கள்.

## நாற்பத்தாறுஞ் சருக்கம்.

சுக்கிரீவன் தான் பூமண்டலம்முழுதும் அறிந்தவாறு கூறுதல்.

வானரத்தலைவர்கள் சென்றபின் இராமர் சுக்கிரீவனை நோக்கி "பூமண்டலம் முழுதையும் நீர் அறிந்தவாறெப்படி" என்று கேட்டார். சுக்கிரீவன் இராமரை வணங்கி "மக்களுள் ஏறுபோல்வாய், நான் எல்லாவற்றையும் விரிவாய்ச் சொல்லுகின்றேன் கேளும். எருமை உருவமெடுத்துவந்த துந்துபி என்னும் தானவனை வாலி மலயமலைக்கு நேராகத் துரத்திக்கொண்டு போகும்போது, அந்தத் தானவன் அந்த மலையின் கணுள்ள ஒரு குகைக்குள் போய்ப் புகுந்தான். அவனைக் கொல்ல வேண்டி வாலியும் அந்தக் குகைக்குள் புகுந்தான். நான் அந்தக் குகையின் வாயிலில் வணக்கத்துடன் நிறுத்தப்பட்டேன். ஒரு வருஷம் கழிந்தும் வாலி அந்தக் குகையில் நின்று வெளிப்படவில்லை. கடைசியில் அந்தக் குகையில் வேகமாகப் பாய்ந்து இரத்தம் நிரம்பியது. நான் அதைப் பார்த்து ஆச்சரியமடைந்து, சகோத்ர வாஞ்சையென்னும் விஷந் தலைக்கொண்டு, அண்ணன் மெய்யாய் இறந்துவிட்டானென்று எண்ணி, மலைபோன்ற ஒரு கற்பாறையை எடுத்துக் குகையின் வாயிலை மூடிவிட்டு, துந்துபி குகையினின்றும் வெளிப்படமாட்டாது இறந்துவிடுவானென்று எண்ணிக்கொண்டு, தமையன் உயிரில் ஆசையற்றவனுய்க் கிஷ்கிந்தைக்கு வந்து, தாரையோடும் உருமையோடும் பெரிய ராச்சியத்தை அடைந்தேன்.

சுக்கிரீவன் தான் பூமியை அறிந்த தன்மையைக் கூறல்.

அங்கு நான் பயமற்றவனாய் மித்திரர்களோடு வசித்துக் கொண்டிருக்கையில் வாலி தானவருக்குள் ஏறுபோன்ற துந்துபியைக் கொன்றுவிட்டுத் திரும்பி வந்தான். நான் அவனுடைய பெருமிதத்தை நினைத்து அச்சங்கொண்டு இராச்சியத்தை அவனுக்குக் கொடுத்தேன். அப்போது துஷ்டாத்துமாவாகிய வாலி மனம் நொந்து, கோபங் கொண்டு, என்னைக் கொல்லவேண்டி, மந்திரிகளோடு என்னைத் துரத்தினான். நான் அந்த வாலியினால் ஓயாது துரத்தப்பட்டுப் பல நதிகளையும் நகரங்களையும் வனங்களை யும் பார்த்தேன். நான் அப்போது கொள்ளிவட்டம் போற் சுழன்று இந்த உலகத்தைப் பசுவின் குளப்படி போலவும் கண்ணாடி போலவுங் கண்டேன். பின்பு நான் கீழ்த்திசைக்குச் சென்று பலவித மரங்களையும் பர்வதங்களையும் அழகிய நதிகளையும் பல குளங்களையுங் கண்டேன். அங்கே நான் தாதுக்கள் நிறைந்த உதய பர்வதத்தையும் எப்போதும் அப்சர கணங்களுக் கிருப் பிடமாகிய பாற்கடலையுங் கண்டேன். ஓடிக்கொண்டிருக் கும்போது வாலியினால் மிகவும் நெருக்கப்பட்டுத் திடீ ரென்று திரும்பி நான் வேறொரு பக்கமாக ஓடினேன். அப்படி மாறி யோடும்போது பெயர்த்தும் வாலியி னால் மிகவும் நெருக்கப்பட்டுத் திரும்பித் தென்றிசைக் கோடினேன். அங்கே விந்தமலைக்குரிய மரங்கள் செறிந்து சந்தன மரங்களடர்ந்து விளங்குகிற வேறொரு துருமசை லத்தைக் கண்டேன். பின்னரும் வாலியினால் நெருக்கித் துரத்தப்பட்டு மேற்குத் திசையை அடைந்து பலபல தேசங்களையும் சிறந்த அத்தகிரியையுங் கண்டேன். அங் கிருந்து வடதிசைக் கோடி இமயமலையையும் மேருகிரியை யும் வடகடலையுங் கண்டேன். வாலியினால் துரத்தப்பட்டு எங்கே ஓடினபோதிலும் எனக்குப் புகலிடமொன்றும் கிட்டவில்லை. அப்போது புத்திமானாகிய அநுமான் என்னை நோக்கி “அரச, இந்த ஆச்சிரமத்தில் மதங்க

முனிவர் வாலிக்கு என்ன சாபமிட்டாரென்பதை இப்போதுதான் நான் நினைத்தேன். இங்கே பிரவேசிப்பானுயின் வாலியினுடைய தலை நூறு துண்டுகளாகப் பிளந்துபோம். நாங்கள் இங்கே யாதொரு பயமுமின்றிச் சுகமாக வாழலாம்'' என்று சொன்னான். கோமக, அதன் பின் நாங்கள் ரிசியமூக பர்வதத்தை அடைந்தோம். மதங்கமுனிவரிட்ட சாபத்தின் பயத்தினுல் வாலி அங்கு வரவில்லை. அரச, இவ்விதமாகவே நான் இந்தப் பூமண்டலம் முழுதையும் பிரத்தியக்ஷமாகப் பார்த்தேன். அதன் பின் இந்த நகரம் வந்து சேர்ந்தேன்'' என்று கூறினுன்.

## நாற்பத்தேழாஞ் சருக்கம்.

சீதையைத் தேடிச்சென்ற வானரர்கள் திரும்பிவருதல்.

சீதையைத் தேடும்படி சுக்கிரீவனுல் அனுப்பப்பட்ட வானர வீரர்கள் அவன் சொன்னவாறு எல்லாத்திசைகளுக்கும் விரைந்து சென்றார்கள். அவர்கள் குளங்கள், சிற்ருறுகள், கரிகாடுகள், வெளிகள், நகரங்கள், கடத்தற்கரிய பேராறுகள், மலைகள், மலைசார்ந்த நிலங்கள், வனஞ்சார்ந்த நிலங்கள், காடுசார்ந்த நிலங்கள், முதலிய யாவற்றையுந் தேடினுர்கள். அவர்கள் பகல் முழுதும் சீதையை வெகு கவனமாகத்தேடி இரவில் பூமியில் படுத்துறங்கினுர்கள். ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொருநாளும் எல்லாப் பருவகாலத்திலும் பழம்பழுக்கின்ற மரங்களை அடைந்து இராத்திரியில் படுக்கைசெய்து கொண்டார்கள். தாம் புறப்பட்ட நாள்முதலாக ஒருமாசம் கழிந்தவுடன் வானர வீரர்க ளெல்லாரும் பிரஸ்ரவண மலையை அடைந்து வானரவேந்தனைத் தலைப்பட்டார்கள். மகாபலமுடைய விநதன் தனக்கிட்ட கட்டளையின்படி கிழக்குத் திக்கைத்தேடிச் சீதையைக் காணுதவனுய்த் தன் மந்திரி

களோடு திரும்பிவந்தான். வீரனுகிய சதவலி வடக்குத் திசை முழுதுந் தேடிவிட்டுத் தனது சேனைகளுடன் திரும்பிவந்தான். சுஷேணன் வானரர்களோடு மேற்குத்திசையைத் தேடிவிட்டு ஒருமாசமானவுடன் சுக்கிரீவன் முன் வந்துசேர்ந்தான். அவர்களெல்லாரும் பிரஸ்ரவண மலையின்மேல் இராமரோடு வீற்றிருந்த சுக்கிரீவனைக் கிட்டிப் பணிந்து "எல்லாமலைகளும், சோலைகளும், காடுகளும், ஆறுகளும், கடல்களும், ஊர்களும் தேடியாய் விட்டன; நீர் கூறிய குகைகளெல்லாம் தேடியாய் விட்டன; கொடிகள் படர்ந்த மரச்சூழல்க ளெல்லாந் தேடியாய்விட்டன; காட்டிடங்களிலும், துர்க்கங்களிலும், பள்ளங்களிலு முள்ள பெரிய மிருகங்களெல்லாந் தேடிக் கொல்லப்பட்டன. உதாரகுணமும் பெருந்திறலுமுடைய பெரியாய், அநுமானே மைதிலியைக் காண்பான்; ஏனெனில் அவனே அவள் போனதிசைக்குச் சென்றிருக்கின்றான்" என்றார்கள்.

வானர வீரர்கள் திரும்பிவருதல்.

---

## நாற்பத்தெட்டாஞ் சருக்கம்.

வானரர்கள் தென்திசையில் தேடுதல்.

---

அநுமான் தாரனோடும் அங்கதனோடும் சுக்கிரீவன் குறித்த திசையைநோக்கி விரைந்து சென்றான். அவர்கள் வெகு தூரஞ்சென்று விந்தமலையின் குகைகளையுங் காடுகளையும், மலைக்கோடுகளையும், கடக்கமுடியாத ஆறுகளையும், குளங்களையும், பெரிய மரங்களையும், மரக்காடுகளையும், மரஞ்செறிந்த பல மலைகளையும் தேடினார்கள். அவர்கள் எல்லாத் திசைகளிலும் தேடியும் சனகராசன் புதல்வியாகிய சீதையைக் கண்டுகொள்ள வில்லை. அவர்கள் பலவிதமான பழங்களையுங் கிழங்குகளையுஞ் சாப்பிட்டு, நுழைந்து தேடுதற்கரிய பெரிய குகைகளையும் காடுகளையுந்தேடி இளைப்புற்றார்கள். அவர்கள் நீரின்றி

யும் சனமின்றியும் பாழாயும் கண்டவர் மயிர்சிலிர்க்கத் தக்கதாயு மிருந்த அந்தக்காட்டை விட்டுநீங்கி, அதுபோன்ற வேறு காடுகளையுந்தேடி மிகவும் வருந்தி, அணுகமுடியாத வேறோர் இடத்திற்குப் போயினார்கள். அங்கேயுள்ள மரங்கள் பழமில்லாதவைகள்; அவைகள் பூப்பதுமில்லை தளிர்ப்பதுமில்லை. அங்குள்ள ஆறுகளிற் சலமில்லை; அங்கே கிழங்குகள் அகப்படமாட்டா. அங்கே எருமையுமில்லை; மானுமில்லை; யானையுமில்லை; புலியுமில்லை; பறவையுமில்லை; காட்டில் வாழும் மற்றை மிருகங்களுமில்லை. அங்கே மரங்களுமில்லை; மருந்துகளுமில்லை; கொடிகளுமில்லை; பூண்டுகளுமில்லை; இலைகள் செறிந்து மலர்கள் விரிந்து நறுமணங்கமழும் அழகியதாமரை ஓடைகளுமில்லை. வண்டுகளும் அவ்விடத்தைத் துறந்து போயின. அங்கே கண்டு என்னும் பெயருடைய பெரிய மகரிஷி ஒருவரிருந்தார்; அவர் சத்தியவாதி; பெருந் தவமுடையவர்; மிகவும் பொறுமையில்லாதவர்; நியமங்களினால் அடங்காதவர். பதினாறு வயதுள்ள அவருடைய இளங்குமாரன் அந்தவனத்திலே உயிரிழந்தான். அதனால் அவர் கோபமடைந்தார். அவருடைய சாபத்தினாலே அந்தப் பெரியவனம் முழுதும் வசிக்கத்தகுதியற்று, அணுக முடியாததாய், பறவைகளும் விலங்குகளும் இல்லாததாய்ப் போயிற்று. அவர்கள் அந்தக்காட்டின் எல்லைகளையும், மலையின் குகைகளையும், நதிகளின் உற்பத்தி ஸ்தானங்களையும் நன்றாய்த் தேடினார்கள். சுக்கிரீவனுக்குப் பிரியமான காரியத்தைச் செய்யும் அந்த வானர வீரர்கள் சீதையையாவது அவளை எடுத்துச் சென்ற இராவணனையாவது காணவில்லை. அவர்கள் கொடிகள் அடர்ந்த பயங்கரமான ஒரு சூழலில் புகுந்தபோது கொடிய செயல்களையுடையவனும் தேவர்களுக் கஞ்சாதவனுமாகிய அசுரனொருவனைக் கண்டார்கள். அவன் ஒரு பெரிய மலை

கண்டு முனிவர் ஆச்சிரமம்.

போல முள்காந்திருந்தான். அவனைக் கண்டதும் வானரர்களெல்லாரும் துணியை இறுக்கிக் கட்டிக்கொண்டார்கள். அவனும் அந்த வானரர்களை நோக்கி "நீங்கள் செத்தீர்கள்" என்று சொல்லிக் கோபமுற்றுக் கையைப் பொத்தி உயர்த்திக்கொண்டு ஓடிவந்தான். அவ்வாறு ஓடிவந்த அவ்வசுரனை வாலிபுத்திரனாகிய அங்கதன் "இவன் இராவணன்" என்று கருதிக்கையினால் ஓரறை அறைந்தான். வாலிபுத்திரனால் அடிபட்ட அவ்வசுரன் வாயினால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு மலை அடிபாறினாற்போலப் பூமியில் விழுந்தான். அவன் இறந்தபோது வானரர்கள் தாமடைந்த வெற்றியால் மகிழ்ந்து அந்த மலைக்குகை முழுதையும் நன்றாய்த் தேடினார்கள். அந்த முழைஞ்சைத் தேடியபின் அவர்கள் மறுபடியும் ஒரு பயங்கரமான மலைக்குகையுள் நுழைந்தார்கள். அவர்கள் அதையும் தேடிப்பார்த்து இளைப்படைந்து திரும்பிவந்து மனஞ்சோர்ந்து ஒரு தனிமரத்தினடியிலேதங்கினார்கள்.

## நாற்பத்தொன்பதாஞ் சருக்கம்.

வானரர்கள் விந்தமலையை மறுபடியும் தேடுதல்.

அப்போது இளைப்படைந்திருந்த பேரறிவாளனாகிய அங்கதன் மெல்ல மெல்ல வானர வீரர்களெல்லாருக்கும் உற்சாகம் உண்டுபண்ணி அவர்களை நோக்கி "சோலைகளும் மலைகளும் நதிகளும் துர்க்கங்களும் காடுகளும் முழைகளும் மலைக்குகைகளும் எல்லாந் தேடியாய் விட்டன. இந்த இடங்களில் எங்கேயாவது தேவாமிர்தம்போன்ற சீதையை யாதல் அவளை எடுத்துச்சென்ற ராக்ஷசனையாதல் நாம் காணவில்லை. கொடிய தண்டனை செய்யும் சுக்கிரீவன் குறித்த காலத்திலும் அதிக பாகம் கழிந்துவிட்டது; ஆதலால் நீங்களெல்லாரும்

அங்கதன் வானரர்களை மறுபடியும் சீதையைத் தேடச்சொல்லல்.

ஒன்று சேர்ந்து எல்லாவிடங்களையும் தேடவேண்டுன், இளைப்பையும் சோகத்தையும் நித்திரையையும் ஒருங்கே நீக்கிவிட்டுச் சனகராசன் புத்திரியாகிய சீதையை ஒரு தலையாக நீங்கள்தேடிக் காணவேண்டும். துளக்கமின்மையும் வலிமையும் மனவெழுச்சியும் காரிய சித்தியைச் செய்யுமென்பார்கள்; அதனாலேதான் நான் இதனை உங்களுக்குச்சொல்லுகின்றேன். வானரர்காள், இனி இந்த நுழைதற்கரியகாட்டை நீங்கள் தேடுங்கள்; இந்த வனத்தை நீங்கள் எல்லாரும் வருத்தத்தை நீக்கிவிட்டு மறுபடியும் தேடல் தக்கது. முயற்சிசெய்பவர்களே முயற்சியின்பயனைக் காண்பார்கள்; இது நிச்சயம். மனஞ்சலித்தது போதும்; கண்ணை மூடிக்கொண்டிருப்பது தக்கதன்று. சுக்கிரீவன் வெகு கோபமுள்ளவன்; கொடுந்தண்டனை செய்பவன்; ஆகையால் அவனுக்கும் மகாத்துமாவாகிய இராமருக்கும் நாம் எப்போதும் பயப்படவேண்டும். இது நான் உங்களுடைய நன்மைக்காகச் சொன்னேன். இனி உங்களுக்கிஷ்டமானதைச் செய்யுங்கள்; அல்லது வேறு செய்யத்தக்கதைச் சொல்லுங்கள்" என்றான். அங்கதன் சொன்னதைக்கேட்டுக் கந்தமாதனன் நீர்வேட்கையினாலும் களைப்பினாலும் மெலிந்து செவ்வனே புலப்படாத வார்த்தையினால் "அங்கதன் நமக்குச் சொன்னது தக்கதும் நன்மை பயப்பதும் அநுகூலமானது மன்றோ? ஆதலால் நாம் அதைச்செய்வோம். நாம் மகாத்துமாவான சுக்கிரீவனுடைய கட்டளையின்படி மலைகளையும் குகைகளையும் முழைகளையும் பாழ்ங்காடுகளையும் மலை யருவிகளையும் வனங்களையும் மலையிலுள்ள துர்க்கங்களையும் மறுபடியும் தேடுவோம்" என்று கூறினான். கந்தமாதனன் இவ்வாறு சொல்ல மிக்க வலியுடைய வானரர்களெல்லாருமெழுந்து விந்தாடவிசெறிந்த தென்திசையை மறுபடியும் தேடினார்கள். வானரர்கள் சிகரங்களும் முழைகளு முடையதும் சரற்காலத்து மேகம்போல

கந்தமாதனன் அங்கதன் சொன்னபடி செய்யவேண்டுமெனல்.

போயிருந்ததுமாகிய அழகிய இரசதபர்வதத்தின் மேலே றிச் சீதையைக் காணவேண்டுமென்ற ஆசையினால் அங்கேயுள்ள கோத்திர வனத்தையும் ஏழிலைப்பாலை வனத்தையும் தேடினார்கள். மிக்க ஆண்மையுடைய அந்த வானரர்கள் அந்த மலையினுச்சியிலேறி இளைப்புற்றும் இராமருடைய பிரிய மனைவியாகிய வைதேகியைக் காணவில்லை. அவர்கள் பல முழைஞ்சுகளையுடைய அந்த மலையைக் கண்பார்வை போனவரைக்கும் எங்கும் தேடிப் பார்த்துக்கொண்டு இறங்கினார்கள். அவர்கள் பூமியில் இறங்கிக் களைப்புற்று அறிவழிந்து அவ்விடத்துள்ள ஒரு மரத்தடியில் ஒரு முகூர்த்தகால மிருந்தார்கள். அவர்கள் ஒரு முகூர்த்தகாலம் இளைப்பாறிச் சிறிது சிரமம் தீர்ந்து தென்திசை முழுவதையுந் தேடும்படி மறுபடியு மெழுந்தார்கள். அநுமான் முதலிய வீரர்கள் புறப்பட்டு விந்தமலை முதலாக எவ்விடங்களையும் தேடினார்கள்.

---

## ஐம்பதாஞ் சருக்கம்.

*வானரர்கள் ரிக்ஷபிலத்துள் புகுதல்.*

---

அநுமான் தாரனோடும் அங்கதனோடும் சேர்ந்து விந்தமலையின் குகைகளையும் அடர்ந்த காடுகளையும் சிங்கங்களும் புலிகளும் வசித்த கற்பாறைகளையும் ஆறுகளையும் பள்ளங்களையும் பெரிய மலையருவிகளையும் தேடினான். பின்பு அவர்கள் அந்த மலையின் தென்மேற்குக் கோடியில் வந்து தங்கினார்கள். அங்கே அவர்கள் இருக்கையில் அவர்களுக்குக் குறித்த காலவெல்லை கழிந்துவிட்டது. அந்த இடம் பெரிய குகைகளும் அடர்ந்த காடுகளும் மிகுந்து எளிதில் தேடமுடியாததா யிருந்தது. அந்த மலை முழுதையும் அநுமான் தேடினான். அநுமானும் கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாத

*வானரர்கள் விந்தமலையைத் தேடுதல்.*

னன், மயிந்தன், துவிவிதன், சுஷேணன், சாம்பவன், நளன், இளவரசனுகிய அங்கதன், வனத்தில் திரியும் தாரன் முதலானவர்களும் ஒன்று சேர்ந்து ஒருவரை ஒருவர்விட்டு அதிக தூரம்பிரியாமல் தென்திசையிலுள்ள மலை செறிந்த நிலங்களைத் தேடினார்கள். அவர்கள் அப்படித் தேடும்பொழுது அங்கே ஒரு வாய்திறந்த பிலத்தைக்கண்டார்கள். அது ரிக்ஷபில மென்னும் பெயருடையது; புகுதற் கரியது; ஒருதானவனுற் காக்கப்பட்டது.

வானரர்கள் ரிக்ஷபிலத்தைக் காணல்.

களைப்படைந்து பசியுந்தாகமுமுற்று நீர் தேடித்திரிந்த வானரர்கள் அந்தப்பெரிய பிலத்தைக் கண்டார்கள். அது மரமுங் கொடியும் செறிந்திருந்தது. அதனுள்ளிருந்து அன்றில்களும், அன்னங்களும், வெள்ளை நாரைகளும், சக்கரவாகங்களும் தாமரைப்பூந்தாதினுல் உடல் சிவந்து நீரொழுகவந்து கொண்டிருந்தன. வானர வீரர்கள் புகுதற் கரியதும் நன்மணம் வீசுவதுமாகிய அந்தப் பிலத்தைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்தார்கள். அந்தப் பிலம் பலவகை உயிர்க் கூட்டங்கள் மிகுந்து, அசுரேந்திரன் மாளிகை போன்று, கண்கொண்டு பார்க்கக்கூடாததாய், அச்சந் தருவதாய், எப்புறத்தாலும் புக முடியாததாயிருந்தது. மிக்கவலியுடைய வானர வீரர்கள் வெகு சந்தோஷத்தோடு அந்தப் பிலத்தை அடைந்தார்கள். அப்போது பலவகைக் காடுகளையும் நன்றுயறிந்த வாயு குமாரனை அநுமான் வானரர்களை நோக்கி "நாம் தென்திசைக்கண்ணுள்ள மலை செறிந்த நிலங்களைத் தேடிக் களைத்துவிட்டோம்; ஆயினும் மைதிலியை நாம் காணவில்லை. இந்தப் பிலத்தினுள்ளிருந்து அன்னங்களும் அன்றில்களும் வெள்ளைநாரைகளும் சக்கரவாகங்களும் உடல் நனைந்து வருகின்றன. ஆதலால் இதற்குள் நீருள்ள ஒரு கிணறோ குளமோ இருப்பது நிச்சயம். பிலத்தின் வாயிலில் குழைத்த மரங்களும் நிற்கின்றன" என்று சொன்

னன். சொன்னவுடன் வானரர்களெல்லாரும் சந்திர சூரியரின்றி இருள் நிறைந்து கண்டவர் மயிர் சிலிர்த்தற்கேதுவான அந்தப்பிலத்துள் நுழைந்தார்கள். அங்கே திரிந்த சிங்கங்களையும் விலங்குகளையும் பறவைகளையும் பார்த்துக்கொண்டு அவர்கள் உள்ளே புகுந்தார்கள். அங்கே அவர்களுடைய கண்பார்வையாவது வலியாவது ஆண்மையாவது குறையவில்லை; அவர்களுடைய கதி வாயுகதிபோன்றிருந்தது; அவர்களுடைய பார்வை இருளில் கூர்த்து விளங்கிற்று. அந்தப் பிலத்துள் வேகமாகச் சென்றுகொண்டிருந்த வானரர்கள்முன்னே அழகிய சிறந்த காட்சியொன்று தோன்றிற்று. பலவகை விருக்ஷங்கள் நிறைந்து நுழைதற்கரியதாயிருந்த அந்தப்பிலத்தினுள்ளே அவர்கள் ஒருவரை ஒருவர்பிடித்துக்கொண்டு ஒரு யோசனைதூரம் சென்றார்கள். அவர்கள் அங்கே அறிவிழந்து, தாகமுற்று, சுழற்சி யடைந்து, நீர் தேடிக்கொண்டு போயினார்கள்; சிறிதுகாலம் மெய்ம்மறந்து கிடந்தார்கள். அந்த வானர வீரர்கள் மெலிந்து, முகம் வாடி, இளைப்படைந்து, உயிரில் ஆசை அற்றவர்களாய்ச் செல்லும்போது ஓரொளியைக் கண்டார்கள். பின்பு அந்த இடத்திற்குச் சென்று எரிகின்ற சூரியன்போன்ற ஒளியுடைய பொன் மரங்களால் இருளற்ற அழகியவனமொன்றைக்கண்டார்கள். அவர்கள்பொன்னணி யணிந்தாற்போலப் புஷ்பித்துப் பலவகையான பொற்கொத்துக்களையும், சிவந்த தளிர்களையு முடையவைகளாய், கொடிகள் மிடைந்த சாலம், தாலம், புந்நாகம், ககுபம், வஞ்சுளம், தவம், சம்பகம், நாகம், கோங்கம் முதலிய மரங்களையும், வைடூரியத்தினாற் செய்யப்பட்டு இள ஞாயிறுபோல் விளங்கிய வேதிகைகளிலுள்ள ஒளியுடைய அழகிய பொற்றருக்களையும், பறவைகள் சூழ்ந்து, பால சூரியன்போன்ற பெரிய பொற்றாமரை மலர்கள் செறிந்

வானரர்கள் பிலத்துள் நுழைதல்.

துள்ள நீல வைடூரிய வர்ணங்களையுடைய தாமரை ஓடைகளையும், தெளிந்த நீரையும் பொன் மீன்களையும் பெரிய ஆமைகளையுமுடைய தாமரைக் குளங்களையும் கண்டார்கள். பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்பட்ட விமானங்களையும், பொன்னாற்செய்து முத்துத் தூக்கம் தூக்கிய பலகணிகளையும், பொன்னாலும் வெள்ளியாலும் இயற்றப்பட்டு வைடூரியக் கற்படுத்த நிலங்களையுமுடைய பெரிய மாளிகைகளையும் அவர்கள் அங்கே கண்டார்கள். அவர்கள் எவ்விடங்களிலும் தேனும், பவளம்போன்ற புஷ்பங்களும், பழங்களும், பொன் வண்டுகளு முள்ள மரங்களையும், பொன்னாற் செய்து மணியிழைத்த பல வகையான படுக்கைகளையும் இருக்கைகளையும் விலையுயர்ந்த வாகனங்களையும் கண்டார்கள். அவர்கள் இடங்கடோறும் பொன்னினாலும் வெள்ளியினாலும் கஞ்சத்தினாலும் செய்த பாத்திரக் கூட்டங்களையும், அகிற் குவால்களையும், திவ்விய சந்தனக் குவியல்களையும், உணவுக்கு யோக்கியமான சுத்தமாகிய கிழங்குகளையும் பழங்களையும், விலையுயர்ந்த பானங்களையும், இனிய மதுக்களையும், விலையுயர்ந்த திவ்விய வஸ்திர ராசிகளையும், சித்திரமான கம்பலத்தொகுதிகளையும், தோற் குப்பைகளையும், எரிகின்ற சூரியன்போல ஒளிகாலும் அழகிய பொற் குவைகளையும் கண்டார்கள். வானர வீரர்கள் அந்தப்பிலத்தின் இடங்களையெல்லாம் தேடிக் கொண்டு வரும்போது சமீபத்தில் ஒரு பெண்ணைக் கண்டார்கள். கிழிந்த கருமான்றோலுடுத்து, உண்டி சுருக்கி, ஒளி வீசிய தேகத்தோடுதோன்றிய அந்தத் தவப்பெண்ணைக்கண்டு வானரர்களெல்லாரும் ஆச்சரியமடைந்து நின்றார்கள். அப்போது மலைபோன்ற அநுமான் அந்தத் தவமுதுமகளை வந்தித்து வணங்கி "அன்

வானரர் பிலத்துள் ஒரு தவமுதுமகளைக் காணல்.

னாய், நீவிர் யார்? இந்தப்பிலமும் இந்த மாளிகையும் இதிலுள்ள பொன்னும் மணியும் யாருடையன?" என்று கேட்டான்.

## ஐம்பத்தொன்றாஞ் சருக்கம்.

*பிலம் யாருடையதென்று சுயம்பிரபை கூறல்.*

*அநுமான் பிலம் யாருடையதென்று வினவல்.*

அநுமான் இவ்வாறு கூறிவிட்டுப் பெயர்த்தும் கருமான்றோல் தரித்துத் தருமவழியில் ஒழுகும் பெரிய தவமுது மகளை நோக்கி "நாங்கள் பசியாலும் தாகத்தாலும் வருந்தி மிகவும் மெலிந்து இந்த இருள்நிறைந்த பிலத்துள் பிரவேசித்தோம். நாங்கள் நீர்வேட்கையினால் இந்தப் பெரிய பிலத்துள் பிரவேசித்து இங்குள்ள பல அற்புதமான பொருள்களைக் கண்டு மருண்டு அலம்வந்து அறிவழிந்தோம். இளஞாயிறு போன்ற இந்தப் பொற்றருக்கள் யாருடையன? இந்த உணவுக்காகிய சுத்தமான கிழங்குகளும் பழங்களும் யாருடையன? பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்த விமானங்களையும் இரத்தினவலைகள் கட்டிய பொற்பலகணிகளையுமுடைய இந்த மாளிகைகள் யாருடையன? யாருடைய ஆற்றலினால் இந்தப் பொன்மயமான விருக்ஷங்கள் பூத்துப் பழுத்து நறுமணங் கமழ்ந்து விளங்குகின்றன? யாருடைய ஆற்றலால் நிர்மலமான சலத்தில் பொற்றாமரைகள் முளைக்கின்றன? இந்த நீரில் பொன்மீன்கள் ஆமையோடு கூடி எப்படிச் சஞ்சரிக்கின்றன? இவைகளெல்லாம் உம்முடைய ஆற்றலால் உண்டாயினவா? அல்லது வேறொருவருடைய தவவலிமையினால் உண்டாயினவா? இவைகள் ஒன்றும் எங்களுக்குத் தெரியவில்லை. நீவிர் எல்லாவற்றையும் சொல்லவேண்டும்" என்று வினவி

ஞன். அதுகேட்டு உயிர்கண்மேல் அருள்முதிர்ந்து தரும வழியில் ஒழுகிய தவமுதுமகள் அநுமானை நோக்கி "தானவர்களுட் சிறந்த மயனென்பவனொருவன் இருந்தான். அவன் பேராற்றலுள்ளவன்; மாயைசெய்வதில் வல்லவன். அவன் தானவவேந்தர்களுக்குவிசுவகருமனாகவிருந்தான். அவனே தன் மாயையால் இந்த அழகிய பொன் மாளிகையையும் பொற் சோலையையும் செய்தான். அவன் இந்த வனத்திலே ஆயிரம்வருஷம் தவம்செய்து பிரமதேவரிடத்தில் வரம்பெற்று உசனனென்னும் சுக்கிரனியற்றிய சாஸ்திரங்களினறிவை யடைந்தான். தான் விரும்பியவைகளெல்லாவற்றையும் படைத்து வைத்துக் கொண்டு அவன் இந்த வனத்திலே சிறிதுகாலம் இன்பமுற்று வாழ்ந்தான். அவன் ஏமை என்னும் தெய்வப் பெண்மேல் ஆசை கொண்டானாக இந்திரன் வலியோடு வச்சிரத்தா லெறிந்து அவனைக்கொன்றான். பின்பு பிரமதேவர் இந்தச்சிறந்த வனத்தையும் பொன் மாளிகையையும் என்றென்றைக்கும் அநுபவிக்கும்படி ஏமைக்குக் கொடுத்தார். நான் மேருசாவர்ணியின் புத்திரி; என் பெயர் சுயம்பிரபை. ஏமையினுடைய இந்த மாளிகை எனது காவலி லிருக்கின்றது. இசையிலும் நாடகத்திலும் வல்லளாகிய ஏமை எனக்குயிர்த்தோழி. அவள் எனக்குத் தந்த வரத்தினால் நான் இந்தச் சிறந்த மாளிகையைக் காத்துக்கொண்டிருக்கிறேன். உங்களுடைய காரியம் என்ன? யாதுகாரணத்தினால் நீங்கள் இந்தப் பெருங்காட்டிற்கு வந்தீர்கள்? இந்தநுழைதற்கரிய வனத்தை நீங்கள் எவ்வாறு கண்டீர்கள்? உணவுக்கு யோக்கியமான இந்தக் கிழங்குகளையும் பழங்களையும் சாப்பிட்டுத்தண்ணீரும் குடித்துவிட்டு எனக்கு இவைகள் எல்லாவற்றையும் சொல்லுங்கள்" என்றாள்.

சுயம்பிரபை பிலத்தின் வரலாறு கூறல்.

சுயம்பிரபை வானரர்கள் வந்த காரணம் வினவல்.

## ஐம்பத்திரண்டாஞ் சருக்கம்.

*அநுமான் தாங்கள் வந்தகாரியம் இன்னதென்று சுயம்பிரபைக்குக் கூறல்.*

---

*அநுமான் தாங்கள் வந்த காரியம் கூறல்.*

ஒருப்பட்ட மனத்தையுடையவளும் தருமநெறியில் நடப்பவளுமாகிய அந்தத் தவமுதுமகள் வலிய வானர வீரர்களை நோக்கி "வானரர்காள், நீங்கள் பழஞ் சாப்பிட்டு இளைப்பு நீங்கிவிட்டீர்களாயின், உங்கள் வரலாற்றை யான் கேட்க விரும்புகின்றேன்; அதை யான் கேட்கலாமாயிற் சொல்லுங்கள்" என்றாள். அவள் கூறின வார்த்தையை வாயு குமாரனாகிய அநுமான் கேட்டு எல்லாவற்றையும் உள்ளபடி சொல்லத்தொடங்கி "எல்லாவுலகங்களுக்கும் அரசரும், இந்திரனையும் வருணனையும் ஒத்தவரும், தசரத குமாரருமாகிய ஸ்ரீமான் இராமர், தமது தம்பி லக்ஷ்மணரோடும் மனைவி சீதையோடும், தண்டகாவனத்திற்கு வந்தார். ஜனஸ்தானத்திலிருக்கும்போது அவருடைய மனைவியை இராவணன் வலிந்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். அவ்வரசருக்குச் சுக்கிரீவனென்னும் வானர வீரன் தோழன். நாங்கள் அந்த வானர ராஜனால் அனுப்பப்பட்டவர்கள். அங்கதன் முதலாகிய கொடிய வானரர்களுடன் கூடிய நாங்கள் அகஸ்தியர் வசிப்பதும் யமனுடைய காவலிலுள்ளது மாகிய இந்தத் தென்திசைக்கண் நினைத்த உருவமெடுக்க வல்ல இராவணனென்னும் ராக்ஷசனையும் சீதையையும் தேடும்படி கட்டளைபெற்றிருக்கிறோம். நாங்கள் தென்றிசை முழுதையும் தேடிப் பசியினால் மெலிந்து ஒரு மரத்தினடியில் உட்கார்ந்தோம். முகம்வெளிறிச் சிந்தைமேலிட்டுக் கடத்தற்கரிய கவலைப் பெருங்கடலுள் ஆழ்ந்து நான்கு புறமும் நோக்கிய எங்களுக்கு மரங்களும் கொடிகளுஞ் செறிந்து இருள் நிறைந்திருக்கும் இந்தப்பிலம் புலப்பட்

டது. இதனுள்ளிருந்து அன்னங்களும் வெள்ளை நாரைகளும் அன்றில்களும் சலத்தில் நனைந்து, சிறகிலிருந்து நீரொழுக, வெளிப்பட்டு வந்தன. அப்போது நான் "இந்தக் குகைக்குள் நாங்கள் போவோம்" என்று இந்த வானரர்களுக்குச் சொன்னேன். அவர்களுமெல்லாரும் அந்தக் கருத்தே கொண்டார்கள். பின்பு அவர்கள் "போவோம், போவோம்" என்று அரசனுடைய காரியத்தின் விரைவால் உடனே இருள் மூடிய இந்தப் பிலத்துள் நுழைந்து ஒருவர் கையை ஒருவர் இறுகப்பிடித்துக்கொண்டு இறங்கினார்கள். இதுவே எங்களுடையகாரியம்; இதனாலேயே நாங்கள் இங்குவந்தோம். பசியால் வருந்தி உம்மிடத்தில் வந்தேமுக்கு நீர் விருந்து புறந்தரும் முறைமையால் உண்ணும்படி பழங்களையும் கிழங்குகளையும் கொடுத்தீர். இவ்வாறு உம்மால் பசியினின்றும் காப்பாற்றப்பட்ட யாங்கள் உமக்குப் பிரத்தியுபகாரமாக யாது செய்யவேண்டும் சொல்லும்" என்றான். அநுமான் இவ்வாறு கூற எல்லாமறிந்த சுயம்பிரபை வானர வீரர்களை நோக்கி "மிக்க வேகமுடைய உங்களைக் கண்டு நான் சந்தோஷமடைந்தேன். என்னுடைய நிலைக்குரிய அறத்திலே ஒழுகும் எனக்கு உங்களால் ஆகவேண்டிய காரியம் ஒன்று மில்லை" என்றாள்.

---

## ஐம்பத்துமூன்றாஞ் சருக்கம்.

வானரர்கள் பிலத்துணின்று வெளிப்படுதல்.

---

இவ்வாறு சுயம்பிரபை கூறிய தருமத்தோடியைந்த வார்த்தையை அநுமான் கேட்டு அந்தக் குற்றமில்லாத செய்கையுடையாளை நோக்கி "அறவொழுக்க முடையாய், நாங்கள் எல்லாரும் உம்மைச்சரணடைகின்றோம். இந்தப் பிலத்துள் நாங்கள் திரிவோமாயின் சுக்கிரீவனால் எங்க

னுக்கு வரையறுக்கப்பட்டகாலம் கழிந்து விடும்; அவனுடைய கட்டளையை மீறினல் எங்கள் உயிர் போய்விடும். ஆகையால் சுக்கிரீவனுடைய பயத்தால் வருந்தும் எங்களை நீர் இந்தக் கொடிய பிலத்துனின்றும் கரையேற்றிக் காப்பாற்றவேண்டும். நாங்கள் செய்ய வேண்டும் காரியமோ மிகப்பெரியது. இங்கே தங்குவோமாயின் நாங்கள் அதனைச்செய்தல் முடியாது" என்று கூறினன். அது கேட்ட சுயம்பிரபை "ஒருவர் இந்தப் பிலத்துட் புகுந்து பின் உயிருடன் திரும்பிப்போவது அரிது. விரதங்கள்செய்து ஈட்டிய எனதுதவ வலிமையால் நான் உங்கள் எல்லாரையும் இந்தப்பிலத்துள் நின்றும் எடுத்துவிடுகிறேன். வானரவீரர்காள், நீங்கள் எல்லாரும் உங்கள் கண்களைமூடுங்கள்; கண்களை மூடாமல் ஒருவரும் இங்கிருந்து வெளியில் போகமுடியாது" என்றுள். உடனே அவர்கள் எல்லாரும் வெளியேபோதல்வேண்டுமென்ற இச்சையால் மெல்லிய கைவிரலினல் தங்கள் கண்களைமூடிக்கொண்டார்கள். அப்படிக் கையால் முகங்களைமூடிக்கொண்ட பெரிய வானர வீரர்களைச் சுயம்பிரபை ஒரு நிமிஷத்திற்குள் பிலத்துணின்றும் வெளிப்படுத்திவிட்டாள். பின்பு அவள் அவர்களை உற்சாகப்படுத்தி "நானவித மரங்களும் கொடிகளுமடர்ந்த அழகிய விந்தமலை இது; பிரஸ்ரவண மலை இது; பெரிய சமுத்திரம் இது. வானர வீரர்காள், உங்களுக்கு நன்மை உண்டாவதாக; நான் என் மாளிகைக்குப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு அந்தப் பிலத்துள் புகுந்தாள். அதன்பின் அவர்கள் பயங்கரமாக அலைகள் வீசி முழங்கும் வருணனுக்கிருப்பிடமாகிய கரையற்ற பெருங் கடலைக் கண்டார்கள். அவர்கள் மயன் தன்மாயையின் வலியால் செய்த பிலத்தைத்தேடித் தம்மாசனல் குறிக்கப்

*அநுமான் தங்களைப்பிலத்துணின்று வெளிப்படுத்திவிடும்படி சுயம்பிரபையைக் கேட்டல்.*

*சுயம்பிரபை வானரர்களைப் பிலத்துணின்று வெளிப்படுத்தல்.*

பட்ட ஒருமாச வெல்லையையும் கழித்துவிட்டு அலர்ந்த மலர்செறிந்த மரங்களையுடைய விந்தமலையின் அடியிலே இருந்துகொண்டு சிந்திக்கலாயினர்கள். அவர்கள் வசந்த காலத்து மரங்கள் புஷ்பபாரத்தால்வளைந்து அநேக கொடிகள் சூழ்ந்து விளங்குவதைக்கண்டு பயமடைந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வசந்தகாலம் வந்துவிட்ட தென்பதையறிந்து சீதையைத் தேடுவதற்குக் குறித்த காலம் கழிந்துவிட்டதென்று பயந்து பூமியில் விழுந்தார்கள். அப்போது சிங்கேற்றின் தோள்கள்போன்ற தோள்களையும் பருத்து நீண்டகைகளையுமுடைய அறிவிற்சிறந்த இளவரசனான அங்கதன் வானரர்களுள் விருத்தர்களையு மற்றுள்ளவர்களையும் இனிய வார்த்தை கூறி உபசாரஞ் செய்து "வானரர்காள், எங்களரசன் கட்டளையினல் நாங்கள் எல்லாரும் புறப்பட்டோம்; நாம் பிலத்துளிருக்கும் போதே ஒருமாதம் கழிந்துவிட்டது. இதை நீங்கள் ஏன் அறியவில்லை? நாங்கள் கார்த்திகை மாதத்திற்குள் சீதையைத் தேடுவதாகச் சொல்லிப் புறப்பட்டு வந்தோம்; அந்த மாதம் கழிந்துவிட்டது; இனிச் செய்யவேண்டிய காரியம் என்ன? நீங்கள் அரசனல் தேறப்பட்டவர்கள்; நீதிநூலை யறிந்தவர்கள்; அரசன் நன்மையை நாடுபவர்கள்; எல்லாத்தொழிலும் தெரிந்தவர்கள்; வினை செய்வதில் ஒப்பில்லாதவர்கள்; எல்லாத்திக்கும் எட்டிய புகழை உடையவர்கள்; அரசனல் என்னுடன் அனுப்பப்பட்டவர்கள். அரசன் ஏவிய காரியத்தைச் செய்துமுடிக்காத நாங்கள் கொலைக்காளாவோம்; இதிற் சந்தேகமில்லை. வானரராஜனுடைய ஏவலைச் செய்யாது யார்வன் சுகமடைந்தவன்? சுக்கிரீவன் குறித்த காலம் கழிந்தமையால் நாம் பட்டினிகிடந்து உயிர் துறத்தல் தக்கது. எங்களுக்குத் தலைவனாகிய சுக்கிரீவன் இயற்கையால் கொடியவன்; நாம் குற்றஞ் செய்து

அங்கதன் சீதையைக் காணமையால் தாங்கள் உயிர் துறக்க வேண்டுமெனல்.

விட்டுப் போவோமாயின் அவன் நம்மை ஒருபோதும் மன்னிக்கமாட்டான். சீதையைக் காணுதபோது அவன் இந்தக் கொடியதண்டனை செய்வது நிச்சயம்; ஆகையால் நாங்கள் நமது மனைவி மக்கள் பொருள் வீடு எல்லா வற்றையுந் துறந்துவிட்டுப் பட்டினிகிடந்து உயிர் விடுதல் தக்கது. நாங்கள் திரும்பிப்போனுல் எங்களை அரசன் தண்டிப்பான் என்பதில் சந்தேகமில்லை; தகுதியில்லாதபடி கொலையுண்ணுவதைப் பார்க்கிலும் இங்கே இறந்துவிடுவது சிறந்தது. சுக்கிரீவன் என்னை யுவராஜ பதவிக்கு நியமிக்கவில்லை; வினைசெய்வதிற் கலங்காத இராமரே என்னை நியமித்தார். கட்டளைமீறின என்னைக்கண்டால் என்மேல் முன்வைத்த வைரத்தினுல் சுக்கிரீவன் எனக்குக் கொடிய தண்டனை விதித்து என்னுயிரை வாங்கிவிடுவது நிச்சயம். என்னுடைய உயிர் போகும்போது நான் படுந்துயரத்தை என்நண்பர் காண்பதனுல் என்ன பயன்? ஆகையால் இந்தச் சமுத்திரத்தின் புண்ணிய தீரத்திலேயே நான் பட்டினி கிடக்கின்றேன்" என்று கூறினுன். யுவராஜனுன அங்கதன் கூறிய இந்த வார்த்தையைக் கேட்டு வானரவீரர்கள் கருணையோடு "சுக்கிரீவன் இயல்பினுற் கொடியவன்; இராமர் மனைவியின்மேலன்புள்ளவர்; நாங்கள் சீதையைக்காணுது போவதைக் கண்டால் சுக்கிரீவன் இராமரைப் பிரீதிசெய்யும்பொருட்டு எங்களைக் கொல்லுவான்; இதிற் சந்தேகமில்லை. குற்றஞ் செய்தவர்கள் தம் தலைவன் பக்கலில்போவது தக்கதன்று. நாம் இங்கேயே சீதையைத்தேடி அவளுடைய செய்தியை அறிவேம். சுக்கிரீவனை அடைவோமாயின் யமலோகம் போவேம்" என்று சொன்னுர்கள்.

பயமடைந்த வானரர்கள் கூறிய வார்த்தையைத் தாரன் கேட்டு "துக்கப்பட்டது போதும். உங்களுக்கிஷ்டமானுல் நாங்கள் எல்லாரும் பிலத்தில்போய் வசிப்போம். அது மாயையினுல் செய்யப்பட்டது; அதனுல்

ஒருவராலும் அணுகமுடியாதது. அதுமரமும் நீரு முடையதாய் உண்பனவும் குடிப்பனவும் நிறைந்துள்ளது. அங்கே இந்திரனுலாவது, இராமராலாவது, சுக்கிரீவனுலாவது ஒருபயமுமில்லை" என்றான். அங்கதனுக்கு அநுகூலமாகிய இந்த வார்த்தையைக் கேட்டு வானரர்களெல்லாரும் தேறுதலடைந்து "நாங்கள் உயிரிழவாதிருக்கும் வண்ணம் செய்யவேண்டுவதைத் தாமதமின்றிச் செய்யுங்கள்" என்றார்கள்.

தாரன் பிலத்தில் வசிப்போமென்றல்.

## ஐம்பத்துநான்காஞ் சருக்கம்.

*அநுமான் அங்கதனைச் சுக்கிரீவன் தண்டிக்க மாட்டானென்று தேற்றுதல்.*

சந்திரனைப்போன்ற வெள்ளிய நிறத்தையுடைய தாரன் இவ்வாறு கூற, அங்கதன் அதற்கியைந்து இராச்சியத்தை வகித்துக்கொள்வானென்று அநுமான் எண்ணினான். அவன் அங்கதனை எட்டங்கங்களுடைய புத்தியும் நால்வகை வலியும், பதினான்கு குணமும், அறிவு, ஆண்மை, பெருமைகளு முடையவனென்றும், சுக்கிலபக்கத்துச் சந்திரன்போல வளருந் திருவினையுடையவனென்றும், புத்தியில் தேவகுருவை ஒத்தவனென்றும், ஆண்மையில் தன்தந்தை வாலியை நிகர்த்தவனென்றும், இந்திரன் தேவமந்திரியின் புத்தியைக் கேட்குமாறுபோலத் தாரனுடைய புத்தியைக் கேட்பவனென்றும் கருதினான். அநுமான் சர்வ சாஸ்திரங்களு மறிந்தவர்களுள் சிறந்த அங்கதனை அரசனுடைய காரியத்தில் மனம் மெலிந்தவனென்றெண்ணி உற்சாகப் படுத்தும்படி தொடங்கினான். அவன் நால்வகை உபாயங்களுள் மூன்றுவதாகிய பேதத்தை உபயோகித்துத் தன் சொல்வன்மையினால் அங்குள்ள

வானரர்களை எல்லாம் வேறுபடுத்தினான். அவர்கள் அவ்வாறு வேறுபட்டபோது அநுமான் அங்கதனை அச்சமுறுத்தவேண்டி, கோபத்தோடியைந்து பயத்தை யுண்டாக்கும் பலவார்த்தைகளால் "தாரைகுமார, நீ நிச்சயமாக உன் பிதாவைப்பார்க்கிலும் யுத்தத்தில் மிக வல்லவன்; உன் பிதாவைப்போலவே வானரராச்சியத்தையும் வகிக்க வல்லவன். வானரர்கள் ஒருபோதும் ஸ்திரமான புத்தி உடையவர்களல்லர்; அவர்கள் தங்கள் மனைவி மக்களை விட்டு நீங்கி உன்னுடைய ஆஞ்ஞைக்குக் கீழ்ப்படிந் திருக்கமாட்டார்கள். அவர்கள் உன்னோடொத்திருக்கமாட்டார்கள். இதை நான் அவர்கள் முன்னிலையிலேயே சொல்லுகின்றேன். சாம்பவனையாவது நீலனையாவது பெரிய சுகோத்திரனையாவது என்னையாவது சாம பேத தானதண்டம் முதலிய உபாயங்களுள் ஒன்றினால் சுக்கிரீவனிடத்தில் நின்றும் பிரித்தெடுக்க உன்னால் முடியாது. வலியவன் மெலியவனைப் பகைத்து உயிர் வாழலாம்; தன்னுயிரைக் காப்பாற்ற வேண்டுமாயின் மெலியவன் வலியவனைப் பகைக்கலாகாது. தாரன் சொன்னதைக் கேட்டு நீ இந்தப் பிலம் உனக்குப் புகலிடமாகுமென்று எண்ணுகின்றாய்; இதைப் பிளந்தெறிவது லக்ஷ்மணருடைய பாணங்களுக்கு அற்பகாரியமாகும். முன்னர் இந்திரன் தனது வச்சிராயுதத்தை எறிந்து இதனைச் சிறிது பிளந்தான். லக்ஷ்மணருடைய கூரியபாணங்கள் இப்போது இதனை ஒரு தொன்னையைப்போலக்கிழித்துவிடும். வச்சிராயுதத்தையும் இடியையும்போன்று மலைகளையும் பிளக்கின்ற அம்புகள் லக்ஷ்மணரிடத்தில் அநேக மிருக்கின்றன. நீ இங்கே தங்குவதற்கு நிச்சயித்த அந்த க்ஷணமே வானரர்கள் உன்னைத்துறந்து விடத்தீர்மானித்து விடுவார்கள். அவர்கள் மனைவி மக்களை நினைந்து அவர்களைக் காண ஆசையுற்றுப்பசித்து வருந்தி உனக்கு வாலைக்காட்

அநுமான் அங்கதனுக்குப் புத்திகூறல்.

டுவார்கள். அப்போது நீ நண்பினரும் உனது நன்மையை நாடும் சுற்றத்தாருமின்றித் துரும்பசைவதைக் கண்டா லும் அச்சமுறுவாய். சுக்கிரீவனோடு மாறுபட்ட உன்னை மிகுந்தவேகமுள்ளனவும் தடுக்க முடியாதனவுமாகிய லக்ஷ் மணருடைய அச்சம்பரந்தபாணங்கள் வருத்தாதுபோகா. அப்படியன்றி நீ எங்களுடன்போய் வணக்கத்துடன் அவ னைச்சேர்வாயாகில் சுக்கிரீவன் உன்னை முறைப்படி இராச் சியத்தில் தாபித்து வைப்பான். தருமத்திலாசையும், அசையாத விரதமும், நல்லொழுக்கமும், சொற்றவறுமை யுமுள்ள உன் சிற்றப்பன் சுக்கிரீவன் உன்னைக்கொல்ல மாட்டான். அவன் உன்னுடைய தாயாரின்மேல் மிகவு மன்புடையவன்; அதனாலேயே அவன் உயிர்வைத்திருப் பது. அவளுக்கு உன்னையன்றி வேறுபிள்ளை இல்லை; ஆகையால் நீவா" என்று கூறினான்.

---

## ஐம்பத்தைந்தாஞ் சருக்கம்.

*அங்கதன் பட்டினிகிடந்து உயிர்விட நிச்சயித்தல்.*

---

வணக்கமுடையதும் தருமத்தோடியைந்ததும் அரச னுக்கு நன்மைபயப்பதுமாகிய அநுமான் கூறிய வார்த் தையை அங்கதன் கேட்டு " திண்மையும், நல்லெண்ண மும், அருளும், நேர்மையும், ஆண்மையும், தைரியமும் சுக்கிரீவனிடத்தில் இல்லை. தனது தாய்க்குச் சமானமான தன் தமையனது காதற்றேவியைத் தனக்குரியளாக்கிக் கொண்டு உயிர் வாழ்பவன் யாவராலும் நிந்திக்கப் படுவான். யுத்தஞ் செய்யச் சென்ற தன் தமையனால் காவல் செய்யும் படி நியமிக்கப்பட்டுப் பிலத்தின் வழியை மூடினவனுக்குத் தருமம் என்ன தெரியும்? கைதொட்டுச் சத்தியம் செய்து விட்டு, தனக்கு நன்று செய்த பெரும்

*அங்கதன் மறுத்து உயிர்துறப்பேன் என்று கூறல்.*

புகழை யுடைய இராமரை மறந்துவிட்டவன் யார் செய்த நன்மையை நினைத்திருக்கப் போகிறான்? தருமத்துக்குப் பயந்தன்றி லக்ஷ்மணருடைய பயத்தால் சீதையைத்தேடும்படி எங்களை யனுப்பினவனிடத்தில் தருமமெங்ஙனம் இருக்கும்? நீதியும் மனத்திட்பமும், நன்றி யறிதலுமில்லாத இந்தப்பாபியினிடத்தில், அவன் பிறந்த குலத்தில் பிறந்த சிறந்தவர்களுள் உயிரின் மேலாசையுடையவன் யார்தான் நம்பிக்கை வைப்பான்? குணமுள்ளவனாயினும் குணமில்லாதவனாயினும் புத்திரனை இராச்சியத்தில் தாபித்துவைப்பார்கள். சுக்கிரீவன் தன்சத்துரு குலத்திற்பிறந்த என்னை எப்படி உயிரோடு வைப்பான்? நான் என் இரகசியமெல்லாம் வெளியாகி, குற்றஞ் செய்து, ஆற்றல்கெட்டு, கிஷ்கிந்தைக்குப்போய், அநாதனாயும் பலமில்லாதவனாயும் எப்படி உயிர்வாழ்வேன்? சுக்கிரீவன் கெட்டவனும் கொடியவனும் இரக்க மில்லாதவனுமானமையால் இராச்சியத்தினிமித்தம் என்னைச்சிறையிலிட்டாவது இரகசியமாய்த்தண்டித்தாவது கொன்றுவிடுவான். சிறையில் கிடந்து துன்பமனுபவித்தலினும் பட்டினிகிடந்து உயிர் துறத்தல் எனக்குச்சிறந்தது. ஆதலால் எனக்கு விடைதாருங்கள். வானரர்காள், நீங்கள் எல்லாரும் உங்கள் வீட்டிற்குப்போங்கள். நான் இனிக்கிஷ்கிந்தைக்குத்திரும்பி வரமாட்டேனென்று உங்களுக்கு இதோ உறுதியாய்ச் சொல்லுகிறேன். இந்த இடத்திலேயே நான் பட்டினிகிடக்கின்றேன்; எனக்கு மரணமே சிறந்தது. பலசாலிகளான இராமலக்ஷ்மணர்களுக்கு நான் வந்தனைசெய்தேனென்று சொல்லுங்கள். வானரேஸ்வரனாகிய என் சிற்றப்பன் சுக்கிரீவனுக்கு எனது வழிபாட்டையும் எனது சுகத்தையுஞ் சொல்லுங்கள். எனது சிறிய தாய் உருமைக்கு எனது சுகத்தையும் ஆரோக்கியத்தையுங் கூறுங்கள். எனது தாய் தாரைக்குத் தேறுதல் சொல்லுங்கள். அவள் இயற்கையால் என்மேல் அன்புள்ளவள்; இரக்கமுள்ளவள்; அவ

லப்படுபவள்; நான் இங்கே இறந்து விட்டேன் என்ற தைக் கேட்டவுடன் உயிரை விட்டுவிடுவாள்" என்றான். அங்கதன் இவ்வாறு சொல்லிவிட்டுப் பெரியவர்களை வணங்கி, மனம்வருந்தி, அழுதுகொண்டு பூமியில் தருப் பையின்மேல் உட்கார்ந்தான். அப்படி அவன் இருந்த போது வானரவீரர்கள் துக்கமடைந்து அழுது கண்களி னின்றும் உஷ்ணமான நீரை வடித்தார்கள். அவர்கள் எல்லாரும் சுக்கிரீவனை நிந்தித்து வாலியைப் புகழ்ந்து அங்கதனைச் சூழ்ந்துகொண்டு பட்டினி கிடந்து உயிர் துறக்க நிச்சயித்தார்கள். அவர்கள் அங்கதனுடைய எண் ணத்தை அறிந்துகொண்டு தண்ணீரைக் குடித்துவிட்டுக்கிழக்குமுகமாக விருந்தார் கள். அவர்கள் நீர்க்கரையில் தெற்குமுக மாகப்பரப்பிய தருப்பையின்மேல் இருந்து கொண்டு "இதுவே எமக்கு ஏற்றது" என்று எண்ணினார்கள். அவர்கள் இராமருடைய வன வாசத்தையும் தசரதன் மரணத்தையும் ஜனஸ்தானத்தின் அழிவுபாட்டையும் சடாயுவின் வதையையும் சீதையின் அபகரணத்தையும் வாலியின் வதையையும் இராம ருடைய கோபத்தையும்பற்றிப் பயத்தோடு பேசிக் கொண்டிருந்தார்கள். பெரிய மலைபோன்ற வானரர்கள் உட்கார்ந்து மேகக்கூட்டங்களைப்போலப் பூசலிட்டபோது அருவிகள்பாயும் அந்த மலை ஓசை மிக்கொலித்தது.

வானரர்கள் உயிர்துறக்கப் பட்டினி யிருத் தல்.

## ஐம்பத்தாறுஞ் சருக்கம்.

### சம்பாதியைக் காணல்.

வானரர்கள் அந்த மலையின்மேலே பட்டினியிருந்து உயிர் துறக்க நிச்சயித்து உட்கார்ந்தபோது அங்கே கழு கரசன் வந்தான். அவன் சம்பாதி என்று பெயர் கூறப் படுபவன்; நீடித்த ஆயுளுடையவன்; சடாயுவின் சகோத

ரன்; வலியாலும் ஆண்மையாலும் புகழ் படைத்தவன். அவன்பெரிய விந்தமலையின் முழை ஒன்றிலிருந்து வெளிப்பட்டுஅங்கிருந்த வானரர்களைக்கண்டு சந்தோஷமுற்று "இவ்வுலகத்தில் ஒவ்வொருவனையும் அவன் வினைப்பயன் தொடருகின்றது. அதனாலன்றோ எனக்கென்று நியமிக்கப்பட்ட இந்த உணவு நெடுங்காலங் கழித்து என்னிடம் வந்திருக்கின்றது. நான் இந்த வானரர்களை ஒவ்வொருவராகக் கொன்று தின்னுவேன்" என்று சொன்னான்.

சம்பாதி வருதல்.

பசித்திருந்த அந்தப்பறவையின் வார்த்தையை அங்கதன்கேட்டு மிகவும் கவலையடைந்து அநுமானை நோக்கி "சீதை என்னும் வியாசத்தை வைத்துக்கொண்டு சூரிய புத்திரனாகிய யமன்தானே வானரர்களை அழிக்கும் பொருட்டு இங்கு வந்திருக்கிறான். இராமருடைய காரியமும் முடிவுபெறவில்லை. நமதரசன் கட்டளையும் நிறைவேறவில்லை. அப்படியிருக்க வானரர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்கு இந்த விபத்து வந்திருக்கின்றது. சீதைக்கு நன்மை செய்யும் பொருட்டு முன் கழுகரசனான சடாயு இங்கே யாது செய்தானென்பதை நீங்கள் முழுதும் கேட்டிருக்கின்றீர்கள். இவ்வாறே விலங்கு சாதியுள்ளிட்ட எல்லாப்பிராணிகளும், எங்களைப் போலவே, தம்முயிரைக்கொடுத்து, இராமருக்கு வேண்டியவற்றைச் செய்கின்றன. அன்பினாலும் அருளினாலும் ஏவப்பட்டு இவ்வாறே மனுடர் ஒருவருக்கொருவர் நன்மை செய்கின்றார்கள். அதனாலேயே அறமுணர்ந்த சடாயு இராமருக்கு உதவி செய்யும்பொருட்டுத் தானேதன் உயிரைக்கொடுத்து அவர் விரும்பியதைச் செய்தான். நாங்களும் இராமருக்காக இளைப்படைந்து உயிர் போகின்றவர்களாய் இந்தப் பெருங்காட்டில் வந்து சேர்ந்தோம். நாம் சீதையைக் கண்டுகொள்ளவில்லை. கழுகரசன் யுத்தத்

அங்கதன் வானரர்களுக்கு விபத்து வந்துவிட்டதென்று சொல்லல்.

தில் இராவணனால் கொல்லப்பட்டுச் சுகமடைந்தான். அவன் சுக்கிரீவனுடைய பயத்தினின்றும் நீங்கிப் பெரும் பேறு பெற்றான். சடாயுவினுடைய வதையினாலும் தசரதராஜனுடைய மரணத்தினாலும் சீதை அபகரிக்கப்பட்டமையினாலும் வானரர்களுடைய உயிருக்குப் பயமுண்டா யிருக்கின்றது. இராமரும் லக்ஷ்மணரும் சீதையோடு காட்டில் வசித்தலும், இராமருடைய பாணத்தால் வாலி மாண்டதும், அவருடைய கோபத்தினால் அளவற்ற ராக்ஷசர்கள் மடிந்ததும், இந்த விபத்தும் எல்லாம் முன் கைகேயிக்குக் கொடுத்த வரத்தினால் வந்தன" என்று கூறினான். பூமியில் விழுந்து கிடந்துகொண்டு தமது வருத்தத்தை எடுத்துக் கூறிக்கொண்டிருந்த வானரர்களைக் கண்டு கழுகரசன் மிகவும் மனக்கலக்கமுற்றுத் தன் பெருந்தன்மையைக் காட்டுவானாயினான்.

## ஐம்பத்தேழாஞ் சருக்கம்.

சம்பாதி சடாயு மாண்டதெவ்வாறென்று வினவல்.

அங்கதன் வாயிலிருந்து வந்த சொற்களைக் கேட்டுக் கூரிய மூக்கும் பெரிய ஓசையுமுடைய சம்பாதி வானரர்களைநோக்கி "என்னுடைய மனத்தை நடுங்கும்படி செய்து என்னுயிரினுமினிய சகோதரன் சடாயுவினுடைய மரணத்தைப்பற்றிப் பேசுகின்றவன் யாவன்? ஜனஸ்தானத்தில் இராக்ஷசர்களுக்கும் சடாயுவுக்குமிடையில் யுத்தம் எப்படி யுண்டாயிற்று? நெடுநாள் கழித்து இப்போதுதான் என் சகோதரன் பெயரை நான் கேட்கிறேன். நான் இந்த மலைத்துர்க்கத்திலிருந்து இறங்க விரும்புகின்றேன். குணங்களை யறிந்தவனும் ஆண்மைக்காக யாவராலும் புகழப் படுபவனுமாகிய என் தம்பியின் கீர்த்தியை நெடுநாளைக்குப்பின் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். வானரவீரர்காள், ஜனஸ்தானத்

*சம்பாதி சடாயுவின் மரணத்தைப் பற்றி விசாரித்தல்.*

தில் வசித்த எனது தம்பி சடாயுவின் மரணத்தைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன். பெரியாரால் விரும்பப்படும் இராமரைத் தன் அன்பிற்குரிய மூத்தபிள்ளையாகப் பெற்ற தசரதருக்கு என் தம்பி நண்பனானதெப்படி? சூரியனுடைய கிரணங்களால் என் சிறகுகள் எரிந்துபோனமையால் எனக்கு உங்களிடத்தில் வரமுடியவில்லை. நீங்கள் என்னை இந்தப் பர்வதத்திலிருந்து இறக்கிவிட வேண்டுமென்று விரும்புகிறேன்" என்றான்.

வானரர்கள், சோகத்தினால் சம்பாதி நாத்தழுதழுத்துப் பேசினதைக் கேட்டும், அவன் செய்கையால் சந்தேகமுற்றவர்களாகி, அவன் சொல்லை நம்பவில்லை. உயிர் துறக்கவேண்டிப் பட்டினியிருந்த வானரர்கள் சம்பாதியைக்கண்டு பயங்கொண்டு "இவன் எங்களெல்லாரையும் பக்ஷித்துவிடுவான். உயிர்துறக்க வேண்டியிருக்கும் எங்களெல்லாரையும் பக்ஷித்துவிடுவானாயின் நாங்கள் செய்ய வேண்டியதைச் செய்து சீக்கிரத்தில் சித்தி அடைந்தவர்களாவோம்" என்று எண்ணினார்கள். வானரர்கள் இவ்வாறு எண்ண, அங்கதன் மலைச்சிகரத்தில் நின்றும் சம்பாதியை இறக்கி "கழுகரச, பிரதாபமுடைய ரிக்ஷரஜன் என்று ஒருவானரவேந்தன் இருந்தான். அவ்வரசன் என்பிதாமகன்; தருமகுணமுடையவன். அவனுக்கு வாலி என்றும் சுக்கிரீவன் என்றும் இரண்டு குமாரர்கள். அவர்கள் அளவற்ற பலமுடையவர்கள். எனது பிதாவாகியவாலி என்னும் அரசன் இவ்வுலகத்தில் தன் தொழிலாற்றலால் பேர்போனவன். தசரத குமாரராகிய இராமர் இவ்வுலகிற்கெல்லா மரசர்; இக்ஷ்வாகு குலத்தில்வந்த பெருந்தேர்வீரர். அவர் தருமவழியில் நின்று தந்தை கட்டளையை நிறைவேற்றவேண்டி, தன் தம்பி லக்ஷ்மணரோடும் மனைவி சீதையோடும், தண்டகாவனத்திற்கு வந்தார். அவருடைய மனைவியை ஜனஸ்தானத்திலிருந்து

அங்கதன் சம்பாதிக்குச் சடாயு மாண்டகாரணம் கூறல்.

இராவணன் வலிந்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். இராமருடைய தந்தையின் நண்பனாகிய சடாயுவென்னும் கழுகரசன் சீதையை இராவணன் ஆகாய மார்க்கமாக எடுத்துக்கொண்டு போவதைக் கண்டு அவனைத் தேரழித்துப் பூமியில் இறக்கிவிட்டான். பின்பு அவன் மூப்பினால் இளைப்படைந்திருந்தமையின் இராவணனால் கொல்லப்பட்டான். இவ்வாறு வலிய இராவணனாற் கொல்லப்பட்ட சடாயு இராமரால் பிரேத சம்ஸ்காரம் செய்யப்பெற்று நற்கதியடைந்தான். பின்பு இராமர் என் சிற்றப்பனான சுக்கிரீவனோடு நட்புக்கொண்டார்; அவரே என் தந்தை வாலியையும் கொன்றார். சுக்கிரீவன் மந்திரிமார்களோடு என் தந்தையால் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டிருந்தான். இராமர் வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு அபிஷேகம் செய்தார். அவரால் அரசு செய்ய வைக்கப்பட்டுச் சுக்கிரீவன் வானரர்களுக் கதிபனானன். வானரவீரர்களுக்கெல்லாம் அரசனாகிய சுக்கிரீவனால் நாங்கள் அனுப்பப்பட்டோம். அவ்வாறே இராமராலும் அனுப்பப்பட்டு நாங்கள் சீதையை எவ்விடங்களினும் தேடினோம். இராத்திரியில் சூரியனுடைய ஒளியைக்காணக்கூடாதவாறுபோல வைதேகியை நாங்கள் தலைப்படவில்லை. நாங்கள் அதிக கவனத்தோடு தண்டகாரணியம் முழுதையுந்தேடி அறிவின்மையினால் ஒரு தவமகளுடைய வாய்திறந்த பிலத்துள் புகுந்தோம். மயன் தன் மாயையால்செய்த அந்தப் பிலத்துள் சீதையைத்தேடித்திரிந்து எங்கள் அரசன் குறித்த ஒருமாசத்தையும் அங்கே கழித்தோம். வானர வேந்தனுடைய ஏவலைச்செய்யும் நாங்கள் அவன் குறித்தகால வரையறையைக் கடந்து விட்டமையால் பயந்து உயிர் துறக்க விருக்கிறோம். இராமரும் லக்ஷ்மணரும் சுக்கிரீவனும் எங்கள்மேல் கோபங்கொண்டிருக்கும்போது நாங்கள் அங்கே போவோமாயின் உயிரிழந்து விடுவோம்'' என்று கூறினான்.

## ஐம்பத்தெட்டாஞ் சருக்கம்.

*சம்பாதி சீதை இலங்கையி லிருக்கிறுளென்று கூறல்.*

உயிர் போவதுபோலிருந்த வானரர்கள் இந்தப் பரிதாபமான வார்த்தையைக் கூற, பெரியகுரலையுடைய சம்பாதி அவர்களை நோக்கி "வானரர்காள், என் தம்பி சடாயு யுத்தத்திலே இராவணனுல் கொல்லப்பட்டான் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். மூப்பினுலும் சிற கின்மையினுலும் நீங்கள் சொன்னதைக் கேட்டுப் பொறுத்திருக்கிறேன். எனது தம்பியைக் கொன்றதற்காகப் பழிவாங்க நான் இப்போது வலியன் அல்லேன். முன்னெரு காலத்தில் விருத்திராசுரன் கொலை யுண்டபோது நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் வெல்லவேண்டு மென்று கிரண வரிசைகளாற் சொலித்துக்கொண்டிருந்த ஆதித்தனுக்குக் கிட்டப் பறந்துசென்றேம். ஆகாசமார்க்கத்திலே நாங்கள் அதிவேகமாகச் சுற்றிப் பறந்து போன போது, சூரியன் உச்சியில்வர, சடாயு இளைப்புற்றுன். சூரியகிரணத்தினுல் என் தம்பி வருந்துவதைக் கண்டு நான் அவன்மேல் வைத்த அன்பினுல் மிகவும் பயந்து என்சிறைகளினுல் அவனை மறைத்தேன். அப்போது நான் சிறகர் கரிந்து விந்த மலையின்மேல் விழுந்தேன். அன்று தொட்டு நான் இங்கேயே யிருந்தமையின் என் தம்பியுடைய செய்தி ஒன்று மறியேன்" என்று கூறினுன். சடாயுவின் தமையனை சம்பாதி இவ்வாறுசொல்ல, பேரறிவுடைய இளவரசனுகிய அங்கதன் அவனைநோக்கி "நீ சடாயுவின் சகோதரனுல், நீ நான் சொன்னதைக் கேட்டிருத்தலின், அந்த ராக்ஷசனுடைய இருப்பிடம் உனக்குத்தெரியுமோ? சொல். தீர்க்காலோசனையில்லாத இராக்ஷசாதிபனுகிய இராவணன் சமீபத்தி லிருக்கின்றுனு தூரத்திலிருக்கின்றுனு? சொல்" என்று? கேட்டான்.

*சம்பாதி தன் வரலாறு கூறல்.*

*அங்கதன் இராவணனிருப்பது எவ்விடத்தி லென்று வினவல்.*

பின்பு சடாயுவின் தமையனான மிக்க திறலினையுடைய சம்பாதி, தன் தகுதிக்கேற்ற வார்த்தை உரைத்து வானரர்களை மகிழ்விப்பவனாய் "வானரர்காள், நான் என் சிறகெரிந்து வலிகுன்றினவனா யிருக்கிறேன்; ஆகையினால் நான் வாக்கு மாத்திரத்தினாலேயே இராமருக்கு ஒரு பேருதவி செய்கின்றேன். உலோகங்களை நீர்மூடினதையும் திருமால் மூவடியால் உலகை அளந்ததையும் பெரிய அசுரர்களை அழித்ததையும் அமுதத்திற்காகப் பாற்கடலைக் கடைந்ததையும் நான் அறிவேன். மூப்பினால் வலிகுன்றி உயிர்போகின்றவனா யிருத்தலின் இராமருடைய காரியமாகிய இதனை நான் முதலில் செய்கின்றேன். கொடிய இராவணன் அழகும் இளமையுமுடைய ஒரு பெண்ணணங்கை எடுத்துக்கொண்டுபோனதை யான் கண்டேன். அந்நல்லாள் அப்போது "இராமா இராமா" என்றும் "லக்ஷ்மணா" என்றும் கதறிக்கொண்டு, உடல் நடுங்கி, தான் அணிந்திருந்த ஆபரணங்களைக் கழற்றி எறிந்தாள். அவளுடைய சிறந்த கோசிகப்பட்டு மலையினுச்சியிலெறிக்கும் வெயில்போன்றிருந்தது; கரிய இராக்ஷசன் மடியிலிருந்த அவள் கார்மேகத்தில் தோன்றும் மின்னல்போல விளங்கினாள். இராமருடைய பெயரைச் சொல்லினமையால் அவளைச் சீதையென்று நான் எண்ணுகிறேன். அந்த இராக்ஷசனுடைய இருப்பிடத்தைச்சொல்லுகிறேன் கேளுங்கள். இராவணனென்னும் பெயருடைய இராக்ஷசன் விச்சிரவசுவின் புதல்வன்; வைச்சிரவணனுக்குத் தம்பி. அவன் வசிப்பது இலங்கைநகரத்தில். அந்த அழகியநகரம் விசுவகர்மனால்செய்யப்பட்டது; அது சமுத்திரத்திலே நூறுயோசனை தூரத்தில் ஒரு தீவின்கணுள்ளது. அதுபொன்மயமான வாயில்களும் அழகிய பொன்னாற்செய்தவேதிகைகளுமுடையது; சூரியன்போல் ஒளிகாலும் பெரிய மதில்களால் சூழப்பட்டது. சீதை

*சம்பாதி இராவணன் சீதையை இலங்கையில் வைத்திருக்கிறான் என்று கூறல்.*

அங்கே யிருக்கிறாள். அவ்வேழை கோசிகப் பட்டுடுத்து இராவணனுடைய அந்தப்புரத்திலே இராக்ஷசிகளால் காவல் செய்யப்பட்டு அழுது கொண்டிருக்கிறாள். நான்கு புறமும் கடலாற் சூழப்பட்ட இலங்கையிலே நீங்கள் ஜனகராஜன் புத்திரியாகிய மைதிலியைக் காண்பீர்கள். நூறு யோசனைக்கப்பால் சமுத்திராந்தத்திலே தக்ஷிண தீரத்திலே நீங்கள் இராவணனைக் காண்பீர்கள். வானரர்காள், நீங்கள் ஊக்கத்தோடு மிக விரைவாக அங்கே செல்லுங்கள். நீங்கள் சீதையைக்கண்டு திரும்பிவருவதை நான் ஞானத்தினால் காண்கின்றேன். வானத்திலே முதற்கதி ஊர்க்குருவிகளுக்கும் தானியத்தை உண்ணும் மற்றைப் பறவைகளுக்கும் உரியது; இரண்டாங்கதி காகங்களுக்கும் பழங்களை உண்ணும் மற்றைப் பறவைகளுக்கும் உரியது; மூன்றாங்கதியில் பாசங்கள் செல்லும்; நாலாங்கதியில் அன்றில்களும் குரரிகளும் பருந்துகளும் செல்லும்; ஐந்தாங்கதியில் கழுகுகள் செல்லும்; ஆறாங்கதி அழகும் இளமையும் வலியும் வீரமுமுடைய அன்னங்களுக்குரியது; அதற்கு மேற்கதி வைநதேயர்களுக்குரியது. நாங்கள் பிறப்பினால் வைநதேயர்கள். நான் இங்கிருந்துகொண்டே இராவணனையும் ஜானகியையும் காண்கின்றேன். அப்படிப்பட்ட திவ்வியமான சிறந்த கண்பார்வை எங்களுக்குண்டு. உணவின்வலியாலும் எங்கள் இயற்கையாலும் நாங்கள் எப்போதும் நூறுயோசனைக் கப்பாலுள்ளதையும் காண்போம். எங்களுக்கு இயற்கையினால் தூரத்திலுள்ள உணவு உரியது; காலாயுதங்களாகிய கோழிகளுக்குக் காலடியிலுள்ள உணவு உரியது. பிசிதவூணனாகிய இராவணன் செய்த கருமம் நிந்திக்கத்தக்கது. நான் அவனுக்குப் பிரதிகூலம் செய்து என் தம்பியின் பழியைத் தீர்ப்பேன், உப்புச்சமுத்திரத்தைக் கடப்பதற்கு வழிபாருங்கள். நீங்கள் வைதேகியைக் கண்டு உங்கள் காரியத்தை முடித்துக் கொண்டு திரும்புங்கள். என்னைச்சமுத்திரக்கரைக்கு எடுத்

துக்கொண்டு போய்விடுங்கள். சுவர்க்கமடைந்த என் பெருமையுடைய தம்பிக்கு நான் நீர்க்கடன் செய்ய விரும்புகின்றேன்" என்றான். அப்போது மிகுந்தவேகத்தையுடைய வானரர்கள் சிறகெரிந்திருந்த சம்பாதியைச்சமுத்திரதீரத்திலே அவனாற் குறிக்கப்பட்ட இடத்திற் கொண்டுபோய் விட்டுமறுபடியும் அவனை அவனிருந்த விடத்திற்கொண்டு வந்து சேர்த்து, சீதையின் செய்தியைக்கேள்வியுற்றுச் சந்தோஷமடைந்தார்கள்.

---

## ஐம்பத்தொன்பதாஞ் சருக்கம். *

*சம்பாதி சீதையின் அபகாரணத்தைத் தானறிந்த வழியைச் சொல்லுதல்.*

---

பின்பு வானரவீரர்கள் கழுகரசன் கூறிய அமிர்தம் போன்ற வார்த்தையைக்கேட்டு, மிகவுஞ் சந்தோஷமடைந்தார்கள். வானரவீரர்களுட்சிறந்த சாம்பவன் மற்றை வீரர்களெல்லாரோடும் பூமியில் நின்று திடீரென்றெழுந்து கழுகரசனை நோக்கி, "சீதை எங்கே யிருக்கின்றாள்? அவளைக்கண்டது யார்? அவளைஎடுத்துக்கொண்டுபோனது யார்? இவைகளெல்லாவற்றையும் பற்றிச்சொல்லிவானரர்களுக்கு நீர் வழிகாட்டிவிடும். வச்சிராயுதம் போலவேகமாக விழுகின்ற இராமருடைய பாணங்களையும், லக்ஷ்மணரேவிய பாணங்களின் வலியையும் சிந்திக்காதவன் யாவன்?" என்று கேட்டான். சம்பாதி சந்தோஷமுற்றுச் சீதையின் செய்தியைக்கேட்க ஆவல் கொண்டெழுந்தவானரர்களை மீட்டும் மகிழ்வித்து "வைதேகியினுடைய அபகரணத்தை யான் எப்படி அறிந்தேனென்றும் அந்த நெடுங்கண்ணாளிருக்கு மிடத்தை யார் எனக்குச்சொன்னார்களென்றுங் கேளுங்கள். நான் இந்த அநேகயோசனை நீளமுள்ள மலையின் துர்க்கத்திலே மூப்

சாம்பவன் சீதையை எடுத்துக் கொண்டு சென்றது யாரென்று வினவல்.

---

* இதுமுதல் ஐந்து சருக்கங்கள் சில பிரதிகளில் இல்லை.

பினால் உயிரும் வலியும் குறைந்து நெடுநாட் கிடந்தேன். அப்படிக்கிடந்த எனக்குப் பறவைகளுட் சிறந்த சுபார்சுவன் என்னும் பெயருடைய எனது புத்திரன் காலந் தப்பாது வந்து உணவூட்டுவான். கந்தர்வர்களுக்குக் காமம் பெரிது; நாகர்களுக்குக் கோபம் பெரிது; மான்களுக்குப் பயம் பெரிது; எங்களுக்குப் பசி பெரிது. ஒரு நாள்பசியால் வருந்தும் எனக்கு உணவு தேடிச்சூரியோதயத்திற் சென்ற எனது புத்திரன் மாலையில் இறைச்சியில்லாது திரும்பி வந்தான். பசியினால் வருந்திய யான் என் மூப்பினாலும், கோபத்தினாலும், அவனைக் கடிந்து பேசினேன். அவன் பசியினால் வருந்தும் என்னைப் பொறுதிகேட்டு, என்னை நோக்கி "ஐய, யான் அதிகாலையிலே ஸ்நானம் செய்துவிட்டு இரைதேடும் பொருட்டுச்சென்று மகேந்திர மலையின் வழியை மறைத்துக்கொண்டு நின்றேன். அங்கே நான் கீழே பார்த்துக்கொண்டு சமுத்திரத்திலிருந்துவரும் ஆயிரக்கணக்கான பிராணிகளின் வழியைத் தனியாகவே தடுத்து நின்றேன். அப்போது மைப்பிழம்புபோலுமொருவன் இளஞாயிறுபோலு மொளியையுடைய ஒரு பெண்ணையெடுத்துக்கொண்டு போனான். அவர்களைக் கண்டவுடன் அவர்களிருவரும் உனக்காகாரமாகவேண்டுமென்று யான் நிச்சயித்தேன். அப்போது அவனென்னைப் பணிந்து தனக்குவழிவிடும்படி மிக வணக்கமாகக்கேட்டான். வணங்கினவனை வதைசெய்பவன் நீசர்களுக்குள் கூட ஒருவனுமில்லை; பின்னர் என்னைப்போன்றவர்கள் கொல்வதெப்படி? அவன் தன் ஆற்றலினால் ஆகாயத்தைச் சுருக்கி விடுபவன் போல அதிவேகமாகச் சென்றான். அதன் பின் ஆகாயத்தில் செல்பவர்கள் என்னை யடைந்து துதித்தார்கள். "நல்ல காலம் நீ பிழைத்தது" என்று மகரிஷிகள் சொன்னார்கள். "அவன் ஒரு பெண்ணோடு உன்முன் போனமையால் உனக்கு நன்மை ஆயிற்று" என்று பெரிய சித்தர்கள் கூறினார்கள். அவர்கள் எனக்கு "இவன் இராக்ஷசர்

சம்பாதி விடை கூறல்.

களுக் கரசனுகிய இராவணன்; தசரத புத்திரனுன இராமருடைய மனைவி சானகியை எடுத்துக்கொண்டு போகின்ருன்" என்ருர்கள். அவள் சோகத்தால் மெலிந்து ஆடையாபரணங்களை எறிந்துவிட்டு மயிரை விரித்து "இராமா, லக்ஷ்மணு" என்று அழுது கொண்டு சென்ருள். இதனுல் என்காலம் இன்று கழிந்தது" என்று சொன்னுன். இவைகள் எல்லாவற்றையும் காலமறிந்தவர்களுள் சிறந்த சுபார்சுவன் சொல்லக்கேட்டும் என் பராக்கிரமத்தைக் காட்ட எனக்குப்புத்திவரவில்லை. சிறகில்லாதபறவையால் யாதுகாரியம் செய்யமுடியும்? ஆயினும் என்னுடைய மனமொழிகளால் யாது செய்யக் கூடுமென்பதைச் சொல்லுகிறேன் கேளுங்கள். என்னுடைய மனமொழிகளால் உங்கள் யாவர்க்கும் பிரியமானதை நான் செய்வேன். இராமருடைய காரியம் எனது காரியமே; இதில் சந்தேகமில்லை. வானர வேந்தன் தேவர்களாலும் வெல்லமுடியாதவர்களாகிய சிறந்த புத்தியும் வலியும் நல்லெண்ணமுமுடைய உங்களை அனுப்பி யிருக்கின்ருன். கங்கபத்திரம் கட்டப்பெற்ற இராமலக்ஷ்மணர்களுடைய கூரியபாணங்கள் மூவுலகங்களையும் அழிக்கவும் அளிக்கவும் வல்லவைகள். தசக்கிரீவன் வலியும் ஆண்மையும் உடையானுயினும் சமர்த்தர்களாகிய உங்களுக்குச் செய்தற்கரியது ஒன்றுமில்லை. காலந் தாழ்த்ததுபோதும்; இனி மனத்தை ஒருப்படுத்துங்கள். உங்களைப் போலும் புத்திமான்கள் காரியத்தில் களைக்க மாட்டார்கள்" என்ருன்.

---

## அறுபதாஞ் சருக்கம்.

*சம்பாதி தன் வரலாறு கூறுதல்.*

---

அந்த மலையின் சிகரத்தில் நீர்க்கடன் செய்து ஸ்நானம் பண்ணிவிட்டிருந்த சம்பாதியை வானரவீரர்கள் நான்கு புறத்திலும் சூழ்ந்திருந்தார்கள். அப்போது சம்

பாதி நம்பிக்கைகொண்டு சந்தோஷத்தோடு வானரர்கள் சூழவிருந்த அங்கதனை நோக்கி "வானரர்காள், சத்தம் பண்ணாது ஒரே மனத்துடன் கேளுங்கள். நான் மைதிலி யின் செய்தியை எவ்வாறறிந்தேன் என்பதை உள்ளபடி சொல்லுகிறேன். சூரியனுடைய வெயிலினால் உடல்வாடி அவனுடைய கிரணத்தினால் சூடுண்டு நான் முன்னர் இந்த மலையின் சிகரத்தின்மேல் விழுந்தேன். விழுந்தபின் ஆறுநாள் இரவும் பகலும் மூர்ச்சையடைந்திருந்தேன்.

சம்பாதி சிறகெரிந்து பூமியில் விழுந்தது.

பின் அறிவு வந்தபோது எல்லாத்திசைகளையும் சுற்றிப் பார்த்தும் எனக்கொன்றுந் தெரியவில்லை. பின்னர் நான் கடல்களையும் மலைகளையும் நதிகளையும் அருவிகளையும் காடுகளையும் கடற்கரைகளையும் பார்த்து இது இவ்விட மென்று அறிந்துகொண்டேன். களிப்படைந்த பறவைக் கூட்டங்கள் நிறைந்திருத்தலினாலும் குகைகளும்சிகரங்களு முடைமையினாலும் தென்சமுத்திர தீரத்திலுள்ள விந்த மலை இதுவென்று நான் நிச்சயித்தேன். இங்கே தேவர்க ளாலும் பூசிக்கப்படும்புண்ணியாச்சிரம மொன்றிருந்தது; நிசாகரர் என்னும் பெயருடைய பெரிய தவமுனிவர் அவ் வாச்சிரமத்தில் வசித்தார். தருமமுணர்ந்த நிசாகரமுனி வர் சுவர்க்கம் போனபின்பு நான் அவரையின்றி எண்ணா யிரம் வருஷம் இங்கிருந்தேன். நான் மேடும் பள்ள முமான விந்தமலையின் உச்சியிலிருந்து வருத்தத்தோடு மெல்ல மெல்ல இறங்கிக் கூரிய புல்லையுடைய பூமியை அடைந்தேன். அந்த முனிவரைப் பார்க்க விரும்பிப் பல முறை வருந்திச் சென்றேன். அவரைச் சடாயுவும் நானும் பலகால் பார்த்தோம். அந்த ஆச்சிரமத்தைச் சுற்றி நன்மணங் கமழுங் காற்று வீசிக்கொண்டிருந்தது; புஷ்பமும் பழமுமில்லாத மரங்கள் அங்கே காணப்பட வில்லை. நான் அந்தப்புண்ணிய ஆச்சிரமத்தை யடைந்து பகவான் நிசாகர முனிவரைக் காணவேண்டி ஒரு மரத்தினடியில்

காத்திருந்தேன். அப்போது அம்முனிவர் ஸ்நானம் செய்துவிட்டு, உடலம் ஒளிகால, வடக்கு நோக்கி எனக்குச் சமீபமாக வந்துகொண்டிருந்தார். பிரமதேவனைப் பிராணிகள் சூழ்ந்து வருமாறுபோல அவரைச் சூழ்ந்து கரடி, புலி, சிங்கம், யானை, மான், பாம்பு முதலிய விலங்குகள் வந்தன. அவர் தமதாச்சிரமத்தை அடைந்ததும், அரசன் தன் மாளிகை யடைந்தபோது அவனுடைய மந்திரிமார்களும் சேனைகளும் அவனை விட்டு நீங்குமாறுபோல, அவரைச்சூழ்ந்து வந்த விலங்குகளெல்லாம் திரும்பிப்போயின. முனிவர் என்னைக்கண்டு சந்தோஷமடைந்து ஆச்சிரமத்துள் புகுந்து ஒரு முகூர்த்தம் கழித்து வந்து எனது காரியம் என்ன வென்று வினவினர். அவர் 'நல்லாய், உனது இறகின் வேற்றுமையினால் நான் உன்னை இன்னான் என்று அறிந்து கொள்ளவில்லை. உன்னுடைய சிறகுகள் எரிந்து விட்டன; உடலும் புண்பட்டு விட்டது. நான் முன்னர் வாயுவேகம்போன்ற வேகத்தையுடைய இரண்டு கழுகுகளைக் கண்டேன்; அவர்கள் இருவரும் சகோதரர்கள்; கழுகுக் கரசர்கள்; வேண்டிய உருவமெடுக்க வல்லவர்கள். சம்பாதியாகிய நீ அவர்களுள் மூத்தவன்; சடாயு உன் தம்பி. நீங்கள் மனுஷரூபமெடுத்து என் காலைப் பிடித்துக்கொண்டீர்கள். உனக்கிப்போது என்ன நோய்? உன்னுடைய சிறகுகள் எப்படிவிழுந்தன? இந்தத் தண்டனை உனக்கு யார் செய்தார்? எனக்கு எல்லாவற்றையுஞ் சொல்லு' என்று கேட்டார்."

நிசாகர முனிவர் சம்பாதியைச்சிறகெரிந்த தெவ்வாறென்று வினவல்.

---

## அறுபத்தொன்றுஞ் சருக்கம்.

சம்பாதி சூரியனைத் தொடர்ந்த வரலாறு.

---

"பின்னர் நான் சூரியனைத் தொடர்ந்துசென்ற அதிபயங்கரமும் அசாத்தியமுமான செய்தியை ஒன்றும் விடாது முனிவருக்குச்சொன்னேன்:—'பகவானே, நான்

உடலம் புண்பட்டும் வெட்கத்தால் புலன்கள் மாழ்கியும் இளைப்புற்றும் இருத்தலினால் பேசிக்கொள்ள முடியாதவனுயிருக்கிறேன். நானும் சடாயுவும் செருக்குற்று, யார் ஆண்மை மிகவுடையவ ரென்றறியவேண்டி, ஒருவரோடொருவர் மாறுபட்டு, கைலாசமலையின் சிகரத்திலே முனிவர்கள் முன்னிலையில் சூரியனை அத்தகிரி வரைக்கும் தொடருவோமென்று சூளுறவு செய்துகொண்டு, ஆகாயத்தில் பறந்து சென்றோம். அவ்வாறு ஓரேகாலத்தில் நாங்களிருவரும் பறந்து சென்றபோது பூமியிலுள்ள நகரங்கள் ஒவ்வொன்றும் தேருருளளவு பிரமாணமுள்ளதாகத் தோன்றின. ஓரிடத்தில் வாத்தியங்களினோசையும் மற்றோரிடத்தில் வேதமோதுமொலியும் கேட்டன. சிவந்த ஆடையணிந்து பாடிக்கொண்டிருந்த பெண்களையும் பலரைக் கண்டோம். விரைவாக உயரப் பறந்து ஆதித்திய பதத்தை அடைந்த எங்களுக்குக் காடுகள் பசும்புற்றரைபோலவும், பூமியிலுள்ள உயர்ந்த மலைகள் கற்களைப்போலவும், தரையில் ஓடின ஆறுகள் நூல்களைப் போலவும், இமயம் விந்தம் மேரு என்னும் பெரியமலைகள் நீர் நிலைகளுட் படிந்த யானைகளைப்போலவும் தோன்றின. பின்பு அதிகமாக வேர்க்கவேர்க்க எங்களுக்குப் பயம் மேலிட்டது; எங்களை இருண்டமோகமும் கொடிய மூர்ச்சையும் வந்து பற்றின; எங்களுக்கு யமன் திசையாவது, அக்கினியின் திசையாவது, வருணன் திசையாவது தெரியவில்லை; யுகாந்த காலம் வரைக்கும் நிலைபெற்றிருக்கும் லோகமும் அக்கினியால் எரிந்துபோவது போல் தோன்றிற்று. தனக்கிருப்பிடமாகிய கண்ணினின்றும் திரும்பி அழிந்துபோன அறிவைப் பெரிய முயற்சி செய்து மறுபடியும் கண்ணினிடத்திற் கொண்டுபோய்ப் பொருத்தி நாங்கள் பெருங்கஷ்டப் பட்டுச் சூரியனைப்பார்த்தோம். அப்போது சூரியன் பூமியளவு பெரி

சம்பாதி சூரியனைத் தொடர்ந்தது.

தாக எங்களுக்குத்தோற்றிற்று. உடனேசடாயு என்னைக் கேளாமலே பூமிக்கு இறங்கினான். அவனைக்கண்டு நானும் விரைந்து ஆகாயத்தை விட்டிறங்கினேன். என்னுடைய சிறகினால் மறைக்கப்பட்டுச் சடாயு எரியாது தப்பினான் எனது அறிவின்மையால் நான் எரிந்து வாயுபதத்தினின் றும் விழுந்தேன். சடாயு ஜனஸ்தானத்தில் விழுந்திருப் பானென்று நினைக்கின்றேன். நான் சிறகெரிந்து சடப் பொருள் போலாகி விந்த மலையின்மேல் வீழ்ந்தேன். இராச்சியத்தையும் தம்பியையும் சிறகையும் ஆண்மையை யும் இழந்த நான் மலைச்சிகரத்திலிருந்து கீழே விழுந்து உயிர்விட விரும்புகின்றேன்.''

---

## அறுபத்திரண்டாஞ் சருக்கம்.

*நிசாகர முனிவர் சம்பாதியைத் தேற்றுதல்.*

---

"இவ்வாறு முனிவருக்குக் கூறிவிட்டு நான் மிகவும் துக்கமடைந்து அழுதேன். அந்த முனிவர் ஒரு முகூர்த்த காலம் யோசனை செய்து என்னை நோக்கி 'உன்னுடைய சிறகுகளும் தூவிகளும் உனக்குப் புதிதாக மறுபடியும் முளைக்கும். உன்னுடைய உயிரும் பார்வையும் ஆண்மை யும் பலமும் மறுபடியும் வரும். ஒரு பெரிய காரியம் இவ்வு லகத்தில் நடக்கப்போகின்றதென்று முன்பு கேட்டிருக் கின்றேன். அது எனக்கு என்னுடைய தவ வலிமையா லும் தெரியும்; அதைக் கேட்டும் அறிவேன். இக்ஷ்வாகு வழித்தோன்றலாகிய தசரதனென்றோரரசன் உளன். அவனுக்கு மிக்க வலிமையுடைய இராமனென்றொரு புத் திரன் பிறப்பான். அவன் தந்தை ஏவலால் தம்பி லக்ஷ் மணனோடு காட்டுக்குச் செல்வான். அவனுடைய மனை வியைத் தேவர்களாலும் அசுரர்களாலும் அழிவில்லாத இராக்ஷசேந்திரனாகிய இரா வணன் ஜனஸ்தானத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோவான். விரும்பத்தக்க உண் பன தின்பன வற்றைப் பெறுவாளாயினும் அந்நல்லாள்

*நிசாகர முனிவர் சம்பாதிக்கு இரா மர் சரிதம் கூறல்.*

துக்கத்தில் மூழ்கி அவைகளொன்றையுந் தின்னமாட்டாள். அவள் அவ்வாறு ஒன்றுந் தின்னுதிருத்தலை இந்திரன் அறிந்து அவளுக்குத் தேவர்களுக்கும் கிட்டாத அமுதம் போலும் பரமான்னம் அனுப்புவான். அதனை அவள் இந்திரனிடமிருந்து வந்ததென்றறிந்து வாங்கி இராமருக் கென்று கொஞ்சத்தை மேலாலே எடுத்து 'எனது நாய கன் லக்ஷ்மணரோடு உயிரோடிருந்தாலுமாக, தேவ னுய்ப் போய் விட்டாலுமாக, இது அவருக்குணவாகட்டும்' என்று சொல்லித் தரையில் சொரிவாள். இராமரால் அனுப்பப்பட்ட வானரர்கள் சீதையைத் தேடிவருவார் கள்; அவர்களுக்கு, நீ சீதையின் செய்தி முழுதையும் சொல்லு. நீ இதைவிட்டு ஒருபோதும் போகாதே. நீ எங் கே போவாய்? காலத்தையும் இடத்தையும் உனக்குச் சிறகு முளைத்தலையும் பார்த்துக்கொண்டு நீ இங்கேயே இரு. உனக்கு இன்றைக்கே சிறகு முளைக்கும்படி நான் செய்யமாட்டேன். நீ இங்கே இருப்பதனுல் உலகத்துக் கிதமான காரியத்தைச் செய்வாய். தசரதனின் புத்திரர் களுக்கும் பிராமணர்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர் களுக்கும் உன்னலன்றே காரியமாகவேண்டும்? நானும் இராம லக்ஷ்மணர்களைப் பார்க்க விரும்புகின்றேன். ஆயி னும் இந்த உயிரை நெடுநாள் வைத்திருக்க நான் விரும்ப வில்லை. இந்த உடலைக் கழித்து விடுகின்றேன்' என்றார். உண்மைப்பொருளை யறிந்த அந்த மாமுனிவர் இவ்வாறு எனக்குச் சொன்னர்."

## அறுபத்துமூன்றுஞ் சருக்கம்.

சம்பாதிக்கு மறுபடி சிறகு முளைத்தல்.

"அந்த வாக்கில் வல்ல முனிவரர் இவ்வண்ணம் பல வாறுகவென்னைப் புகழ்ந்துரைத்து எனக்கு விடை தந்து விட்டுத் தமதாச்சிரமத்துள் புகுந்தார். நான் மலைமுழை

ஞ்சினின்றும் புறப்பட்டு மெல்ல மெல்ல விந்தமலைமேல் ஏறி உங்கள் வரவு பார்த்திருந்தேன். அன்று தொட்டு இன்று வரைக்கும் கழிந்த காலம் நூறு வருஷத்திற்கு மேலாயிற்று. நான் முனிவர் சொன்ன சொல்லை மனத்தில் வைத்துக் காலமும் இடமும் பார்த்துக்கொண்டிருந்தேன். நிசாகரமுனிவர் பெரும் புறப்பாடுற்றுச் சுவர்க்கமடைந்த பின், நான் பல எண்ணங்களுமெண்ணித் துன்பத்தால் தகிக்கப்பட்டேன். உயிர் துறக்கவேண்டுமென்று எழுந்த புத்தியை நான் முனிவர் கூறிய சொற்களைக் கொண்டு அடக்கிவிட்டேன். என் உயிரைக் காப்பதற்காக அவர் கூறிய புத்தி எரிகின்ற அக்கினிக் கொழுந்து இருளைப்போக்கினாற்போல எனது துக்கத்தை ஒட்டிவிட்டது. கொடிய இராவணனுடைய வீரத்தையறிந்த யான் மைதிலியை ஏன் மீட்காது விட்டாயென்று எனது புத்திரனைக் கேட்டேன். சீதை அழுவதைக் கேட்டும், இராமலக்ஷ்மணர்கள் அவளைப்பிரிந்ததை யறிந்தும், தசரதருடைய சிநேகத்தினிமித்தம் நாம் செய்யவேண்டுவதை என் புத்திரன் செய்யவில்லை" என்று இவ்வாறு வானரர்களோடு பேசிக்கொண்டிருந்த சம்பாதிக்கு வானரர்களுடைய கண் முன்னிலையில் சிறகு முளைத்தது. சம்பாதி தன்னுடைய உடலில் சூரியனைப்போல ஒளியுடைய சிறகு முளைத்ததைக் கண்டு ஒப்பற்ற சந்தோஷங்கொண்டு வானரர்களை நோக்கி, "அளவிலாற்றலுடைய நிசாகரமுனிவர் கிருபையினால் சூரிய கிரணத்தினால் எரிந்துபோன என் சிறகுகள் முளைத்துவிட்டன. இளமைப்பருவத்தில் எனக்கிருந்த வலியையும் திறலையும் ஆண்மையையும் நான் இன்று பெற்றுக்கொண்டேன். எல்லாவகையானும் முயற்சி செய்யுங்கள்; நீங்கள் சீதையைக் காணுவீர்கள். நான் சிறகு பெற்றது உங்கள் முயற்சி சித்தித்தற்குக் காரணமாயிருக்கின்றது" என்றான். இப்படிச் சொல்லிவிட்டுப் பறவைகளுட்சிறந்த

சம்பாதிக்குச் சிறகு முளைத்தல்.

சம்பாதி மலையுச்சியில் நின்று ஆகாயத்தில் பறக்கும் சக்தியை அறிந்துகொள்ளவேண்டிப் பறந்தான். வானர வீரர்கள் அவன் கூறிய வார்த்தையைக் கேட்டு மனங் களிகூர்ந்து வெற்றியடைவதில் நோக்கம் வைத்தார்கள். பின்பு வாயுவைப்போன்ற வேகமும் ஆண்மையுமுடைய வானரவீரர்கள் ஜானகியைத் தேடவேண்டி விரைந்து இராவணனிருக்கும் திசையை நோக்கிச் சென்றார்கள்.

## அறுபத்துநான்காஞ் சருக்கம்.

அங்கதன் கடலுவதயார் என்று வினவுதல்.

கழுகரசன் இவ்வாறு சொல்லக் கேட்டுச் சிங்கம் போலும் வலியுடைய வானரவீரர்கள் ஒருங்குகூடிச் சந்தோஷமடைந்து குதித்து ஆரவாரித்தார்கள். அவர்கள் இராவணனுடைய இருப்பிடத்தைக் குறித்துச் சம்பாதி சொன்னவற்றைக் கேட்டுச் சந்தோஷங்கொண்டு சீதையைக் காண விரும்பிச் சமுத்திரக்கரைக்குச் சென்றார்கள். அச்சந்தரும் வலியுடைய வானரர்கள் அவ்விடத்தை யடைந்து இந்தப் பெரிய உலகம் முழுதையும் பிரதிவிம்பித்துக் காட்டுகின்ற கடலைக் கண்டார்கள். அவர்கள் அந்தத் தென்சமுத்திரத்தின் வடகரையிலே தங்கி, பலவிதமான பெரிய மீன்கள் அங்காந்த வாயோடு விளையாடும் அலைகள் செறிந்தும், ஓரிடத்தில் தூங்குவதுபோன்றும், ஓரிடத்தில் விளையாடுவது போன்றும், ஓரிடத்தில் மலைபோன்ற நீர்த்திரள்கள் மிகுந்தும், பாதாலத்தில் வசிப்பவர்களும் பார்த்தவர்கள் மயிர்சிலிர்க்கத் தக்கவர்களுமாகிய தானவர்கள் சஞ்சரிக்கப்பெற்றும் விளங்கும் கடலைப் பார்த்துத் துக்கமடைந்தார்கள். அவர்கள் அந்தக் கடல் ஆகாயம்போல விரிந்து கடத்தற்கரிதாயிருத்தலைக் கண்டு யாது செய்வதென்று மனங் கலங்கினார்கள். வானரர்களுக்குள் சிறந்த அங்கதன் கட

லைக்கண்டு சேனைகள் கலங்கினதை அறிந்து அவர்களுக்குத்தேற்றரவு சொல்லி "மனத்தைக் கலங்கவிடப்படாது; மனக்கலக்கம் மிகவும் குற்றமுடையது. சீற்றங்கொண்ட பாம்பு ஒரு குழந்தையைக் கொல்லுமாறு போல மனக்கலக்கம் ஒருவனைக் கொன்றுவிடும். தனது ஆண்மையைக் காட்டவேண்டிய காலத்தில் மனங்கலங்குபவன் ஒளிகுன்றிப் புருஷார்த்தத்தையும் இழந்துவிடுவான்" என்று கூறினான். அன்றிரவைக் கழித்துவிட்டு அங்கதன் வானரர்களோடும் வானரத்தலைவர்களோடும் ஆலோசனை செய்தான். மருத்துக்கூட்டங்கள் இந்திரனைச் சூழ்ந்திருந்தாற்போல வானரசேனை அங்கதனைச் சூழ்ந்திருந்தது. அங்கதனையும் அநுமானையுமன்றி அந்த வானரசேனையை அடக்கியாள்வதற்கு யார் வல்லவர்? பின்பு ஸ்ரீமான் அங்கதன் வானரச் சேனைக்கும் வானரத் தலைவர்களுக்கும் பணிந்துரைகூறிப் பொருள் பொதிந்த சொற்களால் "இந்தக் கடலைக் கடக்கும் பெருந்திறலுடையான் யாவன்? பகைவர்களை யடக்கும் சுக்கிரீவனைச் சத்தியவானாகச் செய்பவன் யாவன்? வானரர்காள், எந்த வீரன் நூறு யோசனை தாவவல்லன்? இந்த வானரத் தலைவர்களின் பயத்தை நீக்குபவன் யாவன்? எவனுடைய பெருமிதத்தினால் நாங்கள் காரியம் சித்திக்கப்பெற்றுச் சுகமடைந்து இவ்விடத்தினின்றும் திரும்பிச்சென்று எங்களுடைய மனைவி மக்களையும் வீடு வாசல்களையும் காண்போம்? எவனுடைய கருணையினால் நாங்கள் மிக்கபலமுடைய இராமலக்ஷ்மணர்களையும் சுக்ரீவனையும் மனமகிழ்ந்து சென்று சேர்வோம்? உங்களுள் எவராலாவது இந்தக் கடலைக் கடக்க முடியுமானால் எங்களுக்கு இப்போதே அபயம் கொடுங்கள்" என்று கூறினான். அங்கதனுடைய பேச்சைக்கேட்டு ஒருவரும் வாய்

அங்கதன் வானரர்களைத் தேற்றுதல்.

கடலைக் கடப்பது யார் என்று வினவல்.

திறக்க வில்லை. வானர சேனையிலுள்ளவர்களெல்லாரும் துளக்கமடைந்தார்கள். அங்கதன் மறுபடியும் அவர்களை நோக்கி "நீங்கள் எல்லீரும் வீரர்களுள் சிறந்தவர்கள்; அசையாத வலியுள்ளவர்கள்; நற்குலத்திற் பிறந்தவர்கள்; அரசனால் நன்கு மதிக்கப்பட்டவர்கள். அப்படியிருந்தும் ஒருவராவது இந்தக்கடலைக் கடக்க முன் வரவில்லை. வீரர்காள், இனி உங்கள் ஒவ்வொருவராலும் எவ்வளவுதூரம் கடக்க முடியுமென்பதைச் சொல்லுங்கள்" என்றான்.

## அறுபத்தைந்தாஞ் சருக்கம்.

வானரர்கள் தங்கள் தங்கள் கடவுருவு மாற்றலைக் கூறல்.

அங்கதன் சொன்னவற்றைக்கேட்டு, கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மயிந்தன், துவிவிதன், சுஷேணன், சாம்பவன் முதலிய வானரவீரர்கள் கடலைக்கடத்தலில் தங்கள் தங்களுக்குள்ள வலியை முறைப்படி சொல்லினார்கள்: கஜன் "நான் பத்துயோசனை கடப்பேன்" என்று சொன்னான்; கவாக்ஷன் "நான் இருபது யோசனை கடப்பேன்" என்று சொன்னான்; கவயனென்னும் வானரவீரன் "வானரர்காள், நான் முப்பது யோசனை கடப்பேன்" என்றுசொன்னான்; சரபனென்னும் வானரவீரன் "வானரர்காள், நான் நாற்பது யோசனைகடப்பேன்" என்றான்; வானரர்களுக்குள் வலியாற் சிறந்த கந்தமாதனன் "நான் ஐம்பது யோசனை போவேன்; இதில் சந்தேகமில்லை" என்றான்; மயிந்தனென்னும் வானரன் "நான் அறுபது யோசனைக்குமேல் கடக்க மாட்டுவேன்" என்றான்; மிக்க வலியுடைய துவிவிதன் "நான் எழுபது யோசனை செல்வேன்; சந்தேகமில்லை" என்றான்; வானர வீரர்களுட் சிறந்த சுஷேணன் "வானர வீரர்காள், நான் எண்பது யோசனை கடப்பேன்" என்றான்.

வானர வீரர்கள் தங்கள் வலிமை கூறல்.

இவர்கள் இவ்வாறு சொல்ல, வானர வீரர்களுக்குள் மூத்தோனாகிய சாம்பவன் அவர்களுக்கு வந்தனை செய்து "முன்னர் என்னிடத்தில் இக்கடலைக் கடக்க ஆற்றலிருந்தது; நான் இப்போது வயசின் மறுகரையில் வந்து விட்டேன். ஆயினும் இந்தக்காரியத்தை நாங்கள் செய்யாது விடவலியில்லரல்லேம்; சுக்கிரீவனும் இராமரும் நாங்கள் இதைச் செய்ய வேண்டுமென்று நிச்சயித்திருக்கிறார்கள். வயதாகி விட்டாலும் இப்போது என்னால் எவ்வளவு கடக்கமுடியுமென்பதை நீங்கள் கேளுங்கள். நான் தொண்ணூறு யோசனை செல்வேன்; இதில் சந்தேகமில்லை" என்றான். சாம்பவன் பெயர்த்தும் அந்த வானர வீரர்களை நோக்கி "முற்காலத்தில் எனக்கிருந்த கடக்குஞ் சத்தி இதுவன்று. முன்னே மாவலியினுடைய யாகத்திலே சநாதனராகிய விஷ்ணு உலகத்தை மூவடியாலளந்தபோது நான் அவரை வலம் வந்தேன். நான் இப்போது விருத்தனாகிக் கடக்கு மாற்றல் குறைந்து விட்டேன். இளமையிலே எனதுவலி ஒப்புயர் வில்லாததாயிருந்தது. இப்போது என்வலி இவ்வளவுதானென்று எண்ணுகின்றேன். இந்தவலியினால் காரியம் முடியமாட்டாது" என்றான்.

சாம்பவன் தன் வலி கூறல்.

பின்னர் அங்கதன் பேரறிவுள்ள சாம்பவனை வந்தனை செய்து இன் சொல்லால் "இந்தப் பெரிய நூறு யோசனை தூரத்தையுங் கடக்க என்னால் முடியும்; திரும்பி வருவதற்கு எனக்குச் சத்தி உண்டோ இல்லையோ என்று சொல்ல முடியாது" என்றான். பேச்சில் வல்ல சாம்பவன் அவனை நோக்கி "வானரோத்தம, கடலைக் கடத்தலில் உமக்குள்ள வலியை நாங்கள் அறிவேம். நீர் நூறாயிரயோசனை கடக்கவும் திரும்பி வரவும் சமர்த்தர் அன்றோ? அடியேங்கள் உம்

அங்கதன் நான் வேலை கடப்பேன் மீள வலி யில்லை என்று சொல்லல்.

மைப் போமென்றேவல் தக்கதன்று. அப்ப, தொழுவர்கள் இறைவனை ஒருபோதும் ஏவப்படாது. நீரே எங்களை ஏவல்வேண்டும். எங்களுக்குத் தலைவனுயிருக்கும் நீர் எங்களுக்கு மனைவியுமாவீர். சேனைக்கு அதன் தலைவனே மனைவியாகும்; இதுவே உலக நடை; ஆதலால் உம்மை நாங்கள் மனைவியைப்போல் பாதுகாக்கவேண்டும். பகைவரேறே, நீர் இந்தக் காரியத்திற்கு மூலமுமாவீர். பொருண் மூலங் காக்கப்படவேண்டும். இது நூலறிபுலவர் கொள்கை. மூலமிருந்தால் பூத்தல் பழுத்தல் முதலிய தொழில்கள் சித்திக்கும். உண்மை வலியுடையாய், இந்தக் காரியத்திற்குக் கருவியாயுள்ளவர் நீரே. அதற்குக் காரணமும் நீரே. நீர் எங்களுக்கு இறைவனும் இறைவன் குமாரனுமாயுள்ளீர். உம்மைத் துணையாகக் கொண்டே இந்தக் காரியத்தை முடித்தற்கு நாங்கள் சமர்த்தராவேம்" என்றான்.

இவ்வாறு கூறிய பேரறிவுடைய சாம்பவனுக்கு வாலி புத்திரனாகிய அங்கதன் உத்தர முரைப்பானாய் "நானாதல், வேறொரு வானரத் தலைவனாதல், இக்கடலைக் கடந்து செல்லா தொழிவேமாயின் இவ்விடத்துப் பெயர்த்து நாங்கள் செய்யத்தக்கது பட்டினிகிடந்துயிர் துறத்தலன்றோ? சிறந்த புத்தி யுடைய வானர வேந்தன் கட்டளையைச் செய்யாது அங்கு செல்வேமாயின் நாம் நமதுயிரைக் காப்பாற்றிக்கொள்ள மாட்டேம். வானர வேந்தன் அருள் செய்வதிலும் கோபஞ் செய்வதிலும் மிகக் கடியவன். அவனுடைய கட்டளையை முடியாது சென்றால் நாசம் சம்பவிக்கும். இந்தக்காரியத்திற்கு வேறுமுடிவில்லை. ஆகையால் முடிவறிந்த நீரே சிந்திக்கவேண்டும்" என்றான். அங்கதன் இவ்வாறு கூற, வானர வீரர்களுட் சிறந்த சாம்பவன் அவனை நோக்கி, உத்தரமாக "வீர, இந்தக்காரியத்திற்கு ஒரு

அங்கதன் சாம்பவனை யாதுசெய்யலாமென்று கேட்டல்.

குறையும் வாராது. இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க வல்லானை நான் அனுப்புகின்றேன்" என்றான். பின்பு அவன் ஒரு தனியிடத்திற் சென்று சுகமாக வீற்றிருந்த வானர வீரர்களுட் சிறந்த பெருவலியுடைய அநுமானை வேண்டலாயினன்.

## அறுபத்தாறுஞ் சருக்கம்.

சாம்பவன் கடலுருவும்படி அநுமானைத் தூண்டல்.

சாம்பவன், அநேக நூறுயிரம் பேரடங்கிய வானர சேனை துக்கப்பட்டுக் கொண்டிருப்பதைப்பார்த்து, அநுமானை நோக்கி "வானரர்களுக்குள் வீர, நூன்முழுதறிந்த புலவ, மௌனமாய்த் தனியிடத்திற் போயிருந்து கொண்டு ஏன் பேசாதிருக்கின்றாய்? நீ உன் வலியினாலும் ஆண்மையினாலும் வானர வேந்தனாகிய சுக்கிரீவனுக்கும் இராமருக்கும் லக்ஷ்மணருக்கும் ஒப்பானவன். காசிபரின் புத்திரனாகிய வைநதேயன் பெருவலியுடையவன். அவன் கருடனென்று பெயர் பெற்றவன்; பக்ஷிகளுட் சிறந்தவன். மகா வேகமும் பலமுமுடைய அக்கருடன் கடலினின்று பெரிய பாம்புகளைத் தூக்கிக்கொண்டு போகப்பலமுறை நான் பார்த்திருக்கின்றேன். அவனுடைய சிறகிலிலுள்ள பலம் உனது புஜபலத்திற்குச் சமானமாகும். வலியிலாதல் வேகத்திலாதல் அவன் உனக்கு மேற்பட்டவனல்லன். உன்னுடைய பலமும் புத்தியும் உரனும் ஆண்மையும் யாவருக்கும் தெரிந்தவை. நீ ஏன் அவற்றை அறியவில்லை? அப்சரப்பெண்களுட் சிறந்த புஞ்சிகத்தலை என்பவள் அஞ்சனை என்னும் பெயராற் பிரசித்திபெற்றவள்; அவள் வானர வீரனாகிய கேசரிக்கு மனைவி. அவள் மூன்று லோகத்திலும் புகழ்பெற்று, அழகினால் இங்கில

அநுமான் பிறந்த வரலாறு.

வுலகத்தில் ஒப்பில்லாதவளாய், சாபத்தினால் வானரப் பெண்ணாகி, வானர வேந்தனாகிய பெரிய குஞ்சரனுக்கு மகளாயினாள். அவள், ஒருகாலத்தில், வானரப் பெண்ணாயினும் வேண்டிய உருவமெடுக்க வல்லளாதலின், மானிடவடிவ மெடுத்து, இளமையும் அழகுமுடையவளாய், விலையுயர்ந்த பட்டுடுத்து, ஆபரணமணிந்து, அழகிய மாலைபுனைந்து, மழைக்காலத்து மேகம்போலும் மலையினுச்சியின்மேல் உலாவினாள். அந்தத்தடங்கண்ணாள் மலையினுச்சியில் நிற்கும்போது சிவப்புக்கரையுடைய அழகிய அவளது மஞ்சள் பட்டை வாயுதேவன் மெதுவாகக் கவர்ந்து கொண்டான். அவன் அவளுடைய திரண்ட துடைகளையும் பருத்து நெருங்கிய ஸ்தனங்களையும் ஒள்ளிய அழகுவாய்ந்த முகத்தையும் அகன்ற அல்குலையும் மெல்லிய இடையையும் இனிய சாயலையும் அழகிய உருவையும்கண்டு காமமுற்று மயங்கினான். அவன் தேகம் முழுதும் காமத்தால் பீடிக்கப்பட்டு அறிவிழந்து அந்தக் குற்றமில்லாதவளைத் தனது நீண்ட இரண்டு கைகளாலும் கட்டிக்கொண்டான். அதனால் அந்நல்லொழுக்க முடையாள் அச்சங்கொண்டு "எனதுகற்பு நிலைமையைக் கெடுக்க நினைப்பவன் யாவன்?" என்றாள். அஞ்சனையின் வார்த்தையை வாயுதேவன் கேட்டு "நல்லாய், நான் உன்னைக்கெடுக்கவில்லை; நீ பயப்படவேண்டாம். நான் உன்னைத் தழுவினபோதே மனத்தினால் உன்னிடத்தில் புகுந்துவிட்டேன். அறிவும் ஆண்மையுமுடைய ஒரு புத்திரன் உனக்குப் பிறப்பான். அவன் மிக்க உரனும் பெரியவலியும் மிக்க புகழும் வீரமுமுடையனாவான். அவன் குதிப்பதிலும் தாவுவதிலும் எனக்குச் சமானமானவன்" என்றான். இதைக்கேட்டு உன் தாய் சந்தோஷமடைந்தாள். தடந்தோள, அவள் உன்னை ஒரு குகையிலே பெற்றாள். அந்தப் பெருங்காட்டிலே நீகுழந்தையா யிருக்கும்போது உதித்துவந்த சூரியனைக்கண்டு

பழமென்று எண்ணி அதை அருந்தவேண்டி ஆகாயத்தில் குதித்தெழுந்தாய். நீ மூவாயிரம் யோசனை சென்று சூரியனுடைய காந்தியால் நெருக்கப்பட்டும் இளைப்படையவில்லை. நீ ஆகாயமார்க்கமாக வேகத்தோடு செல்லும்போது இந்திரன் கோபங்கொண்டு தனது வச்சிராயுதத்தை உன்மேலெறிந்தான். அதுபட்டு உன் இடது அனு(கவுள்) ஒடிந்து ஒருமலைச் சிகரத்தின்மேல் நீ விழுந்தாய். அதனால் உனக்கு அநுமான் என்னும் பெயர் வந்தது. அவ்வாறு விழுந்த உன்னை வாயுதேவன் கண்டுமிகவுங் கோபங்கொண்டு மூன்றுலகத்திலும் வீசாதிருந்துவிட்டான். அதனால் மூன்றுலகமும் தத்தளித்ததைக் கண்டு தேவர்களெல்லாரும் பயந்து கோபங்கொண்ட வாயுதேவனைச் சாந்தப்படுத்தினர்கள். வாயு சாந்தமடைந்தபோது பிரமதேவர் "குழந்தாய், நீ போரில் ஆயுதங்களால் கொல்லப்படாதிருப்பாயாக" என்று உனக்கு வரமளித்தார். வச்சிராயுதத்தினலடிபட்டு நீ மாளாதிருந்ததை இந்திரன் கண்டு மனத்திருப்தியடைந்து "உன்னுடைய எண்ணப்படி உனக்கு மரணமுண்டாவதாக" என்று உனக்கோருத்தம வரங்கொடுத்தான். பேராண்மையுடைய நீ கேசரிக்கு க்ஷேத்திர புத்திரன், வாயுதேவனுக்கு ஔரசபுத்திரன். ஆண்மையாலும் தாவுஞ் சத்தியாலும் நீ வாயுவை ஒத்தவன். நாங்கள் இப்போது உயிர்போயிருக்கின்றோம். நீ எங்களை இப்போது காப்பாற்றவேண்டும். சாமர்த்தியத்தினாலும் பலத்தினாலும் நீ வேறொரு புள்ளரசுபோன்றவன். விஷ்ணு உலகளந்தபோது நான் மலைகளும் சோலைகளும் காடுகளுமுடைய இந்தப் பூமியை இருபத்தொரு முறை வலம்வந்தேன். பின்பு தேவர்களுடைய கட்டளையால் நான் மருந்துகள் பிடுங்கினேன்; அவைகளால் அமுதமுண்டாயிற்று. அப்போது எனக்கு அதிக பலமிருந்தது. நான் இப்போது விருத்தனாய்விட்டேன்; எனது பலமுங் குறைந்துவிட்டது. இப்

போது எங்களுக்குச் சர்வகுண சம்பன்னனாகிய நீ இருக்கின்றாய். வீர, நீ கடலைக்கடக்க எழும்புவாயாக. உன்னுடைய வீரத்தைப்பார்க்க வானர சேனைகளெல்லாம் இச்சைப்படுகின்றன. வானரோத்தம, எழுந்து கடலைக் கடப்பாயாக. உன்னுடைய வேகம் சர்வ பூதங்களுடைய வேகத்திற்கும் மேலானது. வானரர்களெல்லாரும் துக்கமடைந்திருக்கிறார்கள். அநும, நீ ஏன் உபேக்ஷையாயிருக்கின்றாய். பெரிய வேகமுடையாய், விஷ்ணு மூவடி வைத்தாற்போல நீயும் அடியெடுத்து வை" என்றான்.

சாம்பவன் அநுமானைக்கடலைக்கடக்கத்தூண்டல்.

வாயு குமாரனை மிகுந்த வேகத்தையுடைய அநுமான் இவ்வாறு சாம்பவனால் ஏவப்பட்டு வானரசேனையைச் சந்தோஷிப்பிக்கத் தக்க உருவமெடுத்தான்.

## அறுபத்தேழாஞ் சருக்கம்.

அநுமான் தனது மேம்பாட்டை எடுத்துரைத்தல்.

வீரம்மிகுந்து நூறுயோசனை கடத்தற்குத் திடீரென்றெழுந்த வானரோத்தமனாகிய அநுமானை வானரர்கள் கண்டு, துன்பம் நீங்கி, சந்தோஷமடைந்து, ஆரவாரித்துப் புகழ்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் களிப்புற்று, ஆச்சரியமடைந்து, உலகத்தை மூன்றடியா லளக்கக்கருதிய நாராயணனைச் சனங்கள் பார்த்தாற்போல, அநுமானைப் பார்க்கலானார்கள். பெரிய வலியுடைய அநுமான் வானரர்கள் புகழப்புகழ வளர்ந்து சந்தோஷத்தால் வாலை அசைத்துப் பலமடைந்தான். வயசான் மூத்த வானர வீரர்களால் புகழப்பட்டு வலிநிறைந்த அநுமானுக்கு நல்ல உருவமுண்டாயிற்று. அகன்ற மலைக்குகையினின்று எழும்பின சிங்கம்போல வாயுகுமாரன் எழும்பினான். அவ்வாறு எழும்பிய அநுமானுடைய முகம் எரிகின்ற நெய்ச்சட்டிபோலவும் புகையில்லாத நெருப்புப்போலவும்

விளங்கிற்று. அநுமான் வானரர்கள் நடுவினின்று எழுந்து, மயிர்ப்புளகங்கொண்டு, அவர்களுள் மூத்தோர்களைப் புகழ்ந்து "அக்கினியின் சகாயனாகிய காற்று மலைச்சிகரங்களை உடைப்பவன்; அளவிலாற்றலுடையவன்; ஆகாயத்தில் திரிபவன்; மிக்க வேகமுடையவன்; விரைந்த கதியுடையவன். அவனுடைய புத்திரனாகிய எனக்குத் தாவுதலில் சமானமானவன் ஒருவனுமில்லை. ஆகாயத்தை அளாவி நிற்கின்ற விசாலமான மேருமலையைத் தடையின்றி ஆயிரந்தரஞ் சுற்றிவர நான் மாட்டுவேன். என்னுடைய தோளின் வேகத்தினால் அலைக்கப்பட்ட கடலினால் இந்த நில வுலகத்தையும் அதிலுள்ள மலைகள் நதிகள் முதலியவற்றையும் முழுகச்செய்ய நான் வல்லேன். என்னுடைய காலின் வேகத்தினால் சமுத்திரம் தன்னிடத்திலுள்ள சுறாக்களை மேலே வீசிப் பொங்கிப்புரளும். பறவைகள் செல்லுகின்ற ஆகாயத்திலே பறக்கின்ற பன்னகாசனனாகிய கருடனை நான் ஆயிரந்தரஞ் சுற்றிவர வல்லேன். உதயகிரியிலிருந்து புறப்பட்டு அத்தகிரியை அடைவதற்குமுன் எரிகின்ற கிரணமாலியாகிய சூரியனை நான் போய்ப்பிடிக்க வல்லேன். வானரவீரர்காள், நான் அதன்பின் கடிய வேகத்தோடு பூமியைத் தொடாது திரும்பிவரவும் வல்லேன். ஆகாசத்திலே திரிகின்ற சோதிவர்க்கங்களுக்கு மேலே செல்லவும் நான் வல்லேன். கடலை வற்றச்செய்வேன்; தரையைப் பிளந்துவிடுவேன். வானரர்காள், நான் குதித்து மலைகளைப் பொடிபடுத்துவேன்; கடல்களை என் துடையின் வேகத்தால் பற்றியிழுப்பேன். நான் ஆகாயத்தில் தாவும்போது என்னைப் பலவகைக் கொடிகளின் பூக்களும் மரங்களின் பூக்களும் பின்றொடர்ந்து வரும். அதனால் நான் போகும்வழி ஆகாயத்தில் சுவாதிசெல்லும் வழிபோல விளங்கும். ஆகாயத்தில் நான் உயர எழும்புவதையும் அதிவேகமாகச் செல்லு

அநுமான் தனது வீரத்தை எடுத்துக் கூறல்.

வதையும் கீழே இறங்குவதையும் எல்லாப் பிராணிகளும் பார்க்கப்போகின்றன. விண்ணை மூடிக்கொண்டு வந்து ஆகாயத்தை விழுங்குகின்ற ஒரு பெரிய மேகம்போல நான் உங்களுக்குத் தோன்றுவேன். நான் வலிகொண்டு பாய்ந்து மேகங்களைச் சிதறிவிடுவேன்; மலைகளை நடுங்கச் செய்வேன்; கடலைத் தீத்துவிடுவேன். என்னுடைய ஆற்றல் எதுவோ அதுவே கருடனுக்கும் வாயுவுக்கும் உளது. நான் தாவிச் செல்வேனாகில், என்னைத்தொடர, மகா வேகத்தையுடைய கருடனையும் வாயுவையுந் தவிர வேறொருவரையும் நான் காணவில்லை. மேகத்தினின்றும் மின்னல் தோன்றினாற்போல ஒரு நிமிஷத்திற்குள்ளே இந்த நிராதாரமான ஆகாயத்தை நான் கடந்துவிடுவேன். முற்காலத்திலே உலகந்தாவிய விஷ்ணுவின் திரிவிக்கிரம ரூபத்தைப்போலக் கடரூவும் எனதுருவம் சமுத்திரத்திலே தோன்றப்போகின்றது. நான் வைதேகியைக் காண்பேன்; அது எனக்கு என் புத்தியினாலும் மனச்சேட்டையினாலும் தோன்றுகின்றது. ஆதலால், வானரர்காள், நீங்கள் களிகூருங்கள். வேகத்தில் வாயுவுக்கும் விரைவில் கருடனுக்கும் சமானமான நான் பதினாயிரம் யோசனை போவேன் என்று எனக்குத் தோன்றுகின்றது. வச்சிராயுதத்தையுடைய இந்திரன் கையிலிருந்தும் சுயம்புவாகிய பிரமன் கையிலிருந்தும் நான் அமுதத்தைப் பறித்து இங்கே கொண்டுவருவேன். நான் ஓரேதாண்டில் இலங்கையையும் கடந்து அப்பாற்செல்வேன் என்று எனக்குத் தோன்றுகின்றது" என்று சொன்னான். இவ்வாறு கூறி அளவிறந்த வலியுடைய அநுமான் கர்ச்சிக்க அதனை வானரர்கள் கண்டு சந்தோஷமும் ஆச்சரியமும் அடைந்தார்கள். ஞாதிகளின் துன்பத்தைப் போக்கவல்ல அநுமான் கூறிய வார்த்தையைச் சாம்பவன் கேட்டு "வீர, கேசரிபுத்திர, வாயுகுமார, உன் சுற்றத்தாரின் துக்கத்தை நீ போக்கிவிட்டனை.

வானரவீரர்கள் உன்னுடைய நன்மையை விரும்பி ஒன்று கூடி ஒருப்பட்ட மனத்துடன் நீ எடுத்தகாரியம் முடியும் படியாக மங்களம் சொல்லுகின்றார்கள். முனிவர்களுடைய அருளாலும் வானர மூத்தோர்களுடைய அநுமதியாலும் பெரியோர்களின் அநுக்கிரகத்தாலும் நீ பெரிய கடலைக் கடப்பாயாக. நீ திரும்பிவரும் வரையும் நாங்கள் ஒற்றைக்காலில் நின்று தவஞ் செய்வோம். வானரர்களுடைய உயிரெல்லாம் உன்னைத் தொடர்ந்துவரும்" என்று கூறினான். பின்னர் அநுமான் வானரர்களை நோக்கி "நான் தாவும்போது எனது வேகத்தை இந்தப்பூமி தாங்கமாட்டாது. இந்த மகேந்திரமலையின் சிகரங்கள் கற்பாறைகள் மலிந்து ஸ்திரமாயும் விசாலமாயு மிருக்கின்றன. பலவித மரங்கள் அடர்ந்து தாதுக்கள் நிறைந்துள்ள இந்த மகேந்திரமலையின் சிகரங்களிலிருந்து நான் தாவுவேன். நூறுயோசனை தாவுவதற்கு நான் காலுதைத் தெழும்புவதை இவைகள் தாங்கவல்லன" என்று சொல்லிவிட்டு, பலவித மரங்கள் சூழ்ந்ததும், மான்கள் உலாவும் பசும் புற்றரைகள் சார்ந்ததும், கொடிப் பூக்கள் மிகுந்ததும், பூக்களையும் பழங்களையும் இடையறாது கொடுக்கும் மரங்கள் செறிந்ததும், சிங்கங்களும் புலிகளும் சஞ்சரிப்பதும், மதங்கொண்ட யானைகள் திரிவதும், கொழுத்த பறவைக் கூட்டங்கள் ஒலிப்பதும், நீரருவிகள் நிறைந்ததும், பெரிய சிகரங்களாலுயர்ந்து தோன்றுவதுமாகிய மலைகளுட் சிறந்த மகேந்திரமலையின்மேல் ஏறி உலாவினான். வாயுபோன்ற வேகமும் மகேந்திரன் போன்ற வலியுமுடைய பகைவர்க்கேறுகிய அநுமான் தன் பாதங்களை ஊன்ற அந்த மலைநெரிந்து, சிங்கத்தாற் பற்றப்பட்ட மதயானைபோல ஓலமிட்டது; கற்குவைகள் சிதறி அருவிகளைக்கான்றன; மான்களும் யானை

சாம்பவன் அநுமானைக் கடலைக் கடக்கச் சொல்லல்.

அநுமான் மகேந்திரமலையில் ஏறல்.

களும் வெருட்சி அடைந்தன; மரங்கள் அதிர்ந்தன; ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து கள்ளுண்டும் கூடியும் களித்த நாகர்களும் கந்தருவர்களும் தாங்களிருந்த சாரல்களினின்றும் எழுந்து சென்றார்கள்; பறவைகள் பறந்து போயின; வித்தியாதரர்கள் தாங்களிருந்த மலைப்பக்கங்களினின்றும் இரிந்தோடினார்கள்; பெரும் பாம்புகள் ஓடி ஒளித்தன; சிகரங்களும் கற்பொறைகளும் அசைந்து விழுந்தன. உடல் நெரிந்து நெட்டுயிர்த்துக்கொண்டு மலையிலிருந்து பாதி புறப்பட்ட பாம்புகளினால் அந்த மலை கொடிகள் கட்டினதுபோல் விளங்கிற்று. அஞ்சி மனங்கலங்கின முனிவர்கள் விட்டு நீங்கின கன்மலைகள் பெருங்காட்டிலே வணிகசாத்துக்களைப் பிரிந்த வழிச் சொல்வோரைப்போலத் தோன்றின. அப்போது புத்தியும் வேகமும் வீரமுமுடைய அநுமான் தன் வேகம் மிஞ்சிய மனத்தினால் இலங்கை சென்றவனாயினன்.

கிஷ்கிந்தாகாண்டம்

முற்றிற்று.

PRINTED AT THE LAWRENCE ASYLUM PRESS, MADRAS, 1907.